# செங்கை ஆழியான்



# ருத்திர தாண்டவம்

A MASTERPIECE NOVEL
OF
SAHITHYA RATNA SENGAIAALIYAN

கமலம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருத்திர தாண்டவம்

HARTLEY COLLEGE
6014
LIBRARY
POINT PEDRO

'சாகித்திய ரத்னா'

## செங்கை ஆழியான்

கமலம்
பதிப்பகம்

**கமலம் பதிப்பகம்**

75/10 A, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | ருத்திர தாண்டவம் (நாவல்) |
| முதலாம் பதிப்பு | : | டிசம்பர் 2009 |
| ஆசிரியர் | : | 'சாகித்திய ரத்னா' செங்கை ஆழியான் |
| உரிமை | : | திருமதி கமலா குணராசா<br>75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம். |
| விலை | : | ரூபா. 400/= |
| அச்சுப்பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,<br>48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு 13.<br>தொ.பே: 0112330195 |

| | | |
|---|---|---|
| Book | : | Ruthra Thandavam (Novel) |
| Second Edition | : | December 2009 |
| Author | : | 'Sagithya Ratna' Sengaiaaliyan |
| Copyright | : | Mrs. Kamala Kunarasa<br>75/10 A, Brown Road, Jaffna. |
| Published | : | Kamalam Pathippakam, Jaffna. |
| Price | : | Rs. 400/= |
| Printed | : | Unie Arts (Pvt) Ltd.,<br>48B, Bloemendhal Road, Colombo 13.<br>Tel: 011 2330195 |
| ISBN | : | 918-955-1624-08-8 |

விற்பனையாளர்கள்

*பூபாலசிங்கம் புத்தகசாலை*

**தலைமை :**

இல. 340, 202 செட்டியார் தெரு, கொழும்பு 11.
இலங்கை. தொ. பே. : 2422321

*கிளை :*

இல. 309 A–2/3, காலி வீதி, கொழும்பு 06.
இலங்கை. தொ. பே. : 4-515775, 2504266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவல்

ஈழப்போராட்டத்திற்கு

உரமாகிய

பேரர்கள்,

சத்தியன்,

சதீஸ்,

பெறாமகன் மதியழகன்

மருமகன்

பிரான்ஸ் சபாலிங்கம்

மற்றும்

உடன்பிறவா அண்ணன்

பரமநாதன்

மாம்பழம்

ஆகியோருக்குக்

காணிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கை வரலாற்றில் மீண்டும் ஈழத்தமிழர்கள் ஏமாந்து போனார்கள். முப்பது ஆண்டுகளாக நம்பியிருந்த மாமலை சாய்ந்ததும் ஈழப்போராட்டத்தின் இறுதியும் கடைசி அத்தியாயம் நிறைவு பெற்றது. தமிழ்மக்கள் நம்பி ஏமாந்த வரலாற்றின் இறுதி அத்தியாயங்கள் எழுதப்பட்டன. நம்பிக்கைகள் தகர்ந்து போயின.

மாபெரும் போராட்ட வரலாறு இடைநடுவில் அவலமாக நிறைவுபெற்ற நிகழ்ச்சியை நம்பவே முடியவில்லை. ஒரே நம்பிக்கை அறிந்த வரலாறு அது. எங்கோ ஒரு பின் தங்கிய கிராமத்தில் பிறந்து மாபெரும் போராட்ட வீரனாக மாறிய தலைவரிடம் கொண்டிருந்த தமிழ் மக்களின் அபிலாசைகள் சிதைந்து போயின. முள்ளிவாய்க்கால் கரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைந்து போயின. அந்த வரலாற்றை விரிவாக எழுத வேண்டும். முன்னுரையாக இந்த நாவல் அமைகின்றது. இந்த நாவலின் மூன்றாம் பாகமே இறுதிப் போரின் இறுதி நாட்களைப் பேசினாலும் நாம் ஏமாந்த கதையைக் கூடிய வரை முன்வைக்க முயன்றிருக்கிறேன் என்ற நம்பிக்கை யுள்ளது. நம்பி ஏமாந்த கதையைப் பொழிப்பாக இந்த நாவலில் விபரித்துள்ளேன். கத்திமீது நடப்பது போல இருந்தாலும் கூற வேண்டியதாக எனக்குப் படுகிறது. அபரிமிதமான நம்பிக்கைகள் இழந்து போனதை நம்பமுடியாதுள்ள இடரை என் என்பேன்!

**செங்கை ஆழியான்**
75/10 A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நாவல்கள்

1. வாடைக்காற்று
2. நந்திக்கடல்
3. சித்திரா பௌர்ணமி
4. ஆச்சி பயணம் போகிறாள்
5. இரவின் முடிவு
6. அலை கடல்தான் ஓயாதோ
7. முற்ற ஒற்றைப்பனை
8. கொத்தியின் காதல்
9. பிரளயம்
10. கங்கைக் கரையோரம்
11. காட்டாறு
12. நடந்தாய் வாழி வழுக்கியாறு
13. ஒருமைய வட்டங்கள்
14. யானை
15. காவோலை
16. கனவுகள், கற்பனைகள், ஆசைகள்
17. இந்த நாடு உருப்படாது ?
18. கிடுகுவேலி
19. அக்கினிக் குஞ்சு
20. காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
21. கடல்கோட்டை
22. மழைக்காலம்
23. ஒ அந்த அழகிய பழைய உலகம்
24. தீம்தரிகிட தித்தோம்
25. குவேனி
26. மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து
27. கந்தவேள் கோட்டம்
28. யாககுண்டம்
29. அக்கினி
30. சாம்பவி
31. கொழும்பு லொட்ஜ்
32. போரே நீ போ
33. மரணங்கள் மலிந்த பூமி
34. ஈழ ராஜா எல்லாளன்
35. ஆறுகால் மடம்
36. பூதத்தீவு புதிர்கள்
37. வானும் கனல்சொரியும்
38. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
39. ஜன்மபூமி
40. மீண்டும் வருவேன்
41. அலையின் கீதம்
42. யுத்தபூமி
43. மெல்ல இருள் இனி விலகும்
44. ருத்திர தாண்டவம்

## ஆசிரியரின் சிறுகதைத் தொகுதிகள்

1. இதயமே அமைதி கொள்
2. யாழ்ப்பாணத்து இராத்திரிகள்
3. இரவு நேரப் பயணிகள்
4. ஓடில்லா நத்தைகளும் கூடில்லா ஆமைகளும்
5. குந்தி இருக்க ஒரு குடிநிலம்
6. வற்றாநதி

## ஆசிரியரின் பல்சுவைக் கட்டுரை நூல்கள்

1. கூடாரவாழ்க்கை.
2. சுனாமி
3. ஈழத்து சிறுகதை வரலாறு
4. ஈழத்தவர் வரலாறு
5. யாழ் கோட்டை வரலாறு
6. 24 மணிநேரம்
7. 12 மணிநேரம்
8. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது.

**கமலம் பதிப்பகம்**

75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருத்திர தாண்டவம்

## சாகித்யரத்னா செங்கைஆழியான்

## முன் நிகழ்வு

**ம**ஹாவிகாரையின் தியான மண்டபத்தின் மாலைக் கருக்கல் இருளை நீக்கியவாறு நெய் விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. மண்டபக் கூரையைத் தொடுமாறு அமர்ந்த நிலையில் தியானக் கோலத்தில் கிழக்கு நோக்கியவாறு போதி மாதவர் பளிங்குச் சிலையாக அமர்ந்திருந்தார். அச்சிலாவிக்கிரகத்தின் முன்னுள்ள கல்மேடையில் மகாமேகவனத்தின் நந்தவன் பூக்கள் நறுமணம் பரப்பியிருந்தன. அவற்றிடையே நறுமணத்தைப் பரவ விட்டவாறு சாம்பிராணி புகைந்து கொண்டிருந்தது.

அம்மண்டபத்தின் தென் மேற்கு மூலையில் கிழக்கு நோக்கியவாறு ஆசனப் பலகையில் ஒரு கரத்தில் ஓலையும் மறுகரத்தில் எழுத்தாணியும் ஏந்திய நிலையில் விழிகளை மூடி வயதான ஒரு பிக்கு அமர்ந்திருந்தார். அவர் முன்னிருந்த தாம்பாளம் ஒன்றில் எழுத்திட்டுச் சீராக்கட்டிய பனை ஓலைக் கட்டுகள் நான்கு இருந்தன. இன்னொன்றில் குலைந்த நிலையில் பல ஏடுகள் இருந்தன. மூன்றாவது தாம்பாளத்தில் நறுக்கிய அளவாகக் கத்தரித்து மஞ்சள் பூசிய ஓலைகள் இருந்தன.

சாந்தமும் பக்தியும் அமைதியும் கொண்ட திருவுருவாகத் தெரிந்த.. அவர் தான் தர்மகீர்த்தி தேரர். அவர் வலது பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவருக்கு முதுகு காட்டியவாறு மூன்று இளம் பிக்குகள் அவர் கூறுவனவற்றைப் படியெடுக்கும் தயார் நிலையில் ஏடும் எழுத்தாணியும் ஏந்தியிருந்தனர். அவர்களில் வயதில் மூத்தவர் ஆனந்தர். நடுவில் நாயகமாக இருப்பவர் சுமங்கலர். மூன்றாமவர் மகிந்தர். அவர்களைவிட வேறிரு இளம் பிக்குகள் விளக்குகள் ஊடு பற்றாது இருக்கத் திரிகளைத் தூண்டிவிட்டும் நெய் ஊற்றிக் கொண்டுமிருந்தனர்.

அந்தத் தியான மண்டபத்தில் அமைதி கோலோச்சிக் கொண்டிருந்தது.

அந்த மண்டபத்தில் அந்த நேரத்தில் ஒரு முக்கிய பணி நிறை வேறவிருந்தது.

அனைவரது விழிகளும் தர்மகீர்த்தி மேல் நிலைத்திருந்தன. அவர் விழிகளைத் தியானநிலையிலிருந்து எப்போது திறப்பார் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். சற்று நேரக் கழிவில் தர்மகீர்த்தி கண்களைத் திறந்து தன் அருகில் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்தார்.

“தூய சம்புத்தரை வணங்கி நான் இதனைக் கூறுகின்றேன். மெய்ச் சமயமான பௌத்தம், சங்கம், தம்மம் ஆகிய உண்மையான கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு இலங்கையில் அதனை நிலைநாட்டவும் காக்கவும் மனங்கொண்டு ஆண்ட மன்னர்களைப் போற்றவும் நாம் இலங்கை வரலாற்றை ஒழுங்கு படுத்தித் திரட்டி எழுதி வைக்க வேண்டும்.. பௌத்த விகாரைகள் அக்கைங்கரியங்களை இடைவிடாது செய்து வந்திருக்கின்றன. பனையோலை நறுக்குகளில் அவற்றை எழுதி வைத்துள்ளன. ஆயிரக்கணக்கான வருடங்களாக அதனைச் செய்து வருகின்றன. அவ்வாறு எழுதிய ஓலைகளை ஒழுங்கு படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டகதாமஹாவம்சம் என்றொரு ஓலைச்சுவடு மஹாவிகாரையிலுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு இந்தியக் காவிய மரபைப் பேணி தீபவம்சம் என்றொரு நூலாக்கப்பட்டது. அதனை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்காகவும் சிறப்பாகவும் மஹாநாமதேரர் என்பவர் மஹாவம்சத்தை எழுதினார். அந்த நூலை அவர் 37 அதிகாரங்களுடன் மஹாசேன மன்னனின் காலத்துடன் முடித்துள்ளார்.".

"ஆச்சாரியரே, ஏன் மஹாநாமதேரர் மஹாவம்சத்தை மஹாசேனனுடன் நிறுத்தினார்?"

"காரணங்கள் உள்ளன. மஹாசேனன் நாம் பின்பற்றுகின்ற தேரவாத பௌத்தத்தில் நம்பிக்கையில்லாதவன். மஹாஜன பௌத்தன். மஹாவிகாரையை அழித்தான். அதன் செல்வங்களை அபயகிரி விகாரைக்கு தானமாக அளித்தான். மஹாவிகாரைப் பிக்குகளை அனுராதபுரத்தைவிட்டுக் கலைப்பித்தான். அதனால் அதன் பின்னர் வரலாறு எழுதப்படாது போனது. இன்று அவர் விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கப் போகின்றோம். அதற்காக இங்குள்ளோம்.." என்றார் தர்மகீர்த்திதேரர்.

"இன்று (இரண்டாம்) பராக்கிரமபாகு இலங்கையை ஆளுகிறார். மஹாசேனன் காலத்துக்கும் இன்றைய மன்னர் காலத்துக்கும் இடையில் கால இடைவெளி அதிகம்.."

"ஆமாம்..மஹாவம்சத்தில் மாமன்னர் துட்டகாமினி பாட்டுடைத் தலைவராக இருந்தார்."

"நாம் எழுதப்போகின்ற கதைப்பகுதியில் பராக்கிரமபாகு பாட்டுடைத்தலைவராக விளங்குவார். எங்கள் பௌத்தத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்துக்கும் சிங்கள மன்னர்களுக்கும் எப்போதும் போட்டியாகத் தமிழர்கள் விளங்கி வருகின்றனர். எல்லாளன் போன்ற சிறப்பான மன்னர்களும் கலிங்கத்து மாகன் போன்ற தீய மன்னர்களும் இலங்கையை ஆண்டுள்ளனர். பௌத்த விநயக் கோட்பாடுகளின் படி ஒழுகுகின்ற மன்னர்கள் போற்றுதலுக்குரியவர்கள்."

"வரலாறு என்னத்தைச் சொல்கிறது ஆச்சாரியாரே?"

"நாம் செய்கின்ற ஊழ்வினைகள் வேறு வடிவங்களில் மீண்டும் நடக்கும். ஊழ்வினை உறுத்தும். எல்லாமும் எப்பவோ முடிந்த காரியம்.. எடுத்துக் காட்டாக கலிங்கத்து மாகன் சிங்கள மக்களை உத்தரதேசத்திலிருந்து அதாவது வடக்கேயிருந்து தென்புலம் பெயர வைத்தான் அது..."

தர்மகீர்த்திதேரர் சொல்லத் தொடங்கினார்.

"இலங்கை மக்கள் செய்த பாவங்களின் விளைவாகக் கலிங்க தேசத்தைச் சேர்ந்த குரூரமனங் கொண்ட இளவரசன் மாகன் என்பான் இருபதினாயிரம் கலிங்க வீரர்களுடன் இலங்கையில் இறங்கி இலங்கையைத் தன் வசப்படுத்திக் கொண்டான் அவன் தவறான சமய நெறியைக் கொண்டு ஒழுங்குகின்ற நீதி நியாயமற்ற துட்டன். அடர் காட்டிடையே அழிவைச் செய்ய எழுந்த காட்டுத் தீ. உண்மையென்ற அல்லி மலர்களைக் கூம்பவைக்கும் சூரியன். பகற்பொழுதில் மலரும் தாமரைகளை வாடவைக்கும் சந்திரன். காட்டுத் தீ பரவியது போல அவர்கள் இலங்கையை ஆக்கிரமித்தனர்."

தர்மகீர்த்தி தேரர் பாளியில் பாடுகின்ற பனுவல்களை அவர் பக்கத்தில அமர்ந்திருந்த சுமங்கலரும் மகிந்தரும் அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியெடுக்க அவர்களுள் வயதில் மூத்தவரான ஆனந்தர் ஓலையில் பதியாதிருந்தார். அதனை அவதானித்த தர்மகீர்த்திதேரர், "என்ன ஆனந்தா?"என்றார்.

"ஆசாச்சியாரே, மன்னிக்கவும்...கலிங்கமாகன் குறித்த பழைய ஏட்டில், வேறுவிதமாகவும் இங்குள்ள விகாரை ஏட்டில் வேறு விதமாகவுள்ளதே?"

"எவ்வாறு?'

"அவன் உத்தரதேசத்திலிருந்து அதாவது வடக்கே இலங்கையிலிருந்து தண்டெடுத்தாக.. அதற்குக் கலிங்க வீரர்கள்கள் உதவியதாக..."

"ஆனந்தா...ஐயங்கள் எழுப்புவது உன் வேலையல்ல. சொன்னவற்றைப் பிரதி செய்வதே உன் வேலை. நீ பிரதி செய்ய வேண்டாம் எழுந்து செல்... இலங்கை மீது தண்டெடுத்தவர்களை இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்ததாகவே எழுதவேண்டும் அது தான் வழக்கம் அட்டகதா மஹாவம்சத்திலிருந்து.. நாம் பேணுகின்ற வழக்கம்..."

ஆனந்தர் மனச்சுமையோடு அவ்விடத்தைவிட்டு நீங்கினார்.

**ஆ**னந்தருக்கு அவமானமாகவும் பொய்யான வரலாறு எழுதப்படுவதனால் கவலையாகவும் இருந்தது மிகச்சில நாட்களுக்கு முன்னர் மஹாவிகாரையின் களஞ்சிய அறையைச் சுத்திகரிக்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வேளை அங்கிருந்த அட்டகதா ஏடுகள் சில அகப்பட்டன. தூசிபடிந்த நிலையில் புதிய ஏடுகளாக அதிகம் கவனிக்கப்படாது ஒரு மூலையில் கிடந்த மாகன் வரலாற்று ஏடுகள் இவற்றிலிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை எடுத்த ஆனந்தர் தூசி தட்டி எழுத்துக்கள் தெளிவாகத் தெரிய முள்முருக்கைப் பச்சிலைச் சாறு தடவிப் படிக்கத் தொடங்கினார்.

'துயருறும் கலிங்க மக்களை சிங்களவர்களிடமிருந்தும் பாண்டியரிடமிருந்தும் காப்பதற்காக இறுதியில் படையெடுக்க நேர்ந்தது. '...- என ஆரம்பமானது. இலங்கை அரசியலில் இலங்கைக்கும் கலிங்க மக்களுக்கும் இடையில் வரலாற்றுக் காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. யாழ்ப்பாண முதல் மன்னன் உக்கிரசிங்கன், கலிங்க நாட்டவன். மகிந்தமன்னன் தனது பட்டத்து ராணியாகக் கலிங்க இளவரசியான சங்காவை மணந்திருந்தான். விஜயபாகு கலிங்க இளவரசியான திரிலோகசுந்தரியைத் திருமணம் செய்திருந்தான். அதே போன்று விக்கிரமபாகு, நிசங்கமல்லன், சாகசமல்லன் முதலானோர் கலிங்கத் தொடர்பு கொண்ட மன்னர்களாக இருந்துள்ளனர். நிசங்கமல்லனுக்குப் பின்னர் கலிங்கவம்ச வழி வந்தவர்களும் பாண்டிய வம்ச வழி வந்தவர்களும் அரசுரிமைக்காகப் பிணக்குப்பட்டனர்.

இக்கலிங்கர்களை அழித்துவிடச் சதி செய்தனர். அவர்களைக் காப்பாற்ற மாகன் படையெடுத்தான்.

உத்தரதேசத்திலிருந்து தெற்கு நோக்கிப் படைகள் புறப்பட்டன. மாந்தை, பூநகரி, இலுப்பைக்கடவை, பதவியா, குருந்தை ஆகிய பிரதேசங்களில் மாகனின் படையணிகள் முகாமிட்டிருந்தன. அவற்றைவிட ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம். கொட்டியார். கந்தளாய்ப் பகுதிகளிலும் நிலைகொண்டிருந்தன. வடபகுதிப்படையணிகளுக்கு கஜபாகு தலைமை வகித்தான். கிழக்கிலங்கைப் படைகளுக்கு சோழகங்கன் என்பான் தளபதியாக விளங்கினான். வன்னியில் நிலை கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளுக்கு மானவர்மன் பொறுப்பாகவிருந்தான். அனைத்துக்கும் மாகன் சேனாதிபதியாக விளங்கினான்.

தளபதிகள் அனைவரும் படைகள் புறப்படுவதற்கு முன்னர் ஒன்று கூடி முடிவெடுத்திருந்தார்கள்.

"இப்படையெடுப்பில் பொலநறுவையை நாம் கைப்பற்றியே தீரவேண்டும். நமது படைகளைக் கண்டு அனைவரும் பயந்து விலக வேண்டும். வெற்றிக்காக யாதும் செய்யலாம். நமக்கு எதிராக ஆயுதம் ஏந்திய அனைவரும் கொல்லப்பட வேண்டும். தமிழ் மக்களது வயல்களையும் தோட்டங்களையும் வீடுகளையும் கால்நடைகளையும் சிங்கள மக்கள் ஆக்கிரமித்துள்ளனர். அவ்விடங்களைக் கைவிட்டு தமிழர்கள் விலகிவிட்டனர். அவற்றைத் தமிழர்கள் மீளவும் பெறச் செய்தல் வேண்டும். நம் வீரர்களில் ஏராளமாவர்கள் கூலிக்காக வந்தவர்கள். அவர்களைச் சுதந்திரமாக இயங்கவிட வேண்டும்." என்றான் மாகன்.

"வெற்றிக் கனியைப் பறிக்க கொலை, கொள்ளை எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்கிறீர்களா,?"

"மக்களைக் கிலி கொள்ள வைக்க அது ஒரு போர் முறை தான்."

பொலநறுவையைக் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தில் மாகனின் படை நகர்ந்தது. வன்னிப்பிரதேசத்திலிருந்து சிங்கள மக்களைத் தெற்கே துரத்திவிட எண்ணங்கொண்டதாக நகர்ந்தது. தப்பி ஓடும் சிங்களப்படை மக்களோடும் பௌத்தமதத்துறவிகளோடும் இணைந்து ஆங்காங்கே கிராமங்களில் எதிர்ப்பினைக் காட்டியது. மாகனின் படை வீரர்கள் இந்த எதிர்ப்புகளில் பலியானபோது கலிங்கப்படை வீரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்கடங்காது போயினர். எதிர்ப்பட்டவர்களைக் கொன்றனர். மக்களின் உடைகள், ஆபரணங்கள், பொருட்கள் என்பனவற்றைக் கொள்ளையிட்டனர். கிராமங்கள் தோறும் வன் செயல்கள் புரிந்தனர். வீடுகளுள் பலோத்காரமாகப்புகுந்து எதிர்த்தோரின் கைகளையும் பாதங்களையும் வெட்டி முடமாக்கினர் செய்கின்ற அட்டூழியங்கள் வதந்திகளாகக் கால் கை முளைத்துப் பரவின..

"கிராமங்களிலுள்ள கன்னிப் பெண்களின் கற்பைச் சூறையாடினார்கள்.. கதறக்கதற கற்பழித்த பின்னர் கொன்றுவிட்டார்களாம்"

"சிங்கள மக்களுக்குச் சொந்தமான மாடுகளையும் எருமைகளையும் அபகரித்துச் சென்றார்கள்."

"செல்வந்தர்களை ஓட்டாண்டிகளாக்கினார்கள்."

"புத்த சிலா மனைகளையும், சேத்தியங்களையும், சின்னங்களையும் இடித்துத் தரை மட்டமாக்கினர். கைப்பற்றிய வீடுகளையும் விகாரை மனைகளையும் தாம் விரும்பிய தமிழர்களுக்கு அளித்துள்ளனர்."

"சிறுவர்களைச் சாட்டையால் அடித்தனர். கைதான மக்களைக் கொண்டு கடுமையான வேலைகளைச் செய்வித்தனர். பெறுமதி வாய்ந்த அரிய ஏடுகளைக் கொளுத்தி அழித்தனர்."

"முன்னைய மன்னர்களால் மிகவும் பெறுமதி மிக்கதாக மதிக்கப்பட்டு பேணப்பட்ட இரத்தினாவலி சேத்தியத்தை (ருவான் வெலிசாய) முற்றாக அழித்தனர். இவ்வாறு பல பௌத்த சேத்தி யங்களை தரைமட்டமாக்கினர். பிக்குகளை அவமானப்படுத்தினர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தோ..அந்தோ இவ்வாறு யமனின் கிங்கரர்கள் மாதிரி செயற்பட்ட தமிழ்ப்பூதங்கள் இந்த இராச்சியத்தையும் சமயத்தையும் அழித்தனர். நீர்ப்பாசனக் குளங்களைத் தகர்த்து விட்டனர். பொருளாதாரம் பாதிப்புற்றது. மலேரியா தேங்கிய குளத்து நீரால் பரவியது. மூட்டை முடிச்சுகளோடு வன்னிப் பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்கள் மதவாச்சிக்குத் தெற்காக இடம் பெயர்ந்து நகர்ந்து விட்டனராம்."

வன்னிப்பிரதேசத்தில் வாழ்ந்த சிங்கள மக்கள் மாகனின் படைகள் வருகின்ற செய்திகளைக் கேட்டு சாரி சாரியாகக் தம் வாழிடங்களைவிட்டு தெற்கே நகரத் தொடங்கினர்.

1000 ஆண்டுகளுக்குப் பிறகு அது தலைமாறி நிகழ்ந்தது. சிங்கள இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களை விடுவிக்கும் நோக்குடன் படையெடுத்தது. தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து ஓடத்தொடங்கினர். வன்னியில் மன்னாரில் ஆரம்பித்த அவர்கள் ஓட்டம் முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் போய் நிலைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பாகம்

துர்க்கை

# அத்தியாயம் : 1

ஒரு மழை காலத்தில் அந்த அவலம் நடந்தது. சோனாவாரியாக மழை கொட்டி ஓய்ந்த வேளையில் இரவு படரத் தொடங்கியிருந்தது. நிலக்கறையான் மாதிரிப் பதுங்கியிருந்து விட்டு வெளியேறும் நிலை. அம்மன்கோவிலைக் கடந்து நரியன் குண்டு வீதியில் இறங்கியபோது தெற்கேயிருந்து ஒரு ஹைஏஸ் வான் விரைந்து வருவதைச் சத்தியன் பார்த்தான். வீதியில் வெள்ளம் நிரம்பி நின்றிருந்தது. நீரைக்கிழித்தபடி வரும் நரிக்குண்டு நீர்ப்பாம்பு மாதிரி, வீதி வெள்ளத்தைப் பிளந்தபடி அவ்வாகனம் விரைந்து வந்தது. ரயர்களினால் பிரிக்கப்படடு எற்றப்படும் வெள்ள நீரிலிருந்து தப்புவதற்காக சத்தியன் வீதியில் விலகிக் க்ரையோரத்தில் இறங்கி நின்றான்.

ஆனால் அந்த வான் வேகமாக வந்து அவனருகில் சடாரென நின்றது. அதன் கதவு வேகமாகத் திறந்தமையும் அதிலிருந்து நீண்ட நான்கு கைகள் அவனை இழுத்து வானிற்குள் கணப்பொழுதில் போட்டமையும் இமைப்பொழுதில் நிகழ்ந்தன. இந்திய அமைதி இராணுவம் தெருவில் வரும் கோழியை அமுக்குவது மாதிரி இருந்தது. வெள்ளை வானில் வருபவர்கள் தன்னைப் போன்ற இளைஞர்களைப் பிடித்துச் செல்கிறார்கள் கட்டாயப்படுத்திப் போராட்டத்தில் இணைக்கிறார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கிறான். ஆச்சி பல தடவை எச்சரித்தும் இருக்கிறாள். அது தனக்கு நிகழும் என அவன் எண்ணியிருக்கவில்லை. அவர்களின் பிடியிலிருந்து திமிறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அண்ணைமாரே…என்னை விடுங்கோ. நான் இங்கத்த ஆளில்லை. நிக்கவரெட்டியாவைச் சேர்ந்தனான். ஆச்சியைப் பார்க்க யாழ்ப்பாணம் விடுதலைக்கு வந்தனான். கப்பலில் கஷ்டப்பட்டு வந்தனான். விடுங்கோ..” எனக் கூச்சலிட்டான். அவர்கள் கேட்பதாகவில்லை.

“உன்னைப் போல ஆட்கள் தான் போராட்டத்துக்குத் தேவை. அப்ப உனக்குச் சிங்களம் நல்லாத் தெரியும். நீ தமிழன் தானே? நாங்கள் அடிபட நீ சோக்காக வாழ்வதா?”

“உங்களை ஆர் கேட்டது போராட்டத்தில் சேரச் சொல்லி?”

அவர்கள் ஏளனமாகச் சிரித்தார்கள்.

“சத்தம் போடாமல் வாடா. பறைப் பயலே. உனக்கு என்ன தெரியும். நாங்கள் படுகிற கஷ்டம். சத்தம் போட்டியெண்டால் வெடி வைக்க வேண்டி வரும். :”

வாகனம் விரைந்து சென்றது.

“ஆச்சி தேடுவா..க்டைசி சொல்லிப் போட்டாவது வாறன்.”

“அதெல்லாம் சொல்லலாம் வாடா.”

சத்தியன் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். தன்னைநோக்கி துப்பாக்கியை நீட்டியவாறு கிங்கரர் மாதிரி இருந்தவர்களைக் காண அச்சமாகவிருந்தது. அவர்கள் வைத்திருப்பது தான் ஏ.கே. 47 என்பதோ? தான் முரண்டு பிடித்தால் அவற்றிலிருந்து குண்டு பாயலாம். வீதிக்கரையில் சடலத்தை வீசி விட்டு வான் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமணி நேர ஓட்டத்தின் பின்னர் ஒரு பழைய பெரிய வீட்டின் முன் வான் நின்றது. அவனை இறங்கி வரப்பணித்தார்கள். துப்பாக்கிகள் ஏந்திய போராளிகள் பலர் அங்கிருந்தார்கள். அவர்களைப் பார்க்க அவனுக்குப் பயமாக இருந்தது. நிக்கவரெட்டியாவில் எல்.ரி.ரி.ஈ புலிகள் பற்றி அவன் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறான். இன்று அவற்றை நேரில் காண்கிறான். அவனை ஒரு அறையில் அடைத்தார்கள். அந்த அறைக்குள் அவனைப்போல மூவர் இருந்தனர்.

அவனைக் காணாமல் ஆச்சி கலங்குவாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அவளுக்குத் தெரியவரும். ஒவ்வொரு முகாமாக ஏறி இறங்குவாள். கண்ணீர் சிந்துவாள். 'அப்படி ஒருத்தரை நாங்கள் காணவில்லை.'

"விசர் கதை கதையாதை. நாங்கள் ஆரையும் வலியப்பிடிக்கிறதில்லை. தாங்களாகத் தான் வந்து சேருவாங்கள். எத்தனை தாய் தேப்பன் தங்கட பிள்ளையளை வலியக் கொண்டு வந்து விடுகுதுகள் தெரியுமே? ஏதாவது இயக்கத்துக்கு ஓடிப் போயிருப்பான். போனை..தெரியவரும்." என்பார்கள்.

அவன் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கக் கூடாது. அவன் தாயும் தகப்பனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். தகப்பன் றெயில்வேயில் பணிபுரிந்தார். வேலை கிடைத்ததுமே நிக்கவரெட்டியா வந்துவிட்டார். அவனும் தங்கை தம்பிமாரும் அங்கு தான் பிறந்தார்கள். யாழ்ப்பாணத்தின் நிறமே தெரியாது.

"எனக்கொரு ஐயாவும் அம்மாவும் சகோதரங்களும் யாழ்ப்பாணத்தில் இருக்கினம். கலட்டி அம்மன் கோவிலடியில். அம்மம்மாவுக்கு வயதாகிப் போட்டுது. .ஒருக்கா போய்ப் பாக்கத்தான் வேணும்" என்பார் தந்தை சில நாட்களில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளுக்கும் அரசுக்கும் யுத்தம் நின்று சமாதானம் நிலவியதும் சத்தியன் மட்டும் எல்லாரிடமும் கஷ்டப்பட்டு அனுமதி பெற்று யாழ்ப்பாணம் வந்தான். ஒருக்கா உறவினர்களைப் பார்ப்பம் என்ற எண்ணமிருந்தது.

அவன் அயல் வீட்டு நண்பன் அமரதாஸ எவ்வளவோ தடுத்துப் பார்த்தான்.

"யாலுவ.. இவங்களின்ர சமாதானத்தை நம்பாதை. எப்ப முறியும் என்று தெரியாது. யாழ்ப்பாணம் நீ எண்ணுறமாதிரி நல்ல இடமல்ல. சொல்லிப் போட்டன்.. எல். ரி. ரி ஈ உள்ள இடம்.."

அதையும் மீறி வந்தான். ஆச்சி அப்புவைப் பார்த்தான். அவர்கள் அவன் மீது செலுத்திய பாசத்தைப் பார்த்ததும் கஷ்டப்பட்டு வந்தது பெரிதாக அவனுக்குப் படவில்லை.

"என்னைக் கோண்டாவிலில் பிடித்தாங்கள்.." என்றான் அந்த அறையிலிருந்த ஒரு சிறுவன்.

"வான் வந்ததைக் கண்டதும் ஒழுங்கையால ஓடினன். முயலை அமுக்கிற மாதிரி துரத்திப் பிடிச்சிட்டான்கள். கெஞ்சிப் பார்த்தன். அடிபோட்டான்கள்.."

"இயக்கத்துக்கு வரத்தான் இருந்தன். திருநெல்வேலிச் சந்தியில பிடிச்சாங்கள்"

"இங்க வைச்சிருக்க மாட்டான்கள். இன்றைக்கே கிளிநொச்சிக் காம்ப்பிற்கு அனுப்பிப் போடுவான்கள். அங்க பயிற்சி கொடுப்பான்கள். மறுத்தால் அங்க பங்கரில் போட்டிடுவான்கள். அது கொடுமை.. எலிப்பொறியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்பட்டாச்சு. எல்லாத்தையும் இனி மறந்திட வேண்டியது தான். அண்ணன்மாரோட சேர வேண்டியது தான். வெளியில இருந்து என்ன செய்யிறது? வேலையா கீலையா? சிங்களவன் தரவா போறான்? இங்கயெண்டால் நேரத்துக்கு நேரம் சாப்பிடலாம். பொடியளுக்குச் சமூகத்தில நல்ல மரியாதை.. எங்களைக் கண்டால் பயப்படுவினம். தம்பிமார் எண்டு குலைவினம். துவக்கை ஏந்திக் கொண்டு ஹீரோ ஹொண்டாவில் பறந்தால் ஒதுங்கி நிற்பினம் கண்டியோ?" என்றான் ஒருவன் சர்வ சாதாரணமாக.

இவற்றை எல்லாம் கேட்கக் கேட்க சத்தியனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. இனி ஒருத்தரையும் பார்க்க முடியாது என்பது தெரிந்தது. இடிந்து போய் சுவரோடு இருந்துவிட்டான். அவனுடைய வாழ்வு இதுவா?

அவன் கண் முன் பெற்றார் வந்தனர். கூடப்படித்த அமரதாஸ வந்தான். எவ்வளவு இனிமையான நாட்கள். ஓஎல் எடுத்துவிட்டு இந்த ஆண்டுதான் நூல்களுக்கு ஓய்வு கொடுத்தார்கள். நிக்கவெரெட்டியா வயல் நிலங்களில் சுதந்திரப் பறவைகளாகத் திரிந்தார்கள். வரப்புகளில் ஓடிக் கிளிகளைத் துரத்துவது அவர்களுக்குப் பிடித்தமாக இருந்தது.

அவன் நினைவில் மணிசேகரன் வந்தான். அவன் அவனுடைய மச்சான். மாந்தையில் அரச பணிமனை ஒன்றில் தொழில் நுட்ப வியலாளராக ( ரி.ஒ) பதவி வகித்து வந்தான். அவன் அரசாங்க வேலை பார்ப்பதால் இயக்கங்களால் பயமில்லை. அவனும் எச்சரித்திருந்தான்:

"இதோ பார் சத்தியன். நமது இளைஞர்களில் பெரும்பாலனவர்கள் படித்துவிட்டு ஆமான வேலை கிடைக்காமையால் இயக்கத்தில் சேர்ந்து விட்டினம். ஏழைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார் தம் பிள்ளை இயக்கத்தில் இருக்கிறது எனச் சொல்வதில் பெருமைப் படுகினம். நீ கண்டபடி வெளியில் திரியாதை..''

இப்படி நடக்குமென நினைக்கவில்லை.

எல்லாம் கனவாகப் போய்விட்டது.

அன்று இரவு பத்து மணிக்கு வானுடன் அண்ணன்மார் வந்தார்கள். அவர்களை எல்லாம் அந்த வானில் ஏற்றினார்கள். ஒரு வான் நிறைந்த கூட்டம். வேறு பேஸ்களில் இருந்தும் ஏற்றியிருக்க வேண்டும். சுல்தான் காக்கா வாரநாட்களில் ஊரில் திரிந்து வாங்கிய ஆடுகளை இறைச்சியடிக்க வியாழக்கிழமையில் வான் ஒன்றில் ஏற்றிச் செல்வான். அது போலப் பலியாடுகளாக அவர்கள் இருந்தார்கள்.

ஒரு காட்டுப் பகுதியில் பயிற்சிக் காம்ப் இருந்தது. அதன் பொறுப்பாளராக ஒருவன் இருந்தான். கொஞ்சமும் இரக்கமில்லாதவன்.

“நாளைக்கு அதிகாலை நான்கு மணிக்கு எழும்பிவிடவேண்டும். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு கிறவுண்டிற்குப் பயிற்சிக்கு வந்துவிட வேண்டும். இந்தப் பயிற்சி முடிந்ததும் வேறு காம்பிற்குப் போக வேணும் அங்க உங்களுக்கு மேலதிகப் பயிற்சிகள் தரப்படும். உங்களில ஆராவது இதுக்கு மறுக்கிறீர்களா? இனிமல் வீட்டை மறந்திடவேணும். புரிஞ்சு கொள்ளுங்க.. ஆராவது பயிற்சிக்கு மறுக்கிறியளா?''

சத்தியன், “அண்ணை..''என்றான். “நான் இதுக்கு விரும்பி வரவில்லை. பிடிச்சு வந்தாங்கள்..விட்டிடுங்க.. நான் நிக்கவரெட்டியாவைச் சேர்ந்தனான்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பெரிதாகச் சிரித்தான். ":நீ தமிழன் தானே? சிங்களவனுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதில் தவறில்லை. நாளைக்குப் பயிற்சிக்கு வா. இல்லாவிடில் தண்டனைக்கு ஆளாக வேண்டி வரும்."

அடுத்த நாள் சத்தியன் பயிற்சிக்குச் செல்ல மறுத்துவிட்டான். அப்படி என்ன தண்டனை தந்துவிட முடியும் என நினைத்தான்..

"இவனை முக்கோணக் கூட்டிற்குள் நிற்க வையுங்கள். றவுசரோட முதலில் நிற்கட்டும். தொடர்ந்து மறுத்தால் நாளைக்கு நிர்வாணமாக நிறுத்துங்கள். தம்பிக்குத் தண்டனைகள் எப்படியெனத் தெரிய வேண்டும்."

அவனை ஒரு ஆள் நிற்கக் கூடிய முக்கோண முட்கம்பிக் கூட்டிற்குள் அடைத்தார்கள். அது ஒரு விசித்திரமான பயங்கரத் தண்டனை. ஒருவனின் தன்னம்பிக்கையை முக்கோண முட்கம்பிக்கூடு அழித்துவிடும். அந்த முக்கோண முட்கம்பிக்கூடு ஒருவர் நிற்கக் கூடிய அளவில் அமைக்கப்பட்டிருந்தது. அமர்ந்திருக்க முடியாது. ஒடுங்கியது. மூன்று பனைமரத்திலான கூரை மரங்களினால் முக்கோண வடிவில் அமைக்கப்பட்டு முட்கம்பியால் சுற்றி அடிக்கப்பட்டது. அதற்குள் தண்டனை பெறுபவர் நிறுத்தப்படுவார். நித்திரையின்றி நிற்கவேண்டும். சற்றுத் தூக்கக் கலக்கத்தில் அசைந்தால் உடல் முழுவதும் முட்கம்பிக் கூர்கள் கீறிக்காயப்படுத்திவிடும்.

சத்தியன் சாதாரணமாகத் தான் நினைத்தான். ஒருநாள் முழுவதும் அப்படியே நிற்பதிலுள்ள கஷ்டம் புரிந்தது. மூச்சடைத்தது. நித்திரைக் கலக்கத்தில் அசைந்ததால் உடல் முழுவதும் கீறல் காயங்கள் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் பயிற்சிக்குச் செல்ல ஒப்புக் கொண்டான். கடும் பயிற்சிகளாக இருந்தது. மைதானத்தைச் சுற்றி ஓடுவது நாய் இளைப்பாக இருந்தது. துப்பாக்கிகளாக தடித்த தடிகளைப் பாவித்து வரிசை நடைநடத்தல் கால்களை வலியெடுக்க வைத்தது. சமைத்தல், கூட்டுதல். குறிபார்த்தல், கயிற்றில் நடத்தல், காம்ப் அமைத்தல், சொற்பொழிவுகள் என்பன நடந்தன. சொற்பொழிவுகள் மூளைச் சலவை செய்வனவாக இருந்தன. போட்டுக் காட்டிய வீடியோப் படங்கள் தமிழ்ப் போராட்டத்தில் நியாயம் கொள்ள வைத்தன.

“காலம் காலமாகத் தமிழர்கள் ஏமாந்திருக்கிறார்கள். ஒப்பந்தங்கள் என்ற வகையில் பல தடவைகள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். பண்டா செல்வா ஒப்பந்தம். செல்வா டட்லி ஒப்பந்தம் என்பன கிழித்தெறியப்பட்டன. தமிழரின் நியாயமான உரிமைகளைச் சிங்களவர்கள் வழங்க மறுத்தார்கள். அது மட்டுமா 1956. 58. 77. 83 ஆகிய ஆண்டுகளில் இனக்கலவரங்களை ஏற்படுத்தி தமிழர்களை அழித்தார்கள். சாத்வீகப் போராட்டங்களில் நம்பிக்கை கொண்ட தமிழரைப் படிப்படியாக ஆயுதம் ஏந்திப் போராடத் தூண்டினார்கள். குண்டுகள் வீசித் தமிழ் மக்களை அழித்தார்கள்…ஆயுதங்கள் மூலமே பதில் சொல்ல நேர்ந்தது. எங்களுக்கென தமிழீழம் வேண்டும். தனி நாடு வேண்டும்.”

நடாத்தப்பட்ட உரைகள் சத்தியனுக்கு நியாயமாகப்பட்டன. தாங்கள் ஏந்திய ஆயுதங்களை நியாயப்படுத்தின. விமானக் குண்டு வீச்சுகளினாலும் இனக்கலவரங்களினாலும் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் சடலங்களைக் காட்டிய படங்கள் தனது கரத்திலிருந்த துப்பாக்கியை நியாயப்படுத்தின. சத்தியன் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லையென நம்பத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவனது முகாம் கலகலப்படைந்தது. அவர்களுக்குப் புதிய சீருடைகளும் துப்பாக்கிகளும் வழங்கப்பட்டன. 'சண்டைக்கு அனுப்பப் போகிறார்களோ' என முதலில் நினைத்தான். பின்னர் தெரிய வந்தது தலைவர் முகாமிற்கு வந்து அவர்களுக்கு கழுத்தில் மாட்டுவதற்கு 'சயனைட்' குப்பிகள் தரப்போகிறார் என்பது. தலைவரைக் காணப்போகின்ற மகிழ்ச்சியில் அவர்களில் பலரும் சந்தோஷப்பட்டார்கள். உண்மையில் அவனது முகாம் அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது.

மாலைப்பொழுதில் காவலர்கள் புடைசூழ தலைவர் வந்தார். சத்தியன் முதலில் அன்று தான் அவரைத் தரிசித்தான். தமிழீழத் தலைவர் பிரபாகரன் குறித்து அவன் கேள்விப்பட்டவை அதிகம். இலங்கையைக் கிலி கொள்ள வைத்திருக்கின்ற தலைவன். தடித்த மீசையும் நடுத்தர உயரமும் கொண்ட அம்மனிதனால் இப்போராட்ட இயக்கத்தைக் கட்டி எழுப்ப முடிந்திருக்கிறது.

நவம்பர் 26, 1954 இல் வல்வெட்டித்துறையில் வேலுப்பிள்ளை என்பவருக்கும் பார்வதி என்பவருக்கும் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்து இச்சிறிய வயதில் உலகமே வியக்கும் போராளியாக மாறிவிட்டதை சத்தியன் எண்ணிக் கொண்டான். தலைவர் பணக்காரக் குடும்பத்தினர் அல்லர்.. ஒரு காணி அபிவிருத்தி அதிகாரியின் மகன். அப் பிரபாகரன் போராட்டத்தின் தலைவனாக தங்கள் முன் வந்திருக்கிறான். சிறு வயதில் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியில் படித்த பிரபாகரனை அரசாங்க உத்தியோகத்தனாகக் காணத் தந்தை ஆசைப்பட்டாராம். ஆனால் இடுப்பில் கைத்துப்பாக்கி தரித்து அவர்களின் முன் பிரபாகரன் வந்திருக்கிறான்.

பிரபாகரன் பாடசாலை நாட்களில் தன்னை ஒரு வித்தியாசமான மனிதனாகக் காட்டிக் கொண்டான். சுதந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களின் வரலாற்றை விரும்பிக் கற்றான். தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமான இனவுறகள் பற்றிக் கவலைப்பட்டான். தன்னை சேர சோழ பாண்டிய மன்னர்களாகக் கனவு கண்டான். தான் தமிழ் மக்களின் விடுதலைக்காக சுதந்திரத்துக்காகப் போராட விரும்பினான். இனக்கலவரங்கள் பிரபாகரனை மாற்றிவிட்டன. தமிழருக்கு எதிரான வன்முறைகளை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பாணந்துறையில் இந்து அர்ச்சகர் மண்ணெண்ணெய் ஊற்றிச் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்ட நிகழ்ச்சியை வேதனையோடு நினைவு கூர்ந்தான். அவனின் பாடசாலை நண்பனாக கிருஷ்ணமூர்த்தி என்ற கிட்டு இருந்தான். இருவரும் வெற்றுச் சோடாப் போத்தல்களில் இரசாயணப் பதார்த்தங்களை நிரப்பி குண்டு தயாரிப்பார்களாம். கல்வித் தரப்படுத்தலுக்கு எதிராக சத்தியசீலன் என்ற பல்கலைக்கழக மாணவன் கூட்டணியின் இளைஞர் கழகத்திற்கு ஆதரவாக மாணவர் பேரவையை அமைத்தபோது அதற்கு பிரபாகரனின் ஆதரவு இருந்தது. 1972 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தினை கூட்டணியினர் முற்றவெளியில் எதிர்ப்புக் காட்டி எரித்தனர். அதற்கும் ஆதரவாக இருந்தான்.

சயிக்கிலில் யாழ்ப்பாணம் எங்கும் சுற்றுவான். முக்கியமானவர்களைச் சந்தித்து நாட்டு நிலமை பற்றி தேசியம் பற்றி விவாதிப்பான். எழுபதுகளில் மாணவரிடையே அமைதியின்மை காணப்பட்டது. வீதி மறியல்கள் நடந்தன. எதிர்ப்புகள் நிகழ்ந்தன. முதன் முறையாக பிரபாகரனும் நண்பர்களும். பஸ் ஒன்றினை வல்வெட்டித்துறையில் தீ மூட்டினர். தங்கத்துரை, குட்டிமணி, பிரபாகரன், பெரியசோதி என்போர் யாழ்ப்பாணத்தில் நிகழவிருந்த கொள்ளை சம்பந்தமாகப் பொலிசாரால் சந்தேகிக்கப்பட்டனர். 1973 இல் மாணவர் பேரவைத் தலைவர் சத்தியசீலனின் கைதும் அவன் அளித்த வாக்கு மூலமும் போராட்ட எண்ணங் கொண்ட இளைஞர்களைக் காட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தது. 42 இளைஞர்கள் ஒன்றாகக் கைதாகினர். பிரபாகரன் மட்டும் கைதாகவில்லை.

அவனும் பெரியசோதி என்பவனும் தமிழ்நாட்டுக்குத் தப்பிச் சென்று தலை மறைவாயினர். பின்னர் யாழ்ப்பாணம் திரும்பி வந்த பிரபாகரன் இயக்கவேலைகளில் ஈடுபட்டான். அவனுக்குப்பின்னால் இளைஞர்கள் சோந்தனர். பிரபாகரனின் முதல் குறியாக யாழ்ப்பாண மேயர் அல்பிரெட் துரையப்பா அமைந்தார். பொன்னாலையில் அவரைச் சுட்டுக் கொலை செய்தான். பின்னர் திருநெல்வெலி தபால் பெட்டிச் சந்தியில் 13 இராணுவத்தினரைக் குண்டு வைத்துத் தகர்த்தார்.. அதன் பின்னர் இலங்கையைக் கிடுகிடுக்க வைக்கும் போராளியாக மாறினார். மக்களைப் பயங்கொள்ள வைக்கும் விதத்தில் பல கொலைகள் நடந்தன. இதில் காவல்துறையினரும் பொதுமக்களும் புத்திஜீவிகளும் அரசியல் வாதிகளும் அடங்கினர். சக இயக்கங்கள் தடைசெய்யயப்பட்டன. தமிழர்கள் செய்வதறியாது வாய் மூடி மௌனமானார்கள்.

அத்தலைவன் அவர்கள் முன் வந்திருக்கிறான். எதிரிகளிடம் சரணடைய நேர்ந்தால் அவ்வாறு சரணடையாது தம்முயிரை மாய்த்துக்கொள்ளும் தற்கொலையாளியாக்கும் சயனைட் குப்பிகளை தலைவர் அவர்களின் கழுத்தில் அணிவித்தார். அவர்களின் பயிற்சி நிறைவு பெற்றது.

❀ ❀ ❀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 2

இரவாகிவிட்டது. மாலை கவிந்ததும் வீட்டிற்கு ஓடி வந்துவிடும் சத்தியன் நள்ளிரவாகியும் வீட்டிற்கு வரவில்லை. சின்னம்மாக்கிழவியின் அடி வயிற்றில் தணல் மாதிரிப் பற்றி எரியத் தொடங்கியது. தன்னை நம்பித்தான் தன்மகனை நிக்கவரெட்டியாவிலிருந்து அவள் மகன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றான். அவனைக் காணவில்லை என்று எப்படிக் கூறுவது? கொட்டும் மழை ஓய்ந்த பின்னர் காலாற நடந்து வருவதாகக் கூறி வீதியில் இறங்கிய சத்தியனைக் காணவில்லை என்பதை அவளால் எப்படிக் கூறமுடியும்?

இரவு முழுவதும் அவர்களால் தூங்க முடியவில்லை. பேரன் சத்தியன் வந்து விடுவான் வந்து விடுவான் என ஆவலோடு எதிர்பார்த்துக் கிழவி. காத்திருந்ததுதான் பயன். அவளின் உறக்கத்தைப் பறித்துக் கொண்டு இரவு கழிந்தது. வெள்ளை வானொன்று நரியன் குண்டடியில் வைத்து சத்தியனைக் கடத்திச் சென்றதான தகவல் காலை சின்னம்மாக் கிழவியின் செவிகளை வந்தடைந்தது. சத்தியன் கடத்திச் செல்லப்பட்டான் என்பது உண்மையானது.

யார் கடத்தினார்கள்?

அவ்வேளை நாச்சிமார்கோவில் மதகடியில் இளைஞன் ஒருவனை வெட்டிக் கொன்று சடலத்தைப் போட்டிருப்பதாகச் செய்தி வந்தது. பதறிப்போயச் சடலத்தைப் பார்த்தாள். அது சத்தியனில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஈ.பி.டி.பி. வான் அல்ல. எல்.ரி.ரி.ஈ யினுடையது? அவர்கள் தான் கடத்தினம். நீ ஆச்சி, முதலில கோண்டாவில் முகாமிற்குப் போய்ப் பார் விசாரித்துப் பார். பயனில்லைத் தான்.. ரா ராவாக் கிளிநொச்சிக்குக் கொண்டு போய் இருப்பாங்கள். விசாரித்துப் பார். விளாம்பழத்தை விழுங்கிய ஆனை மாதிரித்தான். பேரனை பிடித்தால் விடமாட்டான்கள். எத்தனை வயசு. பதினெட்டோ சரியான பதம் தான்.."

பரமேஸ்வராச் சந்தியில் பஸ்ஸிற்கு நின்றபோது கோண்டாவில் காம்ப்போ? கிட்டடி தான் கூப்பிடு தூரம் தான். நடந்து போகலாம் எனை' என்று யாரோ சொன்னதை நம்பி நடந்து வந்தாள். சொன்னவன் யாரோ தோட்டக்காரன் போல இருக்கிறது. அவனுக்குக் கூப்பிடு தூரம் தான். சின்னம்மா களைத்து விட்டாள். ஆறாக வியர்வை வழிந்தது. அங்கு பதிந்து காத்திருந்து கடைசியில் கிடைத்த பதில்: அப்படி ஒருத்தரையும் பிடிக்கவில்லை. எங்கட இயக்கம் வலியப்பிடிக்கிறதில்லை. மாற்றியக்கமாக இருக்கும் போய் விசாரித்துப் பாருங்க ஆச்சி."

"உங்களுக்குத் தெரியாமல் வேறை காம்ப் ஆக்கள் எப்படிப் பிடிச்சிருக்கலாம்."

பதில் சொன்னவனுக்குப் கோபம் வந்தது. "என்ன விசர்க்கதை பேசுறாய்? மடியுக்கை வைத்துக் கொண்டே இல்லை என்கிறம். உன்னை பங்கருக்கை போட வைச்சிடாதை.. நம்பா விட்டால் கிளிநொச்சிக் காம்ப்பிற்குப் போ. அங்கு பத்து முகாம்கள் இருக்குது.. எங்கை விசாரிக்கப்போறாய், போனை. இங்கிருக்காமல் என்னைக் குழப்பாமல் எழும்பிப் போ.." என்று அவன் காரணமில்லாமல் எரிந்து விழுந்தான்.

"எனக்குத் தம்பி, இயக்கப் பாட்டுகள் எழுதுகிறவரை எனக்குத் தெரியும். விசாரித்துப் பார்க்கவே?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போனை அங்கால. தெரிந்தால் அவரை விசாரித்துப் பார்."
பாட்டுகள் எழுதுகின்ற அந்த மனிதர் மீது அவனுக்கு ஏதோ எரிச்சல் போலும். காரணமின்றி எரிந்து விழுந்தான்.

அவன் ஏன் இப்படி எரிந்து விழுகிறான் என்பது புரியவில்லை. வீட்டில் மனைவியுடன் சண்டை பிடித்திருப்பான் போலும். வயதைப்பார்த்தால் அப்படியொன்றும் போராளிப் பொடியள் மாதிரியில்லை. சம்பளத்துக்கு வேலை பார்ப்பவன் போல இருந்தான். தன் பெண்சாதியை வேறொருவன் பிடித்த மாதிரி தன்னோடு எரிந்து விழுகிறான் என சின்னம்மாவுக்குப் பட்டது. தன் ஆதங்கத்தை அவளுக்குத் தெரிந்தவனிடம் சொல்லி ஆறினாள். கோண்டாவிலேயே அவன், அந்தப்பாட்டுகள் எழுதுகிறவரின் அலுவலகம், இருந்தது.. அவருக்கு ஐம்பது வயதிருக்கும். குடும்பஸ்தர்..

"இந்த விடயங்களில நான் தலையிட முடியாது. ஒரு துறையைச் சேர்ந்தவர்கள் மற்றத்துறையில் தலையிட முடியாது. கட்டுப்பாடு.. ஆச்சி தேடி வந்ததுக்காகச் சொல்லுறன். அப்படிப் பிடித்திருந்தால் உடனை கிளிநொச்சிக்குக் கொண்டு போய் விடுவினம். பயிற்சிக்கு விட்டிடுவினம். கிளிநொச்சி ரவுனில ஒன்றும் விசுவமடுவில ஒன்றும் கணேசபுரத்தில் ஒன்றுமாக காம்ப் கள் இருக்குது. பேரனை விடச்சொல்லிக் கேட்காதையனை. பார்க்கப் போறதாகச் சொல்லு.. சில வேளை காட்டுவான்கள்..திருப்பி அழைத்து வர நினையாதை.. நாட்டுக்கு ஒருத்தனை அளித்தாக நினைத்துக் கொள்ளுங்க."

சின்னம்மா ஏமாற்றத்துடன் திரும்பி வந்தாள். வயிறு பற்றியெரிந்தது. ஒரு தடவை பேரனைப் பார்த்துவிடும் ஆவல் தோன்றியது. அடுத்த நாள் அதிகாலை பஸ் எடுத்துக் கிளிநொச்சிக்குச் செல்வதாக முடிவெடுத்தாள். அந்த லொட லொட பஸ்ஸில் ஏறியபோது தான் ஆஸ்பத்திரியில் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்ற ராசாத்தியின் நினைவு வந்தது. ஒரு வகையில் ராசாத்தி தூரத்துச் சொந்தம். அவள் கணவன் கிளிநொச்சி ஆஸ்பத்தரியில் வேலைசெய்வதால் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலேயே குவார்ட்டஸ் இருந்தது. சின்னம்மாவின் மனம் சற்று அமைதியடைந்தது. அங்கு சென்று தங்கி அவளையும் துணைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்

கிளிநொச்சியில் அலைந்தது தான் மிச்சம். பயனில்லை. எங்கும் ஒரே பதில் தான் கிடைத்தது. அவர்களாவது, சத்தியனைப் பிடித்ததாவது. அவர்களின் வாசலில் சின்னம்மாபோல ஒரு வயோதிபப் பெண் மண் அள்ளி அவர்களைத் தூற்றினார். நீங்க நல்லா இருக்க மாட்டியள். பாழ் பட்டுப் போவியள். என்ரை புள்ளையப் பிடிச்சு வைச்சுக் கொண்டு பார்க்க விட மாட்டினாம் என்கிறியள். பாவிகள்...பாவிகள். நல்லா இருக்க மாட்டியள் குறுக்கால போவியள்."

அவள் திட்டுதலை யாரும் பொருட்படுத்தவில்லை. சின்னம்மாபோலப் பலர் காத்திருந்தார்கள். ஒரு குடும்பம் காரில் வந்திருந்தது. கணவனைப் பிடித்து பங்கரில் சிறை வைத்திருந்தார்கள். அவர் நகரத்தில் சிறிய கடை ஒன்று வைத்திருந்தார். பத்து இலட்சம் கட்டும்படி பணித்தார்கள். அவ்வளவு கட்ட வாய்ப்பில்லை எனக் கெஞ்சியும் பயனில்லை. எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் குறைக்கும் படி கேட்டும் பயனில்லை. கெடு குறித்து பங்கரில் போட்டுவிட்டார்கள். சமூகத்தில் கெளரவமாக இருந்த அவர் பங்கரில் கிடந்தார். அவரை மீட்க சொத்துப் பத்துகளை விற்றுக் காசோடு அவர் மனைவி வந்திருந்தாள். இப்படி எத்தனை பேரோ?

"காரில் வந்திருப்பது தெரிந்தால் காசு கனக்க இருக்குது என்டு நினைப்பார்கள். வாடகைக் கார் என்று தெரியவா போகிறது.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைப் பார்த்துப்போக கனடாவிலிருந்து வந்த மகனை உள்ளே பிடித்துப் போட்டுவிட்டார்கள். கனடாவில் தவணைப்பணம் கட்ட வசதியில்லை. குறித்த பணத்தைக்கட்டினால் தான் விடுவார்களாம். வெளி நாட்டுப் பயணத்துக்குரிய பயணநாளும் குறித்துள்ளது எனக் கூறியும் பயனில்லை. தாய் மகனின் விடுதலைக்காக முகாமின் வாசலில் தங்கித் தவமிருக்கிறாள்.

இவற்றையெல்லாம் சின்னம்மா கண்டாள். அடி வயிற்றை ஏதோ கலக்கியது. இவர்களைவிட கைக்குழந்தையோடு ஒருவன் வந்திருந்தான். இரண்டு பவுன் கட்டவில்லை என்பதற்காக அவன் மனைவியைப் பிடித்து பங்கரில் போட்டுவிட்டார்கள். நேரத்துக்கு நேரம் வந்து கைக்குழந்தைக்குப் பால் கொடுத்து எடுத்துச் செல்கிறான்.

"ஏன் பொடி பவுனைக் கொடுத்துவிடன்."

"நான் நாட் கூலி அம்மா..மனிசிக்குத் தாலி கூட கட்டவில்லை. அதிருந்தாக் கூடக் கொடுத்திருப்பன். என்ன செய்ய?": ஒரு நாளைக்கு மூன்று தடவை அலைகிறான். சின்னம்மாவுக்குப் பரிதாபமாக இருந்தது. சிறிதும் யோசியாமல் தன் கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றினாள்.

"இதில் ஒன்றரைப்பவுன் இருக்குது...கொடுத்துக் கேள்..மனிசியை இந்தப் பச்சை மண்ணுக்காக.."

அவன் கிழவியின் காலடியில் குழந்தையைக் கிடத்தித் கை கூப்பிக் கும்பிட்டான். கூட வந்த ராசாத்தி சின்னம்மாவை வியப்புடன் பார்த்தாள்.

"என்னட்ட வேறை இல்லை. இருந்தாற் தந்திருப்பன். இதனைக் கொடுத்துக் கேட்டுப் பார். வாய்க்கும்..மனிசர் தானே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்த்தது. ..இரண்டு கிழமைக் கெடுவோடு அப்பெண்ணை விடுவித்தார்கள்.

தன்னிலையை எடுத்துச் சொன்னாள் சின்னம்மா.

"நான் ஒருக்காப் பாத்துவிட்டுப்போறன்..தம்பிமார்." என்று கெஞ்சிப் பார்த்தாள். எதிர் முனையில் கசிவிருந்தது.

"அவர் எந்தக் காம்பில் இருக்கிறாரோ தெரியவில்லை. விசாரித்து வைக்கிறம். நாளைக்கு வாணை. சத்தியனைப்பற்றி விபரங்களைத் தந்துவிட்டுப் போ.."

மறுநாள் தவறாது ஓடிப்போனாள். பதில் கிடைத்தது.

"ஆச்சி நீ ஒருக்கா பூநகரிக் காம்பிற்குப் போய்ப் பார். அங்கதான் இருக்கிறான். ஸ்ரோர் கீப்பராக இருக்கிறான். சந்தோசமாக இருக்கிறான்."

மறுநாள் பூநகரிக்கு மினி வான் எடுத்து ஓடிச்சென்றாள். சத்தியனைக் காணவேண்டுமென்ற ஆவல் ஒவ்வொரு செயலிலும் இருந்தது. நல்லூர் முகாமிற்குச் சென்று விசாரித்துப் பார்த்தாள். பயனில்லை. அங்கிருந்து ஜெயபுரம் முகாமிற்குச் சென்று பார்க்கும்படி சொன்னார்கள். பூநகரிலிருந்து உள்ளே போவதற்கு வாகனம் எடுப்பதென்பது இலேசான காரியமல்ல. கிராஞ்சிக்கு மத்தியானம் ஒரு மினி பஸ் புறப்பட்டது அதில் நெருக்கியடித்து ஏறிச்சென்று ஜெயபுரத்தில் இறங்கினாள். அந்தத் தள்ளாத வயதிலும் பேரனைக் காணும் ஆவல் அவளைப் பிடரி பிடித்துத் தள்ளியது. அவன் உயிரோடு இருக்கிறான் என்ற செய்தி அவளுக்குத் தேவைப்பட்டது. நிக்கவரெட்டியாவில் இருக்கின்ற மகனுக்கும் மருமகளுக்கும் அவள் என்ன பதில் சொல்ல முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன ஆச்சி பிந்திவிட்டாய்.. காலமை தான் சத்தியனை விடத்தல் தீவுக்கு அழைத்துச் சென்றவங்கள். அவன் சுகமாக வீடு வருவான். எத்தனை ஆயிரம் பிள்ளைகள் இயக்கத்தில் சேர்ந்திருக்கு தெரியுமா? உயிரைக் கொடுத்து தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடுதுகள்.. யாழ்ப்பாணம். போய்ச்சேர் வேணுமெண்டால் விடத்தல்தீவுக் காம்பிற்குக் கடிதம் எழுதிப் போடு.. அலையாதை.. வீண் வேலை. விடத்தல்தீவில தேடமாட்டாய். மன்னாருக்குச் சண்டைக்குப் போயிருப்பானோ என்னவோ?”

“ஐயோ” என்றாள் சின்னம்மா. “சண்டைக்கோ? அவன் சின்னப்பொடியன்.. வெத்திலைக் காம்பைக் கூடக் கடிக்கத் தெரியாது..”

சின்னம்மாக் கிழவிக்கு ஒரு ஒன்றைவிட்ட தம்பி முறையான முருகேசு வெள்ளாங்குளத்தில் குடும்பத்தோடு வசித்து வந்தார். அவரிடம் சென்று இரண்டு நாள் தங்கி விடத்தல்தீவு சென்று பார்க்கலாம் என்ற நினைவு வந்தது. முருகேசுவின் மூத்த மகள் மைதிலி மாமிக்காரியை அன்போடு ஆரவாரமாக வரவேற்றாள்.

விடயத்தைக் கேள்விப்பட்டதும், “இயக்கத்துக்குப் போய் விட்டால் எதுவும் செய்ய முடியாது மாமி. ஆனை விழுங்கிய விளாம்பழம் தான். பேசாமல் ரெண்டு நாட்கள் எங்களோட இருந்திட்டுப் போங்கோ மாமி. அண்ணை மாணிக்கராசா மன்னாரில ஜீப் றைவராக இருக்கிறான். வரட்டும் பார்ப்பம்.” என்றாள்.

ஏமாற்றத்தோடு திரும்பி வந்தாள். நெஞ்சின் மூலையில் வலி இருந்தது. கண்ணீர் பொலபொலவென வழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 3

**வ**டகீழ் வானத்தின் கோடியில் கருக்கூட்டியிருந்த கருமுகில் திரளைக்கண்டு மனம் மகிழ்ந்து போய் அப்படியே முற்றத்தில் நின்றுவிட்டார் முருகேசர். நிச்சயமாக இன்று மழைத்துளிகளால் அவர் வயல்வெளி குளிக்கப்போகின்றது என்ற நம்பிக்கை வந்தது. எத்தனை நாட்கள் அவரை வானம் ஏமாற்றிவிட்டது. 'இந்தா அந்தா இன்று நாளை' என்று நாட்கள் கழிந்து விட்டன. வான் இரங்கவுமில்லை. அவர் விதைத்த வயல் நனையவுமில்லை.

இன்று நிச்சயமாக வான் இரங்கி தரை இறங்கத் தான் போகின்றது. அவர் விதைப்பு இம்முறை தப்பிவிடும். முற்றத்தைவிட்டு நீங்கித் தலைவாசல் குந்தில் வந்து அமர்ந்தார். மனதினை அழுத்திய சுமை இறங்கியது போல இருந்தது. கூரை இறப்பில் செருகியிருந்த தாவடிப் புகையிலையை எடுத்து, விரித்துக் கிழித்து சுருட்டுச் சுற்றுவதற்கான விதத்தில் உள்ளிலை, காப்பிலை என்பனவற்றை எடுத்துக் கொண்டு சுருட்டத் தொடங்கினார். அந்த நேரத்தில் குசினிக் கொட்டிலிலிருந்து தேநீர் கிளாசுடன் மைதிலி வெளியே வந்தாள்.

"ராராவா இருமித் தொலைச்சியள். ஒரு சொட்டு நித்திரைக்காகக் கண்களை மூடினதாத் தெரியவில்லை. இப்ப திரும்ப அந்த அறுந்த சுருட்டைத் தூக்கிவிட்டியள்.. இந்தா தேத்தண்ணியைப் பிடியுங்கோ.." என்று தேநீர்க்கிளாசை அவரிடம் நீட்டினாள். அதனை வாங்கிக் குந்தில் தன்னருகில் வைத்துவிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தார். மதமதவென வளர்ந்துயர்ந்து கிணற்றடி மொந்தன் வாழையாக நிற்கிறாள். தாயைப்போல எடுப்பான மூக்கும் முழியுமாகச் சிவந்திருக்கிறாள். அவளுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் இரண்டிரண்டு வயது வித்தியாசத்தில் நான்கு பிள்ளைகள். பாடசாலைக்குச் சென்று வருகின்றார்கள். அவர் மனைவி பாக்கியம் உயிருடன் இருந்தால் மனதில் கவலையில்லை. குஞ்சுகளைப் பருந்துகளிடமிருந்து பாதுகாக்கும் கோழி மாதிரிப் பிள்ளைகளைக் காத்துவிடுவாள். அவருக்கு அந்தக்கவலை இல்லாது இருந்திருக்கும். தன் வானம் பார்த்த மானாவாரித் தரையையும் வரம்புகளையும் பார்த்துச் செப்பனிடுவதுடன் பொழுதைப் போக்கிவிடுவார். நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருப்பது போல மைதிலியைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

"என்ன ஐயா பேசாதிருக்கிறியள்?"

"மேல வானத்தைப் பார்த்தியே? கருக்கட்டியிருக்குது..."

"பாத்தன் ஐயா.. இண்டைக்கு நாளைக்கு மழை பெய்யும் போலத்தான் தெரியுது.. நீங்க ஊரோடை ஒத்துப்போவதில்லை ஐயா. போனமுறை எல்லாரும் குளத்துக்குத் தண்ணி வந்த பிறகு சேற்று விதைப்புச் செய்ய. நீங்க மாறா புழுதி விதைப்புச் செய்தியள். மழைபிந்தி எல்லாம் கருகிப்போச்சுது. இந்தமுறையும் வயல் வைத்திருக்கிறவை குளம் நிரம்பட்டும் சேற்று விதைப்புச் செய்வம் என்று காத்திருக்க நீங்க போன வரியம் போல புழுதியிலை விதைச்சிருக்கிறியள்?.."

"அவை புத்தியில்லாத கமக்காரர் தங்கச்சி. ஆடியிலே தேடி விதை என்பினம். காத்திருந்து சேற்று விதைப்புச் செய்தினம். போன முறை. கண்டதென்ன? கடைசி ஒரு மழை விளையிறநேரத்தில காணாமல் முற்றாகக் கருகிப்போச்சுது. எனக்கு ஆரம்பத்தில மழை காணாமல் கருகிப்போச்சுசுது. ஏதோ கொஞ்சம் மிஞ்சி விதை நெல்லையாவது மீட்டு வைச்சிருக்கிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேற்று விதைப்புச் செய்தவைக்கு அதுவுமில்லை. வேளாண்மை ஒரு சூதாட்டம் மாதிரிப் பிள்ளை. ஒரு முறை பிழைச்ச தெண்டதுக்காக வழக்கத்தை மாற்றக் கூடாது. புரம்பரை பரம்பரையாக கைக்கொள்கிற வழக்கத்தை மாற்றக் கூடாது. எங்கட குளம் நிரம்பும் வரை காத்திருக்கக் கூடாது. புழுதியிலே விதைத்து குளத்து நீரைப்பின்னால தேவைப்படும்போது பயன்படுத்தி வந்தினம் எங்கட மூதாதையர்!. அந்த முறையைத் தான் நான் சாகும் வரை பின்பற்றுவன். நீ இருந்து பார். இம்முறை வெல்லப்போவது நானும் என்னைப்போல புழுதி விதைப்புச் செய்தீருக்கிற பொன்னப்பரும் தான். சேற்று விதைப்புக்காகக் காத்திருக்கிறவை இம்முறையும் ஏமாறப் போகினம்."

தந்தையின் பேச்சினைக் கேட்டதும் மைதிலிக்குச் சிரிப்பு வந்தது. அவர் தன்னைக் கேலி செய்வதாக நினைத்துக் கொள்வாரென அடக்கிக் கொண்டாள். மகளின் மனதில் நினைத்ததை முருகேசர் புரிந்துகொண்டார்.

"அவயள் மூன்று மாத நெல்லுப் போடுவினம் என்பாய்.. போடட்டும்.. வாய்ச்சால் பிழைச்சுக் கொள்ளட்டும். நானும் புழுதியில மூன்று மாதம் தான் போட்டனான். நல்லமாதிரி மழை பெய்தால் நான் அறுவடை செய்திட்டு சிறுபோகமும் செய்திடமாட்டன் பிள்ளை?"

'கடும் கற்பனை தான்' என மைதிலி சிரித்தாள். அவள் சிரிப்பு அடங்குவதற்கு முன் கண்களைப் பறிக்குமாப்போல அடி வானத்தில் மின்னல் ஒளி கீறிப்பாய்ந்தது. அதனைத் தொடர்ந்து மெதுவாக இடி இடித்தது. வானத்திலிருந்து நீர்த்துளிகள் தாரையாக இறங்கத் தொடங்கின. ஐயாவின் கணிப்புத் தவறவில்லை. அவளுடைய இருபத்திரண்டு வருட அனுபவத்துக்கும் அவரின் ஐம்பத்தைந்து வருட அனுமானம் பிழைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வயலுக்குப் போயிட்டு வாறன் பிள்ளை.. பாத்து வாறன்...”என்றபடி முற்றத்தில் இறங்கினார். தாகம் எடுத்துக்கிடக்கும் வயல் தரையில் நீர் விழுந்து தெறிக்கும்போதும் ஊறும் போதும் கிளம்பும் மண் மணத்தை அனுபவிக்க அவர் துடித்தார். சோர்ந்து கருகத் தொடங்கியிருக்கும் நெல் மணி விதைகள் நீரை உண்டு வெடிக்கத் தம்மைத் தயார் படுத்திக் கொள்ளும் உணர்வை அனுபவிக்க விரும்பினார். முற்றத்தில் இறங்கியவரின் தலைமீதும் உடல் மீதும் துளிகள் விழுந்தன. உடம்பில் குளிர் சுர்ரென ஏறியது.

“குடை எடுத்துவாறன் ஐயா..”என்றபடி மைதிலி வீட்டுக்குள் ஓடினாள். அவள் குடையைத் தேடி எடுத்து வரும் வரை அவர் நிற்கவில்லை. படலையைத் திறந்து கொண்டு ஒழுங்கையில் இறங்கியபோது எதிரே பொன்னப்பர் மகிழ்வுடன் ஓடிவருவது தெரிந்தது. கமக்காரனுக்கு முதல் மழை தருகின்ற மகிழ்ச்சி பொன்னப்பரின் பூரித்த முகத்தில் நன்கு தெரிந்தது. கடும் நோய் வாய்ப்பட்டு ‘இன்றோ நாளையோ’ என காலத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த பிள்ளையொன்று பிழைத்துவிட்ட சந்தோஷம் முகத்தில் விரிந்து கிடந்தது.

வெள்ளாங்குளம் கிராமத்தில் வாழ்கின்ற பதினேழு வெள்ளாண்மை செய்கின்ற கமக்காரர்களில் அவர்கள் இருவரும் தாம் இம்முறை வானம் தம்மை ஏமாற்றிவிடாது என்ற நம்பிக்கையில் ஆடித்தூறலோடு வயல் நிலத்தைக் கீறி புழுதியாக விதைத்தவர்கள்.

அவர்கள் வயலை றக்ரர் கொண்டு மண் புரட்டுவதைக் கண்டு மற்றவர்கள் தம்முள் சிரித்துக் கொண்டார்கள். வெள்ளாங்குளத்தினுள் மழை வெள்ளம் வரத் தொடங்கியதும் காத்திருந்து வயலை உழத்தொடங்குவார்கள். அதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசரினதும் பொன்னப்பரினதும் நிலங்களில் நெல் முளை வெடிக்கத் தொடங்கியிருக்கும்.

முருகேசரைக் கண்டதும் பொன்னப்பர் மகிழ்ச்சியில் அவரைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"மனிசியின்ர பிள்ளையளின்ர நகை நட்டுகளை பாங்கில அடகு வைத்துத் தான் இம்முறை விதைச்சனான், முருகேசு! தப்பிவிட்டம்.."

"அதுக்குள்ள சந்தோஷப்படாதை பொன்னப்பர்...இன்னமும் இருக்குது..."

"அப்படிச் சொல்லாதை முருகேசு. உனக்குத் தெரியாததே.? பருவந் தப்பாது மழை பெய்யத் தொடங்கியிருக்குது. இனிப்பொய்க்காது.."

இரு கமக்காரர்களும் தம் வயல் வரம்புகளில் ஏறி நின்றார்கள். தூரத்தில் வெள்ளாங்குளத்தின் அணைக்கட்டு வடக்குத் தெற்காக நீண்டு கிடந்தது. நடுத்தர நீர்ப்பாசனக் குளம். குளத்தில் நீர் நிரம்பி அறுவடைக்குப்பின் எஞ்சி நின்றால் கமவிதானையும் ஏஜிஏயும் பயிர்ச்செய்கைக் கூட்டத்தைக் கூட்டிச் சிறுபோகத்துக்கு நிலத்தைச் சமமாகப் பிரித்துக் கொடுப்பார்கள். கடந்து ஐந்தாண்டுகளாக அப்படியொரு அதிர்ஷ்டம் வெள்ளாங்குளக் கமக்காரருக்குக் கிட்டவில்லை.

'ஐந்தாண்டுக்கு ஒரு முறை ஈரநிலையும் வறட்சி நிலையும் ஒரு வட்டமாகச் சுழன்று வருமாமாம் ஐயா. இந்தத்தடவை எங்களுக்கு ஈரநிலமை வரும் ஐயா." என்றான் முருகேசரின் இரண்டாவது மகன் தனசேகரன் தன் பள்ளிக்கூட அறிவைக் கொண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படி இருந்தது தான் தம்பி. இப்ப எல்லாம் தலை கீழாக மாறிவிட்டது. பருவந் தப்பி மழை பெய்யுது.. பெய்யாது விடுது.. இயற்கையும் எம்மைச் சோதிக்குது.. அந்தக்காலத்தில எங்கட பாட்டன் பூட்டன்மார் இப்படிக் கஷ்டப்பட்டதாகத் தெரியவில்லையடா. பருவந் தப்பாது மழை பொழிஞ்சுது. நெல்லை விளைச்சு அறுத்துப்போட்டு அறைக்குள்ள அடுக்கிவைச்சிட்டு அல்லது பட்டாயத்தால் இட்டு மூடிவைத்துவிட்டு வருடம் முழுவதும் பட்டினி இல்லாமல் சீவிச்சினம். பசிச்சவைக்கும் அள்ளிக் கொடுத்தினம்.. இப்ப கலிகாலம் கண்டியோ? எங்கபாத்தாலும் கொலையும் கொள்ளையும் கடத்தலும்...ஒருபக்கம் பொடியள் சுட்டுத்தள்ள. இன்னொருபக்கம் ஆமி சுட்டுத் தள்ளுது.. வீதியில சந்தியிலே வயல் வெளியிலே..எங்க பார்த்தாலும் அவமாகச் செத்த சடலங்கள் தான்.. ஆரை நோகிறது? இயற்கையும் இவற்றைக்கண்டு சலிச்சுப்போட்டுது.. அதனால காலம் தப்பிப்போகுது. அது ஒரு பொற்காலமடா தம்பி.. அந்தக் காலத்தின் இனிமையை நாங்க அனுபவிச்சிட்டம். இந்தத் தலைமுறைதான் அதை அனுபவிக்கவில்லை. உங்களுக்குத் தெரியாதடா அந்த இனிய காலம்." என்றார் முருகேசர்.

இருவரினதும் வயல்கள் வெள்ளாங்குளவெளியின் மத்தியில் அமைந்திருந்தன. அதனால் காட்டுப் பன்றிகளின் கவனம் அவற்றில் திரும்புவதில்லை. விளிம்பு வயல்களின் விளைச்சல் அவற்றின் பசிக்கு இரையாகின. நன்றாக முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும்போது இரண்டு மூன்று பாத்திகளைப் பறிகொடுத்த பலர் அக்குளத்துப் பங்காளர்களாக இருக்கின்றனர். இவர்களுடைய வயல்கள் மத்தியில் இருப்பதால் தப்பிவிடுகின்றன.

வெகுநேரம் தங்கள் வயலின் வரம்புகளில் அவர்கள் நின்றிருந்தனர். வானத்து மழைத்துளிகள் தரையை நனைத்துக் குளிர்விப்பதைப் பார்த்திருந்தார்கள். அவர்களின் இதயங்கள் நிறைந்து வழிந்தன. "போவம் பொன்னையா.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இருவரும் வயலை ஊடுருவிக் குடிமனைக்குச் செல்கின்ற மண்பாதையில் மேற்காக நடந்து குடிமனை நோக்கி விரைந்தபோது, வடக்குத் தெற்காகப் பூநகரியிலிருந்து மன்னாருக்குச் செல்கின்ற தார் வீதியிலிருந்து அந்த மண்பாதையில் இறங்கி ஜீப் ஒன்று விரைந்து வருவது தெரிந்தது. அதன் தோற்றத்திலிருந்து அது நீர்ப்பாசனத் திணைக்களத்தை சேர்ந்ததாகத் தான் இருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டார். அவருடைய மூத்தமகன் மாணிக்கராசா மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஜீப்றைவராகக் கடமையாற்றி வருகின்றான். அதன் றைவராக வருவதற்கு அவன் செய்த முயற்சிகள் தனிக்கதை. வாரத்துக்கு ஒரு தடவை வீட்டுக்கு வந்து செல்வான்.

அவர்கள் பார்த்துக்கொண்டு நிற்கையில் ஜீப் அவர்கள் அருகில் வந்து நின்றது. முருகேசர் எதிர்பார்த்ததுபோல மாணிக்கராசா சாரதி இருக்கையில் இருந்தான். ஜீப்பின் முன் இருக்கையில் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். பின்னால் இரு வயதானவர்கள் அமர்ந்திருந்தார்கள். முருகேசரைப்போல மாணிக்கராசாவின் உருவமிருந்தது. முருகேசரைப் பாராதவர்கள் மாணிக்கராசாவைப் பார்க்கத் தேவையில்லை. அப்பனைப்போலப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறது என்பார்கள்.

"ஐயா என்ன இங்க நிக்கிறியள்?" என்று மாணிக்கராசா கேட்டான். தொடர்ந்து, இவர் எங்கட ரீஓ சேர். அடம்பன்குளப் பக்கம் போறம் ஐயா. பீல்ட் வேக் முடிச்சுக் கொண்டு சாப்பாட்டுக்கு முதன் முறையாக எங்கட வீட்டுக்கு வர ஒப்புக் கொண்டிருக்கிறார்."

"மிக்க சந்தோஷம் தம்பி.. எல்லாரையும் கூட்டிக்கொண்டு வா.. நான் மைதிலியிட்ட சொல்லி சாப்பாடு ஒழுங்கு படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கிறன். தவறாமல் வாருங்கோ தம்பி. உது எங்களுக்குப் பெருமை தம்பி..” என்றார். ரீஓ மணிசேகரன் நட்போடு சிரித்து அனுமதித்தான்.

மழை சற்று ஓய்ந்திருந்தது. தூறல் நிற்கவில்லை. தெருவோர மரங்கள். மழைத்துளிகளில் குளித்து சிலிர்த்து நின்றன. மணல் வீதியில் வடக்குப் பக்கமாக நடந்து மூன்றாவதாக வந்த மண் ஒழுங்கையில் அவர்கள் தம் வீடுகளை நோக்கித் திரும்பினார்கள். வாழைத் தோட்டங்கள் வலது பக்கத்தில் காணப்பட்டன. அவற்றுக்கு அப்பால் எல்லைப் புறத்தில் காடு செறிந்து கிடந்தது. ஒழுங்கையின் மருங்கில் கமங்களில் வேலை செய்யும் கூலித் தொழிலாளரின் குடிசைகள் ஐதாகக் காணப்பட்டன. அந்த மண் ஒழுங்கையில் சற்றுத் தூரம் நடந்ததும் வளமான தோட்டநிலம் காணப்பட்டது. ஓரளவு வசதியான வீடுகள் காணப்பட்டன. பெரும்பாலும் மண் வீடுகள் தாம் ஆனால் இரண்டறைகள், குசினி, தலைவாசல் கொண்ட வீடுகள். அவற்றில் ஒன்று தான் முருகேசருடையது.

படலையைத் திறந்து கொண்டு வளவுக்குள் நுழையப்போனபோது தூரத்தில் சின்னப்பு சைக்கிலில் வருவது தெரிந்தது. பின் கரியரில் ஏதோ பெரும் சுமையோடு வருகிறான் என்பதைச் சயிக்கிலின் சக்கரங்கள் மணல் ஒழுங்கையில் நகரக் கஷ்டப்படுவதிலிருந்தும் அதன் வாலாட்டிக் குருவிபோன்ற அசைவிலிருந்தும் தெரிந்தது.

“சின்னப்பு வாறான் போலப்படுகுது முருகேசர். ராத்திரி வேட்டைக்குப் போயிருக்கிறான் போல..” என்றார் பொன்னப்பர். அவர் கணித்தது பிழையாகவில்லை. கட்டுத் துவக்கினால் சுட்டு நெருப்பில் வதக்கிய பெரியதொரு காட்டுப்பன்றியைச் சாக்கொன்றிலிட்டுக் கட்டிக் கொண்டு சின்னப்பு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லதாப் போச்சுது.." என முருகேசர் எண்ணிக்கொண்டார். அவர்களைக்கண்டதும் சயிக்கிலை நிறுத்திக் கீழே குதித்தான் சின்னப்பு. வதக்கிய பன்றியுடன் மன்னார் வீதியும் மண்பாதையும் சந்திக்கின்ற சந்திக்குச் செல்கிறான். அவ்வீதியில் பயணப்படுபவர்கள் பன்றி இறைச்சியை வாங்கிச் செல்வார்கள்.

"நீ போ சின்னப்பு. நல்லதாக ஒரு நாலு கிலோ இறைச்சி எடுத்து வை. வீட்டைபோட்டு உடனை பையோடு வாறன். ஆக்கள் சாப்பிட வருகினம். வருகினம்." என்றார் முருகேசர்.

"எனக்கும் கறிக்குத் தேவை. எடுத்து வை சின்னப்பு" என்றார் பொன்னப்பர்.

"சரி கெதியா வாருங்கோ" என்றபடி சயிக்கில் தாவினான். சுமையுடன் மன்னர் வீதியை நோக்கிச் செலுத்தினான்.

படலையைத் திறந்து நுழைந்ததும் முற்றத்தில் படுத்திருந்த நாய் குரைத்துத் தன்னை இனங்காட்டிக்கொண்டது. பின்னர் அவரைக்கண்டதும் அடங்கிக் கொண்டது. முற்றத்தில் வேலியோரம் அடர்ந்து வளர்ந்திருந்த வேப்பமரத்தின் சருகுகள் முற்றம் முழுவதும் இறைந்து கிடந்தன. பெய்த மழைத்துளிகள் காய்ந்து கிளைகளில் தொங்கிக் கிடந்த இலைகளைப் பிடிகழற்றி நிலத்தில் சொரிய வைத்தவிட்டன. படலை திறந்த சத்தத்தையும் நாயின் குரைப்பையும் கேட்ட மைதிலி தலைவாசலுக்கு வந்தாள்.

"கெதியாக ஐஞ்சாறு பேருக்குச் சமை பிள்ளை. கொண்ணையும் ரிஓ ஆக்களும் வருகினம் மத்தியானம் சாப்பிட... அந்த உமலை எடுத்து வா.. சின்னப்பு பன்றி இறைச்சி தாறன் எண்டவன். வாங்கி வாறன்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியானம் கழிந்த பின்னர் இரண்டு மணியளவில் மாணிக்கராசாவும் ஏனையவர்களும் ஜீப்பில் வந்தனர். பயணக் களைப்பு அவர்களில் தெரிந்தது. கிணற்றடி தேசிக்காய் மரத்தில் பறித்த தேசிக்காய்களைப் பிழிந்து கரைத்து கிளாஸ்களில் நிரப்பி மைதிலி தலைவாசலுக்கு எடுத்து வந்தாள்.

"இவ என்ரை மூத்த தங்கச்சி. மைதிலி. மற்றவை பள்ளிக்குப் போயிட்டினம் வந்திடுவினம்.." என்று மைதிலியை அவர்களுக்கு மாணிக்கராசா அறிமுகப்படுத்தினான். தேசிக்காய்த் தண்ணீர் நிரம்பிய கிளாஸை கரத்தில் எடுத்தபடி அவளை மணிசேகரன் நிமிர்ந்து பார்த்தான். அந்தக்கிராமத்துப் பெண்ணின் அப்பழுக்கற்ற கவர்ச்சி விழிகளும் அந்த நகரத்து இளைஞனின் நாகரிகக் கபட விழிகளும் ஒன்றையொன்று கவ்விப்பிரிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 4

**வி**டத்தல்தீவு முகாம் மிகச்சிறியது. ஆனால் அழகானது. மேற்குப்பக்கம் கடற்கரையையும் கிழக்குப் பக்கம் பரந்து பற்றைக்காட்டையும் கொண்டது. வீரை மரங்களையும் நெளுக் பற்றைகளாலும் மூடப்பட்டுக் காணப்பட்டது. பகலிலும் முகாம் ஒன்றுள்ளதெனத் தெரியாத அமைப்பினது. அப்பற்றைக் காட்டுக்குள் இடையிடையே உயர்ந்த மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றில் தாவித்திரிகின்ற குரங்குகளை சத்தியன் ஆரம்பத்தில் வியப்புடன் பார்த்தான். புதிய சூழல். காடு. கடல், குரங்குகள்...அவனுக்குப் பரிச்சயமல்லாத சூழல். அவனை அழைத்து வந்தவர்கள் இந்த முகாமில் விட்டபோது கண்ணைக்கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது. இப்போது அந்தச் சூழல் பிடித்துக் கொண்ட மாதிரி இருக்கிறது.

அந்த முகாமின் பொறுப்பாளனாக இருந்த வரதன் சற்றுக் கண்டிப்பானவன். தண்டனைகள் வழங்குவதில் கண்டிப்பானவன். அந்த முகாமில் நாற்பது பேர் வரையில் இருந்தார்கள். நாட்டின் பல பிரிவுகளையும் சார்ந்தவர்கள். சத்தியனின் நண்பனாக விளங்கிய சுரேஸ் மட்டக்களப்பைச் சேர்ந்தவன்.

"அந்தக்கிராமத்தில் நாங்கள் நிம்மதியாக வாழ்ந்தோம். காடுகளில் தேனைச் சேகரிப்பதையும் காய்ந்த பட்ட காட்டு விறகுகளைச் சேகரித்து நகரத் தேத்தண்ணிக் கடைகளுக்கு வழங்குவதும் அதில் கிடைத்த சொற்ப வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை ஓடத்தை நகர்த்தி வந்தோம். வறிய குடும்பம் தான். அழகான குடும்பம் நான் இரண்டு தம்பிகள் கொண்ட குடும்பம். எங்கள் பக்கத்துக்கிராமம் சிங்களக் குடியேற்றக் கிராமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகோயிலின் மணி கேட்கும் பிரதேசமெல்லாம் தங்களது என மார் தட்டிய புத்ததுறவி ஒருவர் வலுக்கட்டாயமாக அமைப்பித்த குடியேற்றக்கிராமம். இரண்டாண்டுகள் மழை பெய்யாததால் செய்கை இழந்து காடு பற்றியிருந்த எங்க கிராமத்து வயல் காணிகளை ஆக்கிரமித்து குடியேற்றவாசிகளுக்கு வலோக்காரமாகச் செய்கை பண்ண வைத்தது. பல தடவை கேட்டும் திருத்தாத பாழடைந்த குளத்தைத் திருத்தி சிங்களவருக்கு நீர்ப்பாசனம் கொடுத்தது. நிலம்கள் குளம் யாவற்றையும் இழந்தோம். எங்க கிராமத்து மக்களது வயிறு பற்றி யெரிந்தது. எங்க கிராமத்தைச் சேர்ந்த பையன் ஒருவன் இயக்கத்தில் இருந்தான். அவனால் பொறுக்க முடியவில்லை. ஓரிரவு தன் பொடிகளோடு வந்து அந்தச் சிங்களக்கிராமத்தைத் தாக்கி அழித்தான். பரிதாபம் தான். பெண்கள், குழந்தைகள் எனக் கொல்லப்பட்டனர். வெறி கொண்ட இராணுவம் பக்கத்துக் கிராமமான எங்களைத் தாக்கியது. குழந்தை குஞ்சு, குருமான்கள், பெண்கள் எல்லாரும் கொல்லப்பட்டனர். என் பெற்றோரையும் தம்பிகளையும் இழந்தேன். நானும் சிலரும் அம்மாவும் பக்கத்துக் காட்டுக்குத்தப்பி ஓடினோம். அம்மாவை அடுத்த நாள் காணவில்லை. என்ன நடந்ததோ? எஞ்சியிருந்த பையன்களும் இளம் பெண்களும் இயக்கத்தில் சேர்ந்து விட்டோம். வேறு வழி எமக்குத் தெரியவில்லை. இவங்களிடம் அகப்பட்டுச் சாவதிலும் இவங்களைப் பழி வாங்க இது மார்க்கமாகப் பட்டது. ஆறு ஆண்டுகளாகின்றது. பயிற்சி பெற்ற நான் விடத்தல்தீவு பேசுக்கு வந்துவிட்டேன். ஊருக்கு இன்னமும் போகவில்லை. ஆரிடம் போவது? அங்கு ஆர் இருக்கினம்.."

"சுரேஸ். இது வரை எத்தனை சண்டைகளில் பங்கு பற்றியிருக்கிறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆறு சண்டைகளில் பங்குபற்றியிருக்கிறன். எனது குண்டுகள் பாய்ந்து எத்தனைபேர் இறந்தார்கள் எண்டு தெரியாது. நீங்கள் சண்டைகளில் பங்கு பற்றவில்லையா? வீட்டுக்கு ஒருக்காலும் போகவில்லையா?”

“இல்லை. சண்டைகளில் பங்கு பற்றவில்லை. வீட்டுக்குப் போகலாம். போகவில்லை. இரண்டு வரியமாகுது. அதுகளைக் கவலைப்படுத்த நான் விரும்பவில்லை. யாழ்ப்பாணத்தில் இருக்கிற ஆச்சி அப்புவிடமும் போகவில்லை. கடிதம் மட்டும் போட்டிருக்கிறன். என்ரை ஊர் நிக்கவரெட்டியா.. இந்தக்கோலத்தில் அங்க எப்படிப் போவது? எங்க கிராமம் எல்.ரி.ரி.ஈ யை எதிர்பார்க்காது. தம்மோடு வாழ்கின்ற பையன் எல்.ரி.ரி.ஈ எனத் தெரிந்தால் பெற்றோருக்கு ஆபத்து.. காணாமல் போய்விட்டான் என எண்ணிக் கொள்ளட்டும்.”

“நீ நிக்கவரெட்டியாவா? அப்ப சிங்களம் நல்லாத் தெரியும். அதுக்காகத் தான். உன்னைக் கவனமாகப் பாதுகாக்கிறான்கள். ஏதோ பெரிய வேலைக்குப் பயன் படுத்தப் போறான்கள். கவனமாக இரு..”

சத்தியனுக்கு திக்கென்றிருந்தது.

“நீ ஏதாவது கொலை செய்திருக்கிறாயா?, ஆரையாவது கொன்றிருக்கிறாயா? சுட்டிருக்கிறாயா?:”

“இல்லை..”

“விட்டிருக்க மாட்டினமே? உனக்கொரு அசைன்மன்ற் தந்திருப்பினமே? உன்னைக் குற்றவாளியாக்கித் தயார் படுத்தியிருப்பினமே?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நீ சொல்வது சரி.. குறித்த ஒருவரைத் துரோகியெனக் கூறி திட்டமிட்டுச் சுட்டுவிடுமாறு கூறினர். மறுத்துவிட்டடன். அதுக்குத் தண்டனையாக என்னை இங்கை அனுப்பிவிட்டினம். இது பொப்புல பேஸ் அல்ல என்பது எனக்குத் தெரியும். பேஸைக்கூட்டித் துப்பரவாக்குவதும் சமையலுக்குத் தேவையானவற்றை வழங்குவதும் போராளிகளுக்குத் தேவையான சிலிப்பர் போன்ற பொருட்களைத் தருவதும் எனது இங்கத்த வேலை. ஓய்வு கூட...வாறன் மரக்கறி லொறியில் அனுப்பியிருக்கினம். எல்லாருக்கும் இன்று கத்தரிக்காய் கறி.. மீன் வாங்க வேணும். கடற்கரைக்குப்போனால் வாங்கலாம்.” சத்தியன் விடைபெற்றான்.

அவனுக்கு மைக்கலின் நினைவு வந்தது. விடத்தல்தீவைச் சேர்ந்த இளைஞன். நடுத்தர உயரம் இருப்பான். உலக விவகாரங்களில் நிறையத் தெரிந்திருந்தான்.சிறுவயதில் இயக்கத்தில் சேர்ந்து பின்னர் சிறு வயதென விலகியவன். பலதும் பத்தும் ஓயாது பேசுவான். இயக்கச் செயற்பாடுகள் நிறைய ஆர்வம் காட்டுவான். விடத்தல்தீவுப் பாடசாலையில் படித்துவிட்டு இப்போது மன்னார் பாடசாலை ஒன்றில் ஏ.எல். படித்துக் கொண்டிருந்தான். அடிக்கடி அவனைத் தேடி இங்கு வருவான். ஒரு நாள் நிச்சயமாக இயக்கத்தில் சேர்ந்து கொள்வானென சத்தியன் நம்பினான். இப்போதே மன்னாரில் மாணவர்களைச் சேர்த்து ஊர்வலங்கள் நடாத்தி பொலிசாரால் எச்சரிக்கப்பட்டிருக்கிறான். இந்த முகாமின் பொறுப்பாளன் வரதனின் அன்பையும் தனதாக்கி .இருந்தான்.

“அந்த துண்டுப்பிரசுரத்தை அச்சிடுவதற்கு முன் இங்க வருகிற மைக்கலிடம் ஒருக்காக் காட்டுங்கோ. படம் கீறப்போறியளா? மைக்கலிடம் ஐடியாக் கேளுங்கோ..” என்கிற அளவுக்கு மைக்கல் இந்த முகாமில் முக்கியம் பெற்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையாத இயக்கப் போராளி அவன். சத்தியனின் நட்பையும் மைக்கல் பெற்றுக் கொண்டான். பல விடயங்கள் அவனுக்குத் தெரிந்திருந்தன. திகதி வாரியாக விடயங்களை எடுத்து வாதிக்கக் கூடியவன்.

"அண்ணை நீங்கள் புரிய வேண்டும். நாங்கள் பட்ட கஞ்டம் கொஞ்சமல்ல. என் கண்ணுக்கு முன்னால என் நண்பன் கோகுலனை இந்த வெறி பிடித்த இராணுவம் சுட்டுப்போட்டு ரயரில் போட்டு நடுமுச்சந்தியில் எரித்தது. மாணவ ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கியவனாம். கடைகளைப் பூட்டச் சொல்லி மன்னாரில் ஹர்த்தால் செய்வித்தவனாம். காட்டிக் கொடுத்திட்டான்கள் துரோகிகள். கோகுலன் எரிந்தது இன்னமும் வன்மமாக நெஞ்சில இருக்குது அண்ணை. பழி வாங்க வேண்டும். வரதர் அண்ணரிட்ட கேக்கிறன் என்னைச்சேர்த்துக் கொள்ளும் படி.. கேக்கிறார் இல்லை. படிப்பை முடிக்கட்டாம். மாணவரிடையே விழிப்பை ஏற்படுத்த என்னைப் போல ஒருத்தர் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இருக்க வேணுமாம். அதுவும் சரியாகப்படுகுது." மைக்கலை எண்ணயபடி அவன் கடற்கரையை அடைந்தான்.

கடற்கரை முன்னர்போல பரபரப்பாகவில்லை. சிறியதொரு கடற்கரை. ஆழ்கடல் மீன் பிடி தடை செய்யப்பட்டிருப்பதால் அதற்குப் பயன் படுத்திய கலங்கள் கரையில் இழுத்துவிடப்பட்டிருந்தன. அவற்றில் காகங்கள் இளைப்பாறிக் கொண்டிருந்தன. அவை எழுவதும் இறங்குவதாகவும் இருந்தன. சிலவற்றில் பையன்கள் ஏறியிருந்தார்கள். கடல் கரையில் சில மினவர்கள் வீச்சு வலை வீசிக் கொண்டிருந்தார்கள். ஏதோ சாப்பாட்டுப் பாடிற்குக் கிடைக்கும். உலையை அடுப்பில் ஏத்திவிட்டு தந்தைமாரிடம் அல்லது கணவரிடம் பிடிபடுகிற மீன்களை வாங்கிச் செல்லப் பெண்கள் வந்து கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியனும் அவனுடன் துவக்குடன் காவலுக்கு வந்திருந்தவனும் தயங்கி நிற்பதைக்கண்ட வீச்சு வலைக்காரன் ஒருவன் கரையேறி வந்தான்.

"தம்பிமார், நான் அந்தோணிமுத்தர்.. உவன் மைக்கலின்ர தேப்பன். வீச்சு வலைக்காரரிட்ட மீன் கிடைக்காது.. அந்தா கரை வலைபோடுற சிலுவை ராசாவிடம் போங்கோ. கிடைக்கும். நாங்க சாப்பாட்டுக்கு வீச்சு வலை போடுறம்"

அந்தோணிமுத்து சொல்வது சரியாகப்பட்டது. அவர்களுக்கு ஐந்து கிலோ மீன் வரை தேவை. தூரத்தில் கரைவலை இழுக்கப்படும் இடத்தை நோக்கிச் சென்றான். மடியை இழுத்துப் போட்டிருந்தார்கள். சிறிதும் பெரிதுமாக மீன்கள் வலைமடியில் துள்ளின. அவற்றில் தேவையான மீனை வாங்கிக் கொண்டான். காசு வாங்க சிலுவை ராசா மறுத்தபோது, "வீசர் வேலை வேணாம். மன்னார் மீன்காரருக்கு விக்கிற விலையை வாங்குங்கோ." என்று பணத்தைத் திணித்துவிட்டு நடந்தான்.

எதிரில் அந்தோணிமுத்தர் தென்பட்டார். அவர் அருகில் ஒரு இளம் பெண் காணப்பட்டாள்.

"இவ என் இரண்டாவது மகள் சுகந்தி. ஓ எல் எடுத்திட்டு இருக்கா. மைக்கலின் விருப்பமான தங்கச்சி இவ. தாய் அரியத்தோடு சேர்ந்து ஆடு மாடுகளை வீட்டு வேலைகளைக் கவனிக்கிறா. எங்களிட்ட ஒரு மாட்டுப் பட்டி இருக்குது... தம்பி."

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவளும் பார்த்தாள். கண்ணுக்கு இலட்சனமான பெண். பதினேழு வயதிருக்கும். சிவந்து உயர்ந்து காண்போரைக் கவர்ந்திழுக்கும் காந்த விழிகளுடன் இருந்தாள். அவள் மீது படிந்த விழிகளை அவனால் டக் கென்றெடுக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியே? மைக்கல் என்னிடம் இப்படியொரு அழகான தங்கச்சி இருப்பதைக் கூறவில்லையே? ஆளை ஒரு வாரமாக பேஸ் பக்கம் காணவில்லை. எங்கை போயிட்டான்?"

"மன்னாரில் இயக்க வேலை ஏதாவது செய்வான். ஏதோ ஊர் வலம் இருக்காம்." என்றாள் சுகந்தி: "நீங்களே சத்தியன். அண்ணை உங்களைப்பற்றி நிறையச் சொல்லி இருக்கிறார். லீவு கிடைச்சதும் ஆச்சியிட்ட போகவில்லையாம். அண்ணை சொன்னார்..

"அப்படியில்லை. வேறிடத்துப் பொடியள் எவ்வளவு பேர் பேஸில இருக்கினம். தாய் தேப்பன் இருக்கினமா இல்லையா எனத்தெரியாமல்...அவர்களுக்கு முன்னால நான் போறது சரியாகப் படவில்லை. அது தான் போறதில்லை. அதுகளின்ர கவலையை ஏன் பெரிதாக்குவான். ஆச்சி அடங்கி இருக்கிறா. நான் போனா திரும்பவும் கவலைப்படுவா..ஏன்? எனக்கு இங்கை என்ன குறை? சண்டைக்கும் கேட்டுப் போகப்போறன்.."

அவள் அழகிய முகம் சுருங்கி வாடியது போலப்பட்டது.

"நான் நல்லாச் சமைப்பன். வாற சனிக்கிழமை அண்ணையோட வீட்டக்கு வாருங்களேன் ஒருக்கா.." என அவள் அழைப்பு விடுத்தாள். அவனுக்கு அதிசயமாக இருந்தது.

"வீட்டுச்சாப்பாடு சாப்பிட ஆசைதான். பேஸ் பொறுப்பாளரிடம் அனுமதி கேட்டுப்பார்க்கிறன். ஆ.. இது சுரேஸ்.. என்னுடன் வந்திருக்கிறான். மட்டக்களப்பைச் சேர்ந்தவன்.."

"நீங்க எத்தனை பேரை வேணுமானாலும் அழைத்து வாருங்க. சுரேஸ் அண்ணா நீங்களும் ஒருக்கா வாங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரி தங்கச்சி.. கஷ்டமில்லையெண்டால் வாறன். நான் சாப்பாட்டு ராமன்..விட மாட்டன்.”

சுகந்தி கலகலவெனச்சிரித்தாள். அவள் வஞ்சகமில்லாச் சிரிப்பில் சத்தியன் கரைந்து போனான். ஏன் அவன் மனம் இந்தப்பெண்ணின் பார்வையில் மனம் ஆட்டம் காண்கிறது? கலக்கம் ஏற்படுகிறது? நிக்கவரெட்டியாவில் அமரதாஸவின் தங்கையைக் காணும் போது கூட இப்படி உணர்வு ஏற்பட்டதில்லை. இயக்கக் கோட்பாடுகளுக்கு மாறானதோ?

“அப்ப நாங்க வாறம்..” அவர்கள் விடைபெற்றனர். அந்தோணிமுத்தரும் சுகந்தியும் மணல் வெளியில் கால் புதைய நடந்தனர். சத்தியன் எதையோ இழந்தவன் போல நடந்தான். பேஸை அடைந்தபோது ஏனோ நிக்கவரெட்டியா ஞாபகங்கள் எழுந்தன.

பொசன் தினங்களில் சத்தியன் உட்பட அவன் குடும்பத்தினர் அனைவரும் அமரதாஸ வீட்டில் தான் இருப்பார்கள். அவ்வளவு அந்நியோனியம். அரியதாஸின் தங்கைமாரோடு சேர்ந்து சத்தியனின் தங்கைமார் றபான் அடித்துப் பார்ப்பார்கள். அவன் அமரதாஸவோடு கொக்கிஸ் பலகாரம் சுவைத்துச் சாப்பிடுவான். பொங்கல் நாளில் அவன் வீட்டில் தான் அமரதாஸவின் குடும்பம் வருகை தருவார்கள். அவர்களிடையே தமிழ் சிங்கள பேதம் கிடையாது. நாட்டில் நடக்கின்ற சம்பவங்கள் அவர்களைப் பாதிப்பதில்லை. நாட்டின் பல பாகங்களில் குண்டுகள் வெடிக்கும். அவர்கள் இல்லங்களில் அவை பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

அமரதாஸவின் தந்தைக்கு றயில்வே வேலையுடன் வயற்காணிகள் நிக்கவரெட்டியாவில் இருந்தன. மகாபோகத்தில் அமரதாஸவின் தந்தை லொக்கு பண்டார வயல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினக்கெடுவார். கோவணத்தோடு வயலில் இறங்கி ஏர் பிடிப்பார். அவ்வேளைகளில் வயல் வெளிகளில் அமரதாஸவும் சத்தியனும் அலைந்து திரிவார்கள். ஆலாக்களைக் கண்ணி வைத்துப்பிடிப்பதில் அமரதாஸ கெட்டிக்காரன். கண்ணிகளை பனை நாரில் வைப்பான். நுனியில் முடிச்சு அமைத்து வயல் வரம்புகளில் ஆலாக்கள் இறங்கும் இடங்களில் பிணைத்து வைப்பான். சேற்று விதைப்பு செய்த வயல்களில் விதைத்த நெல்லைக் குடித்துக் கொழுத்த ஆலாக்கள் வரம்புகளில் இறங்கி கால்களை மாட்டிக்கொள்ளும் பிடித்த ஆலாக்களை எல்லாருக்கும் பகிர்ந்து கொடுப்பான். அச்செயல் பாவமாக சத்தியனுக்கு இருந்தாலும் அமரதாஸாவைத் தடுப்பதில்லை.

பக்கத்துக் கிராம விவசாயக் குடும்பங்களை ஒரு நாள் நள்ளிரவு எல்.ரி.ரி.ஈ யினர் தாக்கினர். அந்தக்கிராமத்தில் பலரும் இறந்து போயினர்.

"இவர்களுக்கேன் இந்த வெறி? சாதாரண மக்கள் என்ன கேட்டார்கள்? சண்டை பிடிக்கிறதெண்டால் ஆயுதம் ஏந்தியவர்களோட செய்ய வேண்டியது தானே? ஏன் இந்த யுத்தம் எண்டு தெரியவில்லை. இரண்டு பக்கங்களும் அழிவு தான். இதோ பார் சத்தியன் தமிழருக்கு இருக்கிற பிரச்சினைகளைத் தீர்க்க மாட்டான்கள். அரசக் கதிரைகளைக் கைப்பற்ற மாறி மாறிப் பிரச்சினைகளை வளர்ப்பான்கள். இவன் தீர்க்க வந்தால் அவன் விடான். அவன் தீர்க்க வந்தால் இவன் விடான். அரசு கட்டிலின் கதிரைகள் அப்படி." என்பான் சாதாரணமாக அமரதாஸ.

அவன் நிக்கவரெட்டியா வாழ்வை நினைத்துக் கொண்டான். எவ்வளவு இனிமையான காலங்கள்? இப்போது அமரதாஸ என்ன செய்வான்? பெற்றோர் என்ன செய்வார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையாக இருந்த இரண்டு சமூகங்கள். தலைவர்களுக்கு என்ன வெறி பிடித்தது? ஏன் விமானக் குண்டுகள் வீசித் தமிழர்களைக் குடும்பம் குடும்பமாக அழிக்கிறார்கள். மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலில் வெட்டிக் கொல்லப்பட்டனர். நவாலிக் குண்டு வீச்சில் பொதுமக்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டனர். வாழ்வின் புது வசந்தத்தைக் காணவேண்டிய மணமக்கள் அன்றே கொல்லப்பட்டனர். இவற்றிற்குப் பதிலடியாக அப்பாவிச் சிங்களக் கிராமமக்கள் பலியுண்டனர். ஏன்? ஏன்? ஆயுதம் ஏந்திய இராணுவத்திற்கு எதிராகப் போராளிகள் ஆயுதம் ஏந்தியுள்ளனர். வெற்றி தோல்வி காணாத சண்டை. பலியாவோர் மக்கள். சாதாரண மக்கள். தமிழ் போராளிகள் சார்பில் அவனும் ஆயுதம் ஏந்தியுள்ளான்.

தனது போராட்டத்தில் நியாயம் இருப்பதாக அவனுக்குப் படத் தொடங்கியிருந்தது. மைக்கலின் துடிப்பான பேச்சுக்கள் அவனுக்குச் சரிபோலப்பட்டன. ஏனோ அவன் எப்போது வருவானென எதிர்பார்த்தான்.

மைக்கல் வெள்ளிக்கிழமை வந்தான்.

"அண்ணை நீங்க சனிக்கிழமை சாப்பிட சுரேசோட வரவேண்டும். காத்திருப்பம். ஐயாவும் தங்கச்சியும் விரும்புகினம்."

அந்த அழைப்பை அவன் ஆவலோடு எதிர்பார்த்தான். மறு தடவை சுகந்தியைத் தரிசிக்கலாம். சிறிது பேசலாம். பேஸ் பொறுப்பாளன் என்ன சொல்கிறானோ? அனுமதி தருகிறானோ?

சனிக்கிழமை வரதனிடம் கேட்டான். விசயத்தைச் சொன்னான்.

"பேசினுடைய மத்தியானச் சாப்பாட்டைக் கவனித்துவிட்டுப் போறன். எனக்கும் சுரேசுக்கும் மைக்கல் வீட்டில் சாப்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கட பேமிசன் தேவை. நீங்கள் அனுமதித்தால் போய் வாறம்..” என்று தயங்கித் தயங்கிக் கேட்டான்.

“உனக்கு லீவு தாறன். யாழ்ப்பாணத்துக்கு ஒருக்காப் போய் வர உனக்கு அனுமதியுண்டு. எடுக்காமல் இருக்கிறாய். அடுத்த யுத்தத்திற்குப் போறதுக்கு முந்தி நீ விரும்பினால் போய் வரலாம். உன்ரை ஆச்சி இருக்கிறாவாமே? ஏன் சுரேசிற்கு, என்னிடம் கேக்கத் தெரியாதா? வரச் சொல்லு. மைக்கல் நமக்குவேண்டிய பையன். அவன் அழைத்தால் போகலாம். அது சரி உனக்கும் அவனுக்கும் என்ன சிநேகிதம்?. அவன் உன்னையும் வாரப்பாடாகக் கூப்பிட்டிருக்கிறான்? சரி சரி எல்லாரும் போவம். என்னோட வா. சுரேசிட்டயும் சொல்லு..”

அப்போது தான் தெரிந்தது. மைக்கல் தன்னோடு வரதனையும் சாப்பிடக் கூப்பிட்டிருக்கிற சங்கதி. ஒருவருக்குத் தெரியாமல் ஒருவரை அழைத்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 5

**ம**ன்னாரிலிருந்து பூநகரிக்குச் செல்கின்ற பிரதான வீதியில் இருபத்தெட்டாவது கிலோ மீற்றரில் பிரதான வீதிக்குக் கிழக்குப்பக்கத்தில் வெள்ளாங்குளம் அமைந்திருக்கிறது. அக்குளத்தை நம்பி சிறியதொரு குளக்குடியேற்றம் அங்கு காணப்படுகின்றது. பிரதான வீதியோரமும் பிரதான வீதியிலிருந்து மேற்கு கிழக்காக செல்கின்ற ஒரு மண்பாதையின் மருங்காகவும் குடிமனைகள் காணப்பட்டன. அந்த மண்பாதையில் மேற்கே சென்றால் தேக்கம்பிட்டி கடற்கரையை அடையலாம். கிழக்காகச் சென்றால் வெள்ளாங்குளத்தை அடைந்து, குளக்கட்டின் மீதேறி வடக்காகச் சென்று கீழிறங்கிக் கிழக்காகத் திரும்பினால் அடம்பன்குளம் குறுக்கிடும். அடம்பன்குளம் ஒரு முறிப்புக்குளமாகும். புற்றைக்காடுகள் அதில் நிரம்பி மூடி வளர்ந்திருந்தன. காட்டு விலங்குகளின் வசிப்பிடமாக அந்த முறிப்புக்குளம் எப்போதும் காணப்படும். அக்குளத்தின் அணைக்கட்டு மூன்று நான்கிடங்களில் உடைந்திருப்பதனால் மழைகாலத்தில் ஓடி வரும் வெள்ளம் குளத்தில் தேங்காது தப்பி ஓடி வெள்ளாங்குளத்துக்குள் சேர்ந்து நிரப்பிவிடும். வெள்ளாங்குளத்திலிருந்து வரும் மண்பாதை இந்த முறிப்புக்குளத்தினுடாகச் சென்று துணுக்காயை அடைகின்றது.

மன்னார் பிரதான வீதியிலிருந்து வெள்ளாங்குளம் கிராமத்துள் பிரவேசித்ததும் முதலில் ஆலடி வயிரவரின் சிறுகுடில் கோயிலும் அதன் அருகில் காளி அம்மன் கோயிலின் சிறிய கல்கட்டடிடமும் எம்மை வரவேற்கும். சற்று அப்பால் சென்றால் ஓர் அதிபரையும் இரண்டு ஆசிரியர்களையும் கொண்ட சிறியதொரு பாடசாலைக் கட்டிடமும் அக்கிராமத்தின் ஒரேயொரு அப்போதிக்கரியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட கிராம வைத்தியசாலைக் கட்டிடமும் இருக்கும். வேறு கல் கட்டிடங்களை அக்கிராமத்தில் காணமுடியாது. குடிமனைகளை அடுத்து மண்பாதையின் இரு பக்கங்களிலும் வயல்வெளி பரந்து காணப்படும். விளைவு காலத்தில் பச்சைப்பசேலென்றும் வறட்சிக்காலத்தில் மணல் காற்றில் பறக்கும் கபிலநிறம் பூத்து உலர் புற்களை மேயும் கால்நடைகளோடு காணப்படும்.

தொடர்ந்து பயணப்பட்டால் குளக்கட்டை அடையலாம் குளத்தின் அலைகரையில் காடுகள் காணப்படுகின்றன. அதனை அடுத்து ஒரு காலத்தில் அடம்பன்குளத்தின் நீர்ப்பாசன வயல்களாகக் காணப்பட்டவை இன்று மானாவாரித் தரைகளாகக் காணப்படுகின்றன. அந்த வயல் வெளிகளை அடுத்துச் சிலகுடிமனைகளும் அவர்களின் தோட்டநிலங்களும் காணப்படுகின்றன. அதனை அடுத்து இந்த முறிப்புக்குளமும் அதற்கு அப்பால் பரந்த பிரதேசமும் அடர்காடுகளால் மூடப்பட்டு இருண்டு காணப்படும். பகல் வேளைகளிலும் இந்தக் காட்டுப் பாதையில் தனித்தப் பயணப்பட அஞ்சுவர். பகலில் கூட அச்சம் தருவதாக யானைகளின் பிளிறல் ஒலி இடையிடையே எழுந்து கொண்டிருக்கும்.

வெள்ளாங்குளக்கட்டில் ஜீப் ஏறியது. மழைத்துளிகளால் நனைந்திருந்த மண் அணை சற்றும் தளர்ந்திருக்கவில்லை. இறுகிக் கட்டித்திருந்தது. அக்குளக்கட்டு சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமானது. பிரதான வீதியிலிருந்து வரும்மண்பாதை குளத்தின் அணைக்கட்டின் மத்தியில் ஏறி வடக்காகச் செல்கின்றது. குளக்கட்டில் ஏறி வடக்காகத் திரும்பியபோது ஜீப்பின் முன்னிருக்கையில் அமர்ந்திருந்த மணிசேகரன் குளத்தைப்பார்த்தான். அவன் பார்வையில் வறண்டிருந்த குளமும் அதில் வளர்ந்திருந்த பற்றைகளும் தெரிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்து மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. குளத்தின் நடுப்பகுதியில் திட்டையாக நீர் தேங்கிக் கிடந்தது. அதில் இனந்தெரியாத காட்டுப் பட்சிகள் நீரருந்திக் கொண்டிருந்தன. வெள்ளாங்குளத்தின் அணையைவிட்டு ஜீப் கீழே இறங்கும் வரை மணிசேகரன் குளத்தின் நீர்த்திட்டையும் பறவைகளையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

மண்பாதையில் மேடுபள்ளங்கள் தெரிந்தன. பள்ளங்களில் பெய்த மழையின் நீர் சிறியளவில் தேங்கிக் கிடந்தது. மெதுவாகவும் அவதானமாகவும் மாணிக்கராசா வண்டியைச் செலுத்தினான். நீர்ப்பாசன தொழில் நுட்ப உதவியாளரான மணிசேகரன் யாழ்ப்பாணத்துக் கல்லூரியில் படித்துக் கட்டுப்பெத்தையில் பட்டம் பெற்றவன். குடும்பத்தில் இரண்டாவது மகன். அவனை நம்பி நான்கு சகோதரிகள் காத்திருந்தனர். அண்ணன் தங்களுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பான் எனக்காத்திருந்தனர். அரசியல் கட்சி ஒன்றின் பின்னால் தொண்டனாகத் திரிந்ததன் பயனாக அவனுக்கு மன்னாரில் வேலை கிடைத்தது.

வழி எங்கும் காட்டு மரங்களே குவிந்து காணப்பட்டன. ஜீப்பின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நிலவளவையாளர்களான நவசிவாயமும் நல்லையாவும் தாம் செல்கின்ற பிரதேசத்தைக் கண்டு கலக்கம் கொள்ளவில்லை. இது அவர்களின் தொழில். நடுக்காட்டில் முகாமமைத்து நிலவளவை செய்திருக்கின்றவர்கள். ஓரிடத்தில் மாணிக்கராசாவை ஜீப்பை நிறுத்துமாறு மணிசேகரன் பணித்தான்.

ஜீப் நின்றது.

“இறங்குங்க.. இது தான் அடம்பன்குளம்.. நடுக்குளத்தில நாங்க நிக்கிறம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாதையின் இரு பக்கங்களிலும் காட்டு மரங்கள் சிறிதும் பெரிதுமாக வளர்ந்திருந்தன. ஆங்காங்கு வெட்டைவெளிகள் தெரிந்தன. வீரைமரங்களாலும் முட்காடுகளாலும் அப்பிரதேசம் நிறைந்திருந்தது. கண்ணுக்கு எட்டிய பிரதேசம் எங்கும் காடு. சூரியன் உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தது. மழை போதியளவு பெய்திருந்ததால் அக்குளத்தில் ஆங்காங்கு காணப்பட்ட குட்டைகளில் நீர் தேங்கிக்கிடந்தது. காட்டுப்பறவைகள் தம் உடல் பேன்களை நீக்கும் நோக்குடன் குட்டை நீரில் தம் சிறகுகளை அடித்துக் கழுவிக் கொள்ளுமாறாகக் குளித்துக் கொண்டிருந்தன. அவர்களைக் கண்டதும் பக்கத்திலுள்ள மரங்களில் தஞ்சம் புகுந்தன. இவர்களால் எதுவித ஆபத்துமில்லையெனத் தெரிந்ததும் மீண்டும் குட்டைகளில் தோய்ந்தன.

“அற்புதமான இடம்” என்றான் மணிசேகரன்.

“நீங்க சொல்லுவியள்.. இங்க காம்ப் அடிக்கப்போறவை நாங்கள்.. காம்ப் அடிச்சு இக்குளத்தை நில அளவீடு செய்யப்போறவை நாங்கள்...காட்டு விலங்குகளுக்கும் நுளம்புத் தொல்லைகளுக்குமிடையில் குறைந்தது ஒரு மாதமாவது தங்கித் தவிக்கப் போறது நாங்க.. நீங்க எப்பவாவது வந்து தங்கிப் பார்த்திட்டுப் போவியள்..” என்றார் சேவையர் நமசிவாயம் தன் வெள்ளை மீசையைத் தடவியபடி.

அப்போது தூரத்தில் யானை ஒன்றின் பிளிறல் கேட்டது. காட்டில் இனந்தெரியாத ஒலிகள் எழுந்தன. அமைதி குலைந்தது.

“இங்கதான் காம்ப் போடவேண்டுமா?” என்று அசிஸ்டன் சேவையர் நல்லையா கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவசியமில்லை என்று நினைக்கிறன். நீங்க காம்பை வெள்ளாங்குளக் கிராமத்தில் மக்கள் குடியிருப்பில் போடலாம். இந்த முறிப்புக்குளம், போடுற காம்ப்பிலிருந்து ஒன்று ஒன்றரைக் கிலோ மீற்றருக்குள்ள தானே இருக்குது. அதனால இந்த நடுக்காட்டிலே அமைக்க அவசியமில்லை..” என்று அபயமளித்தான மணிசேகரன்

“காளி கோயில் வெளியில் காம்ப்பை நீங்க அமைக்கலாம். கோயில் கிணற்றில் நல்ல தண்ணீரும் இருக்குது.. குடிமனைகள் சுற்றி இருக்குது..” என்று மாணிக்கராசா தன் கருத்தைச் சொன்னான்.

“அப்ப அங்கயே போடுவம்..” என்று ஒப்புக்கொண்டார் சேவையர் நவசிவாயம்.

“அங்கை காம்ப் போடுறதுக்கு ஆருடைய அனுமதியாவது பெறவேண்டியிருக்குமா?”

“ஐயாதான் காளிகோயில் தர்மகர்த்தாசபைத் தலைவர்.. அவரிடம் அனுமதி வாங்கலாம்.” என்றான் மாணிக்கராசா.

‘நல்லதாப் போச்சுது..”

அவர்கள் ஜீப்பிலேறிக் காளி கோயில் வெளிக்கு வந்தனர். நான்கு ஐந்தேக்கர் வெளியில் பாரிய மருத மரங்கள் சோலையிட்டிருந்தன. அதன் நடுவே காளி கோயில் இருந்தது. கல் கட்டிடம் கொண்ட சிறிய கோயில். கர்ப்பக்கிரகமும் அர்த்தமண்டமும் கொண்டிருந்தது. தூபியும் கலசமும் கொண்ட கோயில். அந்தப் பிரதேசத்தின் கிழக்கு ஒதுக்கில் ஒரு சிறிய குடிலில் வயிரவர் சூலமாக அமர்ந்திருந்தார். சில நாட்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு தான் வேள்வியும் பொங்கலும் ஆலடி வயிரவருக்கு நிகழ்ந்திருந்தது என்பதற்கு அடையாளங்கள் தெரிந்தன. குடிலின் முன் பொங்கல் அடுப்புக்கற்கள் இன்னமும் அகற்றப்படாதிருந்தன.

"நல்ல இடம் ரிஓ..! இங்கயே காம்ப் போடுவம்..." நவசிவாயம் திருப்தியாக.

இவர்களுக்குப் பசி வயிற்றைக்கிள்ளத் தொடங்கியது. காட்டுப்பிரதேசத்தில் கடும் வெயிலில் அலைந்தால் இயல்பாகவே பசி வந்துவிடும். எதையாவது சாப்பிட வேண்டும் போலவிருக்கும்.

"மாணிக்கராசா நீ சாப்பிட உங்கட வீட்டுக்குக் கூப்பிடுகிறாய்.. வீட்டுக்காரருக்குக் கஷ்டமாக இருக்காதே..? அம்மாவும் இல்லை எண்டனீர். எங்கயாவது கடையில சாப்பிடுவம்.." என்று மணிசேகரன் தன் தயக்கத்தை வெளியிட்டான்.

"அப்படியொண்டும் இருக்காது சேர். இந்தக்காட்டுக்க எங்க சாப்பிடப்போறியள்? மகேந்திரனின்ர தேத்தண்ணிக்கடைதான் இருக்குது.. அங்கயும் நேரகாலத்தோடு சொல்லித் தான் சமைக்க வேணும்.. அப்பதான் சாப்பாடு கிடைக்கும். எங்கட வீட்டை உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பினம்.. தயங்க வேணாம் சேர்.. சாப்பிடப் போகாட்டில் ஏமாற்றமாப் போயிடும்." என்றான் அவசரமாக மாணிக்கராசா.

ஜீப் முருகேசரின் வீட்டு வாசலில் நின்றபோது மதியம் கழிந்திருந்தது. ஜீப் நிற்கிற சத்தத்தைக் கேட்டு பொன்னப்பரின் வீட்டுப் படலை திறந்து கொண்டது. கா.்.ப் ஸ்கேட் அணிந்த அழகான ஒரு பெண் ஆவலுடன் எட்டிப்பார்த்தாள். ஓர் இராஜகுமாரன் குதிரையிலிருந்து இறங்குவது போல மாணிக்கராசா ஜீப்பிலிருந்து இறங்குவதாக அவளுக்குப்பட்டது. அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப்பார்த்தபடி ஏக்கத்துடன் நிற்பதை மாணிக்கராசா கவனிக்காமல் இல்லை. 'பேந்து வாறதாகச்' சைகை காட்டினான்.

மணிசேகரன் அந்த இளம் பிள்ளைகளின் கண்கள் பேசியதையும் கண்களில் தெறித்த ஆவலையும் கவனிக்கத் தவறவில்லை.

"ஆரடா மாணிக்கராசா..?"

"மச்சாள்..பவானி.." என அவன் வெட்கப்பட்டான். காதலுணர்வு ஓர் ஆடவனை எவ்வளவு தூரம் நெகிழ வைத்துவிடுகின்றது. மச்சானின் ஜீப் கிராமத்துக்கு வந்திருக்கிறது எனப் பொன்னப்பர் செய்தி தெரிவித்ததிலிருந்து அவளுக்கு வேலை ஓடவில்லை. படலைக்கும் வீட்டுக்குமாகப் பல தடவைகள் அலைந்துவிட்டாள்.

"அவன் இங்க ஒருக்கா வந்திட்டுத்தானே போவான். நீ பதட்டப்படாமல் இப்படிக் குந்து பிள்ளை." என்றார் பொன்னப்பர். அவள் மனம் கேட்டால் தானே?

தலைவாசலில் இட்டிருந்த வாங்கிலும் கதிரைகளிலும் அவர்கள் அமர்ந்து கொண்டார்கள். ஒரு பக்கத்துத் திண்ணையில் நன்கு முற்றிய பப்பாசிக் காய்கள் பறித்து வைக்கப்பட்டிருந்தன. கிணற்றடியில் முற்றித் தலைசாய்த்திருந்த இதரை வழைக்குலை ஒன்றும் வெட்டிப் பால் வடியக் குந்தில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. சாப்பாடு கொடுத்தவிட்டு வெறும் கையோடு கிராமத்துக் கமக்காரனுக்கு அனுப்பத் தெரியாது.

தேசிக்காய் கரைத்த குளிர் நீர்ப்பானத்தை மைதிலி அனைவருக்கும் நீட்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இவ தான் என்ரை தங்கச்சி மைதிலி சேர்.. அம்மாவுக்குப் பிறகு வீட்டு வேலைகளையும் குடும்பத்தையும் பொறுப்பாகக் கவனிக்கிறா”

இந்தக்கிராமத்தில் இவ்வளவு கவர்ச்சியும் எடுப்புமான பெண் இருப்பாளென மணிசேகரன் எண்ணியிருக்கவில்லை. குளிர் பானக் கிளாசை எடுக்கும்போது அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் செங்கமல விழிகள் அவனை ஏறிட்டுப் பார்த்தன. ஒரு கணந்தான். அந்தக் கணத்தில் ஓராயிரம் கதைகள் பேசிவிட்டன. ஏழேழு யுகங்களாக அவளுக்குப் பழக்கப்பட்ட கண்களாகத் அவை தெரிந்தன. அந்தக் கண்களைச் சந்திப்பதற்காகத் தான் இவ்வளவு காலங்களும் காத்திருந்ததுபோல ஓர் உணர்வு உடலெங்கும் பரவியது.

எல்லாருக்கும் பரிமாறிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்து கொண்ட பின்னரும் அந்தக்கணங்களை அவளால் மறக்க முடியவில்லை. மீண்டும் மீண்டும் மனத்திரையில் தெரிந்தன. தொல்லைப்படுத்தின.

வாழையிலைகளில் சாப்பாடு பரிமாறப்பட்டது. தலைவாசலில் கால்களை மடித்துக் கொண்டு வாழையிலைமுன் அமர்ந்து சாப்பிடுவது மகா ஆனந்தமாக அவர்களுக்குப்பட்டது. பன்றி இறைச்சிக் குழம்பை அவர்கள் சுவைத்துச் சாப்பிட்டனர். சாப்பிட்டுவிட்டு தலைவாசலவில் அமர்ந்தார்கள். மணிசேகரனின் கண்கள் அடிக்கடி மைதிலியைத் தேடின.. அவளால் குசினியைவிட்டு வெளியில் வரவே முடியவில்லை. கள்ளம் பட்ட இதயம்.

அந்த இடைநேரத்தில் மாணிக்கராசா பொன்னப்பரின் வீட்டுக்குச் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வாக அவர்கள் சிறிது நேரம் தலைவாசலில இருந்தபோது முருகேசர் பேச்சைத் தொடங்கினார்.:

"தம்பியவை என்ன காரியமாக வந்தியள்? வெள்ளாங்குளத்தைத் திருத்தப்போறியளா?"

"அப்படியில்லைப் பெரியவர். அடம்பன்குளத்தைக் கட்டப்போறம். அதற்கு முதற்கட்டமாக சேர்வே பண்ணப்போறம்."

"அடம்பன் குளத்தையோ?" என்று முருகேசர் வியப்புத் தெரிவித்தார். அவருக்கு அந்தச் செய்தி புதிதாக இருந்தது.

"என்ன ஆச்சரியப்படுகிறியள்? உங்களுக்குத் தெரியாததே? அடம்பன்குளப் பங்காளர்கள் வெகு காலமாக கேட்டுவருகினம். தங்கடை குளத்தின்ரை முறிப்புகளைத் திருத்தியமைத்துத் தருமாறு...அந்தக் குளத்தின் முறிப்புகளைக் கட்டுறதெண்டு முடிவாகியிருக்கிறது. இப்ப எதற்கும் பயன்படாது தானே மழைத்தண்ணி வீணாப்போகுது.."

"ஆர் சொன்னது வீணாகப்போகுது எண்டு தம்பிமார்? அடம்பன்குளத்தைக் கட்டினால் அதில தண்ணியைச் சேகரித்தால் பின்னர் ஒரு சொட்டுத் தண்ணியும் வெள்ளாங்குளத்தக்குவராது.. தடைப்பட்டிடும். அதனால தான் அடம்பன்குளத்தை முறிப்புக்குளமாக விட்டிருக்கினம். இப்ப வந்து அதைக் கட்டப்போறம் என்கிறியள்..." முருகேசரின் குரலில் சற்று கோபம் தொனித்தது.

"ஏன் கோபிக்கிறியள் ஐயா.. அந்தக்குளத்தைக்கட்டினால் 60 ஏக்கர்கள் புதிதாக நீர்ப்பாசனம் பெறும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அது சரி அதேவேளை வெள்ளாங்குளத்துக்குக் கீழையுள்ள நூற்றியெண்பதேக்கர் மானாவாரித் தரையாகிவிடும்... அடம்பன்குளத்தை ஒருக்காலும் கட்டக்கூடாது தம்பிமார்.. எங்கட மூதாதையர்கள் அதைச் சிதிலமாகவிட்டது காரணத்தோடு தான்...”

“நாங்க என்ன செய்யிறது ஐயா.. கச்சேரிக்கூட்டத்தில முடிவாகி நிதியும் ஒதுக்கியாகிவிட்டது. சேர்வே மட்டத்துக்கு வந்திட்டுது..” என்றான் மணிசேகரன் கவலையுடன்.

“அடம்பன்குளத்தின் பங்காளர்கள் ஆக மூவர் தான் தம்பி. 60 ஏக்கர் வயல்களில் 40 ஏக்கர் வரை மயில்வாகணத்தாருக்குச் சொந்தமானது. அவருக்காகத் தான் குளத்தைக் கட்டப்போகிறியள் போல இருக்குது. அவர்தான் மேலிடத்தைப் பிடித்துச் சரிசெய்திருக்கிறார். மூன்று பேருக்காக முப்பது குடும்பங்களின்ர வாழ்வைப் பறிக்கப்பாக்கிறியள். உது சரியில்லை..”என்று முருகேசர் பொருமினார்.

“நீங்க நேரகாலத்தோடை எதிர்ப்புத்தெரிவித்திருக்கலாம்.”

“இதுக்கு வெள்ளாங்குளத்துப் பங்காளர் விடமாட்டினம் தம்பிமார். ஒருசொட்டுத் தண்ணியில்லாமல் எங்கட குளத்தை வறள விடமாட்டம்...இந்தச் சங்கதி இதுவரை எங்களுக்குத் தெரியாமல் போயிட்டுது...”

குசினிக்குள்ளிருந்து அவர்களிடையே நடைபெற்ற சம்பாசனையைக் கேட்டுக்கொண்டிருந்த மைதிலிக்கு வேதனையர்க இருந்தது. இனந்தெரியாத துன்பரேகைகள் மனதில் படிந்தன. அடம்பன்குளப்பக்கமிருந்து யானையின் பிளிறல் காற்றில் மிதந்து வந்தது. படலையைத் திறந்துகொண்டு மாணிக்கராசா மகிழ்ச்சியோடு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வெளிக்கிடுவமா சேர்?”

“யேஸ்..”

அவர்கள் எல்லாரும் ஜீப்பில் ஏறிக்கொண்டனர். ஜீப்பின் யன்னல் கண்ணாடியை இறக்கிவிட்டு சேவயர் நவசிவாயம் முருகேசரை அர்த்தத்தோடு பார்த்தார்.

‘காளி கோயில் வெளியில காம்ப் போட அனுமதிப்பியளே?” நவசிவாயத்தின் வினா முருகேசரைத் தயங்கவைத்தது.

“உடனை பதில் சொல்ல முடியாதிருக்குது தம்பி.. நீங்க வெள்ளாங்குளக்கிராமத்தின் நன்மைக்காக வந்திருக்கிறியள் எண்டால் இடம் தாறதில பிரச்சினை இல்லை. அடம்பன்குளத்து முறிப்புக்கட்ட வந்திருக்கிறியள். தர்மகர்த்தாக்கள் ஒத்துக்கொள்ள மாட்டினம். எதுக்கும் கேட்டுச் சொல்லுறன்...”

“இதில பிரச்சினையில்லை ஐயா. நீங்க மறுத்தா மன்னார் றோட்டுக்கு மேற்கால இருக்கிற கவுன்மேந்துக்காணியில காட்டைச் சிறிது வெட்டிப்போட்டு காம்ப் போடவேண்டியது தான்.” என்றார் நவசிவாயம் திடமாக

“நல்லதொரு மதிய உணவு தந்தமைக்கு நன்றி ஐயா..”என்றான் மணிசேகரன்.

“இந்தப் பக்கம் வந்தால் அடிக்கடி வாருங்கோ தம்பிமார்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 6

**அ**ந்தோணிமுத்தர் குடும்பத்தினர் ஆரவாரமாக அவர்கள் மூவரையும் வரவேற்றானர். மைக்கல் வாசலில் காத்திருந்து "வாங்க அண்ணன்மார்" என்றழைத்தான். குசினிக்குள் இருந்து சுகந்தி எட்டிப் பார்த்தாள். இரண்டு கரு விழிகள் சத்தியனை ஆசையோடு பார்த்துப் பிரிந்தன. அந்தக் கரு விழிகளை வரதனும் சந்தித்தான். சத்தியனிலும் பார்க்க இரண்டு வயதுகள் தான் அதிகமானவன். இளைஞன். கலங்கிப் போனான்.

ஓர் இளம் பெண்ணின் விழிகளுக்கு அவ்வளவு ஆற்றல் இருக்க முடியுமா? சிவந்த செந்தாமரை முகத்தில் கருவண்டுகளாகச் சுழலும் அந்த இருவிழிகள் வரதனை மயக்கின. அவன் எத்தனையோ பெண்களைச் சந்தித்திருக்கிறான் ஆனால் இப்படி அவன் இதயத்தைக் கொள்ளை கொள்ளக் கூடிய கன்னியைச் சந்தித்ததில்லை. நெளும் கொடிபோல மெலிந்த அவள் உடல் வாகும் உயர்ந்த தோற்றமும் அவனைக்கலங்க அடித்தன. இடை சிறுத்து அகன்ற அவள் வடிவம் அவனைத் தன்வசமிழுக்க வைத்தன. அவள் குளிர் பானம் தந்துவிட்டுத் திரும்பிச் செல்லும் போது அவள் பின்பக்கப் பொலிவு அவனைக் கலங்க வைத்தது. அவள் அழகி தான். பார்ப்போரைக் கலங்க வைக்கும் அழகு அவளிடம் இருந்தது.

அவர்களுக்கு மோர் வழங்கினாள் சுகந்தி. அப்போது அவள் விழிகள் சத்தியனை ஊடுருவின. சுகந்தியின் பார்வை சத்தியனில் நிலைப்பதை வரதன் அவதானிக்காமலில்லை. அவர்கள் வரிசையாக நிலத்தில் அமர்ந்து சாப்பிட்டார்கள். மான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சியும் பொரித்த மீன்களும் இருந்தன. தாய் அரியம் உபசரித்தாள். விருந்து சுவையாக இருந்தது.

"நன்றாகச் சாப்பிடுங்கோ தம்பிமார்."

சுகந்தியோடு பேசச் சந்தர்ப்பம் கிட்டவில்லை என்பது சத்தியனுக்கு வருத்தமாக இருந்தது. மனதைக் கொள்ளை கொண்ட அந்தப் பெண்ணுடன் ஒரு வார்த்தையாவது பேசியிருக்கலாமே என வரதன் நெஞ்சு கனத்தான். கனத்த இதயங்களுடன் அவற்றை இழந்துபோய் அவர்கள் முகாமிற்குச் சென்றனர். வயிறு மட்டும் நிரம்பியிருந்தது. அந்த விருந்துக்குப் பின்னர் பொறுப்பாளன் வரதனிடம் மாறுதல்கள் தெரிந்தன. சுகந்தியின் தமையன் மைக்கலுடன் நெருக்கமானான்.

"நீங்கள் கத்தோலிக்கமா? புரட்டஸ்தாந்தா? கத்தோலிக்கராகத் தான் இருக்க வேண்டும். நானும் கத்தோலிக்கன். உனக்குத் தெரியுமா? சத்தியன் இந்து... முழு இந்து.. படுக்கைத் தலைமாட்டில் பிள்ளையார் படம் வைத்திருக்கிறான்."

வரதனின் நடத்தைகள் மைக்கலுக்கு வியப்பாக இருந்தன. அவன் நடத்தைகளில் மாற்றங்கள் தெரிந்தன. என்றும் சிடுசிடுத்தபடி இருக்கும் இவன் அமைதியானான்.

சத்தியனுக்குப் புரிந்தது.

கடற்கரையில் இரண்டு தடவைகள் அவளைச் சந்திக்க நேர்ந்தது. அவ்வேளைகளில் தெரிந்தவள் என்பதற்குரிய புன்னகையை முகத்தில் தவழவிட்டான். அவளைச் சந்திக்கும் வேளைகளில் அவன் இதயம் படபடவென அடித்துக் கொள்ளும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளோடு பேசத் துடித்தான். முடியவில்லை. ஆனால் அவளே பேசினாள்.

"என்ன பேசாமல் போறியள்? அந்நியன் போலப் பார்க்கறியள்? ஏதாவது கோபமா?"

அதன் பின்பும் பேசாது விடுவது சரியாகப்படவில்லை.

"அப்படியில்லை சுகந்தி. உன்னோட கதைக்கப் பயமாக இருக்குது."

"ஏன்? நானென்ன பூதமா? பிசாசா?"

"தெரியவில்லை. தயக்கமாக இருக்குது.. வீண் ஆசைகளை மனதில் வளர்த்துக் கொள்ளக் கூடாது சுகந்தி. போராளியின் வாழ்வு நிச்சயமில்லை. இது வரை காலமும் சண்டைபற்றிக் கதைக்காத பொறுப்பாளர் இப்ப பேசத் தொடங்கியிருக்கிறார். அடுத்த சண்டைக்கு என்னையும் அனுப்பப் போகிறாராம். திரும்பி வருவேனோ தெரியாது. பின் ஏன்?"

அடி வானில் மறைந்து கொண்டிருக்கும் ஆதவனைப் பார்த்தாள். ஒரு நாள் முடிந்து கொண்டிருக்கிறது. செவ்வானம் செக்கராக விளங்கியது. யுத்த களத்தை நினைவூட்டியது.

"யுத்தகளத்துக்குப் போகிறவை எல்லாரும் சாகிறதா? விசர்க் கதை வேணாம். எதில் தான் சாவில்லை. நாங்க மீனவர். நித்தம் ஐயா கடலக்குள் இறங்குகிறார். நாங்க நெருப்பை மடியில் கட்டிக்கொண்டிருக்கிறம். நித்தம் செத்துப்பிழைக்கிறம். நீங்க ஏன் பயப்படுகிறியள், உங்க பயம் வேறை. எனக்குப் புரியாமலில்லை. வரதர் ஒரு தடவை என்னைச் சந்தித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனக்கிடக்கைத் தெரிவித்தார். மறுத்து விட்டன். மனம் என்ன குப்பைக் கூடையா? இதயத்தில் ஒருவருக்குத் தான் இடம்.. புரிந்து கொள்ளுங்க."

அவன் நெகிழ்ந்து போனான். அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அவள் அவனைக் காதலோடு ஏறிட்டாள். கனவுகள் காணத் தொடங்கினர்.

**மை**க்கல இந்த வாரம் வீட்டிற்கு வரவில்லை. கிழமை வார முடிவில் தவறாது வீட்டிற்கு வருவான். இந்த வாரம் அவன் மன்னாரிலிருந்து பாடசாலை முடிந்து வரவில்லை. வீட்டில் சுகந்தியும் தாய் அரியமும் துடித்துப் போய் விட்டார்கள் மைக்கலை இராணுவம் பிடித்துக் கொண்டு போய்விட்டதோ என எண்ணத் தலைப்பட்டனர். சனி.ஞாயிறு தினங்களில் மாடுகளுக்கு அவன் தீன் வாங்குவான். அதனை வாங்குவதற்கும் ஆளில்லாமல் போனது. இராணுவத்திற்கு ஆட்களைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். தமிழ் இளைஞர்களை வலுக்கட்டாயமாகப்பிடித்து தம் இராணுவமாகச் சேர்ப்பது மாற்றியக்கங்களின் செயற்பாடாக இருந்தது. வெள்ளை வானில் வந்து பிடித்துச் சென்றார்கள். அப்படி ஏதாவது நடந்திருக்கலாமென அந்தோணிமுத்தர் சந்தேகப்பட்டார். விசாரித்து வருவதாக வங்காலைக்குப் புறப்பட்டுச்சென்றார். கிராமங்கள் இளைஞர்கள் இன்மையால் வெறிச் சோடின. பிரதான வீதிகள் ஆளில்லாமல் ஆறியடங்கிக் காணப்பட்டன.

அவர்கள் சந்தேகப்பட்டது சரியே. பாடசாலை நடந்து கொண்டிருந்த வேளையில் ஒரு வெள்ளை வான் வந்து நின்றது அதனைக்கண்டதும் உயர் வகுப்பு மாணர்கள் கலவர மடைந்தார்கள். நடக்கப்போவது யாதெனத் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பிடிக்கப் போறான்கள். ஆள் சேர்க்கிறான்கள். மெதுவாகப்பின்னால நகருவோம்.” என்றான் மைக்கல் “இதற்காகவாவது ரைகர்சில் முதலே சேர்ந்திருக்கலாம். இலங்கை இராணுவத்தோடு சேர்ந்து மாற்றியக்கம் திரியுது.”

அவர்கள் பாடசாலையின் பின் பக்கமாக வெளியே வந்தார்கள். உயர் வகுப்பில் எட்டுப்பேரே மாணவர்களாக இருந்தார்கள். பாடசாலைக்குப் பின்புறம் அடர் காடிருந்தமை அவர்களுக்கு வாய்ப்பாக இருந்தது. அதனுள் நுழைந்து ஓடத்தொடங்கினர். தங்களைத் துரத்தி வந்தவர்களிடமிருந்து தப்ப அவர்கள் ஓடினர். பரிகாரிக்கண்டல் தாண்டி மருதமடுவுக்கு ஓடி வந்துவிட்டார்கள். ஒரு நாள் கழிந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. வீட்டுநினைவு எழுந்தது. ஐயா அந்தோணிமுத்தர் முகாம் முகாமாக அலைந்து தேடித்திரிவார்.

“பொடியனை எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு அனுப்பிவிட்டு இங்க தேடி வந்திருக்கிறீர். நாங்க வலுக்கட்டாயமாகப் பிடிக்கிறதில்லை. பேசாமல் வீட்டை போய்ச் சேரும்.” என்று அவரை விரட்டியிருப்பார்கள்.

மருதமடுவின் அடர்காடு அவர்களுக்கு ஓரளவு நிம்மதியைக் கொடுத்தது. வழியில் அகப்பட்ட விளாங்காய்களை உண்டார்கள். விடாய் எடுத்தது. தொடர்ந்து நடந்து வந்த களைப்பு அவர்கள் உடலை நலிவடையவைத்தது. மருதமடு பக்கம் பாலம் குறுக்கிட்டது. அதன் அடியில் மெலிவாக ஓரருவி ஓடிக்கொண்டிருந்தது. அதில் எண்மரும் கால் முகங்களைக் கழுவிக் கொண்டார்கள். தெம்பு உடலில் தெரிந்தது. பக்கத்தில் எல்.ரிரிஈ முகா மொன்றிருந்தது. விசாரித்து அதனுள் சென்றார்கள். அன்று தான் அவர்களுக்கு ஒழுங்கான சாப்பாடு கிடைத்தது. சாப்பிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்பாடி ஓடி ஓடித்திரியிறதிலும் எங்களோட சேர்ந்திடலாமே தம்பிமாரே? ஆட்களைச் சேர்க்கிறான்கள். இனி இளைஞர்களை விடமாட்டான்கள். அரிப்பில தங்கியிருக்கிறான்கள்.” என்றான் அந்த முகாமின் பொறுப்பாளன். அவன் சொல்வதிலும் நியாயமிருப்பதாக மைக்கலுக்குப்பட்டது. மைக்கல் தன்னைப்பற்றி எண்ணிக்கொண்டான். அவனுக்குப் பதினாறு வயது நடந்து கொண்டிருந்தது. பதினாறு வயது என்று கூறமுடியாது. ஒரு நாள் இயக்கத்தில் சேர்வதாக மன்னாருக்கு ஓடிப்போனான். மூண்றாண்டுகள் வரை தொட்டாட்டு வேலைகள் செய்து கொண்டு விக்டர் அண்ணருடன் இருந்தான். ஒரு கட்டத்தில் அவன் சிறியவன் என அறிந்த விக்டர் இவனைத் முகாமைவிட்டுத் துரத்திவிட்டார். அவன் விடத்தல் தீவு வந்தான்.

“உசாராத்தான் இருக்கிறம். அவங்கள் அரிப்பை விட்டுப் போகவில்லையா?”

“எங்கை இன்னமும் கொஞ்சப்பேர் அங்கை நிக்கிறான்கள்.”

“மச்சான் என்ன செய்யிறது. வீட்டை போக முடியாது போல. இப்படிக்கிடந்து சாகவேண்டியது தான்.” என்றான் ஒருவன்.

மைக்கலுக்கு மனம் ஒரு நிலையிலில்லை. பலவற்றையும் சிந்திக்க வேண்டிய இறுதிக்கட்டத்தை அடைந்திருந்தான்.

“வீட்டில் இருந்தால் அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். இல்லாவிடில் நாட்டுக்காவது ஏதாவது செய்ய வேண்டும். இரண்டுமில்லை. இப்ப வீட்டை போகவும் முடியாது. போனால் அநியாயமாக அவங்களிட்ட மாட்டப்பட்டு அடி உதை வாங்க வேணும். கோகுலனுக்கு நிகழ்ந்ததை கண்ணால பார்த்தனே? ரயரில் போட்டு துடிக்கத்துடிக்கக் கொளுத்தினாங்கள். எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் இயக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் தாய் தந்தை சுற்றம் இருக்கத்தானே செய்யும். அவற்றை மறந்து போராடச் சென்றிருக்கிறார்கள்."

காட்டின் நடுவே செம்பகப்பட்சியொன்று குரல் தந்தது. அன்றிரவு எல்லாரும் நிம்மதியாகத் தூங்கினர். மைக்கலின் இதயம் மிகவும் வேதனைப்பட்டது. மறுநாள் விடைபெற்று விடத்தல்தீவுக்கு வந்தபோது வீட்டார் அவனைப் புது மனிதனாகப் பார்த்தார்கள். அவன் மீண்டு வந்ததாக நினைத்தார்கள்.

மைக்கல் சத்தியனிடம் ஓடிப்போனான். மைக்கலை சத்தியன் எதிர்பார்க்கவில்லை. 'அண்ணன் இந்தக்கிழமை வரவில்லை காரணம் தெரியவில்லை. வெள்ளைவான் வந்ததாகச் சொன்னார்கள்' எனச் சுகந்தி அவனிடம் சொல்லியிருந்தாள். கடற்கரையில் அந்தோணிமுத்தருடன் நின்றிருந்து அவள் சத்தியனுடன் பேசியதை வரதன் அசூசையுடன் பார்த்ததை சத்தியன் அவதானிக்கவில்லை. மைக்கல் தானும் நண்பர்களும் துரத்தப்பட்ட கதையை விபரித்தான்.

"இனியும் வெளியில் இருப்பது சரியாகப்படவில்லை சத்தியன் அண்ணை. நானும் இயக்கத்தில் மீண்டும் சேரப்போறன்.."

அவன் மனநிலை சத்தியனுக்குப் புரிந்தது. மைக்கல் எப்போதும் இயக்கத்துக்கு வரக்கூடியவன் தான். அவன் மனதில் அந்த எண்ணம் என்றோ இருந்தது.

"நானும் முதன்முறை சண்டைக்குப் போகப்போறன். அடுத்த சண்டைக்கு வரதர் அனுப்பப்போறார். அடுத்த சண்டை பெரும்பாலும் அரிப்பில நடக்குமென்கினம். அரிப்புல இருக்கிற எதிரிகளின்ர காம்பை அழிப்பதாகப் பேசிக்கொள்கினம்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கலை வரதனும் வரவேற்றுப் பேசினான்.

"நிச்சயமாக மீண்டும் வாறதெண்டால் சந்தோஷம் மைக்கல். பூநகரிக்கு பயிற்சிக்கு அனுப்பி வைக்கிறன். இப்ப இயக்கத்து ஆக்கள் விரும்பினால் நாலு வருஷசேவிசுக்குப் பேந்து கலியாணம் கட்ட அனுமதிச்சிருக்கினமாம். நானும் கட்டப்போறன்.."

"அண்ணைக்குக் கலியாண ஆசை வந்திட்டுது. பொம்புளை பாத்து வைச்சிருந்தாச் சொல்லுங்கோ. பேசிச் செய்வம்"

"சொல்லுறன். உனக்குத் தெரியாமல் செய்யமாட்டன்.." அவர்கள் பேச்சு திசை மாறியது.

"ஒரு பக்கம் பொடியள் இயக்கத்தில் சேருகிறார்கள். ஒரு பக்கம் மாற்றியக்கத்தார் பிடிக்கினம். தப்ப வழி? இந்த முறை அறுவடை முடிந்ததும் நான் வந்திடப்போறன் அண்ணை. பயிற்சி பெறப்போறன்..."

புதுக்கமம் விளைந்திருந்தது. அறுவடைக்குத் தயாராக இருந்தது. அதிகாலையே ஆட்களை வருமாறு அந்தோணிமுத்தர் அழைத்திருந்தார். கடகம் நிறைய இடியப்பத்தோடு சுகந்தியும் வந்திருந்தாள். அறுவடை வலு கலகலப்பாக நடந்தது. பதினொரு மணிபோல அடிவானத்தில் இரண்டு பொம்பர் விமானங்கள் தோன்றின. அவற்றைக் கண்டதும் அறுவடையில் ஈடுபட்டோரிடத்தில் சிறு பரபரப்பு ஏற்பட்டது.

சனக் கூட்டத்தினை நிலத்தில் கண்டால் கண்கடை தெரியாமல் குண்டுகளை வீசிவிடுவார்கள். சென்ற கிழமை முருங்கனில் குண்டுகளை வீசியதால் மூன்று சிறுவர்கள் உட்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவர் பலியானார்கள். அடிவானத்தில் தோன்றிய விமானங்கள் புதுக்கமத்தை நோக்கி வருவதை மைக்கல் கவனித்தான். கவனம் எங்களைக் குறி வைத்திட்டான் போலவிருக்கு.. எங்கயாவது பதுங்குங்கோ.

அவர்கள் அருகில் இருக்கின்ற காட்டிற்குள் புக விரைந்தார்கள். அதற்குள் தாழக் குத்திய விமானம் ஒன்று குண்டொன்றை வீசிவிட்டது. அக்குண்டு வயலில் விழுந்து சிதறியது. மற்றைய குண்டு காட்டோரம் விழுந்தது. சேதமில்லை. இரண்டு குண்டுகளை வீசிய விமானங்கள் திரும்பி அடிவானத்தில் மறைந்தன. அதன் பின்னரான அறுவடை தயக்கத்துடன் வானத்தைப் பார்த்தபடி பயத்துடன் நடந்தது.

கோகுலனின் தமக்கை வசந்தியும் அறுவடைக்கு வந்திருந்தாள். மைக்கலைப் பார்த்ததும் கண்ணீர் விட்டாள். றயரில் கொளுத்தப்பட்ட தம்பியின் நினைவு வந்திருக்க வேண்டும்.

"மைக்கல் எப்படி இருக்கிறீர். உம்மைக் காணும் போது தம்பியின் ஞாபகம் வருகுது. அநியாயமாகக் கொன்றிட்டான்கள். சுகந்தி இந்த முறை சோதனை எடுக்கிறாவென்ன? நல்லாச் செய்வா என நினைக்கிறன். உவங்கள் அரிப்பு காம்பை வலுப்படுத்துறான்கள் போல இருக்குது.."

விமானங்கள் குண்டு வீசியதும் முகாமிலிருந்து வரதனும் சத்தியனும் மற்றும் சிலரும் அவ்விடத்துக்கு வந்தார்கள். வரதனின் விழிகள் சுகந்தியில் நிலைத்தன. சுகந்தியின் விழிகள் சத்தியனின் பதிந்ததை வரதன் கண்ணுற்றான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 7

அதிகாலையே மாணிக்கராசாவுக்குச் செய்தி வந்துவிட்டது. கந்தோருக்குச் சென்று ஜீப்பை ஸ்ரார்ட் பண்ணி எடுத்துப் போர்ட்டிகோவில் நிறுத்தியபோது பூநகரியிலிருந்து மன்னாருக்குப் பறப்பட்டுவந்த முதல் பஸ்ஸில் வந்த மகேந்திரன் அந்தச் செய்தியைக் கொண்டு வந்தான். பொன்னப்பரின் இரண்டாவது மகன் மகேந்திரன். மாணிக்கராசாவின் மைத்துனன் முறையானவன். மகேந்தரனின் தங்கை பவானியை மாணிக்கராசா காதலித்து வருவதால் அந்த உறவு பலப்பட்டிருந்தது. வெள்ளாங்குளத்தில் சிறியதொரு தேநீர்க்கடையை நடாத்திவரும் மகேந்திரன் பொருட்களை வாங்கச் சிலசமயங்களில் மன்னார் நகரத்துக்கு வருவான்.

மகேந்திரன் நடாத்தி வருவது தேநீர்க்கடை என்றாலும் அவன் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மன்னாருக்கு வருவது முக்கியமாக இரண்டு சாராயப்போத்தல்களுடன் திரும்புவதற்காகும் என்பது யாவருக்கும் தெரிந்த இரகசியம். அவன் மன்னாரிலிருந்து எப்போது திரும்பி வருவானென வெள்ளாங்குளத்தில் சிலர் விடாயுடன் காத்திருப்பார்கள்.

மகேந்திரனைக்கண்டதும் மாணிக்கராசாவுக்கு வியப்பாக இருந்தது. அதைவிட மகேந்திரன் கொண்டு வந்த செய்தி பேரிடியாகவிருந்தது.

"பள்ளிக்குப்போன தனசேகரன் நேற்றிலிருந்து வீட்டுக்கு வரவில்லை. அவனைத் தேடிப்போன முருகேசரும் வீட்டுக்குத் திரும்பவில்லை. மச்சான், என்னை உடனை மைதிலி ஒருக்கா வரட்டாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு கஷ்டப்பட்டு லீவு எடுத்துக் கொண்டு அவன் புறப்பட்டான்.

மாலை கவிந்து கொண்டிருந்தது. கால நேரம் தெரியாமல் பக்கில் பறவை ஒன்று அவக் அவக் கெனக் குரல் தந்து கொண்டிருந்தது. தலைவாசல் குந்தில் மைதிலியும் அவளது இரண்டு தங்கைகளும் கவலையோடு அமர்ந்திருந்தனர். முருகேசர் வெளியில் சென்றவர் இன்னமும் திரும்பிவரவில்லை. அவ்விடத்தில் நிலவிய அமைதியை மைதிலி மீண்டும் கலைத்தாள்.

'இஞ்சைபார் மலர், நீங்க அதை வடிவாக் கண்டியளா?"

"கண்டம் அக்கா...பாடசாலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த எங்கள் அருகில் வான் ஒன்று வந்து திடீரென நிண்டுது.. தனசேகரன் அண்ணன் அதில ஏறிப்போனார்."

"விரும்பி ஏறிப்போனானா? வலோத்காரமாக அவனைப் பிடித்து ஏற்றிச்சினமா? சின்னப் பொடியன் அவன்..." என்று மைதிலி வினவினாள். அந்தக்கிராமத்தில் அடிக்கடி நிகழ்கின்ற சங்கதிதான் நடந்திருக்கின்றது. திடீர்திடீரென இளம் பிள்ளைகளும் இளம் பெண்களும் காணாமல் போய்விடுவார்கள். பெற்றவர்கள் கண்ணீரும் கம்பலையுமதாக முகாம் முகாமாக ஏறி இறங்குவார்கள். கெஞ்சி விசாரிப்பார்கள். கண்ணீர் வடிப்பார்கள்.

"அப்படி ஒருத்தரும் வரவில்லை. எங்கட காம்ப் ஆக்கள் செய்யவில்லை. எங்கட காம்ப்புக்கு வரவுமில்லை.." அதுதான் பொதுவாக அவர்களுக்குச் சொல்லப்படுகின்ற மறுமொழி. தனசேகரன் காணாமல் போன செய்தியைக் கேள்விப்பட்ட முருகேசர் இடிவிழுந்தவர் போலானார். அப்படி நடந்துவிடலாமென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம் அவருக்கு உள்ளூற இருந்தது. அவருடைய நம்பிக்கை அழிந்து போனதுபோல இருந்தது. அவருடைய மூன்று தாயில்லாத பெண்களுக்கும் அவருடைய ஆண் பிள்ளைகள் இருவரும் தனக்கு ஆதரவாக இருப்பார்கள் என நம்பியிருந்தார்.

அந்தக்கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அப்படிக் காணாமல் போனவர்களின் நினைவுச் சுவடுகள் இருந்தன. போர் முனையில் வீரச்சாவடைந்தார்கள் என்ற செய்தி வீட்டுக்கு வரும் வரை அவர்கள் காணாமல் போனவர்களாக இருந்தார்கள். அந்த மண்ணைத் தம்பிடியில் வைத்திருப்பதற்கு இப்படியான ஆட்சேர்ப்புகள் அவசியமாகவிருந்தன. சுற்றிவர இலங்கை இராணுவம் தாக்கத் தயார் நிலையில் நிற்கும்போது அப்படையைத் தடுத்து நிறுத்த எதிர்ப்படை அணி தேவைப்பட்டது. தனசேகரின் மறைவு அவற்றில் ஒன்றாக அமைந்து விடுமோ?

இரவு படரும் வரை அவர்கள் மூவரும் தகப்பனை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். மகனைத் தேடிப்போனவர் நடு இரவு வரை வரவில்லை. அரிக்கன் லாந்தரைக் கொளுத்தி வைத்துவிட்டு நித்திரைக்குப் போகாது காத்திருந்தனர். பொன்னப்பரும் மகளும் வந்து ஆறுதல் கூறிவிட்டுச் சென்றனர். நடுச்சாமம் அளவில் சயிக்கில் ஒன்று வந்து படலையடியில் நின்றது. நம்பிக்கையோடு மைதிலி எழுந்து பார்த்தாள். படலையைத்திறந்த கொண்டு வேட்டைக்காரச் சின்னப்பு தலையை நீட்டினார்.

“தங்கச்சி.. முருகேசு ஐயா பூநகரிக்குப் போயிட்டு கிளிநொச்சிக்குப் போறாராம். உங்களைச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கட்டாம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாங்குளம் சந்தியில் பஸ்ஸிலிருந்து பிற்பகல் ஒரு மணிபோல இறங்கிய மாணிக்கராசா தன் வீட்டுக்கு விரைந்து வந்தான். குடிமனைக்குப் போகின்ற மண்பாதையில் விரைந்து காளி அம்மன் கோயிலைக் கடந்தபோது கோயிலருகில் நின்றிருந்தவர்கள் கவலையோடு அவனைப் பார்த்தனர். கோயிலடியில் இரண்டு விடயங்கள் அலசப்பட்டன. ஒன்று முருகேசரின் மகன் காணாமல் போன விடயம், மற்றையது அடம்பன்குளத்தின் முறிப்புகள் சீர்படுத்தப்பட்டு திருத்தப் படவிருக்கும் சங்கதி.

இரண்டாவது விடயம் வெள்ளாங்குளப் பங்காளர்களைக் கலக்கிவிட்டது.

"அடம்பன்குளத்து வெள்ளம் தான் வெள்ளாங்குளத்தை நிரப்புறது.. இனி தண்ணி வாறது தடைப்பட்டிடும்...வெள்ளாண்மை அழிய வேண்டியது தான்.. முருகேசர் வந்ததும் நாங்க ஒன்று சேர்ந்து ஜிஏ யைச் சந்திக்க வேண்டியது தான். "

"ஜிஏ யைச்சந்தித்து ஆகிறது ஒண்டுமில்லை. இங்கத்த அரசியல் பொறுப்பாளரின்ர காதுகளில் விஷயத்தைப் போட வேண்டியது தான்" என்றார் கந்தையா. "மன்னார் ஜீஏ யை சந்தித்து அவரின் காதுல போட்டால் சரியாகிவிடும்."

"அதுக்கு அடம்பன்குளத்துக்காரர் விடுவினமே? இங்கத்த பொறுப்பாளர் அங்கீகரிக்காமல் கச்சேரிக் கூட்டத்தில உரிய ஆக்கள் அப்புறூவ் பண்ணியிருக்காயினம்..."

"விஷயம் சரிவரப்புரியாமல் நடந்திருக்கலாம் நாங்க சரியாக விளங்கப்படுத்தினால் சரியாகிவிடும். இன்னமும் வேலை தொடங்கவில்லைத் தானே? அதுக்கிடையில் நாங்க முந்திக்கொள்ளுவம்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முதல் மழையோடு குளத்துக்குத் தண்ணி வரத்தொடங்கியிருக்குது பார்த்தியளே?" என்றார் கந்தையா கவலையோடு.

அவர்களுடைய பேச்சுக்களை கேட்கும் மனநிலையில் மாணிக்கராசா இல்லை. வீட்டுக்கு விரைந்து வந்தான். அவனைக்கண்டதும் சகோதரிகள் வீரிட்டுக் கதறினர். அவர்கள் இட்ட அழுகுரலில் பொன்னையா குடும்பமும் அயலவர்களும் அங்கு கூடிவிட்டனர். பவானியும் விம்மிவிம்மி அழுதாள்.

முதல் நாள் பிற்பகல் தான் தனசேகரத்துடன் எவ்வளவு பிரியமாகப் பேசி மகிழ்ந்தாள். சில மணித்துளிகளாயினும் அவன் எவ்வளவு பிரேமையுடன் பேசி விடை பெற்றான். அதற்குள் இவ்வளவு விரைவில் இப்படியொரு கவலை படிந்த செய்தியோடு மாணிக்கராசாவை அவள் எதிர்பார்க்கவில்லை. மிகுந்த துயரத்துடன் அவனைப் பார்த்தாள். ஆண் மகன் கண்ணீர் விடலாமா?

"விசாரித்துக் கொண்டு வாறன்.." என்று அவன் புறப்பட்டபோது மைதிலி தடுத்தாள்.:

"எங்களைவிட்டிட்டுப் போகாதை அண்ணை. எங்களுக்குப் பயமாக இருக்குது...ஐயா விசாரித்துவிட்டு வரட்டும்.."

"என்ன பயம் தங்கச்சி.. பக்கத்தில பொன்னையா அம்மான் இருக்கிறார் தானே? பவானியையும் வேணுமெண்டால் கூப்பிட்டுக் கூடவைச்சிரு..."

அவனை அவர்களால் தடுக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு முருகேசரின் வீட்டில் மைதிலிக்கும் தங்கைமாருக்கும் துணையாகப் பவானி தங்கநேர்ந்தது. அவர்களுடன் ஓர் ஆண் துணையாக மகேந்திரன் தான் தங்குவதாகக் கூறி முன்வந்தான். அன்று நேரகாலத்தோடு தன் தேநீர்க்கடையை மூடி விட்டு வந்தான். வழக்கமாக அவன் தன் கடையைப் பூட்டுவதற்கு நள்ளிரவாகும். இன்று நேரகாலத்தோடு பூட்டிவிட்டு வந்தான். உண்மையில் அவனுக்கு தனசேகரன் காணாமல்போன நிகழ்ச்சி துயரத்தைக் கொடுத்திருந்தது. மைதிலி குடும்பத்துக்கு இப்படி ஒரு துன்பம் நேர்ந்திருக்கக் கூடாது.

அரிக்கன் லாந்தரைக் கொளுத்தி தலைவாசல் வளையில் மாட்டியிருந்த கொளுவு கம்பியில் மாட்டிவிட்டாள் மைதிலி. தலைவாசல் வாங்கில் மகேந்திரன் சிகரெட் ஒன்றைப் புகைத்தபடி அமர்ந்திருந்தான். வீட்டு அறைக்குள் பவானியும் மைதிலியின் தங்கைமாரும் பேசிக் கொண்டிருந்தார்கள். இரவுச்சாப்பாட்டுக்காக அடுப்பில் பிட்டு அவிந்து கொண்டிருந்தது.

அரிக்கன் லாந்தரை வளையில் மாட்டிவிட்டு வீட்டுக்குள் போக மைதிலி திரும்பியபோது, "கொஞ்சம் நில் மைதிலி. உன்னுடன் கொஞ்சம் பேசவேண்டும்...தம்பி காணாமல் போயிருக்கிற வேளையில நான் இப்ப கதைக்கிறது சரியில்லத் தான் மைதிலி. நானென்ன செய்ய..வேறு சந்தர்ப்பம் வராது.. உன்னையும் தனியக் காணமுடியாது.." என்றான் மகேந்திரன். இந்த ஆடவன் இவற்றைக் கூறுவதற்கிடையில் மிகுந்த சங்கடப்பட்டாள். தலையைக் குனிந்தபடி வாங்கின் விளிம்பை அழுத்திப் பிடித்தபடி கூறி முடித்தான். கள்ளம் புகுந்த இளம் உள்ளங்கள் எப்போதும் இப்படித்தான்.

"என்ன மச்சான்?" சர்வசாதாரணமாக மைதிலி கேட்டாள். அந்த ஆடவன் என்ன சொல்வான் என்பதைக்கூட இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளால் நினைக்க முடியவில்லை. தனசேகரனும் அவனைத் தேடிச்சென்ற தகப்பனும் தமையனும் தான் நினைவில் நின்றனர்.

"ஒண்டுமில்லை மைதிலி. கெதியில பவானிக்கும் மாணிக்கராசாவுக்கும் கலியாணம் நடந்திடும்.."

"அதுக்கென்ன மச்சான்?"

"அதுக்குப் பிறகு எனக்குத் தானே?"

"எங்கையாவது பெண் பார்த்து வைச்சிருக்கிறியளா மச்சான்,"

"என்ன இப்படிக் கேட்டுவிட்டாய்... நீ தான் எனக்கு மச்சாள்.. முறைப்பெண் என்பதை மறந்துவிட்டாயா?"

அவள் சற்றுத் திகைத்துப்போனாள். இரண்டு நாட்களுக்கு முன்பு என்றால், மணிசேகரனைச் சந்திக்கு முன் என்றால், அவள் மகேந்திரனின் கேள்வியால் சஞ்சலமோ சலனமோ பட்டிருக்க மாட்டாள். நேரடியாகவே மறுமொழி சொல்லியிருப்பாள்.

"அதுகளை நம்முடைய பெற்றோர் முடிவு செய்யட்டும் மச்சான். எனக்குக் காதலில நம்பிக்கையில்லை. பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக நடக்க விருப்பமில்லை வாழ்க்கையில பெரிதாக எதையாவது சாதிக்கவேணுமாப் போலப் படுகுது. கலியாணம் செய்தல். பிள்ளளைகளைப் பெறுதல்...... அதுக்கு இந்த நாட்டில பலர் இருக்கினம். அவர்களில் ஒருத்தியாக இணைந்திருக்க எனக்கு விருப்பமில்லை மச்சான். எதுக்கும் பெற்றோர் முடிவு செய்யட்டுமன்... அடுப்பில புட்டு வேகுது.. இருங்க சாப்பாடு கொடுக்கவேணும். தங்கச்சிமார் பசி இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டினம்..'' என்றபடி அவள் உள்ளே போனாள். அவள் போவதைப் பார்த்தபடி அவன் இருந்தான். இறுக்கமான அவள் பின்னழகு அவனைப் பித்துக்கொள்ள வைத்தது. அவன் எண்ணத்தில் பிடிவாதத்தை ஏற்படுத்தியது.

நான்கு நாட்களின் பின்னர் ஏமாற்றத்துடன் முருகேசரும் மாணிக்கராசாவும் வீட்டுக்குத் திரும்பி வந்தனர்.

“அவனைப் பயிற்சிக்கு அனுப்பிவிட்டினமாம்...''

தனசேகரனைப்பற்றி இனிப் பேசி அக்கறைப்படுவதிலும் கவலைப்படுவதிலும் அர்த்தமிருக்கப் போவதில்லை என மைதிலி எண்ணிக்கொண்டாள். அவனை நாட்டுக்காக விட்டுவிட வேண்டியது தான். நாளாந்தம் விமானக்குண்டு வீச்சுக்களினாலும் ஹெலிகளின், பிப்ரிகலிபர் சன்னங்களினாலும் அழிக்கப்படுகின்ற அப்பாவித் தமிழ் மக்கள் எத்தனைபேர்? யாழ்ப்பாணத்தில் இராணுவத்தை நம்பிக் குடியேறிய குமர்பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களில் எத்தனைபேர் செம்மணியில் மண்ணுக்குள் உறங்குகிறார்கள்? தமிழ்ப்பிரதேசங்களில் நித்தம் நிகழும் சூட்டுச் சம்பவங்கள் எத்தனை? தரையில் விழும் மரணங்கள் எத்தனை?

போராளிகள் ஒருபக்கம். இராணுவம் ஒரு பக்கம். இடையில் மக்கள் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். போராட்டம் தொடங்கப்பட்டுவிட்டது. இருபக்கத்தாரும் தம் செயல்களை நியாப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். வாழவேண்டிய இளம் வயதில் போராடி அழிந்து கொண்டிருக்கும் ஏழைப்பெற்றோரின் பிள்ளைகள் எத்தனை ஒரு பக்கம் போராளிகள் மக்களைப் போராடச் சேர்க்க மறுபக்கம் இராணுவம் சேர்க்கிறது. மரணிப்பது இளம் பிள்ளைகள். வாழவேண்டிய பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனித்தம்பியை மறந்துவிடவேண்டியதுதான் போல இருக்குது, ஐயா." என்றாள் மைதிலி.

"வீட்டுக்கு ஒருத்தரை அனுப்புங்கோ என்று கேட்டபோது நான் அக்கறை கொள்ள வில்லை. பொத்திப் பொத்தி வைச்சன். இப்ப இழந்திட்டன் போலக்கிடக்குது.."என்று முருகேசர் கலங்கினார்.

"போகிற போக்கைப்பார்த்தால் நாங்க எல்லாரும் போக வேண்டுமாப்போலப் படுகுது.." என்ற மைதிலியைக் கோபத்துடன் மாணிக்கராசா பார்த்தான். "நீ பொடியளுக்குச் சப்போட்டாகக் கதைக்கிறதைப் பார்த்தால் நீயே போராடப் போய் விடுவாய் போலக்கிடக்குது.."

"அந்த துணிச்சல் எனக்கில்லை அண்ணை. என்ரை தாயைத்தின்னி ரெண்டு தங்கச்சிமாரைத் தவிக்கவிட்டிட்டு நான் எங்கை போறது? போகமாட்டன். நான் தனியனாகவில்லை. குடும்பப் பொறுப்போடிருக்கிறன். அதுக்குத்தான் தம்பியைத் தான் கொடுத்திட்டமே?:" மைதிலியின் விழிகள் கலங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 8

**கா**லை 10 மணிக்கு மேல் இருக்கும். அன்று காலையும் மழைத் தூறல்துளிகள் மண்ணில் இறங்கியதால், முருகேசர் வயலைப் பார்க்கச் சென்றுவிட்டார். தங்கைகள் மலரும் மாலதியும் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். மதியச் சமையலுக்கு நேரமிருந்ததால் புலிகளின் வானொலியை மைதிலி கேட்டுக் கொண்டிருந்தாள். முற்றத்தில் கோழிகள் மேய்ந்தன. நிலத்தைக்கிளறி எதையோ தேடின. அவர்கள் வீட்டு நாய் மல்லிகைச் செடிக்கு அருகில் சுருண்டு படுத்திருந்தது. கோழிகளுக்கு வெறுந்தரையில் என்ன கிடைத்து விடப்போகின்றது? உள்ளே சென்று கொஞ்சம் நெல் மணிகளை எடுத்துவந்து போடலாம் என்ற எண்ணத்துடன் மைதிலி வாங்கிலிருந்து எழுந்தபோது படலையடியில் ஜீப் ஒன்று வந்து நின்றது.

'அண்ணனாக்கும்..' என்று மைதிலி நினைத்தபடி படலையைப் பார்க்க அதனைத் திறந்தபடி மணிசேகரன் வந்தான்.

"உள்ளே வரலாமா?"

"ஐயா வயலுக்குப் போட்டார்.. அதனாலென்ன வாருங்கோ..அண்ணை வரவில்லையா?"

"மாணிக்கராசா எஞ்சினியரின் ஜீப்பில் வவுனியாவுக்குப் போட்டான். நான் வேறை றைவரோட வந்தனான்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உள்ளே வந்தான். அவனை இருக்கச்சொல்ல மைதிலி விரும்பினாள். அதனைச் சொல்ல மறந்துபோய் வியப்புடன் அவனைப் பார்த்தபடி நின்றாள்.

"வாறவையை இருக்கச்சொல்ல மாட்டியளோ?" அவளை ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தபடி மணிசேகரன் கேட்டான். மைதிலி தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். அவன் தன்னிடம் பேசத் தான் இந்த நேரத்தில் வந்திருக்க வேண்டும் என அவள் மனம் சொன்னது.

"இப்படி இருங்கோ.."

வாங்கில் அமர்ந்து கொண்டபடி அவளைப்பார்த்தான். நடுவானில் குரல் எழுப்பியபடி நீர்க்காக்கைகள் விரைந்தன. மழைபெய்யத் தொடங்கிவிட்டது. இனிக் குளத்துக்குத் தண்ணீர் வரத்தொடங்கிவிடும். அவற்றுக்குக் கொண்டாட்டம் தான். நீர்க்கம்பிகளாகத் தூறிய மழை சற்றுப்பலக்கத் தொடங்கியது.

"மழை நல்லாப் பொழியுது.. நீங்கள் சமைக்கவில்லையா?"

"என்பேர் மைதிலி.." என்றாள் அவள் தன்னை அறியாமல். மணிசேகரன் வியப்புடன் அவளை ஏறிட்டபடி, மத்தியானம் சாப்பிட வரட்டுமா? வேண்டாம் வேண்டாம். பயந்து போகாதையுங்க.. நான் இண்டைக்குக் கனநேரம் தங்கமாட்டன். மன்னாருக்குப் போய்ச்சாப்பிடுகிறம்.."

'நீங்க கேட்டாலும் இண்டைக்குச் சாப்பாடு இல்லை...ஐயா இன்னமும் வரவில்லை...மரக்கறி தான்...உங்களுக்குப் பிடிக்காது.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறி எனக்குப் பிடிக்காதெண்டு ஆர் சொன்னது..”

“பட்டினத்தாக்களுக்குப் பிடிக்காது எண்டு நினைச்சன். வேறொண்டு மில்லை...ஆம்புளையள் இல்லாத வீட்டுக்கு வந்து சாப்பாடு போடுறியா எண்டு கேக்கிறது சரியில்லை..” அவள் சிரித்தாள். அந்தச்சிரிப்பில் அவன் கரைந்து போனான்.

“அப்ப எப்ப கேக்க வேணும்?”

“முறையாகக் கேக்கவேணும்...”

“அப்படி யெண்டால்...?”

அவள் தலையைக் குனிந்து நிலத்தைப் பெருவிரலால் கோலமிட்டாள்.

இருவருக்குமிடையில் சம்பாசனையில் சகயநிலை ஏற்பட்டதும் அவள் கேட்டாள்: “அடம்பன்குள சேர்வ்வேக்கு எங்கை காம்ப் போடுறியள்? ஐயா மறுத்தது உங்களுக்குப் பிடிச்சிருக்காது தானே?”

“அப்படியில்லை மைதிலி..” என்றான் அவன். அவள் பெயரை முதன் முதலாக அவன் அழுத்தி உச்சரித்தான். அவள் அதனைப் புரிந்து கொண்டாள்.: “அவரில தவறில்லை. அவர் எடுத்த முடிவு சரி. நாங்க இப்ப சேர்வ்வே முகாமை அடம்பன்குளத்துக் குடிமனையில் போடுறம். தன் தென்னந் தோட்டத்தை முதலாளி மயில்வாகனத்தார் அதுக்குத் தந்திருக்கிறார். அடம்பன்குளம் முறிப்பத்திருத்திறதால எல்லாரிலும் பார்க்க அவருக்குத் தான் நன்மை என்பது எங்களுக்குத் தெரியும்.. நாங்க என்ன செய்யிறது..? தன்ரை பங்கைப் பிரித்துப் பல பங்காளர் பேரில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி வைச்சிருக்கிறார்.. புத்திசாலி.. மைதிலி உங்கட ஐயாவும் பங்காளர்களும் விண்ணப்பம் பெட்டிசம் அனுப்பி வைச்சிருக்கினம்…எஞ்சினியர் விசாரித்துத் முடிவெடுத்துச் செய்ய விரும்பினாலும், தாமதப்படுத்தாது அடம்பன்குள அளவீட்டைச் செய்யும்படி பொடியள் கேட்டிருக்கினம்…அதுக்கு அப்பீல் இல்லை..”

“வெள்ளாங்குள ஆக்களும் இதைவிடமாட்டினம். அவர்களின் முழு வாழ்க்கையும் வெள்ளாங்குளத்து நீர் வாறதில தான் தங்கியிருக்குது.. காளி கோயில் திருவிழா சனிக்கிழமை நடக்க இருக்குது? ஏராராவா நடக்கும்.. நல்லா இருக்கும். வாறியளா?” என்றாள் மைதிலி. அவள் அழைப்பை மணிசேகரன் எதிர்பார்க்கவில்லை.

“மைதிலி..” அவன் குரலில் குழைந்த வாத்சல்யத்தில் அவள் கரைந்துபோனாள். படலையைத் திறந்து மூடும் சத்தம் கேட்டது. இருவரும் பார்த்தனர் பவானி உள்ளே வந்தாள்.

“அவர் வந்திருக்காராக்கும் என்று நினைச்சன்..” பவானி வெட்கப்பட்டுச் சிரித்தாள். அவர்களை நிமிர்ந்து பர்ாக்க அவளால் முடியவில்லை.

“அண்ணை வரவில்லை பவானி..”

“ஏதாவது சொல்கிறதெண்டால் என்னிடம் சொல்லும்… தூது போறன்…..”என்ற மணிசேகரனின் வார்த்தைகள் அவளை வெட்கப்படவைத்தன. தலையைக்குனிந்து கொண்டாள். “நான் போயிட்டு வாறன்..” என்றபடி மணிசேகரன் எழுந்தான். “நேரம் கிடைத்தால் காளி கோயில் திருவிழாவுக்கு வாறன். வரேக்கை மாணிக்கராசாவைக் கட்டாயம் கூட்டி வாறன்..”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கன்னிகளின் இதயங்களைக் காவிக்கொண்டு ஜீப் விரைவது கேட்டது.

வெட்டவெளியின் நடுவில் மகிழமரம் செழித்து ஓங்கி வளர்ந்திருந்தது. காளியம்மனின் கோயில் சிறிய கல்கட்டிடத்தால் ஆனது. கர்ப்பக்கிரகமும் முன் ஓடுவேய்ந்த அர்த்த மண்டபத்தையும் கொண்டது. வெள்ளாங்குள மக்களுடன் சுற்றாடலிலிருந்தெல்லாம் வந்திருந்த சனக்கும்பலால் அப்பிரதேசம் களை கட்டியிருந்தது.

பூநரியிலிருந்து கொண்டு வந்திருந்த ஒலிபெருக்கிகளும் மின்பிறப்பாக்கியும் அப்பிரதேசத்தைப் பகலாக்கி சத்தத்தால் நிறைத்திருந்தது. ஆலயத்துக்குச் சம்பந்தமில்லாத சினிமாப்பாடல்களால் அப்பிரதேசம் நிரம்பி வழிந்தது. மாலையே வெள்ளாங்குளத்துக் குடும்பங்கள் பொங்கல் பானைகளை முக்கற்களில் வைத்து அடுப்பை மூட்டிவிட்டார்கள். பொங்கித் தள்ளுவதற்காகப் பானைகள் கொதித்துக் கொண்டிருந்தன. வில்லுப்பாட்டு, மெல்லிசை போன்ற நிகழ்ச்சிகள் பின்னிரவில் நடக்கவிருந்தன. அவற்றுக்குப் பிறகு அம்மன் வீதி வலம் வருவாள்

தர்மகர்த்தாத்தலைவர் முருகேசர் வெகு மும்முரமாகக் கோயிலுக்குள் நின்றார். மைதிலியும் பவானியும் கோயில் முற்றத்தில் பொங்கல் பானைகளை வைத்திருந்தார்கள். பொன்னப்பரின் மனைவியும் மகள் பவானியும் தங்கள் பொங்கல் பானை அடுப்புக்குப் பக்கத்தில் மோதகம் அவிக்கும் வேலையையும் கவனித்தனர். இவர்களைக் கவனித்தபடி இரண்டு இளம் உள்ளங்களும் இருந்தன. மாணிக்கராசா பவானியின் அருகில் நின்றிருந்தான். அவனருகில் மணிசேகரன் மைதிலி பொங்கும் அழகைப் பார்த்தபடி நின்றிருந்தான்.. தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களில் பதிந்தவர்கள் தம் அருகுகளில் நிற்பது அப்பெண்களுக்கு வெகு உற்சாகத்தைக் கொடுத்தது.

சொன்னபடி மணிசேகரன், மாணிக்கராசாவையும் அழைத்துக் கொண்டு ஜீப்பில் வந்திருந்தான். அவர்களின் வருகை பொங்கல் விழாவுக்குத் தனிக் கோலாகலத்தைக் கொடுத்தது. ஆரம்பத்தில் அவர்களின் வருகையைப் பரவாய் பண்ணாத மகேந்திரன், மணிசேகரனின் விழிகள் மைதிலியின் பக்கம் அடிக்கடி மொய்ப்பதையும், இடையிடையே மைதிலியின் கண்கள் மணிசேகரனைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டுத் தலைகுனிவதையும் அவதானித்தபோது ஆத்திரமடையவைத்தது. எங்கிருந்தோ வந்தவன் தான் பார்த்திருக்கும் பூவைப் பறித்துக் கொண்டு போவதா? பெற்றோரிடம் சொல்லி விரைவில் கலியாணத்தை ஒப்பேற்ற வேண்டும்.

மகிழமரத்தின் கீழ் கூடியிருந்த வெள்ளாங்குள இளைஞர்கள் சொன்னவை அதற்குப் பின்னர் மகேந்திரனுக்கு உறைக்கவில்லை.

"உதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது. அடம்பன்குளத்தைக் கட்டி வெள்ளாங்குளத்துக்கு வாற தண்ணியை மறிக்க விடக்கூடாது. இவ்வளவு காலமும் எங்கை போனவை? புரம்பரை பரம்பரையாக நிலவிய ஒழுங்கை மாற்றப் பார்க்கினம். அடம்பன்குளத்துக்குத் தண்ணியைக் கொண்டுவாற கழிவு ஆறுகள் அடம்பன் குளத்தின் ஊடாகத் தான் பாய்கின்றன. இவ்வளவு காலமும் இல்லாமல் புதுநாணயமாக இப்ப செய்யிறதுக்கு மயில்வாகனத்தாரின் சதி தான் காரணம்". என ஓர் இளைஞன் பொருமினான்.

"காலமை கொழும்பில லேக்கவுஸ் அருகில் குண்டு வெடிச்சிட்டுதாம். பஸ்ஸில் வைச்சிருக்கினமாம். அறுபது பேருக்குமேல் பலியாம். அதனால பதட்டமாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நேற்று ராத்திரி நெடுந்தீவுக் கடலில் நேவியின்ர டோறாப் படகை பொடியள் தாக்கிவிட்டினமாம். அதனால் இண்டைக்கு புதுக்குடியிருப்பில பொம்பர் குண்டு வீசியிருக்காம் அழிவு எவ்வளவெனத் தெரியவில்லை..

“மணலாற்றிலும் சண்டையாம்..

“கிழக்கிலும் கடும் சண்டையாம்.

இருந்தாற்போல மெல்லிய இரைச்சல் தெற்கு அடிவானத்தில் கிளம்பியது. அதனைக் கவனித்த மகேந்திரன் “பொம்பர்கள் வாறதுபோலக்கிடக்குது” என்று எச்சரித்தான். மெல்லியதாகக் கிளம்பிய சத்தம் கணப்பொழுதில் பெரிய இரைச்சலாகியது.

இரண்டு பொம்பர் விமானங்கள் வானத்தின் குறுக்காகக் கோடுகளிட்டன. கடூர இரைச்சலுடன் வடக்காக விரைந்தன. பின்னர் வட்டமிட்டபடி திரும்பின.

திருவிழாவுக்கு வந்திருந்த மக்கள் பதற்றம் அடைந்தனர். அல்லோலகல்லோலமாக ஓடத்தொடங்கினர்.

“லைற்றுகளை நிற்பாட்டுங்கோ”..என்று ஒருவர் கத்தினார்.

அதற்குள் குத்தி இறங்கிய பொம்பர் ஒன்றிலிருந்து விடுபட்ட குண்டு ஒன்று அத்திருவிழாச் சனக்கும்பலைநோக்கி விரைந்து விழுந்தது. அடுத்த பொம்பரும் இன்னொரு குண்டைக் கழற்றிவிட்டது.

“குப்புறப்படுங்கோ..படுங்கோ..” என்று மணிசேகரன் கத்தினான். மைதிலியை இழுத்து நிலத்தில் விழ்த்திவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது குண்டு சரியாக காளிகோயில் மண்டபத்தில் விழுந்து சிதறியது. மற்றைய குண்டு அதற்கு அப்பால் கிழக்காக வெறும் வெளியில் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தது. குய்யோ முறையோவெனக் கூக்குரல் சத்தம் அவ்விடத்தில் நிரம்பியது. கோயில் மண்டபம் தகர்ந்து சரிந்தது.

அவ்விடத்தைவிட்டு பொம்பர் விமானங்கள் அகன்றுவிட்டதை உறுதிப்படுத்திய பின்னர் அதன் அழிவுகள் தென்பட்டன. மண்டபம் எங்கும் இரத்த வெள்ளம். சிதைந்த சடலங்கள் சிதறிக்கிடந்தன. . கோயில் மண்டபத்தில் நின்றிருந்த எவரும் தப்பவில்லை. ஐயர்:, உதவி ஆட்கள், முருகேசர் ஆகிய இருபது பேர் காணமற் போயினர் சதைக் குவியல்களாயினர்.

"ஐயோ.." என்றலறினாள் மைதிலி.: "ஏன் இந்தக் கொடுமை? சாதாரண மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? என்ன கேட்டார்கள்? ஐயோ என்ர ஐயா.."

சொந்தங்களை இழந்தவர்களின் ஓலம் அப்பிரதேசமெங்கும் நிறைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 9

**மை**திலி அந்த வீட்டில் தன் தங்கைகளுடன் தனித்துவிடப்பட்டாள். முருகேசரின் காரியங்கள் அனைத்தும் முடிந்துவிட்டன. அந்தியேட்டியை முடித்துக் கொண்டு மாணிக்கராசா மன்னாருக்கு வேலைக்குப் போய்விட்டான். இறுதிச் சடங்கின் நிகழ்வுகளில் மணிசேகரனும் ஒருவனாகக் கலந்து கொண்டான்.

"நீ கவலைப்படாமல் வேலைக்குப் போ தம்பி. நாங்க தங்கச்சிமாரைக் கவனித்துக் கொள்ளுறம். முருகேசரின்ர ஆண்டுத்துவசம் முடிந்ததும் கெதியில் உன்ரை கலியாணத்தையும் மைதிலியின்ர கலியாணத்தையும் முடிப்பம். மைதிலிக்கு மகேந்திரனைக் கட்டிக் கொடுத்துவிட்டால் அவன் வீட்டோட எல்லாருக்கும் துணையாக இருந்திடுவான்." என்றார் பொன்னப்பர். அவரின் வார்த்தைகள் நாராசமாக மைதிலியைத் தாக்கின.

மகேந்திரனுக்குத் தன் தங்கை மைதிலியைக் கலியாணம் செய்து கொடுக்கின்ற எண்ணம் மாணிக்கராசாவுக்கு எப்பொழுதும் தோன்றியவில்லை. தேநீர்க்கடையின் பெயரால் சாராயத் தொழில் நடாத்தி வருகின்ற மகேந்திரனுக்கு மைதிலியைக் கொடுப்பதா? மகேந்திரன் குடிக்கவும் செய்கிறானென அவன் அறிந்திருந்தான். என்றாலும் மைதிலியோடு இரண்டு குமருகளை வைத்துக் கொண்டு அவன் என்ன செய்யப்போகின்றான்?

"ஐயாவை இப்படிப் பறிகொடுத்துவிட்டமே? ஏன் அக்கா எங்களுக்கு மட்டும் இப்படி? இனி என்ன செய்யப்போறம்? ஏன் அப்படிச் செய்யிறான்கள்?" என்று மலர் தமைக்கையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டாள்: "இந்த முறை எங்கட வயல் நல்லா வந்திருக்குது எண்டு ஐயா எப்படி மகிழ்ந்தார், பச்சைப்பசேலென்று செழித்திருப்பதாகச் சொன்னார். சா விளைச்சல் போல இருக்குது. இனி ஆர் வயலைப் பார்ப்பினம்? அண்ணையால முடியாது. எங்களை ஆர் இனிப்பார்ப்பினம் அக்கா?"

"அண்ணை இருக்கிறார் தானே? நீ ஏன் கவலைப்படுகிறாய்?" என்று தங்கைக்கு மைதிலி ஆறுதல் கூறினாள்.

"அவர் கலியாணம் செய்து கொண்டு போய்விட்டால்?"

"நானிருக்கிறன் தங்கச்சி.. எங்கட வயல் இருக்குது. சாப்பாடு போடும். ஆக்களை வைச்சு நான் வயல் செய்விப்பன். கவலைப்படாதை மலர்.

அப்போதுதான் அந்தக் கேள்வியை மலர் கேட்டாள்: "அவர் உன்னைக்கட்டிக் கொள்வாரா அக்கா?"

மைதிலியை வியப்புப் பீடித்தது. "எவர்?"

"இங்க வந்து போவாரே அவர்.. மணிசேகரன் சேர்."

ஒன்றுமே தெரியாதென எண்ணியிருந்த இச்சிறுபெண் எவ்வளவு நுணுக்கமாக அவதானித்திருக்கிறாள். அறிந்து வைத்திருக்கிறாள்.

"எனக்குத் தெரியாது."

"கேட்டுவிடு. இல்லாட்டில் நான் கேக்கிறன்."

"கேக்கிற நேரமா இது மலர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பேந்து எப்ப கேக்கிறது?...மகேந்திரன் மச்சானுக்கு உன்னை முடிவாக்கிய பின்னரா? மணிசேகரின் சேரைக் கட்டிக்கொண்டு நீ போயிட்டா நானும் சுமதிலியும் தனிச்சுவிடுவம் எண்டு பயப்படாதை அக்கா. நான் குடும்பத்தைப் பார்ப்பன். அந்தச் துணிச்சல் எனக்கு இருக்குது.. எங்களுக்காக உன்ரை வாழ்வைப் பழுதாக்கிக் கொள்ளாதை அக்கா."

தங்கையை மைதிலி வியப்புடனும் நம்பிக்கையுடனும் பார்த்தாள்.

அந்த நேரம் படலையைத் திறந்து கொண்டு வேட்டைக்கார சின்னப்பு வந்தான். அவன் கரத்தில் பனையோலை குடலை ஒன்று காணப்பட்டது. அது புடைத்திருந்தது.

"தங்கச்சி..பன்றியிறைச்சி கொண்டு வந்திருக்கிறன். அரைப்பங்கு தான்.."

"எங்களுக்கு வேண்டாம் அண்ணை. காசில்லை இப்ப தாறதுக்கு"

"ஆர் காசு கேட்டது? முருகேசண்ணை போனதும் எல்லாம் போச்சுதே பிள்ளை? ஒருத்தர்ற மரணத்தோடு வாழ்க்கை முடியுறவில்லை. நாங்க துணிச்சலோடு வாழ்க்கையை வாழ்ந்து முடிக்க வேணும். காசு பேந்து தரலாம்.. சின்னத்தங்கச்சி இந்தா உள்ள வாங்கிப்போ.." என்று பனையோலைக் குடலை மலரிடம் நீட்டினான். மலர் வாங்கிக் கொண்டாள்.

அதன் பின்னரும் சின்னப்பு தயங்கி நின்றான்.

"என்ன அண்ணை? ஏதாவது விசயமே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியொன்றுமில்லை தங்கச்சி. முருகேசண்ணற்றை வயலுக்குப் பக்கத்தில் எனக்கொரு ரெண்டேக்கர் இருக்குது.. இனித்தான் விதைக்கப்போறன். உங்கட வயல் புழுதியில நேரகாலத்தோட விதைச்சதால பால் வைச்சிடுத்து. அதை நான் பார்த்துத் தரவே? எண்டு கேக்கவும் வந்தன்.."

"அதைப்பற்றி அண்ணரிடம் தான் கேக்கவேணும். பொன்னப்பர் அம்மானிடமும் கேக்கவேணும். நான் இதில முடிவு செய்ய முடியாது அண்ணை. வெள்ளாங்குளத்தைவிட்டு எப்ப ஓடப்போறம் எண்டு தெரியவில்லை. இனி விதைக்கப்போறம் என்கிறியள்? கனபேர் விதைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கினமாம். முதல் பொம்பர் அடியோட இரண்டு குடும்பங்கள் வீடு வாசலை விட்டிட்டுத் துணுக்காயுக்கு ஓடிவிட்டுதாம். தெரியுமே?"

"நானும் கேள்விப்பட்டன் தங்கச்சி.. அதுக்காக விதைக்காமல் விடமுடியாது.. விதைக்கா விட்டால் அடுத்த வரியம் பட்டினி கிடக்க வேண்டியது தான். இப்பவே சாதுவாப் பசி பட்டினி தலை தூக்கத் தொடங்கிவிட்டது. நெல்விதைப்பை எதிர்பார்த்திருக்கும் கூலியாக்கள் வீட்டிலே அடுப்பெரிந்து சில நாளாகுது ..வெள்ளாங்குளத்தில விதைப்புத் தொழில் நடக்காவிடில் பஞ்சத்தில பலர் செத்துப்போவினம். பங்காளர்களும் விதை நெல்லைச்சாப்பிடத் தொடங்கிவிடுவினம். மழைபெய்தும் குளத்தில் தண்ணி வந்தும் வயல்கள் வெறும் கட்டாந்தரையாகக் கிடக்கப்போகுது.. நான் விதைக்கத் தான் போறன். பக்கத்தில முருகேசற்றை விதைப்பைக் காப்பாற்றித் தரலாம் எண்டு தான் கேட்டன். அதில ஏதாவது கிடைக்குந் தானே?"

காளி அம்மன் பொங்கல் திருவிழாவில் பொம்பர் விமானங்கள் குண்டுகளை வீசிப் பலரைப் பலியெடுத்தும் காயப்படுத்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதால் வெள்ளாங்குள மக்கள் பயந்துவிட்டார்கள். இரவிரவாகக் காட்டுப்பாதையால் துணுக்காயுக்கு அகதிகளாக ஓடிவிடப்பார்த்தார்கள். பொன்னப்பரும் அம்பலவாணரும் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

"எங்கை போனாலும் பொம்பர் அடிக்காமல் விடமாட்டான்கள். அதுக்காக வீடுகளை விட்டிட்டு ஓடக்கூடாது. ஓடிப்போகிற இடங்களில இருக்க இடமில்லாமல் பிள்ளை குட்டியளோட தவிக்கக் கூடாது. போகிற இடங்களில் சாப்பாடு இல்லாமல் மருந்தில்லாமல் தவிக்கக்கூடாது..இது முதல் தடவை தானே? பொறுத்திருங்கோ..பார்ப்பம்.. மீண்டும் தொடர்ந்தால் எல்லாரும் போவம்.." என்றார் பொன்னப்பர். அவர் கூறியவை சரியாகப்பட்டதால் ஓட வெளிக்கிட்ட பல குடும்பங்கள் தங்கிவிட்டன. பொம்பர் குண்டு வீச்சில் சிலரைப் பறிகொடுத்த குடும்பங்கள் ஓரிரு நாட்களில் பயத்தில் ஓடிவிட்டன.

பொம்பர் வீச்சால் வெள்ளாங்குளத்தில் புதியதொரு பிரச்சினை எழுந்தது. மழைபெய்து குளத்தில் நீர் வந்ததும், வயல்களில் வெள்ளம்தேங்கி மண் புளித்தும், சேற்று விதைப்புச் செய்யக் காத்திருந்தவர்கள் வயல்களில் இறங்காது தயங்கியிருந்தனர். உழுவதற்குத் தயாராக இருந்த எருதுகள் பட்டிகளில் இளைப்பாறின. கலப்பைகள் இறப்புகளில் தொங்கின. டிறக்டர்கள் வளவுகளில் வேலையின்றித் தூங்கின. தம் வயல்களில் பங்காளர் உழுது விதைத்துப் பொது வேலி போடாததால் புழுதி விதைப்புச் செய்து பால் கக்கி வளர்ந்திருக்கின்ற தம் பயிர்களைக் ஊராரின் கால்நடைகள் மேய்ந்துவிடலாமென்ற பயம் பொன்னப்பருக்கு ஏற்படலாயிற்று. வயல்களைச் சுற்றி வேலிபோடப் பங்கு பிரித்து வழங்கி பொது வேலியை இடுமாறு விதைக்காமல் இருக்கிற பங்காளரைக் கேட்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்ச்செய்கைக் கூட்டத்தில் எடுத்த முடிவுகளைக் கைக்கொள்ளுமாறு பங்காளரை வற்புறுத்த பொன்னப்பர் தயங்கினார். ஊரைவிட்டு ஓடத் தயாராக இருக்கின்ற நிலையில் அவர்களை எப்படிக் கேட்பது?

வேட்டைக்கார சின்னப்பு திரும்பிப்போகும்போது இன்னொரு சங்கதியையும் சொன்னான்.

"சுற்றிவர வயல்கள் விதைக்காமல் இருப்பதனால் காட்டுப்பன்றிகள் புழுதி விதைப்புச் செய்து வளர்ந்திருக்கின்ற உங்கட வயல்பாத்திகள் பக்கம் வரத்தொடங்கிவிட்டன. எல்லைப்புற வயல்களை எப்பவும் நாசம் செய்யிறவை அவை வெறுமனே கிடப்பதால் மத்தியிலுள்ள உங்கட வயல் பாத்திகளுக்கு வரத்தொடங்கிவிட்டன. நான் வேட்டைக்குப் போனபோது கவனிச்சன்.. பன்றிகளின்ர காலடிகள் உங்கட வயல் வரம்புகளில காணப்பட்டன."

அவர்களுக்குப் பேரிடியாக இருந்தது. இனி நடக்க என்ன இருக்கிறது?. நடக்கிறது நடக்கட்டும் என மைதிலி தன்னைத் திடப்படுத்திக் கொண்டாள்.

**அ**ன்று மாலை கவிகின்ற வேளையில் மணிசேகரன், முன்னர் போல மாணிக்கராசாவைத் தவிர்த்துவிட்டு வேறு றைவரோடு ஜீப்பில் மைதிலியைக் காண வந்திருந்தான். முருகேசரின் அந்திரேட்டியில் கலந்து கொண்டபின்னர் இன்றுதான் வந்திருக்கிறான். மணிசேகரன் வருவதைக்கண்டதும் மலர் எழுந்து, "இன்றாவது கேட்டுவிடு அக்கா" என்றபடி உள்ளே சென்றுவிட மைதிலி எழுந்து நின்றாள். அவன் சிரித்தபடி வந்து வாங்கில் அமர்ந்தான்.

"வாங்கோ. இன்று தான் எங்கட நினைவு வந்ததாக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மைதிலி. அடிக்கடி வர விருப்பம் தான். முடியவில்லை. பார்க்கிறவை என்ன நினைப்பினம்? மாணிக்கராசாவை அவொயிட் பண்ணிவிட்டு வாறது வேறை சிரமம். உம்மிடம் ஒன்று கேட்கத்தான் இண்டைக்கு வந்தன்."

அவனை அவள் ஏறிட்டுப்பார்த்தாள். அவர்களின் விழிகள் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன.

"என்ன கேக்கப்போறியள்?"

அவன் மௌனமாகச் சில பொழுது இருந்தான். பின்னர் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"றோட்டில மகேந்திரன் என்பவரைச் சந்தித்தன், மைதிலி. நான் நின்றபோது வலிய வந்து சம்பந்தம் இல்லாமல் பேசினான். 'நீங்க இனி எங்கை போகப்போறியள் எண்டு தெரியும ஆம்பிளையள் இல்லாத வீடு.. நீங்கள் சும்மா காரணமில்லாமல் அங்க போறது சரியில்லை.' மாணிக்கராசா மச்சானும் வரவில்லை. என்றான். 'என்ன சொல்லுறியள்?'என்றன் 'மைதிலியை நான் கட்டப்போறன் அவ என்ரை சொந்த மச்சாள். கெதியில எங்களுக்குக் கலியாணம் நடக்க இருக்குது. அம்மானின் ஆட்டுத்துவசம் முடிஞ்ச கையோட நடக்க இருக்குது'. என்றான். 'என்னட்டை ஏன் சொல்லுறியள்' என்றுவிட்டு நான் வந்திட்டன். மைதிலி எனக்கு ஒழிச்சு மறைச்சுக் கதைக்கத் தெரியாது .அவன் சொன்னவை மெய்யா?"

மைதிலி சற்று உறைந்து போனாள். மகேந்திரனுக்கு அப்படியொரு எண்ணமிருப்பது அவளுக்குத் தெரியாததன்று. பல தடவை தன் விருப்பத்தைச் சொல்லியுமிருக்கிறான். ஆனால் அவள் மனதில் அவன் இடம் பிடிக்கவில்லை. அவள் மணிசேகரைச் சந்தித்த பின்னர் அவள் இதயபீடத்தில் அவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் கொண்டுவிட்டான். வேறொருத்தனை அவ்விடத்தில் பிரதிஷ்டை செய்ய முடியாது.

"அவர் எனக்கு மச்சான் தான். அதுக்காக நான் அவரைத் தான் கட்டப்போறன் என்பதில் உண்மையில்லை. அவர் விரும்பியிருக்கலாம்.. ஆனா அப்படியொரு எண்ணம் எனக்கு எப்பவும் இருந்ததில்லை. உங்களைக் கண்டதிலிருந்து அப்படியெண்ணவும் முடியவில்லை. உங்களை மனதில் நிறைத்துக் கொண்ட என்னால் எப்படி இன்னொருவரை நினைக்க முடியும்? எனக்குக் கலியாண வாழ்க்கையென்று ஒன்றுண்டென்றால் அது உங்களோட தான்.. நிச்சயம் அது தான்"

மலர் அடுக்களைக்குள்ளிருந்து தேநீருடன் வெளியே வந்து கிளாசை அவனிடம் நீட்டினாள். எதையோ சொல்ல விரும்புபவள் போலத் தயங்கி நின்றாள்.

"அக்கா உங்களைத் தான் நம்பி இருக்கிறா? எப்பவும் நினைச்சுக் கொண்டிருக்கிறா.. ஏமாத்திப் போடாதையுங்கோ. நீங்க ரவுன் ஆக்கள்.. நாங்க யாருமற்ற சூதுவாதற்ற கிராமத்துப் பெண்கள்."

"அப்படிச் செய்ய மாட்டன்.. இந்தக்கிழமை யாழ்ப்பாணம் போக இருக்கிறன். அம்மாவிடம் சொல்லி நல்ல முடிவுடன் தான் திரும்பி வருவன். என்ர அம்மா என்ரை விருப்பத்துக்கு மாறா எதுவும் சொல்ல மாட்டா.. ஒத்துக் கொள்வா"

மலர் மகிழ்ச்சியுடன் உள்ளே சென்றாள். அதற்குப்பின்னர் மைதிலியும் மணிசேகரனும் பலவற்றைப் பேசிக்கொண்டனர். தாயின் சம்மதத்துடன் திரும்பி வந்து அவளைக் கலியாணம் செய்து கொள்வதாக அவன் உறுதி அளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 10

**வ**ண்ணார்பண்ணை கிழக்கில் காங்கேசன்துறை வீதியில் அருள் நிறைந்த நாச்சிமார்கோயிலின் நேர் முகப்பில் செல்கின்ற பல்கலைக்கழகவீதியில் மணிசேகரனின் வீடு இருக்கின்றது. மைதிலியிடம் கூறிவிடைபெற்று ஒரு வாரத்தின் பின்னர் அவன் வீட்டிற்கு லீவில் வந்தான். அவனைத்தாய் தகப்பனும் தங்கைகளும் வரவேற்றனர். அவர்கள் வரவேற்ற முறை சற்று வேறுபட்டதாகவும் ஏதோ புதிதாக அவ்வீட்டடியில் நடந்துவிட்டதாகவும் மணிசேககரன் உணர்ந்தான். அவர்களிடையே என்றும் காணாத மகிழ்ச்சி நிலவுவதாக அவனுக்குப்பட்டது.

குளித்துவிட்டு கோயிலுக்குப் போய் வணங்கிவிட்டு அவன் திரும்பிவரும்போது இருண்டுவிட்டது. இரவுச் சாப்பாட்டுக்காகச் சாப்பாட்டு மேசையில் அமர்ந்த வேளையில் அம்மா சரஸ்வதி பேச்சை ஆரம்பித்தாள். அப்பா அவதானித்துக் கொண்டு கதிரையில் அமர்ந்திருந்தார்.

“மூத்த தங்கச்சி சுசிலாவுக்குக் கலியாணம் முற்றாகி விட்டது தம்பி. பொடியன் பெரியபுலத்தில் வாத்தி.. பட்டதாரிப்பொடியன் நீ வந்ததும் நாள் வைக்க இருக்கிறம். இரண்டாவது தங்கச்சி லீலாவுக்கும் ஒரு இடத்தில சம்பந்தம் பேசி வைச்சிருக்கிறம் பெரும்பாலும் சரி வந்திடும்”

“சந்தோசமாக இருக்குது அம்மா..சீதனத்துகக் என்ன செய்தியள்?” என்று அவன் கேட்டான். வார்த்தைகளில் மகிழ்ச்சி தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன தெரியாதது மாதிரிக் கேக்கிறாய், தம்பி? உன்ர மாமாதான் சீதனம் தாறார். இருபது லட்சம் டொனேசனாகத் தாறார்.. உனக்கு! அவரின்ர ஒரே பெட்டை மாதவியை உனக்கு நிச்சயமாக்கியிருக்கிறம். ஆர் டொனேசனாக இவ்வளவு தருவினம்?. அதைத்தான் பத்துப்பத்தாகத் தங்கச்சிமாருக்குக் கொடுக்கிறம்.." அம்மா சர்வ சாதாரணமாகக் கூறினாள். அவை பேரிடியாக அவனில் வெள்ளாங்குளத்தில் கொட்டிய பொம்பர் குண்டுகளாகச் சரிந்தன. அவன் கதிரையைவிட்டு திடீரென எழுந்தான். அம்மா திகைத்துவிடாள். தங்கைமார் அவனை வியப்புடனும் பயத்துடனும் பார்த்தனர். கதிரையில் அமர்ந்திருந்த அப்பா பதற்றத்துடன் "என்ன தம்பி?"என்றார்.

"ஆரைக்கேட்டு முற்றாக்கினீர்கள்?" என்று அவன் கத்தினான்.

"ஆரைக் கேக்க வேணும்? நாங்கள் பெத்தவர்கள்.. பிள்ளையளுக்குக் கலியாணங்களை முற்றாக்கியிருக்கிறம்"

"நான் ஒருக்காலும் உதுக்கு ஒத்துக் கொள்ள மாட்டன். என்னை ஒருக்காக் கேட்டிருக்க வேணும்?"

"எல்லாம் முற்றாப்போன பிறகு நீ இப்புடிச் சொல்லுறாய் தம்பி. இனி ஒண்டும் செய்ய இயலாது அப்பன்."

"என்னால இதுகளுக்கு ஒத்துக்கொள்ள முடியாது. நான் என்ர தங்கச்சிமாருக்கு ஏற்றவிடத்தில கட்டி வைப்பன்.. அவசரப்படாதையுங்கோ"

"ஒருக்கா தங்கச்சிமாரைச் சிந்தித்துப்பார்.. உன்னால இவ்வளவு சீதனம் உழைச்சுக் கொடுக்க முடியுமே?, யோசித்துப்பார். நீ எடுக்கிற சம்பளத்தில உது நடக்கக் கூடியதே? நீ சீவியம் முழுவதும் உழைச்சாலும் சரி வராது." என்றாள் அம்மா கவலையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு உன்ர எண்ணம் நோக்கம் விளங்குது.. அங்கினேக்க ஆரையாவது பாத்து வைச்சிருக்கிறாயாக்கும்? உந்தக் காதல் கத்தரிக்காய் எல்லாம் சகோதரங்களோட பிறந்தவைக்குச் சரிவராது தம்பி. சொல்லிப் போட்டன். அப்படி ஒண்டும் எண்ணியிராதை.. உன்ரை எண்ணப்படி செய்யலாமென? நானும் பேயன் விசரனல்லடா.. சாதுவா உன்ரை போக்கைக் கேள்விப்பட்டிருக்கிறன்.. எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியும். ஒரு கிழமையில் உன்னை மட்டக்களப்புக்கு இடம் மாத்திவிட்டிடுவன்.. என்ரை அரசியல் செல்வாக்கு உனக்குத் தெரியும்.. உந்த வேலையும் நான் எடுத்துத் தந்தது தான்.. மறந்திடாதை.." என்று அப்பா கத்தினார். "ராவைக்கு நல்லா யோசித்து முடிவைச்சொல்லு. பேசாமல் போறதுக்கிடையில் கலியாண எழுத்தை முடிச்சிட்டுப் போ.. உன்ர முடிவில தான் தங்கச்சிமார் ரெண்டு பேரின்ர வாழ்க்கை தங்கியிருக்குது..உன்ர எண்ணப்படி தான் நடப்பன் எண்டால் தங்கச்சிமாரைக் கிணற்றில தள்ளிப்போட்டு நீ போ..முடிவாச்சொல்லிப்போட்டன்."

அப்பா கதிரையைவிட்டு எழுந்து சென்றார்.

"இந்த முடிவுகளுக்கு மறுத்தியெண்டால் என்னை நீ உசிரோட பார்க்க முடியாது.. தங்கச்சிமாருக்கும் நஞ்சுகொடுத்திட்டு நானும் நஞ்சு குடிச்சுச்சாவன்.."என்றாள் அம்மா. சொன்னதைச் செய்துவிடக் கூடியவள் அம்மா. அவளின் பிடிவாதம் எல்லாருக்கும் தெரிந்தது.

ஒருவார லீவை மூன்று நாட்களாகக் குறுக்கிக் கொண்டு அவன் மன்னாருக்குத் திரும்பினான்.

"எதுக்கும் வேலைக்குப் போட்டு வாறன். அதுக்குப் பின்னர் சொல்லுறன். இப்ப கஷ்டப்படுத்தாதையுங்கோ.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 11

**வெ**ள்ளாங்குளம் கிராமம் இரண்டு மூன்று நாட்களாக அமைதியை இழந்து விட்டது. அடிக்கடி தலைக்கு மேலாக எங்கிருந்தோ ஷெல்கள் பறந்து சென்றன. இரண்டு இடங்களில் விழுந்து வெடித்துச்சிதறின. எதிர்பாராத வேளைகளில் பொம்பர்கள் இரைந்தபடி வானில் தோன்றின. குண்டுகளை வீசுமாப்போல குத்தி எழுந்தன. மன்னாரிலுள்ள போராளிகள் கூடும் இடத்தைத் தாக்கித் துல்லியமாக அழித்துவிட்டதாக வேறு வானொலி அறிவித்தது.

முருகேசரின் விதைத்த வயலில் பன்றிகள் இறங்கி ஒரு பாத்தியைத் துவம்சம் செய்தழித்துவிட்ட செய்தியொடு வேட்டைக்கார சின்னப்பு வந்தான். இனி எதுவும் எஞ்சப் போவதில்லை எனவும் அறிவித்தான். அடம்பன்குளத்தில் நில அளவீடு செய்வதற்கு முகாமிட்ட சேர்வயர்கள் கிராமத்தின் நிலைமை சரியில்லையெனத் திரும்பிச் சென்றதாகவும் பேசிக் கொண்டார்கள்.

அன்று மத்தியானத்துக்குப் பின்னர் வெள்ளாங்குளத்தில் கிபீர் பொம்பர்கள் வட்டமிட்டன. ஓரிரு குண்டுகளையும் வீசிச்சென்றன. அவை திரும்பவும் வரலாமென்ற பயம் கிராமத்தில் பரவியது. கிராமத்தில் பதட்டம் நிலவியது. கைகளில் அகப்பட்ட பொருட்களோடு மக்கள் அக்கிராமத்தைவிட்டு முதலாவது தரமாக இடம் பெயரத் தொடங்கினர். இருள்வதற்கிடையில் கிராமத்தைக் காலி செய்துவிடும் அவசரம் காணப்பட்டது. வன்னிப் பிரதேசக்கிராமங்களில் வாழ்ந்த மக்கள், இலங்கை இராணுவம் தம் இடங்களை வடக்கு நோக்கி நகர்கின்ற செய்தியைக் கேட்டுத் தாம் வாழ்ந்த வீடுவாசல் சொத்துக்கள் என்பனவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு கால்கள் போன போக்கில் ஓடத்தயாரானார்கள்.. மன்னார், மடு, ஓமந்தை, நாயாறு பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவத்தின் படை நகர்வு இடம் பெற்றது. இராணுவம் வருவதற்கு முதல் எறிகணைகள் மக்கள் வாழிடங்களை நோக்கிச் சரமாரியாகப் பாய்ந்து முன்னராக வந்து விழத்தொடங்கின. பல்குழல் எறிகணைகள் இடைவிடாது பாயத்தொடங்கியபோது, இடப்பெயர்வைத் தவிர வேறு வழியில்லை என்பதை மக்கள் புரிந்து கொண்டனர்.

நள்ளிரவு கடந்து கொண்டிருந்த வேளையில் பூமியை மூடியிருந்த கரும் இருளைக் கிழித்துக் கொண்டு ஷெல் ஒன்று மைதிலியின் அடி வளவுக்குள் விழுந்து சிதறியது. சுமதியும் மலரும் 'ஓ' வென்று கூச்சலிட்டனர். இரண்டாவது ஷெல் ஐந்தாறு வீடு தாண்டி விழுந்தது. இருளின் அமைதியைக் கிழித்தவாறு கூக்குரல் எழுந்ததிலிருந்து அது சிலரைப் பலி எடுத்துவிட்டதை உணர்த்தியது. அது வேட்டைக்கார சின்னப்புவின் வீடாக இருக்க வேண்டுமென மைதிலி ஊகித்தாள்.

இனிமேல் அங்கிருப்பது உயிருக்குப் பாதுகாப்பானதன்று. வீட்டுக்கு முன்னால் செல்கின்ற ஒழுங்கையால் மக்கள் பதற்றமாக விரைவது தெரிந்தது. குழந்தை குட்டிகள் அவலக் குரல் எழுப்பியவாறு நகர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் சிலர் தூக்கிச் செல்கின்ற அரிக்கன் லாம்புகளிலிருந்து எழும் மெல்லிதான வெளிச்சத்திலிருந்து அந்த முகந்தெரியாத இருளில் நிழல்கள் நகர்வதாகத் தெரிந்தது. அணிந்திருந்த உடுப்போடு அவர்கள் அவலமாக இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர்.

"அக்கா. இனி நாங்க இங்கிருக்கக் கூடாது. ஒண்டும் கையில எடுக்க முடியாது. அப்படியே கிளம்புங்கோ. போற சனத்தோடு போவம்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மாமா ஆக்களைப் பாப்பம்.”

“அவயள் வருவினம். நாங்க வெளிக்கிடுவம்”

மன்னார் பக்கமிருந்து மல்ரி பரல் பொழியத் தொடங்கியது. அவசரமவசரமாக தலைவாசல் வளையில் தொங்கிய அரிக்கன் லாந்தரைத் தூக்கிக் கொண்டு மைதிலி எழுந்தாள். சுமதியும், மலரும், மாலதியும் பதட்டத்துடன் தொடர்ந்தனர். ஒழுங்கையில் விரைந்த சனக்கும்பலுடன் கரைந்தனர்.

வெள்ளாங்குளக்கட்டில் ஏறி இறங்கி கிழக்காக அடம்பன் குளத்தினூடாகச் செல்கின்ற மண்பாதையில் வெள்ளாங்குள மக்கள் நகர்ந்து ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய இலக்கு பன்னிரண்டு கிலோ மீற்றர்களுக்கு அப்பாலிருக்கும் துணுக்காயை அடைவதாக இருந்தது.

மைதிலியும் தங்கைகளும் ஏக்கத்தோடு எதுவும் பேசாது நடந்தனர்.. மைதிலியின் இதயப் பெருங்கடலில் மணிசேகரனின் நினைவுகள் கொந்தளித்தன. தேடி வருவாரா?, தம்மைக் காணாது தவிப்பாரா,? சொல்லாமல் கொள்ளாமல் இடம் பெயர்ந்து விட்டமைக்குக் கோபிப்பாரா?

இரண்டு மூன்று நாட்களில் திரும்பிவிடலாமென அவள் நம்பினாள்.

காட்டுப்பாதையில் சனக்கூட்டத்தின் ஒலிகேட்டு ஆட்காட்டிகள் சத்தமிட்டன. பற்றைகளுள் பதுங்கிக்கிடந்த நரிப்பிள்ளைகள் இரண்டு மண்பாதைக்குக் குறுக்கே தப்புவதற்காகத் தலைதெறிக்க ஓடின.

அந்தக்காட்டுப்பாதை மரங்களின் குளிர் நிழலில் குளித்துக் கொண்டிருந்தது. அடர் காடு செழிப்பதாக வளர்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிடையே காடழித்து சேனைப்பயிர்களை விதைத்திருப்பது தெரிந்தது.. அடர்காட்டைக் குடைந்து அமைத்த பாதைபோல இந்த மண்பாதை மலைப்பாம்பாக நீண்டு கிடந்தது. அவர்கள் நடந்து வந்த காட்டுப்பாதை குண்டும் குழியுமாகக்கிடந்தது. பாதங்களை நிதானமாகப் டதிக்க முடியாமையால் நடப்பது கடினமாகவிருந்தது. அரிக்கன் லாந்தரின் வெளிச்சம் போதுமானதாகவில்லை. மக்கள் புலம்பிக் கொண்டு நகர்ந்தனர். இளம் பிள்ளைகள் அழுதபடி தொடர்ந்தன. எறிகணைகள் வெடிக்கும் சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

அடம்பன் முறிகுளத்தினுள்ளும் ஓரிரு எறிகணைகள் விழுந்து வெடித்துன அப்பற்றைக் காட்டின் அமைதியைக் குலைத்தது. ஒரு தனியன் அலியன் ஒன்று இரண்டு வாரமாக அக்காட்டில் பிளிறியவாறு அலைவதாக வேறு வதந்தி பரவியிருந்தது. அது வதந்தியல்ல உண்மைதான் என்பதை நள்ளிரவில் வெள்ளாங்குளம் காட்டுப்பாதைளில் நகர்ந்து கொண்டிருந்த மக்கள் காணநேர்ந்தது. நகர்ந்துகொண்டிருந்த மக்கள் தொடரின் முன்னணியில் குழப்பம் ஏற்பட்டு நகராது நின்றதையும், அதனைத் தொடர்நு மண்பாதையின் குறுக்கே நின்ற தனியன் யானை ஒன்று மூசியவாறு தங்களை நோக்கி நகர்ந்த அசைவையும் மைதிலியுட்படப் பலரும் கண்டனர். கிழக்கு நோக்கி அசைந்த மக்கள் மூன்று பக்கங்களாகச் சிதறியோடத் தொடங்கினர்

"அக்கா. ஆனை" என்று கத்தியவாறு சுமதி வடக்குத் திசையாக காட்டுக்குள் புகுந்த மக்களின் பின்னால் ஓடினாள். மைதிலியும் மலரும் வந்த பாதைவழியே திரும்பி ஓடினர். ஒரு கூட்டம் மக்கள் பிள்ளைகளை இழுத்துக் கொண்டு தெற்குத்திசையில் கத்தியவாநு ஓடினர். மக்களின் கூக்குரலால் வெருண்ட யானை மூசியவாறு சிறிது தூரம் முன் நகர்ந்துவிட்டு பாதையைவிட்டு விலக்கி வடக்காகக் காட்டிற்குள் புகுந்து மறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யானை போட்டுது நில்லுங்கோ..நில்லுங்கோ.." யாரோ சத்தமிட்டார்கள்.

"சுமதி..சுமதி.." என்று மைதிலியும் மலரும் அழைத்தார்கள். அதற்குள் சனக் கும்பல் கிழக்கு நோக்கி நகரத் தொடங்கிவிட்டது. வடக்குப் புறமாகச் சிதறிய சனம் திரும்பிவரவில்லை.

"அக்கா..நிண்டு பாப்பம்..சுமதி?"

"நடவுங்கோ தங்கச்சிமார். போறவையோட போக வேணும்.. உங்கட தங்கச்சி எங்கை போறது..? அவயள் காட்டுககுள்ளால துணுக்காயுக்கு வருவினம்.. நடவுங்கோ"

ஏக்கத்தோடு அவர்கள் நடந்தார்கள். கால்கள் கெஞ்சின. சுமதி தம்மை விட்டு வழி மாறியது பெரும் சுமையாகக்கிடந்தது.

"அக்கா..சுமதி வருவாளா? அவளுக்குப் பாதை தெரியுமா?" பல தடவைகள் மலர் கேட்டுவிட்டாள்.

அவர்கள் நடந்து வந்த பாதையில் கிராமத்தின் பாடசாலைக் கட்டிடம் குறுக்கிட்டது. ஏற்கனவே அந்த ஒற்றைக் கட்டிடத்துள் மங்கலாக வெளிச்சமும் பலர் அடைக்கலம் புகுந்திருப்பதும் தெரிந்தது. ஒருவரும் சொல்லாமலேயே அந்தக் கனக் கும்பல் அக்கட்டிடத்துக்குள் நுழைந்தது.

"ராவைக்கு இங்கை இருந்திட்டு விடிஞ்சதும் துணுக்காய்க்குப் போவம். பத்து கிலோ மீற்றர் வரை வந்திட்டம்."

அக்கூட்டத்தில் எவரோ எடுத்த முடிவு எல்லாருக்கும் சரியாக இருந்தது. மைதிலியும் மலரும் கட்டிடத்தின் ஒரு பக்கத்தில் ஒதுங்கிக் கொண்டார்கள். சுமதி வந்துவிடுவாள் என இரவிரவாக அவர்கள் விழித்திருந்தார்கள். சுமதி வரவில்லை. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளாங்குளத்திலிருந்து இன்னொரு பகுதி மக்கள் இடம் பெயாந்து வந்திருந்தார்கள்.

"சின்னப்புவின் வீட்டுக்கு மேல ஷெல் விழுந்திட்டுது. திண்ணை விறாந்தையில் படுத்திருந்த சின்னப்புவும் மகனும் பலியாகிப் போயினம். கிராமமே வெறிச்சோடிப் போச்சுது. சின்னப்புவின்ர சவக்கிரிகை செய்யிறது எப்படி? விடிஞ்சதும் வளவுக்க வைச்சு சடலங்களைக் கொளுத்திப் போட்டு வரவிருக்கினம் தாயும் மோளும்.. நீங்கள் இங்க வந்திட்டியள் பிள்ளையள். அங்கை கொம்மான் பொன்னப்பர் உங்களைத் தேடிப்பாத்தார். பின்னர் றக்ரரில முழங்காவில் பக்கமாகப் போயிட்டினம். அது அவ்வளவு பாதுகாப்பில்லை.. அது சரி உன்ர மற்றத் தங்கச்சி எங்கை?"

மைதிலி நடந்ததைச் சொன்னாள்.

அதிகாலைப் பொழுதில் மலர் சற்றுக் கண்ணயர்ந்தாள். அப்பாடசாலை அந்த அதிகாலைப் பொழுதில் அல்லோலகல்லோலப்பட்டது. குழந்தைகள் பாலுக்கும் சாப்பாட்டுக்கும் அழத்தொடங்கின. காலைக்கடன்களைச் செய்ய முடியாமல் பலரும் தவித்தார்கள். ஆற்ற முடியாத ஆண்கள் சிலர் காட்டுக்குள் குந்தி எழும்பினர். பள்ளிக்கூட ஒற்றை மலசலகூடமும் தனிக்கிணறும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானவையாகவில்லை. அவற்றின் முன் நீண்ட வரிசை காணப்பட்டது. நெருப்பு மூட்டி தேநீராவது வைக்க எவரிடமும் பாத்திரங்களும் அதற்கான பொருட்களுமில்லை. திடீரென நிகழ்ந்துவிட்ட இடப்பெயர்வு.

காட்டுக்கிராமம். கடைகள் எதுவுமில்லை. அயலில் காணப்பட்ட இரண்டுமூன்று வீட்டுக்காரர்களும் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறத் தயாராக இருந்தார்கள். அதிகாலையே அங்கிருந்தோர் துணுக்காய் நோக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டுவிட்டார்கள். அங்கிருந்து நான்கு கிலோமீற்றர்கள் நடந்தால் துணுக்காய் வரும். ஏதாவது அருந்துவதாகவிருந்தால் அங்குதான் செல்ல வேண்டும். உடுத்த உடுப்புக்கு மாற்றுடுப்பில்லாமல் முகம் கழுவி தலை சீவாமல் பரதேசிகளாக மைதிலியும் மலரும் காணப்பட்டனர். நள்ளிரவு புறப்படும் போது தூக்கிய அரிக்கன் லாந்தலைத்தவிர அவர்களிடம் கைகளில் எதுவுமில்லை.

துணுக்காயை அவர்கள் அடைந்தபோது பத்துமணி ஆகியிருந்தது. துணுக்காயில் சங்கக் கட்டிடத்துக்கு முன்னுள்ள வெளியில் மரங்களின் கீழ் அப்படியே பொத் பொத்தென அமர்ந்து கொண்டார்கள். இடம் பெயர்ந்து அகதிகள் வருகிறார்கள் என்பதை அறிந்து அப்பிரதேசக் கிராம சேவகரும் சில போராளி இளைஞர்களும் அவ்விடத்தில் சில காரியங்களைச் செய்திருந்தார்கள். கிடாரமொன்றில் சுடுதண்ணீர் மூட்டி தேநீர் போட்டிருந்தார்கள். சுடச்சுட அவர்கள் அளித்த தேநீர் அந்த நேரத்தில் அமிர்தமாகப்பட்டது.

ஒரு மரத்தின் கீழ் தலையைக் குனிந்து அமர்ந்திருந்த மைதிலிக்கும் மலருக்கும் தம்பளர்களில் தேநீரை வழங்கிய ஓர் இளைஞன் வியப்புடன் "அக்கா.."என்றான்.

"அக்கா..நம்ம தம்பி. தனசேகரன்.."என்று அதே நேரம் மலர் சத்தமிட்டாள். மைதிலி நிமிர்ந்து பார்த்தபோது எதிரில் போராளியின் சீருடையில் தனசேகரன் தம்ளர்களைக் கரங்களில் ஏந்தியவாறு நின்றிருந்தான். சில கணங்கள் மைதிலியால் நம்ப முடியவில்லை. அவனை இங்கு சந்திப்பாளென எண்ணியிருக்கவில்லை.

"தம்பி.. ஓடி வருகிற வழியிலை சுமதி வழிமாறிவிட்டாளடா.. ரெண்டு பேரும் தான் வந்திருக்கிறம்..என்ன செய்யப்போறமோ..?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பயப்பட வேண்டாமக்கா..” அவன் அவர்கள் அருகில் உரிமையோடும் ஆதரவோடும் அமர்ந்தான்.

“என்ன சக்தி?” அவர்களுடன் நின்றிருந்த ஓர் இளைஞன் வினவினான்.

“இவை என்ர அக்காமார்” என்ற தனசேகரன் மைதிலியைப் பார்த்து, “அக்கா, அவர் மாறன். மற்றவன் சீலன். நான் இயக்கத்தில என் பெயர் சக்தி...”

அவனைக் கண்டதும் இருவருக்கும் தென்பு வந்தது. இனி எப்படியாவது சுமதியைக் கண்டு பிடித்துவிடலாம்.

“மல்லாவி பள்ளிக்கூடத்தைத் தான் டிஎஸ். அகதி முகாமாக்கி இருக்கிறார் எல்லாரையும் அங்கதான் தங்கவிடப்போறம். அங்கயும் தொடர்ந்து இருக்கலாமோ தெரியவில்லை அக்கா.. நான் சுமதி அக்காவைக் கண்டு பிடிக்கும் வரை மல்லாவி மகளிர் பொறுப்பாளர் வாணி அக்காவின்ர காம்ப்பில கொண்டு போய் விடுகிறன். அங்க பயமில்லாமல் இருக்கலாம்.. அது மல்லாவியில தான் இருக்கு”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 12

**வெ**ள்ளாங்குளத்திலிருந்தவர்கள் துணுக்காய்க்கு இடம்பெயர்ந்து விட்டதான செய்தியை மாணிக்கராசா மூலம் மணிசேகரன் அறிந்து கொண்டான். வெள்ளாங்குளத்திற்கு ஒரு தடவை மாணிக்கராசாவுடன் சென்று வந்தான். வெள்ளாங்குளத்தில் கல்கட்டிடங்களாக விளங்கிய கமத்தொழில் அபிவிருத்தி நிலையமும் கிராமப் பாடசாலையின் பிரதான கட்டிடமும் குண்டு வீச்சில் தகர்ந்திருந்தன. வெள்ளாங்குள மக்கள் இடம் பெயர்ந்தமையை அவை நியாயப்படுத்தின.

அவர்கள் இடம்பெயர்ந்த துணுக்காய்க்குச் சென்று ஒரு தடவை அவர்களைப் பார்த்து வரவிரும்பியும் மனதை அடக்கிக் கொண்டான். மாணிக்கராசா ஒரு தடவை லீவு எடுத்துக் கொண்டு துணுக்காயுக்குச் சென்று வந்தான்.

“வெள்ளாங்குள மக்களில பெரும்பாலானோர் துணுக்காயில தான் தங்கியிருக்கினம். அங்க ஏஜிஏ அகதிகளிருக்க மல்லாவிப் பள்ளிக் கூடத்தில முகாம் ஒண்டு போட்டிருக்கிறார். அங்க தங்கச்சிமார் இல்லை. தம்பி தனசேகரன் மைதிலியையும் மலரையும் கண்டு தன்னோடை கூட்டிக் கொண்டு போட்டானாம். விசாரித்துப் பார்த்தன் எங்கை எண்டு தெரியவில்லை. தம்பி அழைச்சுப் போனதால ஆறுதலாக இருக்குது. இடையில் சுமதி பாதை தவறி மல்லாவிப் பக்கமாகப் போனவையோட போனாளாம். தேடிப்போனன். அவளைக்கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் முழங்காவில் பிள்ளையார் கோவிலடியில் மச்சான் மகேந்திரனைக் கண்டன். பொன்னப்பா அம்மானும் பவானியும் அவருக்குத் தெரிந்த சிநேகிதர் வீட்டில தங்கியிருக்கினம். அம்மானுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு பழக்கமானர் வீடு. சுமதியைப் பற்றிச் சொல்லி இருக்கிறன்... தங்கச்சிமாரைக் கூட்டிக்கொண்டு வந்து தங்களுடன் விட்டுவிடும்படி அம்மான் கத்துகிறார். அவர்களை எங்கையெண்டு தேடுகிறது?"

"சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லையே?".

"எல்லாருக்கும் கஷ்டம் தான்.. வருத்தம் வந்தால் துணுக்காய் வைத்தியசாலையில் மருந்துகளில்லை. மல்லாவிக்கு அல்லது மாங்குளத்துக்குத் தான் போகவேணும். முகாமில பிள்ளையளுக்கு காய்ச்சல்..வயிற்றோட்டமாம். மழைவேறை. சுகாதார வசதிகளுமில்லை. மாமா ஆக்கள் ஒரு வீட்டில இருக்கிறதால சமாளிக்கினம். ரெண்டு மூண்டு நாளில திரும்பி ஊருக்கு வரலாமெண்டால் வெள்ளாங்குளத்துக்குத் தானே ஷெல் அடிக்கிறான்கள். பாவிகள். போற பாதையோரம் எல்லாம் இடம் பெயர்ந்த சனம்..மர நிழல்களில சீலைகளால மறைப்புச் செய்து போட்டு வாழுதுகள்.. தண்ணி வசதியில்லை. ஆமான .கழிப்பிடம் இல்லை. குழந்தைகளுக்குப் பால் மா இல்லை போற பாதையில் அடக்கம் செய்யப்படாது கிடக்கிற சடலம் ரெண்டைப் பார்த்தன். சூடு பட்டுச் சிதறிக்கிடக்குது. சாப்பாடு ஒழுங்காகக் கிடைப்பதாகத் தெரியவில்லை. தொண்டர் நிறுவனம் ஏதாவது கொடுத்தால் சரி. மாற்றுடுப்பில்லை"

இறுதியில் மாணிக்கராசா சொன்னான்: "நான் லீவில போக இருக்கிறன் சேர். தங்கச்சிமாரைத் தேடிப்பிடித்துக் கூட்டிக்கொண்டு முழங்காவில் போகப்போறன் அவர்களையாவது காப்பாத்துவம் என்று அம்மான் நினைக்கிறார். வருகிற நல்ல நாளில் எனக்கும் பவானிக்கும் கலியாணத்தை முடிக்கப்போறார். ஊருக்குத் திரும்பிப்ப போய் வைப்பம் எண்டிருக்கிறம். மைதிலித் தங்கச்சிக்கும் மகேந்திரனுக்கும் அதோடு ஒண்டா கலியாணத்தைச் செய்திடலாமெண்டிருக்கிறம்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச்செய்தி மணிசேகரனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. மைதிலியை ஒருதடவை சந்தித்து பெற்றாரின் மனதை மாற்றி விரைவில் கலியாணம் செய்துகொள்வதாகக் கூறிக்காத்திருக்குமாறு சொல்லக் எண்ணியதிருந்தான் அதற்குள் மாணிக்கராசா சொன்னசெய்தி நிலைகுலைய வைத்தது.

"மைதிலி இதுக்கு ஒப்புக்கொண்டாளா?"

மாணிக்கராசா மணிசேகரனை வியப்புடன் ஏறிட்டான்.

"ஏன் கேக்கிறியள் சேர். எங்களைப்போல ஆக்களுக்கு ஒண்டுக்கை ஒண்டு தானே செய்து வைப்பம்.. சீதனம் பாதனம் கொடுக்க வழியிருக்கா? பெரிய உத்தியோகத்தரையா எதிர்பார்ப்பம்.. கமக்காரன், கடைக்காரனைத் தவிர.. மகேந்திரன் காணி ஊரில பூமி உள்ளவன். ஒரு போகம் வயல் செய்தாலே ஒரு வரியம் கால் நீட்டிக்கொண்டு சாப்பிடலாம். எங்களை மாதிரியே சேர்.. மைதிலி ஒப்புக்கொண்டு விடுவாள் என்றே நினைக்கிறன்... மகேந்திரனுக்கு என வளர்ந்தவள் தானே சேர்." என்றான் மாணிக்கராசா.

**அ**ம்மாவின் கடிதம் வந்திருந்தது. வீட்டில் எதுவும் நடவாததுபோல அம்மா கடிதம் எருதியிருந்தாள். எப்போது யாழ்ப்பாணம் வருவதாகக் கேட்டிருந்தாள். அவனுடைய கலியாண எழுத்துக்கு நாள் வைப்பதற்காக அவள் காத்திருப்பது போலப்பட்டது. மணிசேகரின் மனம் கொந்தளிக்கத் தொடங்கியிருந்தது. மைதிலி என்ற கிராமத்துச் சூதுவாதறியாத பெண்ணை ஏமாற்றிவிடுவதா என்ற எண்ணம் பெரிதாகத் தலைதூக்கியிருந்தது. அவளுடைய அன்றைய மனநிலையைப் புரிந்து கொள்ளும் நிலையிலும் அவனில்லை. மகேந்திரனைக் கலியாணம் செய்து கொள்ள அவள் தயாராகிவிட்டாளா,?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மைதிலியை நான் கலியாணம் செய்து கொள்கிறேன்' என்று கூறுவதற்கு அவனால் முடிந்திருக்கவில்லை.

மைதிலியைத் திருமணம் செய்து கொள்வதால் அவன் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. அவனை நம்பிக் காத்திருக்கின்ற தங்கைமாரின் பிரச்சினைகள் ஒருக்காலும் தீராது. மைதிலியை மறந்துவிட வேண்டியது தான் என்று அவன் முடிவு செய்தபோதுதான் யாழ்ப்பாணத்திலிருந்து அம்மாவின் கடிதம் வந்திருந்தது. பணிமனையில் லீவு எடுத்துக் கொண்டு அவன் யாழ்ப்பாணம் புறப்பட்டான்.

மைதிலியை ஒருதடவை சந்தித்து பெற்றாரின் மனதை மாற்றி விரைவில் கலியாணம் செய்துகொள்வதாகக் கூறிக்காத்திருக்குமாறு சொல்ல எண்ணியிருந்தான் அதற்குள் மாணிக்கராசா சொன்னசெய்தி நிலைகுலைய வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பாகம்

## கூத்தன்

# அத்தியாயம் 1

காட்டுப் பாதையில் நள்ளிரவில் இனியும் அவர்களால் நடக்க முடியாது. கால்கள் வலியெடுத்தன. அலியன் யானைக்குப் பயந்து வழி மாறி ஓடிவந்தவர்களோடு சுமதியும் அள்ளுண்டு வந்துவிட்டாள். அது எவ்வாறு நிகழ்ந்தது எப்படி நிகழ்ந்தது என்பதை அவளால் கிரகிக்க முடியவில்லை. சகோதரிகளைப் பிரிந்து எப்படி ஓட முடிந்தது என்பதையும் எண்ண முடியவில்லை. பயந்து ஓடி வந்த களைப்பு வேறு தண்ணீர்த் தாகத்தை ஏற்படுத்தியது. வழியில் ஓரிடத்திலும் நீர் நிலைகள் குறுக்கிடவில்லை.

அக்கூட்டத்தில் பதினாறு குடும்பங்கள் இருந்தன. இளம் வயதுப்பிள்ளைகளும் கூடவே இருந்தனர். குழந்தைகள் இடையிடையே பசியால் அழுதன. ஒரு பெரிய மரத்தினடியில் தங்கிக் கொண்டார்கள். அவர்கள் அடைக்கலம் புகுந்தவிடம் எதுவெனத் தெரியவில்லை. குடி மனைகள் அருகில் இருப்பது போன்ற அசமாட்டங்களுமில்லை.

“இவ்விடத்தில கொஞ்ச நேரம் தங்கி இளைப்பாறிவிட்டு நடப்பம். நாங்க மேற்குப்பக்கத்தால மன்னார் பூநகரி றோட்டையும் கடந்து வந்திட்டம் போல இருக்குது.. இப்படியே போனால் நாச்சிக்குடாவுக்குத் தான் போவம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப நாங்க திரும்பிப் போவம்.."

தூரத்தில் ஷெல்கள் விழுந்து வெடிக்கும் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

"இனித்திரும்பிப் போக முடியாது.. இப்படியே போவம். நாச்சிக்குடாவில் படகு ஏதாவது அகப்பட்டால் அதில கௌதாரி முனைக்குச் செல்வம் வாருங்கோ.. மெல்லமெல்ல நடப்பம்."

சுமதிக்கு இடி விழுந்தது போல இருந்தது. பதினேழு வயது இளம் பெண். தனித்து விட்டாள். அவர்களோடு நடந்து செல்லாது இந்த இருட்டில் நடுக்காட்டில் தனித்து நிற்கவோ திரும்பிச் செல்லவோ முடியாது. பாதை தெரியாத காடு. அவள் ஊரவர்கள் அவர்களில் உள்ளனர். யார் யார் உள்ளனரென விடிந்ததும் தான் தெரியவரும்.

விடிகின்ற வேளையில் அந்தக் கூட்டம் நாச்சிக்குடாவை அடைந்தது. கடற்கரைக் கிராமம் அது. அந்தக்கிராமமும் வெறிச்சோடிப் போயிருந்தது. ஆனால் அக்கிராமத்தின் மத்தியில் காணப்பட்ட பெரிய ஆலின் கீழ் பலர் சுருண்டு படுத்திருந்தனர். அதன் அருகிலிருந்த பொதுக்கிணற்றில் வாளியால் அள்ளி விடாயை அவர்கள் முதலில் தீர்த்துக் கொண்டனர். நடந்து வந்தவர்கள் பொத் பொத் தென அம்மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டனர்.

சுமதி அப்படியே தரையிலமர்ந்தாள். அவள் அருகில் ஒரு குடும்பம் அமர்ந்து கொண்டது. சற்றுத்தள்ளி ஓர் இளைஞன் மண்ணில் படுத்திருந்தான். அவர்களுக்கு முதலோ அங்கு வந்தவர்கள் வெள்ளாங்குளத்திருந்து வந்தவர்களாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எங்கிருந்து கிழக்கால வாறியள்?” படுத்திருந்த இளைஞன் கேட்டான். சுமதி பேசாதிருக்க அவளருகிலிருந்த குடும்பஸ்தர். வெள்ளாங்குளத்திலிருந்து வாறம். தம்பி”என்றார்.

“வெள்ளாங்குளத்திலிருந்தோ?”

“வழியில குறுக்கிட்ட ஓர் சனியன் யானை திசை திருப்பிப் போட்டுது நீங்கள் எங்கிருந்து வாறியள்?”

“நான் தெற்கே விடத்தல் தீவு, மற்றவங்க வலைப்பாடு பிரதேசங்களிலிருந்து வந்திருக்கிறாங்கள். அது சரி நீங்க எல்லாரும் படகுகளிலே ராமேஸ்வரம் போகப்போறியளே? அந்த நோக்கில கடற்கரைக்கு வந்திருக்கிறியள் போல இருக்குது. ராத்திரி நாலு படகு போயிட்டுது. படகில இடமில்லை. ராவைக்கு வருவாங்கள். கொண்டு போக.. ஆளுக்கு நாலாயிரம் ஐயாயிரம் என்டு வாங்குறாங்கள்.. காசில்லாவிட்டால் நகைகளும் வாங்குறாங்க”

“நல்லதாய்ப் போாயிட்டுது.. இனி இவங்களோட இங்கு வாழ முடியாது. இந்தியாவுக்குப் பிள்ளை குட்டிகளோடு ஓடித்தப்புவம். உசிராவது மிஞ்சும்..” என்று அவனை ஆமோதித்தாள் அக்குடும்பத்திலிருந்து நடுத்தர வயதுப் பெண். சுமதிக்கு இவற்றைக் கேட்கப் பயமாயும் திகைப்பாயும் இருந்தது. இவள் என்ன செய்யப்போகிறாள்? எங்கு போவது? சகோதரிகளோடு எப்படிச் சேர்வது?

விடிந்துகொண்டிருந்தது.

ஒருவரை யொருவர் முகம் பார்க்க முடிந்தது. சுமதிக்குப் பக்கத்தில் வந்திருந்த குடும்பத்தில் பெற்றோரும் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் இருந்தனர். அவர்களை அவள் அடையாளம் கண்டு கொண்டாள். அவள் குடும்பத்துடன் நெருக்கமான கந்தையா குடும்பத்தினர். அவரின் வயலும் சுமதியின் தகப்பனின் பக்கத்துக் காணி. ஒரு ஒழுங்கை தள்ளி அவர்களின் வீடு இருந்தது.

"அட நமது முருகேசரின்ர பொடிச்சி.. கடைசிப் பொடிச்சி. .நீ ஒண்டுக்கும் பயப்படாதை மோனை. அக்காமார் பிரிஞ்சு போச்சினம் என்டு பயப்படாதை. நாங்க துணையிருக்கிறம். நீ எங்களின்ர பிள்ளைமாதிரி இருக்கலாம்."

கந்தையரின் பேச்சுக்குப் பின்னர் சுமதிக்குத் தெம்பு வந்தது.

அன்று அதிகாலை வானத்தில் கிபீர் பொம்பர்கள் இரண்டு வட்டமிட்டு நோட்டம் பார்த்தன. அகதி மக்கள் பயத்துடன் மரங்களுக்கிடியில் தம் இருப்புகளை மறைத்துக் கொண்டார்கள். அப்பிரதேசத்தைவிட்டு விரையில் அகன்றுவிடும் எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. தமிழ்நாட்டுக்கு அன்றிரவு சென்றுவிடப் பலரும் திடமாக முடிவெடுத்தனர்.

அக்கிராமத்தில் ஓடாது எஞ்சியிருக்கின்ற மக்களில் சிலர் கிடாரம் வைத்து மத்தியானம் அளவில் அடுப்பு மூட்டினர்.

"நாங்களும் ஓடப்போறம் . போறதுக்கிடையில் கஞ்சி காய்ச்சித் தந்திட்டுப் போறம். அடுத்த சாப்பாடு எப்ப கிடைக்குமோ தெரியாது"

இடைநேரத்தில் சுமதியும் அந்த இளைஞனும் சகயமாகப் பேசிக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் பெயர்.. மைக்கல்" என்றான் அவன்.

"நீங்கள் என்ன ஒரு கொப்பி வைச்சு ஏதோ கீறிக் கொண்டிருக்கிறீர்கள்.. என்ன ஓர் புத்தகம் வைச்சிருக்கிறியள்?"

மைக்கல் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"எனக்கு சித்திரம் வரையிறதில சின்ன வயசில இருந்து வலு விருப்பம். நாங்க இடம் பெயர்கின்ற அவலங்களை உணர்ந்தவாறு கோட்டு வரையங்களாகக் கீறுகிறன். வேணுமெண்டால் பாருங்கள்"

அவன் கொப்பியை அவளிடம் நீட்டினான். அவள் பக்கங்களை விரித்தாள். காரைசாரையாக அகதிகள் செல்கிறார்கள். பசிக்காக அகப்பட்ட காட்டுப் பழங்களைத் தின்று மயங்கிச்சோரும் பிள்ளைகள். மரத்தடியில் நோய் வாய்ப்பட்டு மருந்தின்றி முடங்கிக் கிடக்கும் வயோதிபர்கள். நடக்க முடியாத தந்தையைக் கரங்களில் ஏந்தி நடக்கும் மகன். குண்டுகள் சிதறிய பிரதேசத்தில் உதிர்ந்து கிடக்கும் மனித சடலங்கள். குவியல் குவியலாகக் கிடக்கும் மனித உடல்கள். மனித இறைச்சியை ருசி பார்க்கும் பட்சிகள்..செத்து விழுந்து கிடக்கும் மாடுகள். மரக்கிளைகளில் தொங்கும் செத்த குரங்குகளின் சடலங்கள்.சேலைகளை மறைப்பாக்கி வாழும் குடும்பம் ஒன்று .. அவளால் அவற்றைத் தொடர்ந்து பார்க்க முடியவில்லை. கொப்பியை மூடி அவனிடம் திருப்பிக் கொடுத்தாள்.

"கொடுமை..கொடுமை"

"இவை அனைத்தும் நேரில் நான் கண்டவை..இது என்ன புத்தகம் என்றா கேட்டியன்? பைபிள்.. எமது வேதம். நான் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்ரர். இறை ஊழியம் செய்பவன். பாதர் மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்கள்."

சுமதி அவனை மதிப்போடு பார்த்தாள்.

"நான் கவிதைகள் எழுதுவேன். நன்றாக இசைப்பாடல் பாடுவேன். சிறுகதைகளும் எழுதிப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. உருவகக் கதைத் தொகுதி ஒன்று வெளிவந்திருக்கின்றது.. எல்லாத்துக்கும் மேலாக" பயப்பட வேண்டாம். நான் போராளியாக இருந்து விலகியவன்"

"ஆ.."என வியப்பைக் காட்டினாள் சுமதி.

"நான் இயக்கத்திலிருந்து விலகிவிட்டேன் என்னை மாற்றியக்கத்தினரும் இலங்கை இராணுவமும் தேடுகின்றன. அவற்றிலிருந்து தப்புவதற்காக ராமேஸ்வரம் ஓடுறன்." என்று சிரித்தான் மைக்கல்.

"நேரமிருக்கு உங்களைப்பற்றிச் சொல்லுங்க...."

"என்னைப்பற்றி என்னத்தைச் சொல்கிறது.. நாங்கள் விடத்தல்தீவில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தோம். நான் குடும்பத்தில் மூத்தவன் என்பின் ஒரு தம்பி. இரண்டு தங்கச்சி மார். ஐயா கடற்றொழில் செய்து வந்தார். ஏழைக்குடும்பம். ராவில படுக்கைக்குப் போகும் போதே 'அம்மா பசிக்குதம்மா' என்று குரல் தருவோம். இரவு சாப்பிட்ட சாப்பாடு போதாது' என்ரை ராசா, போய்ப்படப்பா. அப்பா கடலால வந்திடுவார். சமைச்சு எழுப்பித் தாறன்' என்று அம்மா ஆறுதல் கூறுவது வழக்கம். பசியோடு படுப்பம். சாமம் கடந்த போதில் அப்பா வருவார் நிறை குடி வெறியில் வெறும் கையோடு. யாருடனாவது சண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து விட்டு அவனைத் திட்டியபடி தள்ளாடி வருவார். எனக்கு ஆறு வயதாகியிருந்தாலும் அப்பாவின் தடித்த மீசையும் குடிவெறியில் கொவ்வைப் பழம் போலச்சிவந்திருக்கும் கண்களும் நல்ல ஞாபகம். நாங்கள் அயர்ந்து தூங்கி விடுவோம். பசி பொறுக்க முடியாமல் கடைசித் தங்கச்சிப் பாப்பா அழுவாள். அவளைத் தூக்கித் தன் மடியில் இருத்தி பாலில்லாத தன் முலைகளைக் கொடுத்து சப்பச் செய்து எங்க பெரியம்மா தூங்கச் செய்வார். பல தடவைகள் கண்டிருக்கிறன். அதிகாலையே பொழுது விடிவதற்கு முதல் அம்மா தன் தலையில் கடகத்துடன் நாயாறு வெளிக்குச் சென்று விடுவா. எங்க கிராமத்துக்கு அருகில் கடற்கரையில் நாயாறு என்ற வெளி இருந்தது. அங்கு தானாகவே உப்பு விளையும். அதனை விடி காலையில் அள்ளி தலையில் சுமந்து அம்மா வருவா. அதனைக் கடைக்கார யோசெப்பிடம் கொடுத்து அரிசி சாமான் வாங்கி வருவா. சில வேளைகளில் விறகு கட்டிச் சுமந்து வருவா. அவற்றைவிற்றுப் பெற்ற பணத்தில் வாங்கி வந்த அரிசியை அடுக்கலையில் வைத்துவிட்டு கடற்கரைக்குப் போய் கூனி றால் பிடித்து வருவா. அதனையிட்டு வெந்தயக் குழம்பு வைப்பா. அரசியை உலையிலிட்டு சோற்றைக் கவளம் கவளமாகக் குழைத்த சோறைத் தருவா. தூக்கக் கலக்கத்தோட நாங்க சாப்பிடுவம். அப்பாவுக்கும் ஒரு பங்கு கிடைக்கும். அப்பா என்னதான் செய்தாலும் அப்பாவைக் குறை கூறுவதை அம்மா விரும்ப மாட்டா. பசியோடும் வறுமையோடும் நாம் வளர்ந்தோம். சாவக்கட்டிலிருந்து எங்கட தாய் மாமன் விடத்தல் தீவு வந்தால் எங்களுக்குக் கொண்டாட்டம். ஏதாவது தின் பண்டங்கள் வாங்கி வருவார். இரவு சாப்பிட இல்லாவிட்டால் கடையைத் தட்டித் திறந்து றஸ்கும் தேயிலையும் வாங்கி வருவார். எங்களோடு படுத்து உறங்குவார். எங்களில வலு பாசம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் எப்படிப் போராட்டத்தில் சேர்ந்தீர்கள்?"

மைக்கல் தொடர்ந்தான்: "முதன் முதல் நான் ஆகாய விமானத்தைக் கண்டது சிறுவர் பாடசாலையில் படிக்கும் போது தான். பலாலியிலிருந்து விமானம் வருகிறது என்று ஒரு நாள் ரீச்சர் சொன்னா. பிள்ளைகள் நாங்கள் வெளியில் வந்து ஆகாயத்தைப் பார்த்தோம். பலாலியிலிருந்து கொழும்புக்கு ஒரு விமானம் பறந்து சென்றது. அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் இரைச்சல் எழுந்ததும் முற்றத்துக்கு ஓடி வானத்தைப் பார்ப்பது வழமையாகிவிட்டது. எனக்குப் பத்து வயதாகும் போது பீரங்கிக் குண்டு என்ன என்பதை அறிய நேர்ந்தது. ஒரு நாள் இலங்கை 'மில்ரறி ஆமி' றக்குகளில் கடற்கரை வந்திருப்பதாகச் சொன்னார்கள். எங்க ஊரிலிருந்து பாப்பாமோட்டை வரை பரந்த பிரதேசமாக நாயாறுவெளியிருந்தது. விடத்தல் தீவைச் சுற்றி ஒர் சிற்றாறு மாலைபோல ஓடியது. மில்ரறி ஆமி வந்திருக்கின்ற செய்திகேட்டு பாடசாலைச் சிறுவர்கள் கடற்கரையில் கூடிவிட்டம். அந்த நேரத்தில ஆமி என்றால் பயமில்லை. எங்கள் காதுகளில் பஞ்சை அடைக்கச் சொல்லிவிட்டு அவர்கள் பீரங்கிக் குண்டுகளை அட்டைத்தீவிலும் கடலிலும் விழத்தக்கதாகச் சுட்டார்கள். இவை ஒரு பயங்கரமான சாமான்கள் என்பது எனக்கு அப்போது புரியவில்லை..சில வேளைகளில் அப்பாவோடு தொழிலுக்காக நான் போவதுண்டு. மன்னாரில் சவுத்பார் என்றவி்டத்தில் தொழிலுக்காகத் தங்கியிருந்தோம். பத்து மணிபோல சீனவெடிச்சத்தங்கள் எழுந்தன. அவை துப்பாக்கிச் சத்தம் போலக்கிடக்குது என்றார் அப்பா. அப்பா சொன்னது சரி தான். அன்று தான் துப்பாக்கிச் சத்தம் கேட்டேன். 'நாங்க இனி இங்க தொழில் செய்ய முடியாது. ஊருக்குப் போவம்' என்றுமுடிவெடுத்தார். அவர் தன் றிச் வார்ச்சை ரவுனில ஒரு கடையில் திருத்தக் கொடுத்திருந்தார். அதனை வாங்கிக் கொள்வதற்காக அங்கே போனோம். அக்கடையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை. அது தரை மட்டமாகிக் கிடந்தது. சில்லறைக் காசுகள் வீதியில் சிதறிக்கிடந்தன. ஓடி வந்துவிட்டோம். அதன் பின்னர் திருக்கேதீஸ்வரத்திலிருந்து காவடி ஆட்டமும் கொண்டாட்டமுமாய் வரும் தேரோட்டம் நின்று போனது. தள்ளாடி அந்தோனியார் கோயிலுக்கு வரும் பக்தர் கூட்டம் நின்று போனது. வீதிகளில் பதற்றம் நிலவியது. ஆங்காங்கு கலவரங்கள். ஊரடங்குச் சட்டம்.. ஊரடங்குச்சட்டம் என்றால் என்ன என்பதை அன்று தான் புரிந்து கொண்டேன். மன்னாரில் கலவரத்துக்கும் துப்பாக்கிச் சூடுகளுக்கும் காரணமானவர்களெனச் சிலரைத் தேடி ஊர்களுக்குள் இராணுவம் வரத் தொடங்கியது. சிலரைக் கைதும் செய்தது. மக்கள் ஊர்களை விட்டு ஓடத் தொடங்கினார்கள். அகதிகள் என்றால் என்ன என்பதை அன்று தெரிந்து கொண்டேன். விடத்தல்தீவைவிட்டு கள்ளியடிக்கும் கத்தாளம்பிட்டிக்கும் இலுப்பைக்கடவைக்கும மூனாம்பிட்டிக்கும் ஊத்தங்கரைக்கும் அகதிகளாக ஓடிப்போனார்கள். கத்தாளம்பிட்டிக்கு ஓடிப்போய்விட்டுத் திரும்பி வந்தோம். நான் இரண்டு தடவை இயக்கத்தில் இருந்தேன்.

"சித்திரம் வரைவதற்கு ஒரு கொப்பியும் பென்சிலும் எனக்குத் தேவைப்பட்டன. அவற்றை எவ்வாறு வாங்குவது? சுவரில் கரிக்கட்டியால் கீறி அலுத்துவிட்டது. சில நாட்களில் அப்பா அட்டை குளிக்கப் போவார் ஒரு தடவை அட்டை குளித்துவிட்டு வரும்போது இரண்டு சங்குகளைக் கொண்டு வந்து முற்றத்தில் போட்டார். அவற்றை எடுத்து அந்திரேயப்புவிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கொடுத்து ஒரு கொப்பியும் பென்சிலும் வாங்கிக் கொண்டமை நினைவு வருகின்றது. அத்தோடு வெறும் வெற்றிலையை வாயில் இட்டு அதக்கியதற்காக மாமாவிடம் அடி வாங்கிக் கட்டக் கொண்டதும் நினைவு வருகின்றது. நானும் என் தம்பியும் கண்ணாக்காட்டுக்கப் போய் களி மண் கொண்டுவந்து மண்பொம்மைகள் செய்ததும் நினைவு வருகின்றது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"எனக்கு அப்ப பதினாறு வயசிருக்கும் தம்பிக்கு ரெண்டு வயசு குறைய. ராவில கடலுக்குப் போகும் போது அப்பா தனக்கு உதவியாகக் எங்களைக் கூட்டிப்போவார். காலமை பள்ளிக்குப் போக வேண்டும் என்றாலும் விடமாட்டார். வலுக்கடாயமாக அழைத்துச் செல்வார். அப்பாவின் கட்டளைக்குப் பயந்து சுறா வலைக்குப் போனோம். மூணாம்பிட்டியிலிருந்து ஆழமான கடற்பரப்பில் நாவணன்சல்லி என்ற எனும் திடல் காணப்பட்டது. அந்தத்திடலின் கரையோரக் கற்களை அண்டித்தான் வலைகள் படுப்பதுண்டு. சக்கான் தடிகளாலும் கயித்துப் பட்டுகளாலும் நாம் இருவரும் அப்பாவிடம் வாங்கின அடிகள் ஏராளம். எப்படியாவது அப்பாவோடு மீன் பிடிக்கச் செல்லாது பள்ளிக்குப் போக வேண்டும். என்று எண்ணமிட்டேன். அதற்கேற்ற வாய்ப்பு கிடைத்தது. கற்பாறைகளுக்கிடையில் சிக்கிய சுறாவலையை விடுவிக்கக் கடலிற்குள் இறங்கிய தம்பியை தும்பி என்ற மீன் குத்திவிட்டது. விச மீன்.. கடுக்கும். உடனே கரை சேர்ச்தோம் வலியால் தம்பி துடித்தான். அவனை வீட்டிற்கு எடுத்து வந்தோம். உப்புக்கல்லை வைத்து கடிவாயில் சுட விரும்பினோம். அப்பா அதிகம் குடித்திருந்தமையால் உப்புக்கல்லை வேறிடத்தில் தள்ளி வைத்துச் சுட்டுவிட்டார். அது பொக்களித்துப் போய் புண்ணாக்கிவிட்டது. தம்பிக்குப் பின்னர் அறுவைச் சிகிச்சை செய்ய நேர்ந்தது. அதன் பின்னர் கடலுக்குச் செல்ல நேரவில்லை..

"முதன் முதலாக இராணுவ நடவடிக்கைகளும் இயக்க நடவடிக்கைகளும் ஆரம்பமானபோது, முதலில் ஜீன்ஸ் போடாமல் சாரத்துமடிப்பில் குண்டுகளைக் கட்டிக் கொண்டும், துப்பாக்கியை ஏந்திக் கொண்டும் இயக்கங்கள் கால் பதித்த போது எனக்கோ அப்பாவுக்கோ ஒன்றிலும் பற்றுதல் வரவில்லை. வியப்போடு அவர்களைப் பார்த்தோம்.. சிலநேரங்களில் வீட்டுத் திண்ணையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து இளைப்பாறுவார்கள். நானும் தம்பிமாரும் அவர்களின் துவக்குகளை எடுத்துத் தடவிப்பார்ப்போம்.. அவ்வளவு தான். அப்பாவுக்கு எப்படியோ இயக்கத்துடன் தொடர்பு வந்துவிட்டது. போராளிகளை படகில் ஏற்றிவிடுவதில் ஈடுபட்டார். மாற்றியக்கத்திடம் பச்சை மட்டை அடிவாங்கிய சந்தர்ப்பமும் அப்பாவுக்குண்டு.''

மைக்கல் தொடர்ந்தான்:

"1984 அளவில் மன்னார் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. எல்.ரி.ரி.ஈயினருக்கு அப்பா படகோட்டியாகச் சென்றிருந்தார். மன்னார்த் தீவு யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மூன்றாம்பிட்டி, கொக்காவில், அனுராதபுரம், திருநெல்வேலி, மட்டக்களப்பு என தாக்குதல்கள் தொடர்ந்தன. எங்களின் ஊர் எல்லையில் இராணுவ மையங்கள் நிறுவப்பட்டன. இயக்கங்களிடையே பிளவுகள் ஏற்பட்டன. கைகளைக் கட்டிச்சுடுதலும் காட்டிக் கொடுத்தலும் அதிகரித்தது. இவன் இன்ன இயக்கத்திற்குச் சப்போட்.. இவன் இன்ன இயக்கத்திற்குச் சப்போட்.. எனப்பிரிவுகள் தோன்றின. இந்நிலையில் என் குடும்பம் எல்ரிரிஈ இயக்கத்துக்குச் சப்போட்டாக இருந்தது. ஒருநாள் அப்பா என்னிடம் சாப்பாட்டுப் பார்சல் மூன்றினைக் கொடுத்து ஊரெல்லையில் காவலுக்கு இருக்கும் அண்ணன்மாரிடம் கொடுத்துவிடும்படி சொன்னார். நான் அவர்களிடம் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு அவர்களின் துவக்கினை எடுத்துத் தடவிப்பார்தன். தோளில் கொழுவி அழகு பார்த்தன். 'அண்ணை நானும் இயக்கத்துக்கு வரட்டோ?' என்று என்னையறியாமல் கேட்டு வைத்தேன். படார் என்று ஒரு அறையை என் கன்னத்தில் ஒரு அண்ணை அறைந்தார். அதை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை. 1988 இல் இந்திய இராணுவம் விடத்தல்தீவில் முகாமமைத்துக் கொண்டது. இந்திய இராணுவத்தோடு ரெலோ இயக்கமும் முகாமிட்டுக் கொண்டுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் கிராமத்தைவிட்டு விலகிக் காட்டுக்குள் போய்விட்டார்கள் ஒரு நாள் எங்கட பெரியம்மா அலறிக் கொண்டு ஓடிவந்தா"

"என்னெண்டு..?"

"எட தங்கச்சி. உன்ரை புருசனை புடிச்சுக் கொண்டு போறாங்கள் என்று. அம்மா அடைக்கலமாதா கோயிலுக்கு அவர்களிடம் ஓடிப்போனா. குருசுக்கோயிலில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் அப்பாவை வைச்சிருந்தாங்கள். அப்பாவைச் சுடப்போகும் நிலையில் அந்த இயக்கத்திலிருந்த தெரிந்த உறவினரால் காப்பாற்றப்பட்டார். பச்சைமட்டை அடிகளுடன் அவரைத் துரத்தி விட்டான்கள். அவ்வேளை எங்களுக்கு இன்னொரு சம்பவமும் நடந்தது. மாமாவின் போர்ட்டை மாற்றியகத்தினர் கொண்டு சென்று திருப்பிவிடும்போது உரிய இடத்தில் கட்டாமை அடையவிட்டார்கள். மாமா ஆவேசத்தில் சத்தமிட அதனை யாரோ சொல்லிவிட்டார்கள். அர்த்த ராத்திரியில் வந்த அவர்கள் மாமாவைக் கெட்ட வார்த்தைகளால் திட்டிவிட்டு, துப்பாக்கி முனையில் இருந்த கத்தியால் மார்பில் கீறிவிட்டார்கள். இத்தனைக்கும் மாமா வீட்டில் ஒரு பிள்ளை புலிகள் இயக்கத்திலும் மற்றப்பிள்ளை ரெலோ இயக்கத்திலும் இருந்தார்கள். மாமா அவர்களுக்குப் படகு ஓட்டி இருக்கிறார். இப்ப மாமாவும் குடும்பத்தினரும் மொத்தம் ஏழு பேர் ஓடிப்போய் இந்தியாவில் இருக்கினம். நாங்கள் அங்க போனா உதவுவினம்"

"இடையில் எவ்வளவோ நடந்து விட்டன. அப்பாவின் குடிவெறியும் கொடுமைகளும் பிடிக்காமல் நான் யாழ்ப்பாணத்துக்கு அம்மம்மாவின் வீட்டிற்கு ஓடிப்போனேன். அதற்கிடையில் அம்மாவுக்கு கடும் காய்ச்சல் வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். அப்பா என்னைத் தேடிவந்து இனிக் குடிக்க மாட்டேன் எனச் சத்தியம் செய்ததால் திரும்பிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தல் தீவுக்கு வந்தேன். அக்கிராமத்தின் பங்குத் தந்தையாகவிருந்த பாதர் மொன் பேட் என்னைத் தொடர்ந்து படிக்குமாறு மன்னார் புனிதசவேரியர் கல்லூாயீல் சேர்த்துவிட்டார். இராணுவக் கெடுபிடிகள் இன்னமும் அதிகரித்த நேரமது. பட்டித்தோட்டத்தில் உண்ணாவிரதமிருந்த பள்ளிமாணவர்கள் சுடப்பட்டசெய்தியும், அடம்பன் மகாவித்தியாலயத்தினுள்ளே சுட்டுக் கொல்லப்பட் அறுபதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் பற்றியும் செய்திகள் காதுகளில் விழுந்தன. வல்வெட்டித்துறையில் சனசமூகநிலைக் கட்டிடத்திற்குள் அடைத்துக் கொல்லப்பட்ட பொதுமக்கள்பற்றியும் கேள்விப்பட்டு பதறினேன். இவற்றால் நாடெங்கிலும் கண்ணீர் ஆறுகள். அந்த நேரம் இயக்கம் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்கள், வர்ணப்புத்தகங்கள். காதுகளில் கொடூரமாக விழுந்த பாலியற் செய்திகள், யாவும் என் மனதில் நாடி நரம்புகளில் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தின."

அவன் சற்று அமைதியானான். பின்னர் தொடர்ந்தான்:

"இலங்கையில் அமைதிகாக்கும்படையாக வந்த இந்தியா வந்த நோக்கத்தை மறந்து செயற்படத் தொடங்கியது. இக்காலப்பகுதியில் தமிழ் தேசிய இராணுவம் என்ற பெயரில் ஆள் பிடிக்கத் தொடங்கியது. பள்ளிக்கூடங்கள். விளையாட்டிடங்கள, வீதிகள் என்றும் பராமல் இளம் பிள்ளைகள் பிடிக்கப்பட்டு, தமிழ் தேசிய இராணுவத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டு, பயிற்சியும் ஆயுதங்களும் கொடுக்கப்பட்டனர். எங்கள் பள்ளிக்கூடத்துக்கும் வந்தனர். நானும் என்வகுப்பு மாணவர்களும் தப்பி ஓடிப்போனோம் பிடிபட்ட மாணவர்கள் மொட்டை அடிக்கப்பட்டு பயிற்சியில் சேர்க்கப்பட்டனர். பயிற்சி முகாம்களிலிருந்தும் பள்ளிக்கூடங்களில் தப்பி ஓடும் போதும் அவர்களால் அடிபடுவர்கள் பலர். மன்னாரே கலங்கியது. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அங்கு படிக்க முடியாமல் விடத்தல்தீவுப் பள்ளிக்கூடத்துக்கு வந்து ஓஎல் வகுப்பில் சேர்ந்து கொண்டேன். அங்கு பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் போது வீதியில் எவரோ கத்தினார்கள்: 'தம்பியளே ஓடுங்கடா. பிள்ளை பிடிக்கிறவங்கள் வந்திட்டாங்க..' விழுந்தடித்துப் பள்ளிக்கூடத்தின் பின்பக்கமாக ஓடினோம் சேற்றுக்குள் விழுந்தெழும்பி ஓடித்தப்பினோம். இந்திய இராணுவமும் மாற்றியக்கத்து ஆக்களும் வெளியேறும் வரை எனது ஓட்டம் தொடர்ந்தது. இப்படி ஓடி ஓடி வாழுறதிலும் இயக்கத்தில் சேர்ந்து ஆயுதம் ஏந்திறது சரியெனப்பட்டது."

"அப்ப எப்ப சேர்ந்தியள்?"

"நானும் எனது இட்ட நண்பர்கள் மூவரும் இயக்கத்துக்குப் போவதெண்டு முடிவு செய்தோம் எனது வீடு கடற்கரையோரமாக இருந்தது. வீட்டார் ஜெபம் செய்யும் நேரம் பார்த்துப் புறப்பட்டோம். முஸ்லீம் தெருவைக்கடந்து பெரியமடுவின் அடர் காடுகளூடாக நடந்தோம். எங்கள் இலட்சியப்பயணம் தொடர்ந்தது. நடந்தோம். பசி வந்தபோது வழியிலிருந்த விளாமரத்தில் விளாங்காயைப் பறித்துச் சாப்பிட்டோம். தொண்டை வறண்டது. வழியில் எதிர்ப்பட்ட ஒரு கிராமத்து ஆதரவாளர் வீட்டில் சம்பலோடு சோறு சாப்பிட்ட ஞாபகம் இருக்கிறது. ஒரு வாரம் நடந்தோம். றெயினிங் காம்பிற்குப் போனால் பீடி சிகரெட் புகைக்க முடியாது என்பதால் முந்திரிகை இலையைச் சுருட்டிப் புகைத்துக் கொண்டோம். அதனை இப்போது நினைத்தாலும் சிரிப்பாக இருக்கிறது. எதிர்ப்பட்ட ஒரு காம்பில் அடைக்கலம் புகுந்தோம். நீண்ட விசாரணைக்குப் பின்னர் எங்களைச் சேர்த்துக் கொண்டார்கள். வெள்ளாங்குள முகாமிற்குப் பயிற்சிக்காக அனுப்பப் பட்டோம். அந்த முகாம் புதிதாக அமைக்கப்படுவதனால் கிணறு வெட்டுகின்ற ஆளணியில் முதலில் சேர்ந்து கொண்டோம். நல்ல தண்ணீர் கிடைக்கும் இடங்களைத்தேடி நான்கு இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பத் திரும்ப வெட்டினோம். புதிய கொட்டில்கள் போட்டோம். கொட்டிலுக்குக் காட்டுத் தடிகள், சமைக்க விறகு என்பன தூக்கித் தோள்கள் வலித்தன. முதுகு வீங்கிக் கொண்டது. ராராவா றக்ர்ர்களில் மீன்கள் அயற் கிராமங்களிலிருந்து வரும். அவற்றை வெட்டித் துப்பரவாக்க எங்களை விடுவார்கள். அதிகாலை விடியும் வரை வேலை செய்வோம். பின்னர் சமையல்.. சாப்பாடு. தேனிசைச் செல்லப்பாவின் 'எங்கள் தமிழினம் தூங்குவதோ சொந்த மண்ணில் வாழ்வுக்கு ஏங்குவதோ' என்ற பாடல்கள் காம்பில் மெதுவாகச் ஒலித்துக் கொண்டிருக்கும். மனதுக்கு அந்த வேளைகளில் அவை இதமாகவிருக்கும். சிறிய மேடைகள் அமைத்து நாடகங்கள் மேடையேற்றினேன். புதிய பாடல்களை இயற்றிப் பாடினேன். எனது ஓவியத் திறனும் வெளிப்பட்டது. சீனியர் அண்ணன்மார் என்னிடம் பரிவு காட்டினார்கள். என்னுடைய அப்பா ஒருநாள் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தோடு காம்பிற்கு வந்திட்டார். 'இது சரியா? இவன் சின்னப்பொடி..பதின்னைந்து கூட முடியவில்லை. விக்டர் அண்ணா கூப்பிட்டார். "ஓடடா" எனத் தூரத்தி விட்டார். விடத்தல் தீவு வந்து நல்ல பிள்ளையாகப் படித்தேன். திரும்ப பத்தொன்பதில் இயக்கத்தில் சேர்ந்தேன்.

"காம்ப் வாழ்க்கை மிகக் கடினமானது. கொட்டுகின்ற மழையிலும் கடும் வெயிலிலும் விடாது பயிற்சி நடக்கும். விடத்தல்தீவைச் சேர்ந்த ஒரு பையன் என்னிலும் பார்க்க இளமையானவன் என் காம்பிற்குப் பொறுப்பாக வந்தான். அவன் என்னை வாட்டி எடுத்துவிட்டான். கயிற்றில் நடக்கும்போது விழுந்துவிட்டாலும், கோபுரம் ஏறும்போது தவறி விழுந்து கால் முறிந்தாலும், பயிற்சியில் கவனமில்லாதிருந்தாலும் கிடைக்கும் தண்டனை கடுமையானதாக இருந்தது. நானும் பட்டிருக்கிறன். அடி வாங்கியிருக்கிறேன். ஒரு தடவை சமையல் பொறுப்பு வந்தது. சோற்றுக்கு உப்புப்போடத் தவறிவிட்டேன். அதற்காகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்தில் கிடாரச்சட்டியைக் கட்டி, ஒரு பாத்திரத்தைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு கழுத்தில் தேங்காய்ச்சிரட்டைகளை மாலையாகக் கோர்த்துப் போட்டபடி டக்கடா புக்கடா என்று சத்தத்தோடு கிரவுண்டைச் சுற்றி ஓடவேணும் அதுதான் பனிஸ்மன்ட். அங்குள்ள ஒழுக்க நடவடிக்கைகளை எங்கும் முன்னரோ பின்னரோ கற்றுக் கொள்ள முடியாது. அந்தளவுக்கு அங்கு பயிற்சி இருந்தது. பயிற்சிக்குப் பயந்து காக்கா வலிப்பு இருப்பதுபோல நான் நடித்தபோது வாங்கிக் கட்டிக்கொண்ட அடிகள் அதிகமாக இருந்தது. சில வேளைகளில் சீனியேர்ஸ்மார் ஏசுகின்றபோது தண்டிக்கின்றபோது வீட்டை நினைத்து அழுவதுண்டு. எத்தனையோ தடவை அடிபட்ட காயங்களுக்கு மருந்து போட மெடிசினுக்குப் போனதுண்டு. காலை எழுந்ததும் இரண்டு மூன்று சதுரக்கிலோமீற்றர் சுற்றளவுள்ள முகாமைக் கூட்டித் துப்பரவு செய்தல் எனது பணியாகவிருந்தது. காவு தடியில் வெகுதூரத்திலுள்ள கிணற்றிலிருந்து நீர் கொண்டு வந்து தாங்கிகளில் நிரப்பி வைக்க வேண்டும். ஒரு தம்ளர் நீரில் முகம் கழுவ வேண்டும்.

“காலைக்கடன்களை பதினைந்து நிமிடங்களுள் முடித்து விடவேண்டும். அதற்குள் சாப்பிடவும் வேண்டும். பல நாட்கள் சாப்பிடாமலேயே பயிற்சிக்குச் சென்றிருக்கிறேன். அலேட் விசில் அடிக்கும்போது எங்கள் கால்கள் நிலத்தில் இருக்காது. அவரவர் இடங்களில் நில்லை எடுத்திருப்போம். எல்லாருக்கும் புதுப்பெயர் சூட்டும்போது மாறி மாறி ஒவ்வொருவரிடம் பெயர் கேட்பார்கள். பிழையாகச் சொன்னால் தண்டனையாக அடிகள் கிடைக்கும். கடும் பயிற்சி நடந்தது. நாம் புடமிடப்பட்டோம். அதற்கிடையில் ஒரு நாள் ஒரு ஐயர் பொடியனிடம் பெரிய பாம்பு ஒன்றை உரித்துக் கறிசமைக்கச் சொன்னார்கள். சாப்பிடச் சொன்னபோது அவன் துடித்துப் போனான். என்ன செய்வது? போராட்டம் என்று வந்தால் இவற்றைச் சகித்துக் கொள்ளத் தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான், மரை, பன்றி, மாடு எனக் காட்டிறைச்சி வகைகள் உணவாகின. நாங்கள் தயாரித்த சாக்கு கிட்பாக்குகளில் நமது உடைகளை வைத்திருப்போம். அந்தளவுக்குப் பொருளாதார வசதிகள் குறைவான காலம் அது. கண்ணி வெடி அபாயம் என்று அறிவிப்புப பலகை எழுதவேண்டும். அதற்குப்பிழையாகக் 'கன்னி வெடி அபாயம்' என்று ஒரு பையன் எழுதிவிடான். அந்த அறிவிப்புப் பலகையை நாள் முழுவதும் அவன் கழுத்தில் தொங்கவிட்டார்கள். இப்போது நினைத்தால் சிரிப்பு வருகிறது. போராளிகள் என்று முத்திரை பதிக்கும் நாள் வந்தது. எங்களுக்குத் துவக்கும் சயனைட் குப்பியும் கொடுக்கும் நாள். நாங்கள் குறூப் பிரிக்கப்பட்டோம். அந்த வினாடியை என்னால் மறக்க முடியவில்லை. நட்போடு பழகிய நாங்கள் பிரியும் வேளை. நாங்கள் வெவ்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டால் யார் யாரைக் காண்போமோ,? என்ற வருத்தம் ஏற்பட்டது. வீரச்சாவடைந்த பலரை இன்றும் நினைத்துக் கொள்கின்றேன். யாழ்ப்பாணத்துக்கு நான் பயிற்சி வகுப்புக்களுக்கு அனுப்பப்பட்டேன். இயக்கத்தில் சேர்ந்து மூன்றாண்டுகளின் பின்னர் விடத்தல்தீவுக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு அப்பாவின் கொடுமை தாங்காமல் அம்மாவும் சகோதரங்களும் சித்தப்பா வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தார்கள். சீருடையோடு அவர்கள் இருந்த வீட்டின் கதவைத் தட்டியபோது என்னை அந்நிலையில் எதிர்பார்க்காத அவர்கள் திகைத்துவிட்டனர். எல்லாரும் அழுது கண்ணீர் வடித்தார்கள். நான் அங்கு நின்ற இரு நாட்களில் 'தம்பி விலத்திவாடா'என்று அம்மா பல தடவை கேட்டிருப்பா. 'நான் ஒரு இலட்சியத்துக்காகப் போயிருக்கிறன். வரமாட்டன்.' என்றேன். யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வந்தேன். அச்சகப் பகுதியில் வேலைக்குப் பணிக்கப்பட்டேன். விருப்பமான பணிகள். 1991 களில் யாழ்ப்பாணக் கோட்டைச் சண்டைகள் நடந்த காலம். எல்லா இடங்களிலும் விமானத் தாக்குதல்களும


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெலிகளின் தாக்குதல்களும் நிகழ்ந்து கொண்டிருந்தன. புக்காரா விமானங்கள் வானத்தில் நடமாடின. போராளிகளும் சாதாரணமனிதர்களும் உயிரோடு போராடிய காலம். பொருளாதார தடைகள், தந்திக்கம்பங்கள், தண்டவாளங்கள் இல்லாதுபோன வேளை நாங்கள் சயிக்கில்களில் மன்னாருக்கும் முல்லைத் தீவுக்கும் கிளிநொச்சிக்கும் பயணப்பட்ட காலம். அச்சிடப் பேப்பர் இல்லாமல் றூள் பேப்பரிலும் கொப்பிப் பேப்பரிலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் நூல்கள் வெளிவந்தன. இந்த வேளையில் என் சிறுகதைகள் சிலவும் வெளிவந்தன. மீண்டும் மன்னாருக்கு மாற்றலாகிச் சென்றேன். நானாட்டான், அடம்பன் பகுதிகளில் நிகழ்ந்த சண்டைகளில் பங்கெடுக்க நேர்ந்தது. ஒரு அளவக்கை யூடாகப் பிரவேசித்து, நானாட்டான் தொடங்கி வஞ்சியன்குளம் வரை அமைந்த தொடர் அரணில் சண்டை பிடித்தோம். அந்தச் சண்டையில் ஏழு போராளிகளை இழக்க நேர்ந்தது. என் இட்ட நண்பனான ஜோர்ஜ் என்பவனை இழக்க நேர்ந்தது. காயமடைந்த போராளிகளையும் வீரச்சாவடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு இராணுவம் தொடுத்த எறிகணை வீச்சுக்களுடாக ஓடும் போது டமார் டமார் என்று கண்களுக்கு முன்னால் வெடித்தெழும் ஷெல்களின் நெருப்பு வெளிச்சத்தில் எங்கள் பயணம் தொடர்ந்தது. என் கால்கள் முட்கம்பிகளில் அகப்பட்டு காயம் கண்டன. வலி எடுத்தன. எனினும் தூக்கிய உடம்புகளோடு ஓடிப்பயணப் பட்டோம் பண்டிவிரிச்சானில் வீரவணக்கத்துடன் அவர்களின் வித்துடல்களை விதைத்தோம். இச்சண்டைக்குப் போகுமுன்னர் நானும் ஜோர்யும் சிஸ்ரர் அருளிடம் விடைபெற்றிருந்தோம். அவன் சவப்பெட்டி முன் நின்று சிஸ்ரர் அஞ்சலி செய்யதபோது 'நேற்று உனக்கு றோசரி (மோதிரம்) தந்து ஆசீர்வதித்தேன். இன்று உனக்கு அஞ்சலி செலுத்துகிறேன்' என்று கூறிக்கலங்கியமை நினைவு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கொண்டச்சிச் சண்டையில் எங்கள் குறூப் , தலைவரும் சிலரும் மரணமடைந்தனர். லீடரின் சடலத்தை வித்துடலை பார்வைக்கு வைத்தபின்னர் ஆண்டான்குளம் துயிலும் இல்லத்தில் விதைத்தோம். இரண்டொரு வாரம் கடந்தபின்னர் அடம்பன் சேத்துக் குளம் பகுதியில் முன்னேறிய ராணுவ அணிக்கு எதிராகத் தாக்குதல் நடந்தது. சேத்துக்குளம் துருசுப்பகுதியிலிருந்து இரண்டு பொம்பர்கள் மாறிமாறி வீசிய மோட்டதார்த் தாக்குதலால் நானும் வேறு சிலரும் காயமடைந்தோம். ஹலிக் கொப்டர்களின் தாக்குதலுக்கு மத்தியில் முட்கம்பிகளும் முட்களும் பாதங்களைக் காயப்படுத்த கால்களில் எதுவுமின்றிக் காட்டுக்குள்ளால் ஆண்டாள் குளத்துக்கு ஓடிவந்தோம். காயம்பட்டு வைத்தியசாலையில் கிடப்பதை மீன்வியாபாரி மூலம் கேள்விப்பட்டு என் அப்பாவும் அம்மாவும் சகோதரரங்களும் ஓடிவந்தார்கள். ‘தம்பி விலத்தி வீட்டு வரமாட்டியா?’என்று எப்போதும் கேட்கும் அம்மா, காயம் பட்ட போராளிகளைப் பார்த்தபின்னர் அப்படிக் கேட்கவில்லை. ‘எண்டைக்குத் தான் இதற்கு முடிவு வரப்போகுதோ?’ என்று கதறினா. சுகம்வந்ததும் மீண்டும் பணியில் சேர்ந்தேன். அதன்பின்னர் எத்தனையோ சோதனைகள். முன்னார் மாவட்டத்தின் கலைபண்பாட்டுக் கழகத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டேன். நான் மேடையேற்றிய நாடகம் ஒன்றினை விரும்பாத தளபதி அதனைக் கண்டித்ததுடன் என்னை பரப்பான்கண்டல் கற்குவாறியில் வேலை செய்ய தண்டனை தந்தார். சரியான உணவின்றிக் கஷ்டப்பட்டேன். தலைவரின் இலட்சிய நோக்கிற்குக் குந்தகம் விளைவிக்கும் ஒரு சிலரினால் என் மாவட்டத்திலுள்ள அநேக போராளிகள் வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. எத்தனையோ சொல்ல முடியாத பிரச்சினைகள் மாவட்டத்தில் நடந்து கொண்டிருந்தாலும் ஒரு சில பிரச்சினைகள் மட்டுமே தலைமைப்பீடத்துக்குத் தெரிய வந்தது. நான் இனிமேல் எந்தவிதமான அரசியல் வேலைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக் கூடாது என்ற எச்சரிக்கையோடு வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டேன். பல கஷ்டங்கள் மலைபோல வந்தன. இனி இருக்க முடியாது என்ற சூழல் ஏற்பட்டபோது 1995 இல் இறக்கத்தின் அனுமதியுடன் விடத்தல்தீவுக்கு வந்தேன். அவ்வாண்டு குடும்பத்தாருடன் மடுவுக்குப் போனோம் இந்து இராணுவம் எங்கள் பிரதேசத்தில் செய்த கொடுமைகளை கசெட்டில் போட்டு விடியோ காட்டினார்கள். நவாலி சென். பீற்றர் தேவாலத்தில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சையும் உடல்சிதறிப் பலியானவர்களையும் காட்டினார்கள். அவற்றைப் பார்த்த என்தம்பி இயக்கத்துக்கு ஓடிப்போனான். என் குடும்பம் மிகவும் வறுமைப்பட்டு அன்றாட சோற்றுக்கே தள்ளாடியது. அப்பா தொடர்ந்து குடிப்பதற்குத் தம்பி ஓடிப்போனது புதுக்காரணமாயிற்று. பலர் வாழ்வதற்குச் சிலர் இரையாக வேண்டிய தேவை இருந்தது. கதவைத் திறக்கும்போது கணவன் வருவானா அல்லது உயிரை உலை. வைக்கும் காலன் வருவானா,? எத்தனையோ இழவு வீடுகளுக்குப் பந்தல்கள் போட்டேன். நாயாற்றிலிருந்து உப்புச் சுமந்து வரும் வேலையை அம்மா இன்னமும் விடவில்லை அம்மா கொண்டுவந்து காயவிடடு கப்பம் கட்டி ஐந்து ஆறு மூடைகளாகக் கட்டி விற்க வைத்த உப்பை முதலாளிகளிடம் விற்று பணத்தைச் சுருட்டிக்கொண்டு குடிக்கப் போவதை அப்பா நிறுத்தவில்லை. விறகு பொறுக்கி விற்று, வீடு வீடாக மாவிடித்து, தூள் இடித்து எங்கள் வயிற்றை நிரப்பத் தன் வயிற்றைக் காயவிட்ட தாயை என்னால் மறக்க முடியாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 2

மருதமடுவில் அமைந்துள்ள போராளிகளின் முகாம் என்றுமில்லாத களை கட்டியிருந்தது. சண்டையொன்றிற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். நானாட்டான் மற்றும் வங்கியங்குளம் போன்றவிடங்களை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்திருந்தது. அரிப்புத்துறை, அச்சங்குளம், ஊரல், வட்டுப்பித்தான்குளம், சிறுநாவற்காடு, பத்தாங்கட்டை போன்றவிடங்களை இணைத்துப் பெரிய இராணுவ முகாம் ஒன்றினை இலங்கை இராணுவம் அமைத்துக் கொண்டது. அந்த முகாமை இல்லாதொழிக்கும் பணி மருதமடு முகாமிடம் ஒப்படைக்கப்பட்டது.

சுற்றாடலிலுள்ள இயக்க முகாம்கள் இதில் பங்கு கொண்டன. மகளிர் படையணியொன்றும் நான்கு குழுக்களும் பங்கு ஈடுபட்டன. விடத்தல்தீவு முகாமைச்சேர்ந்த இருபத்தைந்து பேர் பங்கு கொண்டனர். அவர்களில் சத்தியன், சுரேஸ் இருவரும் அடங்கினர். சத்தியனின் முதலாவது சண்டையாக இது அமைந்தது. இந்த முகாமிற்கு சத்தியன் அனுப்பும்போது இவன் விஷேச தேவைகளுக்குரியவனென குறிப்பிடப்பட்டாலும் வரதன் அதனைக் கவனத்திற்கு எடுக்கவில்லை. இந்தச் சண்டையில் சத்தியனைக் கலந்து கொள்ள வைப்பதில் பிடிவாதமாக இருந்து செயற்பட்டான். மறைமுகமாக வேறு நோக்கம் இருந்ததோ?

அரிப்பு சண்டை உக்கிரமாக நடந்தது. வயல்வெளியில் கவரெடுத்துப் படுத்திருந்தபோது நள்ளிரவைக் கிழித்துக் கொண்டு குண்டுகள் இராணுவ முகாமிலிருந்து பாய்ந்தபோது சத்தியனின் சிந்தனைகள் சண்டையின் உக்கிரத்தினைப் புரிந்து கொண்டன. தன்னருகில் நிலையெடுத்துப் படுத்திருந்த சுரேசை கவலையோடு பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஏ.கே. ஏந்தி ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவன் சண்டையில் ஈடுபட்டான். இரண்டு பக்கங்களும் குண்டுகள் பாய்ந்தன. ஷெல்கள் நூற்றுக் கணக்கில் வெடித்தன. ஷெல் துண்டொன்று பாய்ந்து நிலத்தில் சுரேஸ் துடித்தபோது யுத்தத்தின் இழப்பு சத்தியனுக்குப் புரிந்தது. அதன்பின்னர் சத்தியன் வீராவேசமாகச் சண்டைசெய்தான். இலக்கை நோக்கித் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன.

1990 களில் அரிப்புத் தாக்குதல் நடந்தது. அத்தாக்குதலுக்கு ஒரு போராளியாக சத்தியன் அனுப்பப்பட்டான். இராணுவ முற்றுக்கையைப் பார்ப்பது அது தான் முதல் தடவை. காயம் பட்டவர்களைத் தூக்குவதிலும் ஆயுதங்களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டனர். ஆறாகப் பெருகிய இரத்தத்தைக் கண்டு அவன் மனம் பேதலித்தது. அப்பணியை அடுத்து குறிபார்த்துச் சுட்டனர்.

. “அதிகாலை 3.30 மணியிருக்கும் இரவு நேர நகர்வு ஆரம்பமாகியது. முட்கள், கற்கள், புதர்களிடையே சத்தமின்றி நகர்ந்தோம். சண்டை ஆரம்பமாகியது. ஏதிரி முகாமிட்டிருந்த பனை வடலியை நெருங்கினோம். எங்கள் சுடுகலன்கள் நெருப்பைக் கக்கத் தொடங்கின. சடசடத்து உமிழும் துப்பாக்கி ரவைகளின் பெட்டிகளை அடிக்கடி மாற்றி அந்தப் பனை வடலிகளைத் தாக்கினோம். புனை வடலிகளின் மறைவில் பாதுகாப்பாய் நிலையெடுத்த அவன் தாக்கிக் கொண்டிருந்தான். அணுவணுவாய் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறி இராணுவ காப்பரண்களைத் தகர்த்துக் கொண்டு முன்னேறிச் சென்றபோது, இராணுவம் பின்னிட்டு ஓடத்தொடங்கியது. பின்னிட்டு ஓடிய இராணுவத்தைக் களைத்துக் களைத்து வேட்டுகள் முழங்கின. செத்து விழுந்த உடல்களைக் கணக்கில் எடுக்காது ஏறிமிதித்து துரத்தி உச்சக்கட்டமான சண்டை நடந்தது. அவர்கள் குறூப் தலைவர் அரவிந்தனின் குறூப்புடன் வாக்கி ரோக்கியில் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டபோது இரைச்சலைத் தவிர வேறொன்றும் வரவில்லை. 6 மணியளவில் மீண்டும் இராணுவம் பொம்பர், டாங்கிகள், ஆட்லெறி வாகனங்களுடன் களத்துக்கு மீண்டும் வந்தது. அவர்கள் பின்வாங்கி திக்குத்திப்பாய் ஓடிக்கட்டுக்கரை, முருங்கன், கறுக்காக்குளம் முகாம்களை அடைந்தோம். குறூப் செக்கிங் நடந்தது. அதில் அரவிந்தனும். உதயச்சந்திரன் என்பவரும் வீரச்சாவடைந்தமையை அறிந்தபோது ஆடிப்போயினர். அரவிந்தனுடன் அன்றைய தினம் வீரச்சாவடைந்த மற்றைய நண்பர்களுக்காகவும் வருந்தினர். சண்டைக்குப் போய் யார் யார் திரும்பி வருவர் என்பதை அவர்கள் அறியார். அரவிந்தன் நமது நாட்டைச் சேர்ந்தவன் ஆனால் அவனுடன் வீரச்சாவடைந்த உதயச்சந்திரன் இந்திய மண்ணில் இராமநாதபுரத்தில் பிறந்து தமிழரின் சுதந்திரத்துக்காக உயிர்விட்டவன். இவர்களது சடலம் ஓடி வரும்போது தவற விடப்பட்டுவிட்டது. அதனால் அவர்கள் குறூப் இரண்டு இரவுகள் அவற்றை எவ்வாறேனும் மீட்டுவிடவேண்டுமென முயன்றது. அது சாத்தியப்படவில்லை. அது நல்ல நிலவுக்காலமாக இருந்ததால் எதிரிக்குச் சாதகமாக இருந்தது. எவ்வளவோ முயன்றும் அவர்களின் சடலங்கள் கிடைக்கவில்லை.".

அரிப்பு முகாம் துடைத்தெறியப்பட்டது. விடிகாலைப் பொழுதில் உதவிக்கு விமானப்படைவந்து குண்டுகளைக் கண்மூடித்தனமாக வீசியும் போராளிகளின் வெற்றியைத் தடுக்க முடியவில்லை. விடத்தல்தீவு பேசில் பதின்மர் களப்பலியாகியிருந்தனர். சத்தியனின் நெஞ்சு கனத்தது. முதல் நாள் அவனோடு கூட இருந்து உணவு அருந்தியவர்கள். பேசி மகிழ்ந்து விளையாடியவர்கள். கனவுகள் கண்டவர்கள். சுரேசின் மரணத்தை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. பேஸிற்குத் திரும்பி வந்தபோது அவர்களின் வெற்றியை வரதன் பெரிது படுத்தாதது போலப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த வெற்றியைக்கண்டு பெருமிதம் கொள்ள வேண்டாம். இழப்புகளைக் கண்டு சோர்ந்துவிட வேண்டாம். இழப்புகளை நிரப்பப் புதிய போராளிகள் வருகிறார்கள்." என்று சர்வ சாதாரணமாக வரதன் கூறினான். இந்த முகாமிலிருந்து யுத்தத்திற்குச் சென்று களப்பலியானவர்களுக்காக இழந்தவர்களுக்காக அவன் வீர அஞ்சலி செலுத்தவில்லை எனப்பட்டது.

"நீ தப்பி வந்திட்டாய்.. முதல் சண்டையில் தப்பிட்டாய்." என சத்தியனைப் பார்த்து வரதன் கேட்டான். சத்தியனுக்கு ஏதோ மாதிரி இருந்தது.

**த**ம்பிஐயா அந்த முகாமிற்குப் புதியவரல்லர். அடிக்கடி முகாமிற்கு வந்து வரதனோடு பேசிச் செல்கின்ற உள்ளூர் வாசி. அந்தோணிமுத்தரோடு வலு சிநேகமானவர் என்பதிலும் பொடியளோடு இணைப்பானவர் எனலாம். அவரது இரண்டு வள்ளங்களில் ஒன்று யந்திரம் இணைத்தது. அடிக்கடி .இந்தியக் கரைக்கு போராளிகளை ஏற்றி. இறக்கியிருக்கிறது. கிளிநொச்சியிலிருந்து, போராளிகளை இந்தியக் கரைக்கு அனுப்பி வைக்கும்படி கட்டளைகள் வரும் போது வரதன் தம்பிஐயாவைக் கூப்பிடுவான். அவரும் மறுக்காமல் வருவார்.

அரிப்பு சண்டை தொடங்கியபோது மறுநாள் தம்பிஐயாவை வரதன் கூப்பிட்டான். அவரும் விழுந்தடித்து ஓடிவந்தார்.

"அண்ணை இந்த முறை உங்களைக் கூப்பிட்டது என்ரை தனிப்பட்ட வேலை ஒன்றிற்காக."

"என்ன அப்படி சொல்லப் போறீர்? உமக்குச் செய்யாததே? சொல்லும் தம்பி."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தான் வரதன். அவன் பார்வையில் வெட்கம் தெரிந்தது.

"ஐந்து வருடம் இயக்கத்தில் இருந்தால் கலியாணம் செய்து கொள்ளலாம். நான் பதினெட்டு வயதில் இயக்கத்தில் சேர்ந்தேன். இப்ப பத்து வரியமாகுது. கலியாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன்."

தம்பி ஐயா சிரித்தார்.

"சொல்லும் தம்பி. ஆரிடம் தரகு போக வேணும்?"

அவன் சுகந்தி பற்றி விபரித்தான்.

"அதைச்செய்யலாம். கதைக்கிறன் நான் சொன்னால் அந்தோணிமுத்தர் தடைசொல்ல மாட்டார். குமர் கரை சேருகிறது இலேசே?"

தம்பி ஐயா எண்ணியபடி எதுவும் நடைபெறவில்லை. வெகு இலேசாக இத்திருமணத்துக்கு அந்தோணிமுத்தர் ஒப்புக் கொள்ளவில்லை.

"என்ன கேக்கிறாய் தம்பிஜயா? நீ கேட்டபடியால் பொறுத்தன். அவள் சின்னப்பிள்ளை. பதினேழாகிறது. ஓ.எல் இந்த முறை எடுக்கிறாள். கொஞ்சம் வயதுக்கு மீறிய வளர்ச்சி அவ்வளவு தான். கலியாண வயதா,? வரதன் நல்ல பொடியன் தான். இயக்கப்பொடியன் என்பதை மறந்திட்டாய்.. சா எப்போதென்பது தெரியாது. இந்தப் பேச்சை விட்டுவிடு.. பொடியனிட்ட சொல். அவளுக்குக் கொஞ்ச வயதெண்டு.. கலியாண வயதில்லை.."என்று திடமாக அந்தோணிமுத்தர் மறுத்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிஐயா எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். எடுத்துச் சொன்னார். அவர்களின் பேச்சை குசினிக்குள்ளிருந்த அரியமலரும் சுகந்தியும் கேட்டார்கள். கொதித்து எழுந்தார்கள். சுகந்தி துடித்துப் போனாள். வரதனின் எண்ணத்தை அவள் புரிந்து கொண்டாள். அவன் பார்வையிலுள்ள அர்தத்தைப் புரிந்து கொண்டாள். அவள் இதயம் எரிமலையாகக் கொதித்தது. சத்தியனின் நினைவு மெதுவாக எழுந்தது.

ஏமாற்றத்தோடு தம்பிஐயா விடை பெற்றார். வரதனிடம் உடனே சென்று செய்தியைக் கூற விரும்பவில்லை. ஆறவிட்டுக் கூற விரும்பினார். அதற்குள் பல விடயங்கள் நடந்துவிட்டன. வரதன் அன்று சத்தியனை அழைத்தான்.

"உம்மை இந்த பேஸில் வைத்திருக்கத்தான் விருப்பம். ஆனால் மேலிடம் என்ன நினைச்சிருக்கோ தெரியவில்லை. சரளமாகச் சிங்களம் பேச வாசிக்கத் தெரிஞ்சவை வேணுமாம். நான் உன்னைச் சிபார்சு செய்திட்டன். முல்லைத்தீவுக்குக் கூப்பிடுகினம். பெரும்பாலும் மணலாற்று முகாமிற்குத் தான். அதெல்லாம் உனக்கேன். முல்லைத்தீவுக்கு நாளைக்குப் போறாய். அடுக்குப் பண்ணு.."

சத்தியன் இடிவிழுந்தவன் போலானான். சுகந்தியைச் சந்தித்த கடைசிக் கணத்தை நினைவு படுத்திக் கொண்டான்.

சுகந்தியினின் கண்கள் கலங்கின. கருவிழிகள் நீரில் மிதக்க சத்தனை ஏக்கத்தோடு பார்த்தாள். பிரிவின் துயர் பார்வையில் தெரிந்தது. அவளால் எதுவும் பேச முடியவில்லை.

"சுகந்தி என்ன பேசாது இருக்கிறீர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னத்தைப் பேசுறது,: சத்தியன். அது தான் வரதன் திட்டமிட்டுச் செய்திட்டானே,? உங்களை மணலாலற்று பேசுக்கு மாற்றுவதன் மூலம் தன் எண்ணத்தை நிறைவேற்ற முடியுமா? ஐயா திடமாகச் சொல்லிவிட்டார். இதோ பாருங்க சத்தியன்.. நான் கலியாணம் செய்யப் போவதில்லை. செய்வதாக இருந்தா உங்களைத்தான். அது நிச்சயம். அது வரதனுக்குத் தெரியவில்லை. என்னோட சினேகிதமாக இருக்கின்ற லக்சி இயக்கத்தில இருக்கிறா. நானும் இயக்கத்தில் சேருகிற எண்ணத்தில இருக்கிறன். இப்ப பதினேழாகுது. பதினெட்டாகெட்டுமென்றிருக்கிறன். பதினெட்டானதும் இயக்கத்துக்கு வந்திடுவன்."

சத்தியன் ஏக்கத்தோடு பார்த்தான். அவள் இயக்கத்தில் சேரப்போவதாவதாகக் கூறியது ஏமாற்றத்தைத்தந்தது.

"இதோ பார் சுகந்தி. இயக்க வாழ்க்கை இலேசானது அல்ல. நான் படுகிற பாடு போதாதா? உங்க அண்ணா மைக்கல் வேறு இயக்கத்துக்கப் போட்டான். உன்னைச் சேர்த்துக் கொள்ளுவினமா? போகட்டும் சுகந்தி. போர்க்களம் பஞ்சு மெத்தையல்ல. அங்கு செல்பவர்களில் திரும்பி உயிரோடு வருகிறவர்கள் யாரெனத் தெரியாது. போராட்ட வாழ்க்கை நீ நினைப்பது போல இல்லை. கலியாணம் செய்ய எண்ணமுள்ளவர்களுக்கு அது உகந்ததல்ல. ஒரு முறை இணைந்தால் விலக முடியாது புரிந்து கொள்."

அடி வானில் ஆதவன் மறைந்து கொண்டிருந்தான். செக்கச் செவேரென அடிவானம் காட்சி தந்தது. சுகந்தியின் பார்வை ஒரு கணம் அதில் நிலைத்தது.

"எல்லாம் நம்பிக்கை தான். மாலை மறைந்து மறுநாள் பிறக்கும். அது தவிர்க்க முடியாத நியதி. அண்ணை எப்பவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்திலிருந்து விலகிவிட்டார். அவரை இப்ப ராணுவம் தேடிக் கொண்டிருக்கிறது என்னை இயக்கம் ஏற்றுக்கொள்ளும். நாட்டுக்கு ஏதேனும் செய்ய வேண்டும்.''

"நீ சொல்வது இனிமையாக இருக்கலாம் நம்பிக்கை மட்டும் வாழ்வாகாது. வாழ்விலே எவ்வளவோ இருக்குது சுகந்தி. வாழ்வைத் தொலைத்தவர்கள் பல பேர். இயக்கத்தில் சேர்பவர்கள் வாழ்வைத் தொலைத்தவர்கள் தான் என்பேன். நாம் உயிர் வாழ்வது அழிந்து போவதற்கன்று. சுகந்தி. வாழ்க்கை எவ்வளவு இனிமையானது தெரியுமா? என்னைப்போல நீயும் அழித்துக் கொள்ளாதை. வெளியில் இருக்கும் போது இயக்கம் கவர்ச்சியானது தான். உள்ளே வரும்போது கஷ்டம் விளங்கும். இயக்கத்தில் சேர்ந்த ஒரு சிலர் ஆடம்பரமாக வாழ்வதும் அதற்காகப் பலர் பலியாவதும் புரியும். இந்த யுத்தம் ஏன்? இன்னமும் எனக்குப் புரியவில்லை. இழப்புக் தான் மிச்சம். யுத்த களத்தில் எத்தனை வாழவேண்டிய உயிர்கள் சரிகின்றன தெரியுமா? கண் முன்னால் சுரேஸ் இறந்தான் குண்டு தாக்கி, தாங்க முடியவில்லை. இந்த அவலத்துக்குள் நீயும் வரவேண்டாம்.''

"மரணத்தைக்கண்டு பயப்படுவதா? விடுதலை இலேசில் வராது சத்தியன்.''

"விடுதலை? ஆருக்கு? இரண்டு பக்கங்களும் பலியாகின்றவர்களின் எண்ணிக்கை? பேசித் தீர்க்க வேண்டியவை வளருகின்றன. எத்தனை சந்தர்ப்பங்கள் வாய்த்தன தெரியுமா? தவறவிட்டோம். சந்தர்ப்பங்கள் இனித் தேடி வரா. பிரச்சினைகளைத் தீர்க்க அரசியல் தலைமை ஒரு போதும் விரும்பா சுகந்தி? சூடு காயப் பிரச்சினைகள் இருக்க வேண்டும். தமது ஆடம்பர வாழ்வை அதிகார வாழ்வை நிலைநாட்ட நீடிக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை தேவை. அதுக்கு அப்பாவிகளான என்னைப் போன்றோர் அவமே பலிக்கடாக்களாகத் தான் வேணும்."

"விடுதலை இயக்கத்தில் இருந்து கொண்டே இயக்கத்தை விமர்சிக்கிறீர்கள்."

"உண்மையைத் தான் சொன்னன். சுகந்தி, என் இதயத்தில் நீர் குடிகொண்டுவிட்டீர். நான் கலியாணம் செய்வதாக ஒருநிலமை வந்தால் அது நீர் தான் என நினைக்கிறன். எத்தனை ஆண்டுகளாயினும் உமக்காகக் காத்திருக்கிறன்."

"நானும் அப்படித்தான். உயிர் தப்பியிருந்தால் பார்ப்போம். யுத்தம் தொடங்கப் போகிறது. இலங்கை ..இராணுவம் முழு மூச்சுடன் வன்னியைத் தாக்கப் போகிறதாம்."

சத்தியன் முல்லைத்தீவுக்கு வந்துவிட்டான். சுகந்தி இயக்கத்தில் சேர்ந்து எங்கு பயிற்சி பெறுகிறாளோ தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 3

**ப**கல் ஒரு மணியைத் தாண்டிய வேளையில் அவர்களுக்குப் பாற்கஞ்சி வார்க்கப்பட்டது. அவர்களுக்கு இருந்த பசியில் அது அமிர்தமாகவிருந்தது.

"நல்லாக் குடியுங்க.. இனி எப்ப வயிற்றுக்குக் கிடைக்குதோ தெரியாது.."என்று சிரித்தான் மைக்கல். "இனி ராமேஸ்வரத்தில. எதாவது கிடைத்தால் தான் "

"நான் அங்க வரவில்லை.."என்றாள் சுமதி.

"இங்கிருந்து என்ன செய்யப்போறியள்? பேசாமல் வாருங்கோ.. நிலமை சரியானதும் திரும்பி வரலாம். காசில்லாவிட்டால் என்னிடம் ஒரு மோதிரம் இருக்குது.. நான் படகுக்குக் கொடுக்கிறன்."

இங்கிருந்து ராமேஸ்வரத்துக்கு ஓடித்தப்பி விடுவது சரிபோல அந்த நேரம் பட்டது. அங்கு போய்விட்டு அக்காமாருக்கு இருக்கிற இடத்தினை அறிவிக்கலாம். கந்தையர் குடும்பம் கூட இருக்கிறது. அங்கே எல்லாம் கிடைக்குமாமே?

"இண்டைக்கு ரா வந்தால் நல்லது..கெதியாக படகில ஏறிடலாம். கடுமையாகச் சுத்திறான்கள்" என்றார் கனகசபை. சுமதிக்கு என்ன செய்வதென்று தெரியாமல் அடிவயிற்றைக் கலக்கியது.

"நீங்க ஒண்டுக்கும் பயப்படவேண்டாம். அங்க போனால் எல்லாம் சரியாகிவிடும். அங்க நல்லாக் கவனிப்பினமாம். வாரம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் காசு தருவினமாம். இருக்க வீடு தருவினமாம். படிக்கிறவை படிக்கலாம். பயமில்லை...:" என்றான் மைக்கல். சுமதிக்கு அவன் வார்த்தைகள் ஆறுதலாகவிருந்தது.

சூரியன் சற்று மேற்கே சாயத் தொடங்கினான். மக்கள் மண்ணில் ஆங்காங்கே சரிந்து கிடந்தார்கள். மதியவேளை அருந்திய கஞ்சிக்குப் பின் எதுவும் கிடைக்கவில்லை. இளைஞர்கள் சிலர் ஊர் ஊராகத் திரிந்து பால் சேகரித்து அதனைக் காய்ச்சி சிறுவர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். பெரியவர்கள் கிணற்று நீரை அருந்திவிட்டுப் பசியோடு இருந்தார்கள்.

"இங்கிருந்து இந்தியாவுக்குப் போனால் கஸ்டமில்லையா? என்னெண்டு அங்க தனிய வாழ்கிறது?" என்றாள் சுமதி.

"இங்க இப்ப இருக்கேலாது பிள்ளை. திரும்பியும் போகேலாது.. எல்லாரும் அங்கால போறதா இருக்கினம். நீர் ஒண்டுக்கும் பயப்படாதையும் நாங்கள் இருக்கிறம் துணையாக.."என்றார் கந்தையர்.

"அங்கால போனால் ஒண்டுக்கும் பயப்படத்தேவையில்லை. 117 அகதி முகாம்கள் இந்தியாவில் இருக்குது. முதலில் மண்டபம் முகாமில் பெயர் பதிந்து விட்டு முகாம்களுக்கு அனுப்பி வைப்பினம். 11 ஆயிரம் குடும்பங்கள் இருக்காம். முகாம்களுக்கு வெளியேயும் இருக்கினமாம். எங்களுக்குத் தேவையான பொருட்களைத் தருவினம் பெரியாக்களுக்குச் செலவிற்கு 400 ரூபா தருவினம். அடுத்த பெரியவருக்கு 288 ரூபா தருவினம். சிறுவர்களுக்கு 180 ரூபா தருவினம். குழந்தைகளுக்கு 90 ரூபா தருவினமாம். சமாளிக்கலாம். ஒவ்வொரு மாதமும் தருவினம்.. பிள்ளையள் வேணுமாயின் படிக்கலாம். ஆமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு இருக்காது.. முகாம் கொட்டில் தான். மரியாதையை முகாம் காவலாளிகளிடம் எதிர்பார்க்க முடியாதாம். கொஞ்ச நாளயில் பாசை இந்தியப் பாசையாக மாறிவிடும். கியூபிறாஞ் என்று ஒரு பொலீஸ் பிரிவு இருக்குதாம். விசாரித்துத் துளைத்து விடுவாங்கள். எல்ரிரிஈயுடன் தொடர்பிருக்குதா எண்டு. நான் இப்ப தேவனுக்கு ஊழியம் செய்பவன். பாதர்.. தேவன் எப்படி என்னை மாற்றிவிட்டார் பார்த்தியளா? இரத்தம் தோய்ந்த ஆயுதங்களை எடுத்த என் கரங்களில் பைபிளை ஏந்த வைத்துள்ளார்." என்று சிரித்தான் மைக்கல்.

"அற்புதம் தான். பிறகு என்ன செய்தீர்கள்"

"எனக்கு 26 வயதாகியது. தொடர்ந்து படிக்கும் ஆவல் வந்தது. ஓஎல் சித்தியடைந்திருந்தேன். ஏஎல் படித்து பாஸ் பண்ணினேன். ஒரு ஆசிரியுராபக வரவிரும்பினேன். இவன் இயக்கத்தில் இருந்தவன் என்று ஊர்ப் பள்ளிக் கூடங்கள் தொண்டராசிரியனாக வேலை வர மறுத்தன எப்படியோ அடம்பன் பாடசாலையில் ஒன்றிற்குத் தொண்டராசிரியனானகச் சேர்ந்து கற்பித்தேன். அங்கு ஒரு பெண் மீது நேசம் ஏற்பட்டது. அற்புதமான பெண். மனதைக் கவர்ந்தாள். முதலில் என்மீது காதலாக இருந்த அவள் இடைநடுவில் என்னை வெறுக்கத் தொடங்கினாள். காரணம் நான் இயக்கத்தில் இருந்தமையாக இருக்கக்கூடும்.. மன்னார் பள்ளிக்கூடத்தில் தொண்டராசிரியராகச் சேர்ந்தேன் அவ்வேளை விடத்தல்தீவிலிருந்து இராணுவத் தாக்குதலுக்குப் பயந்து மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் மன்னாருக்கு படகுகளில் வந்தனர்.. அவர்களில் என் குடும்பமும் இருந்தது. அகதிகளாக வந்தவர்களுக்கு நானும் ஒரு தொண்டனாக நின்று உதவிகள் புரிந்தேன். எங்கள் ஊரைச் சேர்ந்த ஒருவன் அப்பா படகிலிருந்து இறங்கும்போது இராணுவ கப்ரினுக்குக் காட்டிக் கொடுத்தான். அப்பா கடும் வெயிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரனைக்குட்படுத்தப்பட்டார். அப்பா உண்மையைச் சொன்னதால் அவரை விடுவித்தனர். அவ்வேளை அங்கிருந்த மாற்றியக்கத்தைச் சேர்ந்த, ரெலோ என்று நினைக்கிறன்,, என் கரங்களைப் பிடித்து காம்பிற்கு வெளியே என்னை அழைத்து வந்தான் .'இனி நீ இங்கிருப்பது ஆபத்து. ஓடி விடும். பிடிச்சால் என்ன செய்வானெண்டு தெரியுந்தானே? இந்தியாவுக்கு ஓடிவிடும்.'என்று என் கையில் 1000 ரூபா நோட்டைத் தந்து அனுப்பிவிட்டார். முன்பின் தெரியாத அவனைக் கண்கள் கலங்கப் பார்த்தேன். ஒரு காலத்தில் பிரிவினை உணர்வோடு பல்வேறுபட்ட முரண்பாடுகளும் சண்டைகளும் சச்சரவுமாயிருந்த இயக்கத்திலிருந்து என்னைக் காப்பாற்ற நினைத்த அந்தத் திடீர் நண்பனை இது வரை என்னால் மறக்க முடியவில்லை. 'நன்றி தோழரே. போய் வாறன்.' நான் ஓடிப்போவதாக முடிவு செய்ததும் அநேக குருமார்கள் உதவினார்கள். இந்தியாவில் யார் யாரைச்சந்திக்க வேண்டும் என்று கடிதங்களும் தந்தனர். பைபிளோடு ஓடி வந்திருக்கிறன் இந்தியாவுக்குச் செல்லும் நோக்கோடு."என்று மைக்கல் சிரித்தான்.

அன்றிரவு கருக்கலோடு மீண்டும் சிறிதளவு கஞ்சி அருந்தக் கிடைத்தது. நள்ளிரவு கடந்த நேரத்தில் ஏழெட்டுப் படகுகள் கரைக்கு வந்தன. மைக்கல் யாரோடோ பேசிவிட்டு வந்து அவர்களை அழைத்துச் சென்று படகு ஒன்றில் ஏற்றினான். கந்தையா குடும்பத்தினரும் சுமதியும் கலங்கியபடி ஏறினர். மைக்கலுக்குப் பழக்கமான படகோட்டி போலிருக்கின்றது.

"கெதியாக ஏறுங்கோ. நேவிக்காரன்கள் கடலில் திரியுறான்கள். சத்தம்போடக் கூடாது. சிகரெட்டு பீடி குடித்து வெளிச்சம் ஏற்படுத்தக் கூடாது."

விசைப்படகு கரையிலிருந்து மெதுவாக நகரத் தொடங்கியது. ஒரு கைப்பிடி மண்ணை எடுத்துப் பார்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணியவாறு மைக்கல் ஏறிக்கொண்டான். கரையைவிட்டு கடலில் வந்ததும் விசைப்படகு வேகமெடுக்கத் தொடங்கியது. நடுக்கடலில் தூரத்தில் இராணுவக் கட்டளைக் கப்பல்கள் போக்கஸ் வெளிச்சமிட்டபடி சென்றன. அவற்றின் மத்தியில் இவர்களது படகு இந்தியாவை நோக்கி குறுக்கிட்ட மணற்றிடர்களை (கூடைகள்) காண்பித்து பயணப்பட்டது. இலங்கைத் தீவில் இருண்ட காடுகள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தும் கூட பாப்பாமோட்டைப் பகுதியில் விழுந்து வெடிக்கும் ஷெல்களின் நெருப்பு வெளிச்சம் கரை மறைந்தும் கண்களில் தெரிந்து கொண்டிருந்தது. தலைமன்னார் வெளிச்சம் மின்மினிப் பூச்சியானபோது, இந்தியாவின் தனுஸ்கோடி வெளிச்சம் பூனையைப்போல கண் சிமிட்டியது. எல்லாரும் 'அப்பாடா இந்தியா'என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர். ஒன்றிரண்டாகத் தெரிந்த வெளிச்சம் திருவிழாப்போல நிறம் நிறமாகத் தெரிந்தபோது, இந்தியன் நேவிப்படகு கண்டுகொண்டது. அதனால் சரமாரியாகச் சுட்டது.

எல்லாரையும் படகினுள் படுத்துக் கொள்ளுமாறு படகோட்டிசொன்னான். 'உசிருக்குப் பயந்து வந்தோம் வந்தவிடத்தில் பலியாகப்போறம்' விசைப்படகினை ஒரு மணல் திட்டிக்குப் படகோட்டி அணைத்தான். "எல்லாரும் கெதியா இறங்குங்க" என்றபடி பொருட்களைத் தூக்கி மணற்றிட்டியில் எறிந்தான். "பயப்படாமல் குதியுங்க. ஆழமில்லை" என்றபடி மைக்கல் நீரினுள் குதித்தான். சுமதியை இறக்கிவிட்டான். மற்றவர்களுக்கும் இறங்க உதவினான். யாரோ அகதிகள் படகில் வருவதை உணர்ந்த இந்திய நேவி சுடுவதை நிறுத்தியது. படகைத் திருப்பிக் கொண்டு படகோட்டி ஓடிமறைந்தான். அங்கிருந்து தம் உடைமைகளைக் காவிக்கொண்டு மணற்றிட்டையில் நடந்தார்கள். நல்ல காலம் தனுஸ்கோடிக்கு அருகிலிருந்த திட்டையில் இறங்கியிருந்தார்கள். அதிகாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கல் வெளிச்சம். கரையில் முறுக்கு மீசைளோடு தலைப்பா கட்டியிருந்த ஒரு ஆசாமி கையில் ரோச்சுடன் குறுக்கிட்டான். முன்னால் சென்ற மைக்கலின் வயிற்றில் தன் கரத்திலிருந்த துப்பாக்கியால் ஒரு இடியிடித்து நிற்பாட்டினான்.

'எல்ரிரிஈ.எல்ரிரி..'

'நோ சேர்.'

'போ..போ..'

அவன் பின் வந்த சுமதியை அவன் மறித்தான். அவளின் கழுத்தில் கரம் பதிக்கப் பார்த்தான். நெஞ்சுக்குள் ஆயிரம் ரவைகள் சுழன்ற சத்தம்.

"டோன்ற் டு றச்..வீ ஆர் றிபூஜி.. ஐ வில் றிப்போட் திஜ் மாற்றர் ரு யுவர் பொஸ்."

அவன் சற்றுத் தயங்கவிட்டு. 'போ..போ..'என்றுவிட்டான்.

ராமேஸ்வரம் பரந்த மணல் வெளியாகும். ஒரு நீண்ட மணத்திட்டாகத் தனுஸ்கோடி கடலுக்குள் காட்சிதருகின்றது. ஆறுகிலோமீற்றர் தொலைவுக்கு கால்கள் புதையும் மணல்வெளியூடாக பொதிகளோடு நடந்து தனுஸ்கோடி தடைமுகாமை கண்டனர். நுழைவாயிலிருக்கும் கஸ்ரம்ஸ் பொலிசார் முதலில் விசாரித்தனர். எல்ரிரிஈயினர் அக்கூட்டத்தில் கலந்துள்ளனரா என அறிவதில் கவனம் காட்டினர். அகதிகள் காவிவந்த பொதிகளைக் கிண்டிக்கிளறிப் பார்த்தபின்னர் இன்னொரு பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பினர். அங்கு அவர்களை நுட்பமாகப் பரிசீலித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தத் தளும்பு உடலில் எப்படி வந்தது?"

"சேர் இலங்கையில் காயப்படாத மக்கள் இருக்க முடியாது. எல்லாரும் விமானக் குண்டுகளாலும் இராணுவ நடவடிக்கைகளாலும் காயப்பட்டவர்கள் தான்.." என்றார் ஒரு வயோதிபர். திட்டுகளை வாங்கிக் கட்டிக்கொண்டார். அவர்களில் பெரும்பாலோரைப் பதிந்து, மண்டபம் முகாமிற்கு அனுபிவிட்டார்கள். கந்தையர் தன் பெறாமகள் எனச் சுமதியைக் கூறித் தன் குடும்பத்தோடு பதிந்து கொண்டார். தனியானவர்களையும் சந்தேகத்துக்குரிய இளம் வயதினரையும் பிரித்து வைத்து 'கியூ பிரான்ஸ்' எனும் பொலிஸ் பிரிவினரிடம் விசாரணைக்கு ஒப்படைத்தனர். கியூபிரான்ஸின் விசாரணை வித்தியாசமானது. துருவித் துருவி உண்மைகளைக் கண்டறிய முயல்வார்கள். மைக்கல் கியூ பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

விசாரணை ஆரம்பமாகியது.

"நீ மட்டும் ஏன் வந்தாய், குடும்பம் எங்கே?"

"இராணுவத்துக்குப் பயந்து ஓடும்போது பிரிந்து விட்டம்."

"கையில் என்ன புத்தகம்?"

"பைபிள்.."

"பிரசாரம் செய்யப் போறியா? உன்னைப் பார்த்தா எல்ரிரி மாதிரித் தான் கிடக்குது. போ மண்டப காம்பிலே இரு அப்புறமாப் பார்த்துக் கொள்கிறேன்."

விசாரணை முடிந்து அவர்கள் எல்லாரும் மண்டபம் முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளிடம் மரியாதையை எதிர்பார்க்க முடியாது என்பதைப் புரிந்து கொண்டார்கள். அடிமைகள் போல நடத்தினார்கள். மைக்கலுக்கு வேதனையாக இருந்தது.

மண்டபமுகாமில் இறக்கிவிடப்பட்டபோது தெரிந்தவர்கள் பலர் ஏற்கனவே வந்து அங்கிருந்தார்கள். அவர்கள் இவர்களைப் பார்த்து கை அசைத்தார்கள். இங்கு வந்தவர்களில் சிலரும் சைகை காட்டினர். ஆதனைக் கவனித்த ஏட் பொலிஸ் ஒருவன் ஒரு பெரியவருக்குக் கன்னத்தில் பளார் என அறைந்தான்.

"என்ன சிலோன் என நினைச்சியா? ஒழுங்கா வரிசையில நில்லு. தடுப்பூசி போடவேணும். ஊசியெல்லாம் போட்டுத் தான் உள்ள போகலாம். என்ன வருத்தத்தோடை வாறியளோ?"

மாடுகளுக்குப் போடும் பெரிய ஊசிகளை மனிதருக்குத் திணித்தார்கள். பின்னர் முகாமிற்குள் நுழைய அனுமதித்தார்கள். அது பொது மண்டபங்களைக் கொண்டிருந்தது. உறவுகள் கட்டி அணைத்துக் கொண்டன. சுக துக்கம் விசாரித்துக் கொண்டார்கள். அழுவதும் சிரிப்பதும் யார் யார் உயிரோடு உள்ளனர் என்று விசாரிப்பதாகவும் பொழுது கழிந்தது. முதலில் ஆளுக்கு எழுபத்தைந்து ரூபா பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை கொடுக்கப்பட்டது. அதனைக் கொண்டு தான் சமாளிக்க வேண்டி வந்தது. மைக்கலின் மாமன் குடும்பத்தினர் அங்கு முன்னரே வந்திருந்தனர். அவர்களுடன் அவன் தற்காலிகமாகத் தங்கினான். பிரச்சினை ஆரம்பமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 4

**ம**ண்டப முகாமில் இருக்கும் போது ஒருநாள் மைக்கலின் மாமனை கியூபிரான்ச் பொலிசார் அழைத்துச் சென்றனர். காரணம் தெரியாமல் அவர் கலங்கிப் போனார். அவரை விசாரித்துவிட்டு விட்டுவிட்டார்கள். நான்காம் நாள் கியூ பிரிவுப் பொலீசார் மைக்கலை ஓர் அதிகாலைக் கூட்டிப்போயினர்.

"உன் பெயர் என்ன?"

"மைக்கல்"

"உன்னைப் பற்றி நான் கூறுகிறேன். பிழையென்றால் திருத்து.. பொய் சொன்னால் தண்டனை அதிகம். வேலூர் சிறையில களி தான் தின்ன வேணும்"

தன் மாமனிடம் விசாரித்துத் தன்னைப்பற்றிய செய்திகளை அவர்கள் தெரிந்து கொண்டார்கள் என மைக்கல் உணர்ந்தான். மாமா பயத்தில் அவனைப்பற்றி எல்லாவற்றையும் உளறிவிட்டார் எனப் புரிந்தது. உண்மைகளையே பேச வேண்டும். அவன் எச்சரிக்கை ஆனான்.

"நீ விடத்தல்தீவு என்ற இடத்தைச் சேர்ந்தவன். அப்பா கடற்றொழிலாளி. ஒரு தம்பி, மூன்று தங்கச்சிமார் முதலில் நீ இயக்கத்திலிருந்தாய். பத்து வருடத்துக்கு மேல் இருந்தாய். சண்டைகளில் பங்கு பற்றினாய். அப்பா சில வேளை எல்ரிரிஈயினருக்குப் படகுவிட்டார். சண்டைகளில் நீ காயம் பட்டிருக்கிறாய். உன்னை மன்னாரில் இராணுவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கப்பார்த்தது. நீ மாற்றியக்க ஒருவனின் உதவியோடு தப்பி வந்தாய்."

மைக்கல் குறுக்கிட்டான். "சேர் நீங்க சொன்னவை மெத்தச் சரிசேர். ஒரு திருத்தம்..நான் இயக்கத்திலிருந்து விலகி வந்து சமூகப் பணிகளில் ஈடுபட்டேன். தொண்டர் ஆசிரியனாகக் கடமை ஆற்றினேன். இப்ப மதபோதகராகப் பணியாற்றுகிறேன் எனக்கு இரத்தம் சிந்துவது பிடிக்கவில்லை. ஆண்டவனுக்கு சேவை செய்யிறன்."

"சரி..ஆனால் நீ எல்ரிரிஈ தான். மன்னாரில் ஏன் குடும்பத்தாரை விட்டுவிட்டுத் தனியனாக ஓடிவந்துவிட்டாய் வரும்போது இயக்கத்திலிருந்து ஒரு பெண்ணைக் கூட்டி வந்திட்டாய். அவ இப்ப இங்க தான் இருக்கா.. அந்தப் பெண்ணுக்கு கா.்.வ் ஸ்கேட் பிளவுஸ் வாங்கிக்கொடுத்திருக்கிறாய் உன் மாமாவின் விருப்பத்துக்கு மாறாக"

மைக்கலின் தலையில் பேரிடியாக இறங்கியது.

"இவை பொய் சேர்.."

"இதுவரை நீ உண்மைதான் பேசிவந்திருக்கிறாய் நம்புகிறோம். .எல்ரிரிஈயில இருந்ததை வெளிப்படையாக ஒப்புக் கொண்டவன் நீ ஓராள் தான். உண்மையாகச் சொல் நீ கூட்டி வந்தது இயக்கப் பெண் தானே? அவளும் தனியத்தான் வந்திருக்கிறாள். அயலவர் ஒருத்தர் தன் பெறாமகள் எனப் பதிந்திருக்கிறார்.."

"இது சரியில்லைச் சேர். அவளையும் அவள் கூட வந்தாக்களையும் நான் நாச்சிக்குடாவில் தான் கண்டன். அதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் அவர்களைத் தெரியாது. இங்கை வாறதுக்கு உதவிசெய்தன். உடுத்த உடுப்போடு வந்ததால் மாற்றுவதற்கு மனிதாபிமானமாகச் சட்டைகள் வாங்கிக் கொடுத்தன். நான் ஒருக்காலும் பொய்சொல்லவில்லைச் சேர். சமய ஊழியம் செய்பவன் நான். பொய் சொல்லவில்லை. நம்புங்கள்''

விசாரணை மண்டபத்தின் அறையொன்றலில் சுமதியும் சில யைன்களும் அடைபட்டிருப்பதை மைக்கல் காணநேர்ந்தது. அவர்களுக்குப் பச்சைமட்டைகளால் அடிகளும் நடந்திருந்தன. மைக்கலின் இதயம் சுமதியை எண்ணிக் கவலைப்பட்டது. தன்னை நம்பி தனுஸ்கோடி வந்த பெண். வந்தவிடத்தில் தன்னால் சிக்கிக் கொண்டாள்.

"நீ உண்மைசொன்னதால தப்பிக் கொண்டாய். அந்தப்பெண் சொன்னவையும் நீ சொன்னவையும் ஒத்துப்போகுது. நம்ப முடியுது. உங்களை இப்ப விடுகிறோம். இங்கயே இரண்டு பேரும் இருக்க வேணும். விசாரணை முடியு மட்டும் இருக்க வேணும். மற்றவை போல வெளியில போகப்படாது,'

அறையைத் திறந்து சுமதியை வெளியே கொண்டு வந்தனர். அவள் முகம் அழுதழுது சிவந்திருந்தது. அவர்களை விசாரித்தவன் கடைசியாக மைக்கலிடம் சொன்னான்:

"என்ன ஆக்கள் நீங்கள். அகதியாக இருக்க இங்க வந்திட்டு ஒருத்தரையொருதர் காட்டிக் கொடுக்கிறியள். நாங்கள் விசாரித்துவிட்டு வேலூருக்கு அனுப்பி வைக்கிறோம். வேறு வழியில்லை. மைக்கல். நீ ஊழியம் செய்யிறாய்.. உண்மை பேசுகிறாய். உங்களில இரக்கம் வருகிறது. உங்களைப்பற்றி நான் ஒரு குறிப்பும் எடுக்கவில்லை. நானும் உங்களைப்போல தமிழன் என்றதால். உன்னால் இந்தியாவுக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்துமில்லை என நம்புவதால் உனக்கு ஒன்று சொல்லுறேன். இங்கு விசாரணைக்கு உங்களை அழைத்ததை ஆருக்கும் வெளியிடவேண்டாம். இன்னமும் அகதிகள் வருவார்கள். உங்களைத் தெரிந்தவர்கள் வரலாம். காட்டிக்கொடுக்கலாம் யாராவது புதிய அதிகாரி விசாரிக்கலாம் தன்னுடைய பதக்கங்களைக் கூட்டிக் கொள்வதற்காக வேலூருக்கு உங்களைச் சிபார்சு செய்து அனுப்பிவிடலாம் அதனால் உங்களை வேறு முகமுக்கு அனுப்பச் சிபார்சு செய்கிறேன். மண்டபத்தைவிட்டு வெளியேறி எங்காவது மாறிவிடுங்கோ. அது தான் நான் உங்களுக்குச் செய்யக் கூடியது.."

அந்த அதிகாரி சென்றதன் பின்னர் அவர்கள் வெளியே வந்தார்கள். சுமதி பேயறைந்தவள் போலக் காணப்பட்டாள். விழிகளிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

"என்னை எப்படியாவது இலங்கைக்கு அனுப்பிவிடுங்கோ.. அங்கை போய் அக்காவின்ர மடியில் சாகப்போறன்"

"சுமதி என்ன கதைக்கிறியள். ஆண்டவர் துயரத்திலும் ஒளி காட்டுவார். கியூ பிறானஞ் விசாரணைக்குச் சென்று திரும்பி வந்திருக்கிறது நாம் தான். அதுக்கு நன்றி கூறுவோம்"

"நீங்க கூறலாம். உங்களை அன்று காலை தான் விசாரணைக்குக் கூப்பிட்டுவிட்டு விசாரித்து விட்டு விட்டார்கள். என்னை அப்படியல்ல. நேற்றுப்பின்னேரம் கூப்பிட்டார்கள். இரவிரவாக விசாரித்தார்கள். அறையில் அடைத்தார்கள். இனி நானேன் வாழவேணும்."

அவள் விம்மி அழுதாள்.

"சுமதி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு பெண்ணுக்கு என்ன அவசியம்...அதை நான் இழந்திட்டேன். சென்ற இரவு ஒரு தலைப்பா அதிகாரி என்னைக் கெடுத்திட்டான். கெஞ்சிப் பார்த்தன். உங்களை நம்பித்தான் வந்தோம் எனக் கூறிப்பார்த்தன். அவன் கேக்கவில்லை."

மைக்கல் தலை சிதறியது போல உணர்ந்தான். மண்டப முகாமில் இன்னொரு பக்கம் இருக்கிறது.

"உங்களை நம்பித்தான் படகேறி வந்தேன். என்னை நீங்க போற இடத்துக்குக் கூட்டிப் போங்கோ.. இனி நானேன் இருப்பான்.."

மைக்கல் நெகிழ்ந்து போனான். தன்னையறியாமல், "நானிருக்கிறன் சுமதி." என்றான். "உன்னை எப்படியாவது அக்காமாருடன் சேர்ப்பிப்பேன்."

அவனை நன்றியோடும் வியப்போடும் சுமதி பார்த்தாள்.

"நீர் நல்லா யோசியும் ஆண்டவர் எங்களைச் சோதிப்பது காரணத்தோடு த்தான். எங்களைப் புடம் போடத்தான். நாம் நினைக்கிறது போல நடப்பதில்லை. நடந்ததுகளை மறந்துவிடும். வரவிருந்த பெரிய தீமைக்கு இது முன்னுரை போல. நாங்க ஒழுக்கம் என்று நினைக்கிறது எல்லாம் மனதிலதான் இருக்கிறது அதை ஒரு அக்சிடெண்ற் எனவிட்டிடும். மறந்திடும்.."

"எப்படி என்னால முடியும்? இனி எப்படி வாழப்போறன்? எனக்குத் தெரியவில்லை.. உங்களைப் பார்க்கவே கூச்சமாக இருக்கது. அக்காமாருக்குத் தெரிந்தால்..?"

அவள் அழுதாள்.

"நான் பாவி..உங்களுக்கு ஏற்றவளல்லள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டவர் போட்ட முடிச்சாக இருக்கலாம் நான் வேதக்காரன்.. நீர் சைவம். என்னை இப்படி ஒரு சம்பவத்தை ஆண்டவர் நடாத்தி நினைக்க வைச்சிட்டார். நடக்கிறது எல்லாம் நன்மைக்கு என நம்புவம்."

**அ**ந்த அதிகாரி கூறியவாறு அதன் பின்னர் சம்பவங்கள் நடந்தன. அன்று மாலை ஒரு பஸ் வந்து முகாம் வாசலில் நின்றது.

"இங்கு இருந்து பத்து குடும்பத்தினர் திருநெல்வேலிக் காம்பிற்குப் போகப் போகிறீர்கள். லிஸ்ற் செலக்ட் பண்ணி வந்திருக்குது. குடும்பம் குடும்பமாகப் பெயர்களை வாசிக்கிறேன்."

பெயர்கள் வாசிக்கப்பட்டன.

"எங்களோட பதிந்த பெறாமகள் சுமதியின் பேர் வாசிக்கப்படவில்லை" எனக் கந்தையர் தெரிவித்தார்.

"எங்களோட இருக்கிற மைக்கல் பேர் கூப்பிடவில்லை.."

"அவங்கள் பெயர் இருக்குது.. பத்தாவது குடும்பமாக பதிந்திருக்குது. தனிக்குடும்பமாகப் பதிவு..மைக்கல். சுமதி"

"அவங்களுக்குக் கலியாணம் ஆகவில்லை'

"அது எனக்குத் தெரியாது.. அங்க இருந்து விசாரித்த பின்னர் லிஸ்ரில பெயர் வந்திருக்குது. போக விரும்பினால் பஸ்சில ஏறுங்கோ.. அவ்வளவு தான். கியூ பிறான்ஞ் விசாரணை முடிஞ்சாக்களுக்குப் பெயர் வந்திருக்குது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கலை அர்த்தத்துடன் சுமதி பார்த்தாள்.

திருநெல்வேலியில் தியாகராஜநகரில் இருந்து புதிய மாநில பஸ் நிலையத்துக்குச் செல்கின்ற வீதியில் அந்த அகதி முகாம் அமைந்திருந்தது. அந்த முகாமில் பத்து குடிசைகளை அவர்களுக்கு ஒதுக்கி இருந்தார்கள். மைக்கலுக்கும் சுமதிக்கும் ஒரு குடிசை ஒதுக்கப்பட்டிருந்து.

"தம்பி. அங்க போகமாட்டம்: வேண்டாம் என்றிடாதையுங்கோ. மாறி சாறி இருக்கலாம்"..

மைக்கலும் சுமதியும் அக்குடிசைக்குள் குடி புகுந்தனர்.

"பயப்படாதையுங்கோ..நான் கடவுளுக்குப் பயந்தனான். நம்புங்கோ."

"உங்களை நம்பாமல் இனி ஆரை நம்பப் போறன்"

அந்த முகாம் சட்டங்கள் நெகிழ்வானவை. அகதி நிவாரணம் கிடைத்தது. காலையில் பெயர்களைப் பதிந்துவிட்டு ஏதாவது வேலைக்குப் போகலாம். பின்னர் மாலைக்குள் முகாமுக்குத் திரும்பி வந்துவிடவேண்டும். சில்லறைகள் இருந்தால் அந்த முகாம் வசதிகள் அதிகம். அகதி நிவாரணத்தோடு கூலிக்கும் செல்வதைப் பரவாய் பண்ணாமல் இருந்தார்கள். ராஜா மாதிரி இருக்கலாம். இடையிடையே வாசலில் காவல் இருப்பவனுக்கு மைக்கல் சில வேளைகளில் பெயின்ற் வேலை, றோட்டுப் போடுகிற வேலை,, பனஞ்சிராய் பிளக்கிற வேலலை முடிந்து வரும்போது சிகரெட் வாங்கி வருவான்.

"பீடி வாங்கி வா தம்பி. அது தான் எனக்கு வேணும்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்கலினையும் சுமதியையும் குடும்பமாக இருப்பதாக முகாமிலிருந்த பலர் நம்பியதால் அது பாதுகாப்பாக இருந்தது. சுமதியால் அதனை உணரமுடிந்தது. சுமதியை வேலைக்குச் செல்ல மைக்கல் அனுமதிக்கவில்லை.

**ம**ழை பெய்த ஒருநாளில் பின்னேரம் வழமையிலும் பார்க்க நேரகாலத்தோடு மைக்கல் முகாமுக்குத் திரும்பி வந்தான் வழியில் தன் மாமனைச் சந்தித்தான். அவர் அவன் மீது இரக்கப்பட்ட மாதிரிப் பேசினார்:

"எப்படி இருக்கறாயடா.. "

"நல்லா இருக்கிறன் மாமா."

"நீ தனியப் போனதில் உன் மாமிக்கு சந்தோசம்.. உன்னைக் கூட வைச்சிருக்கிறதில் அவவுக்கு விருப்பமில்லை. கியூ பிறான்ஞ்சால் நான் விசாரிக்கப்பட்டபிறகு சரியாப் பயப்படுகிறா. நீ கெட்டிக்காரனடா. உன்னோட மனிசியாகக் கூட அங்கேயிருந்து கூட்டி வந்த சுமதியைப் பதிந்து தனிக் குடும்பமாகிவிட்டாய். எப்படியடா அது சாத்தியமானது?"

"எனக்குத் தெரியாது.."

"பொய் சொல்லாதை.. அது சரி இப்ப ஒண்டா இருக்கிறியள்..? கலியாணம் செய்யாமலே ஒரு குடிசையில சீவிக்கிறியள்?"

"விசர் கதை கதையாதையுங்க.. மாமா .. நான் வாறன்."

அவன் தன் குடிசைக்குத் திரும்பி வந்தபோது ஒரு மூலையில் சோர்ந்து போய் சுமதி அமர்ந்திருந்தாள். அழுதிருப்பாள் போலப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன நடந்தது, சுமதி?”

சுமதியால் எதுவும் பேசத் தெரியவில்லை. நீண்ட வற்புறுத்தலின் பின்னர் காரணம் தெரிவித்தாள்.

“நான் இனி எப்படி வெளியில தலை காட்டுவன்? நான் கெட்டுப்போனதன் பலாபலனை அனுபவிக்கப் போறன். எப்படியாவது அதை அழிச்சு விடுங்கோ.. நான் இந்தப் பாவத்தோடு எப்படி அக்காமார் முன் முழிப்பன்” சுமதி விம்மி விம்மி அழுதாள்.

“இதோ பார் சுமதி. ஆண்டவர் தந்த உயிரை அழக்கின்ற உரிமை ஆருக்குமில்லை. காரணமில்லாமல் ஆண்டவன் எதையும் நடாத்த மாட்டார். அமைதியாக இரு சுமதி. அது இப்ப என் குழந்தை. அது ஒரு பாவமும் செய்யவில்லை..” மைக்கல் பரிசுத்தமான மனதோடு பலவாறாக எடுத்து உபதேசித்தான். அவள் மனதை வெகு சிரமத்தின் பின்னர் அமைதியடையவைத்தான்.

மைக்கல் எவ்வளவு உயர்ந்த மனத்தினன் என அவள் எண்ணிக் கொண்டாள். பிறந்த குழந்தையைத்தன் குழந்தை என்று பெயர் பதிந்து கொள்ள எவ்வளவு மனத்திடம் தேவை. வம்பில் பிறந்தாலும் அந்த அழகான குழந்தை அவனை ‘அப்பா’ எனக் கூப்பிடக் கற்றுக்கொண்டது. அதன் மீது பாசம் செலுத்த அவனும் கற்றுக் கொண்டான். ஒரே குடிசையில் வாழ்ந்த மூன்றாண்டுகளும் அவன் எவ்வளவு கண்ணியமாக நடந்த கொண்டான். அந்த முகாமிலிருந்து வெள்ளாங்குளத்துக்கு அவள் போட்ட மூன்று கடிதங்கள் திரும்பி வந்தன. அக்காமார் இருக்கும் இடம் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாண்டுகள் ஓடி மறைந்தன. முகாம் வாழ்க்கை அவர்களுக்குப் பழகப்பட்டு விட்டது.

"நாங்க இலங்கைக்குத் திரும்பிப் போவமா? சண்டை குறைந்து பழைய இடங்களுக்கு ஆக்கள் திரும்பி வந்திட்டினமாம். போவமா?"

அந்த எண்ணம் மைக்கலுக்கும் அடிக்கடி வந்தது.

"அது அவ்வளவு இலகுவல்ல. சுமதி. வர அனுமதிப்பது போல திரும்பிப் போக அனுமதிக்க மாட்டினம் கள்ளமாகத் தான் போக வேணும். இதுக்கு முதல் படகோட்டி ஒருவனை அமர்த்த வேண்டும். அவன் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தை அடைந்து காத்திருக்க வேண்டும். கியூ பிரிவினரிடம் அகப்படக் கூடாது."

இரகசியமாக இலங்கைக்கு அழைத்துச் செல்லும் படகோட்டி ஒருவனை மைக்கல் சந்திக்க நேர்ந்தது. தங்கச்சிமடம் என்றவிடத்தின் ஊடாக சவுக்கங்காட்டில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து, பின்னர் மணல் மேடுகளிடையே அரைநாள் மறைந்திருந்து படகில் ஏறினார்கள் சுமதியும் குழந்தையும் நன்றாகக் களைத்துவிட்டார்கள். பயந்து பயந்து பயணப்பட்டு தலைமன்னார்க் கரைக்கு அப்பால் முதல் திட்டில் இறங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 5

மலர் வீட்டு முற்றத்தை விளக்குமாற்றால் பெருக்கிக் கொண்டிருந்தாள். வேப்பமரச் சருகுகள் சொரிந்திருந்தன. தலைவாசல் ஏணையில் ஒரு வயது நிரம்பிய ஆண் குழந்தையொன்று உறங்கிக் கொண்டிருந்தது. அதிகாலையில் எழுந்து கடையைத் திறக்க மகேந்திரன் போய்விட்டான். மலரைக் கலியாணம் கட்டியபின்னர் அவன் பெரிதும் மாறிவிட்டான். வயல் வேலைகளையும் பொறுப்போடு கவனித்துக் கொண்டு தேநீர்க்கடையையும் பார்த்துவந்தான்.

முழங்காவிலில் அகதியாகச் சிலகாலம் இடம்பெயர்ந்திருந்த பொன்னையா குடும்பத்தினர் வெகு சிரமத்தின் பின்னர் மல்லாவியில் மைதிலியையும் மலரையும் கண்டு பிடித்தனர்.

மைதிலியின் திருமணத்தை மகேந்திரனுடன் முடித்துவிடப் பொன்னப்பர் அவசரப்பட்டார். இறந்து போன மச்சானுக்குச் செய்ய வேண்டிய கடமை என நினைத்தார்.

மைதிலியும் மலரும் அடைக்கலம் புகுந்திருந்த இயக்க முகாமில் அவளை அவரும் மாமியும் சந்தித்திருந்தார்கள். மழை பெய்து ஓய்ந்திருந்த வேளை.

“உன்ரை கலியாணத்தைக் கெதியில் வைத்திடுவம் பிள்ளை. இனியும் கால தாமதப்படுத்தக் கூடாது. நாள் வைப்பம்.. சுமதி வருவாளெனப் பார்க்க முடியாது. மைதிலி. அவள் இந்தியாவுக்குப் போனவையோடு போய்விட்டாள். எல்லாம் சரியானதும் திரும்பிச் சுகமாக வருவாள்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் இந்தக் கலியாணத்துக்கு ஒப்புக்கொள்ள மாட்டன்,? மாமா.. இந்த காம்பைவிட்டு வரமாட்டன். பொதுநல உணர்வோடு எத்தனை பெண் பிள்ளைகள் இங்கே தம்மை அர்ப்பணித்துவிட்டு இருக்குதுகள். என்னை ஒருக்காலும் வற்புறுத்தாதையுங்கோ மாமா. நான் இப்படியே இருந்து விட விரும்புகிறன”

“நீ ஆரையாவது விரும்புகிறியா, பிள்ளை? மகேந்திரனைப் பிடிக்கவில்லையா? உன் கொப்பர் முருகேசருக்கு நான் செய்ய வேண்டிய கடமை இந்தக் கலியாணம்”

தமக்கையை மலர் அர்த்தத்தோடு பார்த்தாள். தமைக்கையின் இதயத்தில் ஆரம்பத்தில் இடம் கொண்ட அந்த இளைஞன் நினைவில் வந்தான். பெற்றோரிடம் அனுமதி பெற்று வருவதாகக் கூறிச் சென்றவன் . திரும்பவே இல்லை. மன்னார் கந்தோரில் தான் தொடர்ந்து வேலைசெய்வதாக அண்ணன் கூறியிருக்கிறான்.

“மாமா ஒன்று சொல்லுவன். எங்கட ஐயாவுக்கு நீங்க கடமை செய்வதாக இருந்தால் மகேந்திர அத்தானுக்கு மலரைக் கட்டி வையுங்க. ஒண்டுக்குள்ள ஒண்டு.. என்னை விட்டிடுங்கோ.. அத்தானுக்கு நான் ஏற்றவளல்ல. மலர் பொருத்தமானவள். அத்தானை என்னை மன்னிக்க சொல்லுங்க”

தமைக்கையின் வார்த்தைகளைக் கேட்டு மலர் திகைத்துவிட்டாள்.

“அக்கா இதென்ன? நான் மாட்டன்”

அதன் பின்னர் எவ்வளவோ நடந்தேறிவிட்டன. பவானிக்கும் மாணிக்கராசாவுக்கும் நடந்த திருமண மேடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரனுக்கும் மலருக்கும் திருமணம் நடந்தது. பெரும் வாதத்தின் பின்னரே அத்திருமணத்துக்கு மகேந்திரன் ஒப்புக் கொண்டான். இன்று அவர்களுக்கு ஒரு வயதுப் பையன் இருக்கிறான். முருகேசரின் வீட்டிற்கு சில திருத்தங்களுடன் அவர்கள் குடிவந்துவிட்டார்கள். பொன்னப்பரின் வீட்டுக்குத் திருமணத்தின் பின்னர் மாணிக்கராசா போய் விட்டான்.

அலுவலகத்தில் கதிரையில் வந்து மணிசேகரன் அமர்ந்தபோது மாணிக்கராசா ஜீப்பை நிறுத்திவிட்டு வந்தான். என்ன என்குமாப்போல அவனை நிமிர்ந்து பார்த்தான்

“இண்டைக்கு வெள்ளிக்கிழமை சேர். நான் வெள்ளாங்குளம் இண்டைக்குப் போக வேண்டும். ஒரு நாள் லீவு தேவை சேர்.”

மணிசேகரன் புன்னகைத்தான்.

“நீ கலியாணம் செய்ததும் அடிக்கடி லீவெடுக்கிறாய்.. சரி உன்ரை லீவு தானே? பொங்கலுக்கு லீவு எடுத்திடாதை.. முழங்காவிலுக்குப் போக வேண்டும். இயக்கத்தினர் விசாரணைக்குக் கூப்பிட்டிருக்கிறார்கள். தவறாமல் போக வேணும். உன்ரை வீட்டையும் போய்வரலாம். அது சரி உன் தங்கச்சிமார் எப்படி இருக்கினம்?”

“மூத்ததங்கச்சி மைதிலி பெரிய பதவியில் இயக்கத்தில் இருக்கா.. நம்பவே முடியவில்லை. அவவுக்குள்ள இப்படியொரு எண்ணம் இருந்திருக்குது. மகேந்திரனைக் கட்டிக்கொள்ள மறுத்திட்டா. காரணம் தெரியவில்லை.. மாமாவின்ர மனதை மாற்றி மலரைக் கட்டி வைச்சிட்டா. இயக்கத்தில சேர விரும்பியிருக்கிறா. கடைசித் தங்கச்சி சுமதி அகதியாகத் தப்பி ஓடியிருக்கிறா..தெரிஞ்சவையோட இந்தியாவுக்கு ஓடிப்போயிட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ தன்ரை விருப்பப்படி ஆரையோ கலியாணம் கட்டிவிட்டாவாம் ஏன் அவசரப்பட்டாளோ தெரியவில்லை. சின்ன வயது தான் ஆகிறது. திருநெல்வேலி முகாமில இருக்கிறாவாம். இங்க வரப்போவதாகக் கடைசிக் கடிதத்தில எழுதியிருக்கா.."

மணிசேகரன் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். மைதிலியின் முடிவிற்கு ஒருவகையில் அவனும் காரணமாக இருந்துள்ளான். அவன் அவளைக் கலியாணம் கட்டுவதாக முடிவு செய்திருந்தால் அவள் இன்று தன் முடிவையே மாற்றியிருப்பாள். தன் பெற்றோரின் வார்த்தைகளைத் தட்டமுடியாதவன். சகோதரிகளுடன் கூடப்பிறந்த குற்றத்துக்காக சிறைப்பட்டவன். யாழ்ப்பாண சமூகத்தின் குடும்பச் சூழலுக்கு அவன் கட்டுப்பட்டுவிட்டவன். சகோதரங்களுடன் பிறந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் காதல் வசப்படமுடியாது. மணிசேகரனின் இதயம் அழுதது. ஒரு கிராமப் பெண்ணை ஏமாற்றிவிட்டதாக உள்ளம் கண்ணீர்விட்டது. 'அவளைக் கட்டினி என்றால் நஞ்சு குடிக்கிறன்' என்று தாயும், 'உத்தரத்தில் தொங்குகிறன்' என்று தகப்பனும் அவனைப் பயமுறுத்திவிட்டார்கள்..

அதற்குள் மைதிலி போராளியாகியமை, போர்க்களங்களில் துணிச்சலுடன் போராடியமை, இறுதிக் களத்தில் காயம் பட்டு வலது காலில் முழங்காலுக்குக்கீழ் இழந்தமை. பொய்க்காலுடன் இயக்கத்தின் நிர்வாகத்துறைக்கு மாறியமை எவ்வளவோ நடந்தேறிவிட்டன. அவன் ஒரு தங்கையின் திருமணமும் நடந்து விட்டது.

"தம்பி. உனக்கொரு கலியாணம் பார்க்கட்டே? உன்ரை மாமா வற்புறுத்திறாரடா.."

பெற்றாரின் கேள்விக்கு அவனிடம் ஒரு பதில் ஆயத்தமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எனக்கிப்ப கலியாணம் வேண்டாம். சில காலம் போட்டும்.. பார்ப்பம்” என்பான்.

கடைசியாக அவன் தாய் ,'அப்ப நீ விரும்பிய அந்தக் கிராமத்துப் பெண்ணையாவது கட்டிக் கொள்ளு நான் சம்மதிக்கிறன். நான் சாகிறதுக்கு இடையில் மருமகளைப் பார்த்திடுகிறன்.'என்று கெஞ்சியும் பார்த்தாள்.

“காலம் கடந்து போச்சுது அம்மா”

பஸ் வண்டி மிகவும் சங்கடப்பட்டு மன்னார் வீதியில் நகர்ந்தது. இருக்கைகளில் மைக்கலும் சுமதியும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். சுமதியின் மடியில் அவளின் குழந்தை பிரதீபன் உறங்கிக் கொண்டிருந்தான்.

“முதலில் நாங்கள் வெள்ளாங்குளம் போறம் அங்கை உங்களை விட்டுவிட்டு: நான் என்ர வீட்டுக்குப் பேந்து போறன்.”என்று மௌனத்தைக் கலைத்தான் மைக்கல். சுமதி சிந்தனை வயப்பட்டாள். ஷெல்கள் விழுந்து பலியெடுக்கின்ற ஒரு நள்ளிரவில் வீட்டைவிட்டு ஓடியதிலிருந்து நடந்தவை அனைத்தும் மனத்திரையில் படமாக ஓடியது. யாரிடமோ பெற்றுக்கொண்ட குழந்தைக்குத் தகப்பனாகத் தன் பெயரைப் பதிந்து ஓரறைக் குடிசையில் தன் கௌரவத்தைக் காப்பாற்றி மூன்றாண்டு வாழ்ந்து தங்களைப் பராமரித்த மைக்கலின் பெருந்தன்மையை அவள் நினைத்து நெகிழ்ந்தாள். இன்னும் சில மணிப்பொழுதில் அவளின் வீடு வந்துவிடும். அவர்களை வீட்டார் எப்படி வரவேற்பார்கள்? ஏற்றுக் கொள்வார்களா? தன்னையும் குழந்தையையும் விட்டுவிட்டு மைக்கல் நிரந்தரமாகவே போய்விடுவானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்சின் குலுக்கலில் குழந்தை சிணுங்கியது. மைக்கல் குழந்தையை அன்போடு தூக்கிக் கொண்டான். தன் தோளுடன் பாசத்துடன் இறுக அணைத்துக்கொண்டான். அவன் நினைவிலும் பலத்த யோசனைகள். இன்னும் சில மணிகளில் தன்னோடு வாழ்ந்து சிரித்த பாசத்தை இழந்து விடுவானோ? சுமதியைத் தமக்கைமாரிடம் விட்டுவிட்டு தனியனாகத் திரும்ப நேரிடுமோ? அவன் யார், சுமதியின் தாலி கட்டிய கணவனா? பிரதீபனின் தந்தையா? சுமதி அவனை ஏற்றுக்கொள்வாளா? அவள் சகோதரிகள் அவனை தங்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்வார்களா? அவன் வேதக்காரன். அவள் சைவக்காரி.

"எங்களைவிட்டுவிட்டு நீங்கள் போய் விடுவியளா?"

"வேறென்ன சுமதி?"

"உங்களை தீபனை விட்டிட்டு இருக்க முடியுமா?"

"உங்களை விட்டிட்டு இருக்கிறது கஷ்டம் தான் சுமதி. ரெண்டு பேரையும் விட்டிட்டு எப்படி இருக்கப்போறனோ தெரியவில்லை. என்னைவிட்டிட்டு எப்படி அவன் உறங்கப் போறானோ?"

"எங்களுடனேயே இருந்து விடுங்களேன். ஏன் காம்பிலிருந்து திரும்பி வந்தமோ?"

"இப்படி எத்தனை காலம் இருக்கிறது? உம்மடை சகோதரங்கள் ஒப்புக் கொள்ளாயினம். எங்கடை வீட்டார் ஒப்புக்கொள்ளாயினம். சுமதி நீர் எனக்கு ஒரு வாக்குத் தரவேணும்" அவன் இரந்தான். வெளியே வானம் இருளத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சொல்லுங்க..என்ன வாக்கு?”

“அவன் அனாதையல்லன். தீபனின் தந்தை நான் தான். இவன் என் குழந்தை. இந்த இரகசியத்தை காப்பாற்றவேணும். கடைசிவரை காப்பாற்ற வேணும். உண்மையை ஒருத்தரிடமும் சொல்லக் கூடாது. அவன் வாழ்க்கையில் அவப்பெயர் வரக்கூடாது.”

“அப்படியெண்டால் நாங்கள்” அவள் தயங்கினாள்: “உங்களுக்கு நான் பொருத்தமானவளல்லள். தூய்மையில்லாதவள். நான் அப்படிப் பேராசைப்படக்கூடாது..”

அவன் அவளை அன்போடும் காதலுடனும் ஏறிட்டான்.

“நீ என்னை ஏற்றுக் கொள்வாயா?”

சுமதியின் வலக்கரம் முதன் முதலாக அவனது இடக்கரத்தினைப் பற்றியது. கொலை வெறியோடு ஆயுதத்தைப் பற்றியபோது ஏற்படாத இனிமையை அந்த இளம் கன்னியின் கரப்பற்றுதலால் அவன் உணர்ந்தான். வாழ்க்கையின் அர்த்தம் புரியத் தொடங்கியது.

முழங்காவில் பிள்ளையார் கோயில் கோபுரத்தில் குவிந்திருந்த புறாக்கள் அகவியபடி புறுபுறுப்பதைப் பார்த்தபடி மணிசேகரன் ஜீப்படியில் நின்றிருந்தான். பத்துமணிக்கு விசாரணைக்கு வரும்படி அவனை அழைத்திருந்தார்கள். மணிசேகரன் ஒன்பது மணிக்கே பணி மனைக்கு முன் வந்துவிட்டான். வந்தபிறகு அடம்பன்குளம் சார்பில் அம்பலவாணரும் வேறு சில பங்காளரும் வந்திருக்கிறார்கள் என்ற உண்மை தெரிந்தது. விசாரணைக்குரிய விடயம் எதுவாக இருக்கும் என்பது தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து மணிக்கு அவ்விடத்துக்கு ஒரு இயக்கத்தின் ஜீப் வந்து நின்றது. விசாரணை செய்வதற்கு வந்திருந்தார்கள். மணிசேகரன் தயாரானபோது ஜீப்பின் முன் சீற் கததைவத்திறந்து கொண்டு கம்பீரமான ஒரு பெண் இறங்கினாள். அவள் ஜீன்ஸ் அணிந்து சேர்ட்டை வெளியில் விட்டு இடுப்பில் பெல்ட் இறுகக்கட்டியிருந்தாள். அவள் உயரத்துக்கு இந்த உடுப்பு அவளுக்கு எடுப்பாகவிருந்தது. மணிசேகரன் அவளை எதிர்பார்க்கவில்லை. சீருடையில் மைதிலி வெகு எடுப்பாக இருந்தாள். அப்பிரிவின் விசாரணைப் பொறுப்பாளருக்குப் பதிலாக மைதிலி வந்திருப்பது தெரிந்தது. அமைதியான ஒரு பெண் இவ்வளவு பொறுப்போடு கம்பீரமாக வருவாள் என நம்பவில்லை. ஊரறியாமல் உலகறியாமல் வாழ்ந்த பெண் இன்று விசாரிக்கப்போகின்றாள்.

மைதிலி அனைை எதிர்பார்க்கவில்லை. எஞ்சினியர் தரத்தில் ஒருவரை எதிர்பார்த்தாள். விசாரணை சுருக்கமாக ஆரம்பமாகியது.

"அடம்பன்குளமும் வெள்ளாங்குளமும் தனித்தனிக் குளங்கள்? இரண்டிற்கும் தண்ணிவரத்து வெவ்வேறு..?" மைதிலி வினவினாள் அவனிடம்.

"ஓம்.. தனித்தனி குளங்கள்..அடம்பன் முறிப்புக்குளம். .அதனால் அடம்பன் குளத்து வெள்ளநீர் வழிந்தோடி வெள்ளாங்குளத்துக்குள்ள வரும். அதனால் அந்த நீரை வெள்ளாங்குளத்தார் அனுபவித்து வருகிறார்கள்.."

"அடம்பன்குளம் கட்டுப்பட்டால் முழுத்தண்ணியும் தடுக்கப்பட்டிடும்"

"வெள்ளாங்குளம் பாதிப்படையும்.. ரெண்டும் மானாவாரித் தரைகள். சிறுபோகத்தில் சிறிது நீர் எடுத்தன. நானறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலிருந்து அடம்பன்குளம் தரிசாகிவிட்டது. வயல்கள் கைவிடப்பட்டுள்ளன. வெற்றுக்குளம் தான்"

"எங்கட குளம் கட்டப்படவேண்டும்" என்றார் அம்பலவாணர்.:"எங்கட குளத்துத் தண்ணியை நாங்கவிட்டுக் கொடுக்க மாட்டம். எவ்வளவு கஷ்டப்பட்டு ஜிஏயைச் சம்மதிக்க வைச்சிருக்கிறம்."

"பரம்பரை பர்பரையாக நாங்க பாவிக்கிற தண்ணி"

"ஊர் இரண்டு படக்கூடாது.. கட்டிறதை நிற்பாட்டுங்கோ. இந்த விசாரணை மீண்டும் நடக்கும். பொறுப்பாளர் வைப்பார். நான் முடிவு சொல்ல ஏலாது"

அவள் எழுந்திருந்தாள்.

"மைதிலி.."என்றான் அவன்.

"என் பெயர் மைதிலியல்ல. என் பெயர் இப்ப துர்க்கா. கப்ரின் துர்க்கா"

ஜீப்பில் ஏறும்போது அவள் கேட்டாள்: "குழந்தை இருக்கா?"

"எனக்கின்னும் திருமணம் ஆகவில்லை, மைதிலி"

ஜீப்பில் ஏறப்போனவள் தயங்கி நின்றாள். நெடு மூச்சு வெளிப்பட்டது. இதயம் குமுறுவது போலப்பட்டது. அவள் காலைத் துண்டித்தபோது ஏற்படாத வேதனை நெஞ்சில் படர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏன்?” - இதற்கு அவன் என்ன பதில் கூறுவான். அவனுக்கு வார்த்தைகள் தயங்கிநின்றன. அவளை மணந்து கொள்ள அவன் இப்போதும் தயாராக இருந்தான்.

“தங்கச்சிமார் கலியாணம் செய்திட்டினமா?”

“இன்னமும் ஒரு தங்கச்சி இருக்கா..நான் காத்திருக்கிறன்”

“அப்படியா”, என்றவள் மாணிக்கராசா பக்கம் திரும்பி, “வீட்டை வெள்ளாங்குளம் சனிக்கிழமை வாறன் சுமதி வந்திருக்கிறாவாம். வாருங்கோ கதைப்பம்” என்றாள்.

ஜீப் புறப்பட்டது. ஏமாற்றம் அவனைத் தழுவியது.

புழுதியைக் கிளப்பியபடி விரையும் அந்த வண்டியைப் பார்த்தான்.

“உம் தங்கச்சி நல்லா வளர்ந்திட்டா. கம்பீரமான தோற்றம்.” என்றான் மணிசேகரன்.

“ஓம் சோ. சண்டையில் அவவுக்கு பாதம் போச்சுது. .இப்ப சண்டைக்குப் போறவில்லை. .சுமதியும் வந்திட்டா. மைக்கலுக்கும் சுமதிக்கும் கலியாண எழுத்து எழுத இருக்கிறன்.”

“சொன்னனீர்.தங்கச்சிமாருடைய பிரச்சினைகளை எல்லாம் தீர்த்துவிட்டீர். மூத்த தங்கச்சி.. மைதிலி”

“என்ன செய்வது சேர்,?”

“இயக்கத்திலிருந்துவிலக முடியாதா”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விலகலாம். அனுமதி கொடுத்திருக்கினம். அவளுக்கு விருப்பமில்லை."

மணிசேகரன் தொண்டைக்குள் எதையோ சொல்ல தடுமாறினான்.

"விலகி வரச் சொல் மாணிக்கராசா. அவளை மனைவியாக ஏற்க நானும் மருமகளாக ஏற்க என்ர அம்மாவும் காத்திருக்கிறம்."

மாணிக்கராசா அவனை வியப்புடன் ஏறிட்டான். "மெய்யாவா, சேர்?"

"ஆம்.. அதுக்காகத் தான் நான் காத்திருக்கிறன். அவளுக்காகக் காலமெல்லாம் காத்திருப்பன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் பாகம்
## தாண்டவம்

# அத்தியாயம்: 1

முல்லைத்தீவு நந்திக்கடலுக்கு மேற்கே சார்ள்ஸ் பேஸ் அமைந்திருந்தது. உண்மையில் அது ஒரு பெரிய முகாம். பாதுகாப்பான பங்கர்கள், நில அறைகள் என்பனவற்றைக் கொண்டிருந்தது. இருநூறுக்கும் மேற்பட்ட களம் பல கண்ட போராளிகள் அதில் இருந்தனர். நாட்டில் நடக்கின்ற சண்டைகள் பலவற்றிலும் அடிக்கடி பங்கு கொள்வார்கள். கிளை முகாம்களுக்குக் கட்டளையிடும் அதிகாரத்தை அந்த முகாம் கொண்டிருந்தது. அந்த முகாமின் நேரடி மேற்பார்வையில் இரண்டு முகாம்கள் இருந்தன. ஒன்று போர்க்களத்தில் அங்கவீனமானவர்களைப் பராமரித்தல். மற்றையது அப பிரதேசத்தில் இடப் பெயர்வினால் குடியேறும் மக்களைப் பராமரிக்கும் பொறுப்பு.

அந்த முகாமிற்குப் பொறுப்பாளனாக நமக்கு நன்கு அறிமுகமான லெப்ரினன்ட் சத்தியன் நியமிக்கப்பட்டிருந்தான். மணலாற்றில் நிகழ்ந்த ஒரு யுத்தத்தில் காயம் பட்டு நிலத்தில் சரிந்த முக்கிய போராளித் தலைவனொருவனைத் தன்தோளில் பல கிலோ மிற்றர்கள் சுமந்து தூக்கி வந்து காப்பாற்றினான். அத்துடன் தங்களை எதிர்த்து வந்த யுத்த தாங்கியொன்றினை தனித்து நின்று சிதற அடித்தான். இரண்டு செயல்களையும் மெச்சி லெப்பிரினட் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டதோடு அந்த பேசிற்குப் பொறுப்பாளனாகவும் நியமிக்கப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெப்பிரனட் சத்தியனின் நிர்வாகம் வித்தியாசமானது. அன்பினால் அனைவரையும் அனைத்தையும் வெற்றி கொண்டான்.

அவனுடைய பேஸிலுள்ள பங்கரில் பலர் பல வித குற்றங்களுடன் இடப்பட்டிருந்தனர். பெரும்பாலோர் இயக்கத்துக்குரிய பணம் செலுத்தாதோர். சத்தியனின் நிர்வாகத்தில் அவர்கள் கட்ட வேண்டிய பணம் அறவிடப்பட்டதோடு விடுவிக்கப்பட்டனர். பங்கர்கள் ஆட்களின்றி வெறிச்சோடின.

ஒரு நாள் யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று வியாபாரிகள் இந்த பேஸிற்குக் கொண்டு வரப்பட்டனர். பங்கரில் இடுமாறு பணிப்பு வந்தது. ஆனால் சத்தியன் அவர்களைச் சாதாரண அறையில் சிறைவைக்குமாறு கட்டளையிட்டான். அவர்களைக் கண்டு பேசினான்.

"இதோ பாருங்கள். உங்களிடம் கேட்ட காசு நியாயமற்றதாக உங்களுக்குத் தோன்றலாம். உங்கள் சக்திக்கு மீறியதல்ல. உங்களது வருவாயை நன்கு விசாரித்து அறிந்த பின்னே இந்த முடிவு எடுத்திருக்கிறார்கள். கொஞ்சத்தைக் குறைக்குமாறு அப்பீல் பண்ணுங்கள். வீணாக பங்கரில் போட வைத்துவிடாதீர்கள். போடுமாறு கூறியும் அதனை நான் தாமதப் படுத்துகிறேன். பங்கர் வாழ்க்கை சுகமானதன்று. ஒரு தடவை அதனுள் இருந்தால் தெரியும். காசை உழைக்கலாம். வாழ்வையல்ல. அவர்களின் முடிவை மாற்ற முடியாது. கட்டிவிட்டுப் போங்கோ.. உங்கட நன்மைக்காக சொல்லுறன்."

இருவர் காசைக் கட்டித் தம்மை விடுவித்துக் கொண்டனர். ஒருவர் அப்பீல் செய்துள்ளார். முக்கோண முட் கம்பிக் கூண்டுக்குள் யாரையும் அவன் போடுவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணலாறு டொலர் பாமிற்குள் முடங்கிக்கிடந்த இலங்கை இராணுவம் இருந்தாற் போல செம்மலை நோக்கி நகர்ந்தது. அதனை முறியடிக்கும் பொறுப்பு சத்தியனின் முகாமிற்குக்கிடைத்தது. உக்கிரமான சண்டை. நடந்தது. இரு தரப்பிலும் பலர் பலியாகினர். ஷெல்கள் இரு முனைகளை நோக்கிப் பறந்தன. குண்டு மழை பொழிந்தது. சத்தியன் உக்கிரமாகப் பங்கு கொண்டான். தலைவரின் இருப்பிடத்தைக் கைப்பற்ற இராணுவம் முயல்வதும் அதனைக் காப்பாற்றப் போராளிகள் முயல்வதும் புலனாகியது. அந்தக் கடும் யுத்தத்தின் இறுதியில் இராணுவம் தோல்வியைத் தழுவியது. மூன்று இராணுவத்தினர் சரணடைந்தார்கள். அவர்களைக் கைது செய்து ஜீப்பில் ஏற்றும் போது அந்தச்சண்டைக்கு இரண்டாவது தலைமை வகித்த மாணிக்கன் திடமாக்க கூறினான்: "கைதிகளை கூட்டிச் செல்ல வேண்டாம் சுட்டு விடுங்கள்"

சரணடைந்து ஜீப்பில் ஏற்றப்பட்ட மூவர் பயத்தில் நடுங்குவது இருளிலும் தெரிந்தது.

"விசரன் போலக் கதையாதை மாணிக்கம். அவர்கள் வலியச் சரணடைந்தவர்கள். யுத்தத்தில் சரணடைந்தவர்களைக் கொல்வது நியாயமல்ல."

"நீங்கள் சொல்வது இருக்கட்டும். பல சண்டைகளில் அப்படித்தான் செய்தோம். கைது செய்து வைத்துப் பாதுகாப்பது சிரமம்."

"பேரம் பேசுவதற்கு கைதிகள் அவசியம்.. சரணடைந்தவர்களைக் கொல்ல என்னால் முடியாது. அதற்கு எவரையும் அனுமதிக்க மாட்டன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணடைந்த மூவரும் பங்கரில் இடப்பட்டனர். இறக்கும் பொழுதும் இருளில் அவர்களை தெரியவில்லை. களைப்பில் அவர்கள் சோர்ந்திருந்தார்கள்.

"காவலோடு பங்கரில் வையுங்கள்.. நாளை விசாரிப்போம்.." என்றான் சத்தியன்.."மூவர் சரணடைந்ததாக மேலிடத்துக்கு அறிவியுங்கள்."

சரணடைந்தவர்கள் போராளிகளால் வழங்கப்பட்ட சாறங்களை அணிந்து கொண்டனர். உணவு வழங்கப்பட்டது. பேயறைந்தர்கள் போலக் காணப்பட்டனர்.

**அ**டுத்த நாள் சத்தியன் அவர்களைக் காணச் சென்றான். தன்னை அவர்களில் ஒருவன் உற்று உற்றுப் பார்ப்பதை உணர்ந்தான். கறுத்து உரூ மாறி இருந்தாலும் அவனை அடையாளம் காண்பதில் சத்தியனுக்குக் கஷ்டமிருக்கவில்லை.

"நீ அமரதாஸவல்லே? என்ன அதிசய சந்திப்பு? மகே யாலுவ."

"நான் அமரதாஸதான். இது காசிம்.. உங்கட யாழ்ப்பாணத்து முஸ்லீம். இது தர்மசேன.. கப்டின் தர்மசேன.. நீ நீர் சத்தியன்?.. எவ்வளவு காலம்? இருவரும் எதிர் எதிர் தரப்பில் சந்திக்கின்றோம்.. எனது தாத்தா அம்மா சந்தோஷமாக நலமாக இருக்கினம். மாலினி கலியாணம் செய்யவில்லை. என்ரை தங்கச்சிமார் கலியாணம் கட்டி விட்டினம் உம்மடை அம்மா ஐயா சுகம்.. மெத்த சுகம்.. உம்மைத் தேடித்திரிந்தினம்"

சத்தியனும் சரணடைந்த இராணுவ வீரனும் சரளமாகச் சிங்களத்தில் பேசிக்கொண்டமை கூடவந்த பேஸ்காரனுக்குப் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னைப் போன்ற ஏழைகளுக்கு வேலை கிடைப்பதில்லை. பல தடவைகள் பல வழிகளில் முயன்று பார்த்தேன். பலனில்லை. இராணுவத்தில் சேர்ந்திட்டன். சிங்கள இராணுவத்தில் என்னைப்போன்ற ஏழைகளின் பிள்ளைகளே இருக்கின்றனர். எங்களை என்ன செய்யப்போகின்றீர்கள்?" என்று அமரதாஸ கேட்டான். அவன் குரல் உடைந்து போயிருந்தது.

"என்ன செய்வார்கள். சுட்டுவிடுவார்கள்.."என்றான் தர்மசேன.

"சீ அப்படிச் செய்யமாட்டம்"

"நீ இங்கிருப்பதைக்காண அதிசயமாக இருக்கிறது. நீ சிங்கள வீரர்களைச் சுட்டுத் தள்ளுகிறாய். நாங்கள் உங்களை.. இந்த அவலத்துக்கு முடிவில்லை. எங்களுக்குள்ளே பிரச்சினைகள் இருக்குது. ஒரு பகுதியும் தீர்க்காது.. இரு பகுதி அரசியல் அயோக்கியர்களும் விட்டுக் கொடுக்க மாட்டினம் இனவாதம் அரசியல் கதிரைகளைப் பிடிக்க நல்ல மருந்து. இடையில் எம் போன்ற அப்பாவிகள் பலியாக வேண்டியது தான். இதோ பார் சத்தியன் யாலுவா, என் கரத்தில் இருக்கின்ற துப்பாக்கிக்கு தமிழ் இளைஞன் பலியாகும்போது துடித்துப் போகிறேன். மாவிலாற்றில் சூடுபட்டு ஒரு சிறு தமிழ் பொடியன் 'அம்மா' எனத் துடித்தான். அக்குரலை இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை. ஏன் இந்த வீண் அழிவு? அந்த உணர்வை நீக்க முடியவில்லை."

சத்தியனின் பார்வை காசிமில் படிந்தது.

"நீர் யாழ்ப்பாணமா? எங்கை,?"

காசிமின் விழிகள் கலங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோனக தெரு என்கினம். நான் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும்போது உம்மாவிடம் பால் குடித்தேனாம். உடுத்த உடுப்போடு ஐநூறு ருபா காசுடன் கொட்டும் மழையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த 6000 முஸ்லீம் குடும்பங்களைத் துரத்தி விட்டீர்கள். இரவோடிரவாக விரட்டி அடித்தீர்கள். அகதிகளாக எங்கள் தாயகத்தைவிட்டு வெளியேறினோம். புத்தளத்தில் தஞ்சம் புகுந்தோம். எம் போன்ற பலர் இராணுவத்தில் இணைந்தோம். வேறு மார்க்கமில்லை. ஏன் துரத்தினீர்கள்? நாம் என்ன கேட்டோம்? எங்களைத் துரத்தியவர், காரணமாக இருந்தவர் இன்று அரசாங்கத்தோடு இருக்கிறார். கிழக்கில் தமிழருக்கும் இஸ்லாமியருக்கும் கலவரமெண்டால் வடக்கே பாரம்பரியமாக தமிழரோடு சகோதரர்களாக உடலும் சதையுமாக வாழ்ந்த நாமா பழி? என்ன நியாயம்?"

காசிமின் கேள்விகளுக்கு சத்தியன் பதில் பேசவில்லை. அவன் கேள்விப் பட்டவை தாம். இரவோடு இரவாக முஸ்லீம் மக்களைத் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து இடம் பெயர வைத்தமையை அவன் கேள்விப்பட்டிருக்கிறான். எவ்வளவு பரிதாபம். புலிகளின் வரலாற்றில் கறை படிந்த அத்தியாயம் அந்த நிகழ்ச்சி. அவர்களுடைய வரலாற்றில் முஸ்லிம் இளைஞர்கள் பலர் பங்கேற்ற நிகழ்ச்சிகள் பலவுள்ளன. இவை கனவாகிவிட்டன. போராட்ட வரலாற்றில் அவர்கள் இரண்டு பட்டுவிட்டார்கள். உடைந்த மண் பாண்டம் ஒட்டப் போவதில்லை. எதிரணியில் இருந்து பிடிபட்ட காசிம் கேட்கிறான்.

"எங்களை என்ன செய்யப் போகிறீர்கள்?" இவர்களின் கேள்விக்கு சத்தியனால் விடை சொல்ல முடியவில்லை. புலிகளின் சிறையில் ஏற்கனவே இருபத்தாறு சிங்களவர் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவனுக்கு நம்பிக்கையில்லை. அன்றிரவு சத்தியனால் தூங்க முடியவில்லை. அவன் கண்களில் [illegible]தாஸவின் உருவம் தோன்றிக் கொண்டே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம். அவர்களை இரகசியமாகப் போட்டுத் தள்ளும்படி கட்டளை வரலாம். அல்லது அவர்கள் வேறு முகாமிற்கு மாற்றப்படலாம். அவன் சிநேகிதன் அமரதாஸவை அவன் எப்படிக் காப்பாற்றுவான்?

"நீ அமரதாஸ மாவிலாற்றில் இருந்தியா? அங்கு என்ன நடந்தது?"

"இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றதும் முதன் முதலாக மாவிலாற்றுக்குத்தான் அனுப்பிவைத்தனர். அச்சண்டையில் நான் பங்கு பற்றினேன். அதன் பின்னர் வாகரை..பின்னர் மகாஓயா..அதன் பின்னர் தொப்பிக்கலப்பகுதி.. எல்லாச் சண்டைகளிலும் நானிருந்தேன்..என்ன நடந்ததா? 'ஒருவன் கெடுவதாயின் குதிக் காலில் சனி பிடிப்பதாக' உங்க அம்மே அடிக்கடி கூறுவார்கள். எல்ரிரிஈயை திழக்கில் மாவிலாற்றில் சனி பிடித்தது என்பேன். மாவிலாற்று நீரை சிங்கள விவசாயிகளின் வயல்களுக்கு விடாது மறித்தார்கள் எல்ரிரிஈயினர். தங்கள் கிராமத்துக்குக் குடிப்பதற்கும் தண்ணியில்லை. மாவிலாற்று விவசாயிகளுக்குத் தண்ணியா? என மறித்தார்கள். சுலுசைப் பூட்டினார்கள். விளையும் நிலையிலிருந்த பயிர்கள் தலை சோர்ந்தன. சிங்கள விவசாயிகள் அரசிடம் முறையிட்டார்கள். அரசு எல்ரிரிஈயிடம் எவ்வளவோ கேட்டுப் பார்த்தது ஏமாற்றம் எஞ்சியது. மாவிலாற்றை வைத்து அரசைப் பணிய வைக்க எலிரிரிஈ எண்ணியது. முடியவில்லை. அரசு படைப்பலத்தைப் பிரயோகித்தது. மாவிலாற்றுக் குளத்தைக் கைப்பற்றியதோடு மாவிலாற்றுக் கிராமத்திலிருந்த எல்ரிரிஈயினரையும் அடித்துத் துரத்தியது. அந்த வெற்றி அரசை திடமாக முடிவு செய்ய வைத்தது. தொடர்ந்து தனது தாக்குதலைத் தொடர்ந்தது. எல்ரிரிஈயினர் எதிர்பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அரசின் அடுத்த தாக்குதலுக்கு மூதூர் உட்பட்டது. நானும் அனுப்பப்பட்டேன். அங்கு தாக்கியது மூதூரிலுள்ள சம்பூர் என்ற இடத்தில் எறிகணைகளைப் பொருத்தி திருகோணமலைத் துறைமுகத்தில் நின்ற கப்பல்களைத் தாக்குவதில் எல்ரிரிஈ ஈடுபட்டது. சம்பூரில் எல்ரிரிஈ இருப்பது ஒரு பெரும் சவாலாக இருந்தது. மாவிலாற்றைக் கைப்பற்றியவுடன் மூதூரைக் கைப்பற்ற இராணுவம் முடிவெடுத்தது. புலிகளின் முக்கிய கடற்தளமாகவும் கப்பல்தளமாகவும் சம்பூர் இருந்தது. அது திருகோணமலைத் துறைமுகத்துக்கு எப்போதும் ஆபத்தாக இருந்தது. திருகோணமலை தென் கடலில் 400 எல்ரிரிஈ வீரர்களும் 1000 மக்கள் படையும் இருப்பதாகக் கணித்தனர். சம்பூரில் எல்ரிரிஈ யினரின் 122மிமி ஆட்டலறிகள் இரண்டும், 120 மிமி மோட்டார் லோஞ்சர்கள் மூன்றும் 106 ஆர்சிஎல் கண்கள் இரண்டும் இருப்பதாக அறிந்தனர். இம்முறை எதிரியின் பலத்தைச் சரிவரக் கணக்கிட்ட பின்னரே படை புறப்பட்டது. முதலில் கட்டைபறிச்சான், மஹிந்தபுரம், பச்சனூர், தோப்பூர், செல்வநகர் பகுதிகளில் இராணுவம் நிறுத்தப்பட்டது.. சம்பூர் எங்களால் செப்டம்பர் 4, 2006 இறுதியில் கைப்பற்றப்பட்டது. எல்ரிரிஈ யினர் தப்பி வாகரைக்கு ஓடினர்.

“அடுத்து எங்களது வாகரை கதிரவெளித் தாக்குதல் கடுமையாகவிருந்தது. நாங்கள் வாகரை நோக்கி நகர்ந்தோம்.. வாகரையிலிருந்த 30 ஆயிரம் மக்களுடன் சம்பூரிலிருந்து இடம் பெயர்ந்த 20 ஆயிரம் மக்களும் சேர்ந்து கொண்டனர். இவர்களைக் கேடயமாகக் கொண்டு எல்ரிரிஈ யினர் சண்டை துவங்கினார்கள். மக்களைக் காப்பாற்றும் விதத்தில் இராணுவம் 8 பேர் கொண்ட அணிகளாகப் பிரிந்து கெரில்லா யுத்தத்தை மேற்கொண்டது. எல்ரிரிஈ யினர் இதனை எதிர்பார்க்கவில்லை. இரு பகுதியினரிலும் பலர் இறந்தார்கள். பள்ளிக்கூடங்கள், கோயில்கள் என்பனவற்றைத் தவிர்த்து எறிகணைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசப்பட்டதாக இராணுவம் தெரிவித்தது. எனினும் சிவிலியன்கள் ஏராளமாக இறந்தனர். இராணுவம் நெருங்கிவிட்டதாகக் கேள்விப்பட்ட அகதி மக்கள் ஓடித்தப்ப முயன்றனர். எல்ரிரிஈ அதற்கு அனுமதிக்கவில்லை. சிலவிடத்து துப்பாக்கிப் பிரயோகமும் செய்தது. அவற்றையும் மீறி மக்கள் காடுகள், கடனீரேரிகள், சதுப்புகள் ,என்பன ஊடாக நகர்ந்தனர். பரிதாபம். கடனிரேரிக்குள் மகவொன்றைப் பெற்றெடுத்த தாய் அதனையும் தூக்கிக் கொண்டு நடக்க நேர்ந்தது. டிசம்பர் 15 இல் 30 ஆயிரம் அகதிகள் மட்டக்களப்பைச் சேர்ந்த றிட்டிதனா பகுதியில் இராணுவத்திடம் அடைக்கலம் புகுந்தனர். கொடூரமான காடுகளைக் கடந்து ஆயிரக்கணக்கில அகதிகள் திருகோணமலை செல்வாநகரையும் அடைந்தனர். இறுதியில் வாகரை கதிரவெளி பகுதிகள் இராணுவ வசமாகின.

"எல்ரிரிஈ யினரில் எஞ்சியோர் தப்பி ஓடி தொப்பிக் கலக்காட்டை அடைந்தனர். தொப்பிக்கலக் காட்டைத் தாக்குவதற்கு முதல், நாங்கள் செங்கலடி - மகாஓயா வீதியை விடுவிப்பதில் கவனமெடுத்தோம். இந்த வீதி எல்ரிரிஈ யினரின் கட்டுப்பாட்டில் 1994 இலிருந்து 14 ஆண்டுகள் இருந்தது. இதனூடாக தொப்பிக்கல புலிகளின் முகாமிற்கு இராணுவ தொடர்பிருந்தது. வண்ணாத்திவில்லு, கொக்கட்டிச்சோலை, அம்பலம்துறை, குருக்கள்மடம், மாவலிமுனை, வெல்லாவெளி ஆகிய பகுதிகள் முதலில் கைப்பற்றப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் கேந்திர முக்கியத்தும் தொப்பிகல் காட்டிற்குண்டு. புலிகளின் முக்கிய முகாம்கள், பயிற்சி மையங்கள் இங்கிருந்தன. கிழக்கு மாகாணத்தில் புலிகளின் முக்கிய பதுங்குமிடம் தொப்பிகலவாகும். முதலில் தொப்பிக்கல முகாமுக்குரிய இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. ஏற்கனவே அம்முகாமிலிருந்த ஜெயம், ரமேஸ், நாகேஸ் என்போர் புலிகளின் இயக்கத்திலிருந்து விலகியிருந்தனர். கிழக்கில் புலிகளிடையே பிளவு காணப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு வசதியாக இருந்தது. 6 டபிள்கப், 4 வான்கள், 7 றக்ர்கள், 7 கன்ரர் லொறிகள், 19 மோட்டார் சயிக்கில்கள் , ஒரு நிசான் ஆடம்பரக்கார் என்பன கைப்பற்றப்பட்டன. இந்த யுத்தத்தில் 211 புலிகள் கொல்லப்பட்டனர் எல்ரிரிஈ யினரின் கிழக்கின் பிரதான முகாம் வீழ்ந்தது. கிழக்கில் அவர்களின் ஆதிக்கம் மறைந்தது. இன்று வடக்கிலும்." என்றான் அமரதாஸ. தொடர்ந்தான்: "பிரபாகரன் போல இனி ஒருவர் வர முடியாது. தகுந்த வழி காட்டுதலின்றி மனம் போன போக்கில் நடந்து முடிவைத் தேடிக்கொண்டார். நிச்சயம் இம் முறை வடக்கை நீங்கள் இழப்பீர்கள் சத்தியன். சரணடைந்து தப்புங்கள்."

அவனால் இரவு முழுவதும் நித்திரை கொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 2

**கி**ழக்கில் கிடைத்த வெற்றி வன்னிப்பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றி விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை விடுவிக்கும் எண்ணத்தை அரசுக்கும் இராணுவத்துக்கும் ஏற்படுத்தின. 2007 செப்டம்பர் 02 ஆம் திகதி சிலாவத்துறை முழுமையாக இராணுவ வசமாகியது. ஏ 9 வீதிக்கு மேற்கே யுத்தம் தொடங்கியது. வவுனியா - மன்னார் வீதியில் எல்ரிரிஈ யினரின் முன்னணி அரங்கை துவமிசம் செய்வதில் படையினர் மார்ச் 23 தொடக்கம் மார்ச் 25 வரை ஈடுபட்டனர். அதன் பின்னர் கல்மடு,பெரியதம்பனை, மடு பகுதிகளை நோக்கி நகர்ந்தனர். ஆரம்ப மோதலில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதில் 6 அதிகாரிகள் அடங்குவர். 91 ஏனைய தரத்தினர் காயமுற்றனர். 45 புலிகள் பலியாகினர். இராணுவத்தின் முன்னேற்றத்தை முன்னணி அரங்கிலிருந்து தடுக்க எல்ரிரிஈ யினர் படாதபாடு பட்டனர். முடியவில்லை. தம்பனை, பெரிய தம்பனைப் பிரதேசங்களைக் காப்பற்ற புலிகள் முயன்றனர். தோல்வி கண்டு பின் வாங்கினர். படைகள் முன்னேறின. இந்த யுத்தத்தில் 75 பேராளிகள் வரை இறந்தனர்.

அதேவேளை ஓமந்தையிலிருந்து வடக்கே ஒரு நகர்வு மேற்கொள்ளப்பட்டது. இதனூடாக முன்னர் வடக்குக்கு மக்கள் போக்குவரத்து நடந்தது. பொம்பைமடுவில் வைத்திருக்கின்ற இராணுவத்தின் ஆட்டிலறி இருந்தது. இதனை புலிகள்130 மிமி ஆட்டிலறி கொண்டு தாக்கி அழித்தனர். அதற்குப் பதிலாக பொம்பைமடுவிலிருந்து 30 கிமீ அப்பால் பாலியகுளம் பகுதியிலிருந்து புலிகளின் ஆட்டிலறித் தளம் இராணுவத்தால் அழிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் எல்ரிரிஈ யினர் தம்பனை - மடு - பறையனாலங்குளம் பகுதியை யூன் 5 தாக்கினர். அதே நாள் மூண்டுமுறிப்புப் பகுதியும் புலிகளால் தாக்கப்பட்டது. 20 புலி உறுப்பினர் இறந்தனர். புலிகள் தோல்வி கண்டனர். அதே நாள் நிகழ்ந்த பொம்மைமடு வன்னேரிக்குளம் சண்டையில் 62 புலிகள் இறந்தனர். 17 இராணுவம் இறந்தது. அவர்களின் 15 சடலங்கள் புலிகளால் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இடை மறித்த வானொலி மூலம் யுத்தத்தில் இறந்த புலிகளின் பெயர்கள் சொல்லப்பட்டன. குட்டி, ஆனந்தன், கந்தகுமார், மைதிலி அக்காவின் தம்பி தவசேகரன், கலைச்செல்வன் ஆகியோராவர். அந்த யுத்தத்தில் தவசேகரனும் இறந்தான்.

ஒரே நேரத்தில் பல போர்முனைகள் திறக்கப்பட்டமை புலிகளுக்கு சங்கடமாகவிருந்தது. மல்ரி - பரல்கள் முன்னாடியே குண்டுகளைக் கக்க இராணுவம் பின் தொடர்ந்து முன்னேறியது. கிராமமக்கள் முன்கூட்டியே நகரத்தொடங்கினர். மல்ரி பரல் தாக்குதல்களால் மாண்ட சடலங்களை அவ்வாறே கைவிட்டுவிட்டு ஓடினர். வடக்கு நோக்கி சிங்கள இராணுவம் முன்னேறத் தொடங்கியது. எதிர் பார்த்த மாதிரி எல்ரிரீயினரின் எதிர்த்தாக்குதல்கள. இருக்கவில்லை. விடத்தல் தீவு பேஸ் தரைமட்டமாகியது. விடத்தல் தீவின் போராளிகள் வெள்ளாங்குளத்துக்கு பின் வாங்கினர். ஷெல் வீச்சுக்களும் குண்டுகளும் கிராமங்களை நோக்கி அளவு கணக்கின்றி வீசப்பட்டன. இராணுவம் முன்னேறி வருகின்றது என்பதற்கு அறிகுறியாக அவை அமைந்தன. கிராம மக்கள் அனைவரும் தம் வீடுகளைவிட்டு இடம் பெயரத் தொடங்கினர்.

விடிகாலையே குண்டுகள் விழுந்து வெடிக்கத்தொடங்கின. விடத்தல்தீவு பேஸில் இருந்த போராளிகள் சொல்லாமற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாமல் இரவே வெள்ளாங்குளத்துக்கு இடம் மாறி விட்டார்கள். 'அரசியல் இராஜதந்திரமென' வரதன் சொன்னான். 'பின் வாங்குமாறு மேலிடத்து உத்தரவு.' அந்தோணிமுத்தரும் பிள்ளைகளும் ஊராரோடு இடம் பெயர்ந்து வடக்கே நடக்கத் தொடங்கினார்கள். எறிகணைகள் வந்து விழுந்த வேகத்தில் இராணுத்தின் முன்னேற்றம் தெரிந்தது. அரியத்தையும் சுகந்தியையும் பிள்ளைகளையும் 'ஓடி நடவுங்கோ' என்றார் அந்தோணிமுத்தர்.

"பொடியள் நம்பி ஏமாத்திப் போட்டான்கள்." என்று திட்டித் தீர்த்தார். அவர்களுக்குப் பின்னால் இராணுவம் பின் தொடர்ந்து வருவது போல உணர்வு.

"வெள்ளாங்குளத்திலும் தரித்து நிற்க முடியாது. நேரே துணுக்காயுக்கு ஓடுங்கோ..வெள்ளாங்குளம் பேசும் மூடியாச்சு..முழங்காவில் ஆக்களும் இடம் பெயர்ந்துவிட்டினம். பூநகரியே பரந்தனை நோக்கி ஓடுது.."

சுகந்தியை ஏமாற்றம் தாக்கியது. இவ்வளவு சுலபமாகப் பொடியள் பின் வாங்குவார்களென அவள் எண்ணியிருக்கவில்லை. எதுவித எதிர்ப்புமின்றி வலியத் தூக்கிக் கொடுப்பது போல நடக்கிறார்களே? இவ்வளவு காலமும் போட்டது வெளி வேஷமா,?

அவர்கள் வெள்ளாங்குளத்தை நெருங்கியபோது. வெள்ளாங்குளத்து கிராமமக்கள் துணுக்காய் நோக்கி நகரத் தொடங்கியிருந்தார்கள்.

"போன முறை மாதிரி திக்கிக்கொருவராகப் போய் விடாதீர்கள். கவனமாக எல்லாரும் ஒன்றாக வாருங்கள். என்ன மாலதி, சுமதி புரியுதா, ? மைக்கல் கவனமாகக் குழந்தையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வாருங்கோ. நல்ல வேளை இம்முறை வீட்டில் அவரும் நின்றிட்டார். அம்மானும் மாமியும் தான் நடக்கப் பஞ்சிப்படுகிறார்கள்.எங்கட விதி" என்றாள் மலர் நடந்தபடி. மகேந்திரன் தன் பிள்ளையைத் தூக்கியிருந்தான். மைக்கல் பிரதீபனைத் தூக்கி வந்தான்.

கையில் அகப்பட்டவற்றோடு மக்கள் வெள்ளமாக நகர்ந்தனர். குண்டுச்சத்தம் எழுந்து கொண்டிருந்தது. இறுதி யுத்தமும் மாபெரும் இடப் பெயர்வும் நிகழத் தொடங்கியது. மன்னார் மதவாச்சி வீதியிலிருந்து இராணுவம் படை நகர்வை ஆர்ப்பாட்டமாகச் செய்தது. சொத்தழிவுகள், உயிரழிவுகள் ஏற்பட்டன. சடலங்களை அந்த அந்த இடங்களில் நாய், காகங்களுக்கு உணவாக விட்டும் தகனம் செய்தும் மக்கள் அவலமாக இடம் பெயர்ந்தனர். வெள்ளாங்குளம் வீதியூடாகவும் பரந்தன் வீதியூடாகவும் மக்கள் நகர்வு நடந்தது. ஆடுமாடுகளை அவிழ்த்து துரத்தி விட்டு மக்கள் தம் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள ஓடினர்.

மக்கள் அகதிகளாக ஓரிடத்தில் தங்க முடியவில்லை. அவ்விடத்துக்கு அடுத்த நாள் இராணுவம் வந்துவிடும்.

"எல்லாரும் முல்லைத்தீவுக்கு நகரவும் ஒட்டிசுட்டான் பகுதிக்குச் செல்லவும். அங்கு தங்க வசதிகள் செய்து தரப்படும்." என அறிவிக்கப்பட்டது.

பரந்தன் கைவிடப்பட்டது. கிளிநொச்சி கைவிடப்பட்டது விடுதலைப்புலிகளின் எதிர்ப்பின்றி இராணுவம் இலகுவாக முன்னேறியது. கிளிநொச்சி நகரில் அவர்களால் கட்டப்பட்ட கட்டமைப்புகள் அனைத்தும் தரைமட்டமாகின் நீதிமன்றக்கட்டிடம். காவல் நிலையம். நிர்வாகக் கட்டிடம், ஹொட்டல்கள், பங்கர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் அனைத்தும் மண் திட்டாகின. மக்கள் புலிகளைக் கடைசி வரை நம்பினார்கள். புலிகள் பின்வாங்கி ஓரிடத்தில் சேர்ந்து தாக்கி பதிலடி கொடுப்பார்களென நம்பினார்கள். சுகந்தி திடமாக நம்பினாள். கிளிநொச்சியிலாவது இராணுவம் முறியடிக்கப்படுமென மலர் நம்பினாள். 3 இலட்சம் வன்னி மக்களை குறுகிய நிலப்பரப்பில் தங்க வைத்த புலிகள் முல்லைத்தீவில் முடங்கினர். புலிகளின் இந்த இராஜதந்திரம் எவருக்கும் புரியவில்லை. இவ்வளவு காலமும் மக்களையும் அரசையும் உலகத்தையும் வெருட்டியதா? என்ன பயமுறுத்தல்கள்?.

இந்த வன்னிப்பிரதேசம் ஏறத்தாழ 2000 சதுர கிலோ மிற்றர் பரப்பைக் கொண்டது. இரண்டு மாவட்டங்களாக கிளிநொச்சி முல்லைத்தீவு பகுதிகளைக் உள்ளடக்கியது. இரண்டு மாவட்டங்களும் பத்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளைக் கொண்டன. வன்னிப்பிரதேசத்தில் 79 சதவீத பரப்பு அடர் காடாக விளங்கியது. அடர்காட்டுப்பகுதி எல்ரிரியினரின் இரகசிய நடவடிக்கைகளுக்கு உதவின. இந்தப்பிரதேசம் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக எல்ரிரிஈயினரின் நிர்வாகத்தில் உள்ளன. அவர்களுக்கென தனி டம்மி அரசாங்க அதிபர், நீதிமன்றங்கள். பொலிஸ் நிலையங்கள். வங்கிகள், கஸ்டம்ஸ், ஹாட்டல்கள், போக்குவரத்துகள் என்று அனைத்தும் இருந்தன. வன்னியின் முடிசூடா மன்னர்களாக எல்ரிரிஈயினர் விளங்கினார்கள். அவர்களது வன்னிப்பிரதேசத்தை வெகு இலகுவாக இராணுவம் கைப்பற்றி முல்லைத்தீவில் நிலைத்தது.

இந்த இரு மாவட்டங்களையும் சேர்ந்த சிவிலியன்கள், உதவி அரசாங்க அதிபர்கள் உட்பட சகல உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் எனப் பல்சாராரும் இடம் பெயர்ந்தார்கள். நந்திக்கடலுக்கு.மேற்கே 'நோ பயர் சோன்' பிரதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாரங்களிலும் குடிசைகளிலும் திரளாகக் குடியேறினார்கள். நந்திக்கடலுக்கு கிழக்கே இலங்கை இராணுவம் நிலை கொண்டிருந்தது. இடம் பெயர்ந்த மக்கள் குடியிருப்புகளுக்கு அப்பால் எல்ரிரிஈ போராளிகளின் தளங்கள் இருந்தன. அவர்கள் தாக்கப்படும்போது மக்களே பலியாகத் தொடங்கினர். சனத்திரளிடையே ஷெல்களும் எறிகணைகளும் எண்ணிக்கையற்றுத் தாக்கும்போது அப்பாவி மக்கள் அவற்றிற்கு இரையாகினர். அதனால் மக்களைக் கவசங்களாக எல்ரிரிஈ பயன்படுத்துகின்றனர் என்று குற்றம் சாட்டப்பட்டது. நாளாந்தம் நூற்றுக் கணக்கில் மக்கள் இராணுவத்தின் எறி கணைகளுக்கு இரையாகினர். அதனால் சர்வதேச அழுத்தங்கள் ஏற்பட்டன. அவற்றிலிருந்து மீள மக்களை நந்திக்கடலுக்கு அப்பால் எடுக்க வேண்டுமென இராணுவம் எண்ணியது. ஒரு பக்கம் இராணுவம் மறு பக்கம் எல்ரிரிஈயினர். நடுவில் அப்பாவி மக்கள் கூட்டம்.

நந்திக்கடலுக்கு மேற்கே கூடாரங்களில் குடியேறியவர்களில் அந்தோணிமுத்தர் குடும்பத்தினர் இருந்தனர். அவர்களது கூடாரத்துக்குச் சற்றுத்தள்ளி மலரின் குடும்பத்தினர் இருந்தனர். நாளாந்தம் குண்டு வீச்சுக்குப் பலியாகும் மக்களைப் பார்த்தும் கேட்டும் சுகந்தி வருந்தத் தொடங்கினாள்.

யாழ்ப்பாணத்தின் முதல்வர் துரையப்பாவை பிரபாகரன் பொன்னாலைக் கோயிலில் வைத்து முதன் முதல் சுட்டுக் கொலைசெய்தமையோடு ஆரம்பித்த போராட்டம் இன்று இவ்வளவு பெரிய ஆலமரமாக வளர்ந்து விட்டது. தமிழர் கூட்டணித்தலைவர் அமிர்தலிங்கத்தின் பேச்சுக்கள் அதற்கு நீர் பாய்ச்சின. 1990 பின்னர் போராளிக் குழுக்கள் ஆதிக்கம் பெற்றன. 1992 யாப்புக்கு ஆதரவாக இருந்த தமிழ் அரசியல்வாதிகள் இருந்தவிடம் தெரியாமல் பலிக்கடாக்கள் ஆகினர். சிறிதாக ஆரம்பித்த புலிகள் இயக்கம் பலமானதாக மாறியது. தமிழ் இளைஞர்களைக் கைது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விசாரித்த தமிழ்ப் பொலிசார் கொல்லப்பட்டனர். பஸ்தியாம்பிள்ளை கொலை உச்சமாக அமைந்தது. 1985 இல் டொலர் - ஹென்ற் பாமில் இருந்தவர்கள் கொல்லப்பட்டனர். 1987 இல் அறவந்தாலவில் வாழ்ந்த 33 பௌத்த பிக்குகள் கொல்லப்பட்டனர். 1988 இல் அனுராதபுரம் படுகொலைகள் நிகழ்ந்தன. 1990 இல் காத்தான்குடியில் தொழுகையிலீடுபட்டிருந்த 147 முஸ்லீம்கள் படுகொலையாகினர். அமைச்சர் ரஞ்சன் விசயரெத்தின, ஜனாதிபதி பிரேமதாஸ ஆகியோர் கொல்லப்பட்டனர் .இந்தியப்பிரதமர் ராஜிவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இராணுவத் தளபதிகள் பலர் கொலையுண்டும் படு காயமடைந்தும் போயினர். இவை நிகழுந்தபோது ஆரவாரமிட்டு புலிகளை உற்சாகப்படுத்திய மக்கள் இன்று யாவற்றையும் இழந்து கூடாரங்களில் நித்திய சாவுடன் வசிக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் பழி வாங்க இராணுவம் நந்திக்கடலுக்குக் கிழக்கே காத்திருக்கிறது.

இனக்கலவரங்கள், விமானக் குண்டு வீச்சுக்கள், எறி கணைகள் மூலம் அழிந்துபோன தமிழ் மக்கள் எண்ணிக்கை கணக்கிடமுடியாது. இரண்டு பக்கங்களிலும் நியாயமுள்ளது. பழிக்குப் பழி.

நாளாந்தம் பலியாவதைவிட அடைக்கலம் புகுவது மேலென மக்கள் எண்ணத் தலைப்பட்டனர். இராணுவம் இருந்த பக்கமாக வரத்தொடங்கினர். பலரைச் சுட்டும் பங்கரிலிட்டும் ஆரம்பத்தில் தடுத்த எல்ரிரிஈயினர் இறுதியில் அம்முயற்சியைக் கைவிட்டனர். ஒன்று இரண்டாக ஆரம்பித்த அகதிகளின் வருகை கால கட்டத்தில் இலட்சக் கணக்கில் அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 3

மல்ரி பரல் தொடர் லோஞ்சர்கள் முதலில் வன்னேரிக்குளம்-அக்கராயன் குளப் பிரதேசத்தில் தொடர்ந்து வெடித்தன. அதனைத் தொடர்ந்து ஷெல்கள் பரவி வந்து முழுமூச்சுடன் விழுந்தன. வானத்தில் கிபிர், மிக் விமானங்கள் தோன்றிக் குண்டு மழைபொழிந்தன. வன்னேரிக்குளம்-அக்கராயன்குளம் பகுதிகளைத் துப்பரவு செய்தன அவற்றைத்தொடர்ந்து துப்பாக்கிச் சன்னங்கள் பொழிய இலங்கை இராணுவம் முன்னேறத் தொடங்கியது.

குண்டுச் சன்னதங்கள் முடிந்த பின்னர் புரட்சி என்பவனின் தலைமையில் எல்ரிரிஈ போராளிகள் வன்னேரிக்குளக்கட்டிலும் வெள்ளாங்குளம் - அக்கராயன் வீதியிலும் நிலை எடுத்தனர். வடக்குத் தெற்காக ஒன்றரை மைல்கள் நீளமான குளக்கட்டை வன்னேரிக்குளம் கொண்டிருந்தது. பெரிய மரங்கள் சோலையாக வளர்ந்திருந்தன. குளத்தின் நடுவில் நீர் தேங்கியிருந்தது. அண்மையில் பெய்த மழையினால் நீர் வரத்தொடங்கியிருந்தது. எங்கிருந்தோ ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து இடம் பெயர்ந்த கூழைக்கடாக்கள் குளத்தின் மத்தியில் மீன் பிடித்து வாயிலிருந்த பையில் நிரப்பிக் கொண்டிருந்தன. பிடித்த மீனைத் துடிதுடிக்க வானில் எறிந்து மீண்டும் வாயால் பற்றி விழுங்கின.

குளக்கட்டில் வளர்ந்திருந்த நெடிய மரமொன்றின் மறைப்பில் தனசேகரன் நிலையெடுத்திருந்தான். கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஏனைய போராளிகள் மறைவெடுத்திருந்தனர். குளத்தில் மீனை விழுங்கிக் கொண்டிருந்த கூழைக்கடாக்களை இரசித்தவாறு தனசேகரனின் விழிகள் குளத்துக்கு அப்பால் காட்டெல்லையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்திருந்தன. நிச்சயம் குளத்தினைக் கடந்து எதிரிகள் வருவார்களென அவர்களின் தலைவன் புரட்சி கணித்திருந்தான். அவன் கணிப்பு பொய்க்காது.

தூரத்தில் துப்பாக்கிச் சன்னங்கள் வெடிக்கும் சத்தம் எழுந்து கொண்டிருந்தது. சன்னங்களின் சப்தத்திலிருந்து அவர்கள் போராளிகளின் எதிர்ப்பைச் சமாளிப்பது புரிந்தது. அந்த எதிர்ப்பிலிருந்து வெளிப்பட்டதும் இங்கு அவர்களை எதிர்கொள்ளப் படை காத்திருக்கிறது. முதல் தலைக் கறுப்பு காட்டெல்லையில் கண்டதும் சுடவேண்டாமெனப் புரட்சி கட்டளையிட்டிருந்தான். அவர்கள் குளக்கட்டில் ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களின் மறைவில் நிலை கொண்டிருப்பதை அறியக்கூடாதென்பது அவனது கருத்தாகும். எதிரிகள் சுட்டபடி குளத்தின் நீரைச்சுற்றி வந்தார்கள். அவர்களின் வருகை நன்கு தெரிந்ததும் இவர்களின் துப்பாக்கிகள் முழங்கின. எதிரிகள் அதனை எதிர்பார்க்கவில்லைப் போலப்பட்டது. தனசேகரின் ஏகே 47 இலிருந்து வெளிப்பட்ட குண்டுகள் மூவரைப் பலியெடுத்தன. 'பொத் பொத்' தென நிலத்தில் சரிந்தனர். மரங்கள் பலவும் சுட்டன. புற்றீசல்கள் போல சிங்கள இராணுவம் முன்னேறியது.

இருந்தாற்போல துப்பாக்கிகளின் முழக்கம் ஓய்ந்தது. காட்டெல்லையிலிருந்து முன்னேறிய இராணுவம் பின்வாங்கியது போலப்பட்டது. புரட்சி குளக்கட்டில் ஓடி வந்தான். அவன் பாதையில் போராளிகள் மூவர் பலியாகிக் கிடந்தனர். மூவர் பலியாகியது அப்போது தான் தனசேகரனுக்குப் புலப்பட்டது.

"குளத்துள் கிடக்கும் சிங்கள இராணுவ வீரர்களின் சடலங்களை எடுத்து வாருங்கள்.."என்று புரட்சி கட்டளையிட்டான். தனசேகரன் உட்பட பலர் குளத்தினுள் இறங்கினர். பதினைந்து சிங்கள வீரர்களின் சடலங்கள் குளக்கட்டில் தூக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தப்பட்டன. எதிர் காட்டெல்லையில் திடீரென துப்பாக்கிகள் முளைத்தன. சன்னங்களை வர்ச்சித்தன. முதலாவது சன்னம் குளக்கட்டில் மறைவெடுக்காது நின்றிருந்த புரட்சியைச் சரியாகத் தாக்கியது. படபடவெனப் பொழிந்த சன்னங்கள் குளத்தினுள்ளும் கட்டிலும் ஏறியும் ஏறாமலும் நின்றிருந்த தனசேகரன்., குட்டி. ஆனந்தன், கலைச்செல்வன் ஆகியோரைப் பலிகொண்டன. அவர்கள் குளக்கடடில் சடலமாகச் சரிந்தனர். புரட்சியின் பிழையான கட்டளையால் பலியாக நேர்ந்தது. அதற்குள் குளக்கடடிலிருந்து மழையாகப் பொழியத் தொடங்கிய எறிகணைத் தாக்குதல்களுக்கும் துப்பாக்கிச் சன்னங்களுக்கும் பதில் கொடுக்க முடியாமல் இராணுவம் பின்வாங்கியது. தூரத்தில் குண்டு வீச்சு விமானங்கள் வரும் இரைச்சல் எழுந்தது. வவுனிக்குளக்கட்டை விமானக் குண்டுகள் துவம்சம் செய்யவுள்ளன என்பது புலனாகியது.

"இறந்த இராணுவத்தினரின் சடலங்களைத் தூக்கி வருமாறு கட்டளை வந்திருக்கிறது. அவர்களையும் நம்மில் செத்தவர்களின் சடலங்களையும் தூக்கி வாருங்கள். பின் வாங்குங்கள்.." என புரட்சியை அடுத்து தலைமைப் பொறுப்பெடுத்த அறிவண்ணன் அறிவித்தான்.

எனக்கு நம்பிக்கை இல்லை. படிப்படியாக இழந்து வாறம் மன்னார் வீதி. பெரிய தம்பனை, ஓமந்தை எல்லாவற்றையும் தூக்கிக் கொடுத்திட்டம். கிழக்கில மாவிலாறு, வாகரை. சம்பூர், தொப்பிக்கல என இழந்தம். இப்ப இங்க... பரந்தனை. ஆனையிறவை பிடித்திட்டான்கள்.. மிஞ்சியதைப் பிடிப்பான்கள். சந்தேகமில்லை. ஓரிடத்திலாவது பதிலடி கொடுத்தோமா? இல்லையே? இனி எங்கை? எங்களிடம் ஆயுதங்கள். வீரர்கள் இல்லையா? எல்லாம் வேக்ஷமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சத்தம் போடாமல் சொன்னதைச் செய். பின் வாங்கு காரணம் புரியும்."

காரணம் தனசேகரனுக்குப் புரியவில்லை.

பின்வாங்குவது ஏற்றதாகத் போராளிகளில் ஒருவனுக்குப் படவில்லை. அறிவண்ணனை ஏறிட்டுப் பார்த்தான்.

'இச்சமரிலும் பின்வாங்குவதா? வன்னேரியிலாவது அவங்களை அடித்துத் துரத்துவம என எண்ணினோம். மன்னாரிலிருந்து இலேசாக வரவிட்டிட்டம். இதிலாவது எங்கட பலத்தைக் காட்ட வேண்டாமா? விடத்தல் தீவு, வெள்ளாங்குளம் என இழந்து வருகிறோம். தூக்கிக் கொடுத்துவிட்டுப் பின் வாங்குகிறம். ஏன்? என்ன நடந்தது? இதுக்காகவா நாங்க இயக்கத்தில் சேர்ந்தம்? ஆயிரக் கணக்கில் கனவுகளோடு களமாடிப் பலியானம்? இப்படிப் பின்வாங்கவா?" என அவன் எரிந்து விழுந்தான். அவன் உடல் காரணத்தோடு நடுங்கியது.

'எதிர்த்துக்கதைக்க அனுமதியில்லை தனசேகரர். இந்தப்பின் வாங்கலிலுள்ள இராஜதந்திரத்தை எவரும் அறியார். இதுவும் காரணத்தோடு நடக்கிறது. ஒரு இடத்தில் தாக்கி நிச்சயமாக அழிப்போம்.'

**அ**ன்று மாலை பதினைந்து இராணுவச் சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் கிளிநொச்சியில் வைத்து முன் முறையாக ஒப்படைக்கப்பட்டன. 'பதினேழு சடலங்கள்' என இராணுவம் கூறியது. அதன் பின்னர் அவ்வகையான முயற்சியை செஞ்சிலுவைச் சங்கம் கைவிட்டது. இரண்டு பகுதியினரும் சடலங்களை ஏற்க மறுப்புத் தெரிவித்தனர். வகை தொகையின்றி மண்ணில் சரிகின்ற சடலங்களை யாரால் தான் ஏற்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த புலிகளின் பெயர்களைச் சரியாக வானொலி அறிவித்தது. புலிகளின் செய்திகளை இடை மறித்திருக்க வேண்டும்.

அக்கராயன் குளச் சண்டை அடுத்து நிகழ்ந்தது. புலிகளால் எதிர்க்க முடியவில்லை. இராணுவம் முன்னேறி முருகண்டிக்கு வந்தது. அதனை வவுனியாவிலிருந்து வந்த இராணுவம் சந்தித்தது. கோயிலைத் தவிர முருகண்டியிலிருந்து அனைத்துக் கட்டிடங்களும் அழிக்கப்பட்டன. முருகண்டியைக் கைப்பற்றியமை பெரிதாக்க கொண்டாடப்பட்டது. அடுத்து இராணுவம் இரணைமடுச் சந்தியைக் கைப்பற்றியது. சந்தியிலிருந்து புலிகளின் ஹொட்டல்கள், கட்டிடங்கள் யாவும் அழிக்கப்பட்டன. புலிகளின் நிர்வாகசபைக் கட்டிடம் தரை மட்டமாக்கப்பட்டது. அங்கிருந்த சின்னப்பா மாஸ்ரர் முதலானோர் முல்லைத்தீவுக்கு முதலே ஓடித் தப்பினார்கள். நீதி மன்றக்கட்டிடத்தையும் காவல் நிலையக்கட்டிடத்தையும் தரை மட்டமாக்கிய இராணுவம் தடங்கலின்றி முன்னேறியது. கச்சேரி, உள்ளூராட்சி மன்றக் கட்டிடங்கள் தரையோடு தரையாகின. கிளிநொச்சியில் பெரிதான எதிர்ப்பை எதிர்பார்த்த இராணுவம் எதிர்பின்றி ஏமாந்தது.

**ம**றுமுறையும் சத்தியன் பங்கரிலிருந்து அமரதாஸவையும் ஏனை யோரையும் சந்தித்தான. அவர்கள் சோர்திருந்தார்கள்

"யுத்தம் தொடங்கிவிட்டது அமரதாஸ. கிழக்கைக் கைப்பற்றிய உங்க இராணுவம் வடக்கையும் கைப்பற்ற வந்துள்ளது. விட்டுக் கொடுத்திருக்கிறம் இப்ப முல்லைத்தீவுவரை வந்திட்டினம். நந்திக்கடலுக்குக் கிழக்கே நிக்கினம்."என்றான் சத்தியன்.

"நம்பமுடியவில்லை. உங்கள் தலைவர் ஏன் விட்டுக் கொடுத்தார்.? அது அரசியல் தந்திரமாக இருக்கலாம். பிரபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவராலும் திரப்திப்படுத்த முடியாத தலைவன். பிடிவாதமானவர். விட்டுக்கொடுக்கும் தன்மை கிடையாது. தானே தனிப்பெரும் தமிழ்த் தலைவன் என்ற எண்ணம் கொண்டவர். தன் வெற்றிக்குக் காரணமானவர்களை தன் எதிர்பார்ப்பிற்கு மாறாகில் கொல்லுவிக்கவும் தயங்கமாட்டார். தன்னுடன் கூட இருந்த மாத்தையாவையே இரகசியமாக அழித்தவர். மாத்தையா அருகில் இருந்ததால் அது சாத்தியமாயிற்று. கருணா விடயத்தில் அவர் கருத்துப் பொய்த்தது. கிழக்கு மாகாணத்தில் கருணாவின் செல்வாக்கை தப்புக்கணக்குப் போட்டதால் தான் இன்று பக்கத்தில் இராணுவம் வந்திருக்கிறது. பிரபாகரனின் பலத்தையும் பலவீனத்தையும் அறிந்தவன் கருணா. பகைத்துக் கொண்டார். உங்கள் தலைவர் தனக்குக்கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவற விட்டார். சம பலத்தோடு எதிர் கொள்ள எத்தனை வாய்ப்புகள். திம்பு. பின்னர் ஒஸ்லோ மகாநாடுகளில் கிடைத்த சந்தர்ப்பங்கள்.. தமிழீழத்துக்குத் தலைவனாகக் கனவு கண்டார். பலிக்கவில்லை"

"தெரிந்தவனாகப் பேசுகிறாய் அமரதாஸ".

"எல்லாருக்கும் தெரிந்தது தான். இந்தப் போராட்டம் நீண்ட காலத்தை எடுத்துவிட்டது. 30 ஆண்டுகள். மக்கள் வெறுப்படைந்து விட்டனர். முஸ்லீம்களை வெளியேற்றியதும் பகைத்ததும் எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியைக் கொல்லுவித்ததும் இன்றைய நிலைக்குக் காரணிகளாகும்." என்றான் அமரதாஸ திடமாக.

"அவற்றை விடு அமரதாஸ. இப்பத்தை உங்கள் நிலையைப் பேசுவோம். நான் சொல்வதை நல்லாகக் கேள். இங்கிருந்து தப்பி விடு. அதுக்கு நான் உதவுகிறேன். உன் மரணத்துக்கு நான் காரணமாக இருக்க முடியாது. நோ பயர் ஷோனில் தங்கியுள்ள மக்களை தங்கள் பக்கம் வர அனுமதிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறார்களாம். அந்த மக்களோடு மக்களாக நீங்களும் தப்பிப் போக நான் வழி செய்யிறன். போய் விடுங்கள். யுத்தம் கடுமையாகும்போது என்ன நடக்குமெனத் தெரியாது."

வெளியே குண்டுச்சத்தம் எழுந்தது.

"ஆமிப்பக்கம் போகிறவர்களை மறிக்கிறிர்களாம்.. சுடுகிறீர்களாம்."

"அது முந்தி.. இப்பவல்ல.."

"யாலுவா..சத்தியன்.." என்றான் அமரதாஸ. சற்று நேரம் அமைதி காத்தான். "நீயும் என்னோடு வந்துவிடு. நான் காப்பாத்துறன்."

சத்தியன் சிரித்தான். ஏளனம் சிரிப்பில் தெரிந்தது.

"உன் பேச்சு வேடிக்கையாக இருக்கிறது. இறுதி யுத்தம்..வெற்றியா தோல்வியா? தெரிந்தோ தெரியாமலோ இந்தப் போராட்டத்தில் ஈடு பட்டு விட்டேன். இனி வர முடியாது..அதை விடு. அப்பேச்சை எடுக்காதை. தயாராக இரு தப்பிப் போக.. இந்த காம்பின் துணைப்பொறுப்பாளன் மாணிக்கன் உங்கள் மீது கோபமாக இருக்கிறான். உங்களை உயிரோடு வைத்திருப்பது விருப்பமில்லை. போகட்டும் மக்கள் அநியாயமாக் கொல்லப்படுவதை இந்தியா பார்த்துக்கொண்டிராது. ஐ.நா. பார்த்துக் கொண்டிராது." அமரதாஸ வேதனையாகச் சிரித்தான்

"இந்தியாவையும் ஐ.நா. வையும் நம்புகிறீர்களா,? ஏமாறப்போகிறீர்கள். நம்பாதீர்கள். உலக நாடுகள் நிச்சயம் உதவா. செப்டம்பர் 11 அமெரிக்கக் கோபுரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்க்கப்பட்டபின் உலகிலிருந்து பயங்கர வாதத்தைக் களைவதற்கு திடசங்கற்பம் பூண்டுவிட்டன. உலகின் மிகப் பெரிய பயங்கரவாத இயக்கமான எல்ரீரீஈயின் அழிவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றன. என்ன விலை கொடுத்தும் இதனை அடைய மறைமுகமாக உலக நாடுகள் இலங்கைக்கு உதவுகின்றன."

'யார் உதவாவிடிலும் தலைவரின் சாதுர்யமும் எங்களது ஆயுத பலமும் உதவும். உங்களிடம் இல்லாத நவீன ஆயுதங்கள் எங்களிடமுள்ளன. யாரிடமும் இல்லாதவை. பிடிபட்டவை அற்பம்."

விடை பெற்று வெளியே வந்தான். வெளியே மாணிக்கன் எதிர்ப்பட்டான்.

**பி**க் அப்பில் முன் சீட்டில் அமர்ந்து கப்ரின் துர்க்காவின் பேஸிற்குப் போகுமாறு பணித்தான். அவள் பொறுப்பிலிருந்த பேஸ் அவன் கீழ் இருந்தது. ஊனமுற்றவர்கள் அந்த பேஸில் இருந்தார்கள். கப்ரின் துர்க்கா அவனை வரவேற்றாள்.

"எப்படி பேஸ் இருக்குது? பிரச்சினைகள் இருக்குதா?" என்று சத்தியன் கேட்டான்.

"பிரச்சினைகள் இல்லை இந்த பேஸில் இருபத்திநாலு பேர் இருக்கினம். அரை வாசிப் பேர் ஒரு கால் இழந்தவர்கள். பதினொரு பேர் ஒரு கை இழந்தவர்கள்" என்றாள் துர்க்கா.

"ஒரு கால் இழந்தவர்கள் எண்ணிக்கையில் நீங்களும் அடங்கிறீங்களா துர்க்கா?"

அவள் வேதனையோடு சிரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யுத்தம் உச்சமாகும் போது.. இவர்களை வைத்து என்ன செய்வது என்பது தான் புரியவில்லை. உடல் ஊனமுற்றவர்கள்"

"அகதிகளாக அகப்பட்டிருக்கும் மக்களை அங்கால விட இருக்கிறம். அப்படி நேரில் இவர்களையும் அனுப்ப வேண்டியது தான். நீரும் இவர்களுடன் போக வேண்டியது தான்." என்றான் சத்தியன். "நீங்கள் வெள்ளாங்குளம் என்ன? நான் அங்கத்த பேஸில் இருந்தனான். எத்தனை வரியமாகுது, நீங்கள் இயக்கத்துக்கு வந்து?"

"வெள்ளாங்குளத்திலிருந்து தங்கச்சிமார் வந்து இங்கு ஆக்களோட இருக்கினம். நீங்கள் விடத்தல்தீவு பேஸில் இருந்தனீங்கள். அங்க இயக்கத்தில் இருந்த மைக்கலைத் தெரியுமா? மூன்றாவது தங்கச்சியை அவர் தான் கட்டி இருக்கிறார்"

சத்தியன் வியப்போடு துர்க்கா என்ற மைதிலியைப் பார்த்தான்.

"மைக்கல்..மைக்கல்.. நல்லாத் தெரியும். அவன் இங்கு வந்திருக்கிறானா? விடத்தல்தீவு ஆக்கள் வந்திருக்கினமா? சுகந்தி, அந்தோணிமுத்தர்"

"வந்திருக்க வேணும். மன்னாரில் மாந்தையில் ரிஓ வாக வேலை பார்க்கும் மணிசேகரன் என்பவர் இங்கால ஜீப்போட அகப்பட்டுக் கொண்டார். அவர் போல ஆக்களும் வந்திருக்கினமாம். மணிசேகரன் எனக்குத் தெரிந்தவர் பொதுமக்கள் குடியேற்றம் உங்கள் கண்காணிப்பிலுள்ளது தானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி' என்று விடைபெற்ற சத்தியனின் இதயம் அந்தோணிமுத்தர் குடும்பத்தைக் காணத் துடித்தது. 'சுகந்தி எப்படி இருப்பாள்?'

நந்திக்கடலுக்கு கிழக்கே அமைந்திருந்த இராணுவ முகாமிலிருந்து ஷெல்கள் பறந்து வந்தன. பதிலடியாக இங்கிருந்தும் சென்றன. மண்ணில் உயிரற்ற உடல்கள் சரிந்தன. கடும் காயமுற்றோர் கூக்குரலிட்டனர். ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான பராமரிக்க முடியாத நோயாளிகள் செஞ்சிலுவைக் கப்பல்களில் திருகோணமலை கொண்டு செல்லப்பட்டனர். பதவியாவில் இந்திய டாக்டர்கள் 12 பேர் முகாமிட்டு மக்களைப் பார்த்தனர். இவற்றை சத்தியன் எண்ணமிட்டான்.

அந்தோணிமுத்தர் குடும்பம் இருந்த கூடாரத்தைத் தேடிப் பிடித்தான். சத்தியனைக் கண்டதும் அந்தோணிமுத்தர் கொட்டி முழக்கினார்:

"இங்க என்ன வசதி இருக்குது? நல்ல தண்ணீர். மலசலகூடம். மருத்துவ வசதி எதுவுமில்லை. ஆமான சாப்பாடு இல்லை. கொஞ்ச இடத்திற்குள்ள இலட்சக் கணக்கானவர்களைக் குவியலா இருத்தி யிருக்கிறியள். சாகிறதுக்கே? பொருள்கள் கிடைப்பதில்லை. கொலைப்பட்டினி தான். இங்கிருப்போருக்கு ஒரு நேரச்சாப்பாடு கிடைப்தே அரிது. நாங்கள் நாள் முழுவதும் பங்கரில் தான் இருக்கிறம். ஷெல் மழையாகப் பொழிந்து கொண்டிருக்கிறது. நாளாந்தம் எவ்வளவு சடலங்கள் சரிகின்றன என்பது உமக்குத் தெரியுமா? எத்தனை இடம் மாறினம். எலும்பாகிவிட்டம். அரிசி எவருக்கும் கிடைப்பதில்லை. ஒரு கிலோ அரிசி 400, 500 ஆக உர்ந்து இப்ப 2000 ஆகிவிட்டது. இருந்த நகை நட்டுகள் எல்லாம் காலி. பவுன் 1000 ருபாவுக்கும் வாங்குவாரில்லை. அந்தரிக்கிறம். தண்ணியும் ஆமானதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள் நிறமாக இருக்கிறது. வெறும் தேத்தண்ணி தான். ·சீனி கிலோ 3000 மாப்பவுடர் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் 3000 4000 ருபா. பிள்ளைகளுக்கு ஆமான சாப்பாடு இல்லை. குடிசைக்குள் தேத்தண்ணி வைப்பம். ஷெல் பொழியும் பங்கருக்கு ஓடுவம். ஷெல் அடித்து முடிந்ததும் வந்து பார்த்தால் தேத்தண்ணி வைத்த முட்டி உடைந்திருக்கும்."என அந்தோணிமுத்தர் குரலிட்டார். சுகந்தி ஒரு மூலையில் நின்றிருந்தாள். எதுவும் பேசவில்லை. ஏக்கத்தோடு அவனைப் பார்த்தாள்.

"இங்க 3 இலட்சம் சனத்தைப் பிணையாக வைச்சிருக்கிறியள். கொல்லவா? போகவிடுங்களேன் அங்கால ஆமிப்பக்கம். அண்டைக்குத் தப்பி ஆமிப்பக்கம் போகப் பார்த்த சதாசிவத்தின்ரை மனிசியைச் சுட்டுப்போட்டியளாம். போகவிடுங்களேன். உங்களால இனி ஏலாது. விட்டிட்டியள்.. சுற்றி வளைச்சிட்டான்கள். ஆரை நம்பியிருக்கிறியளோ,?" என்று அந்தோணிமுத்தர் சத்தமிட்டார்.

"உங்களுக்கு ஒண்டும் விளங்காது.." என்றான் சத்தியன்.

"இப்படிச் சொல்லிச் சொல்லியே ஏமாத்திட்டியள். இனி நிலைமை உங்களுக்குச் சாதகமாகவில்லை. சொல்லிப் போட்டன். ஏமாறப் போறியள். அண்டைக்குக் கண்முன் ஒரு சிறுவன் சிதறினான். நாளாந்தம் சாகினம்." சத்தியன் மௌனமாக இருந்தான்.

அந்தோணிமுத்தர் தொடர்ந்தும் :

சத்தியனின் முகம் திடீரெனக் கருமுகில் சூழ்ந்து கறுக்கும் வானமாகியது. இதுவரை சுகயமாகப் பேசியவன் தனது குரலைக் கடுமையாக்கிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நடக்கிறதைக் கடுமையாக விமரிசயாதையுங்கோ சில பிரதேசங்களை இழந்தம் என்றதுக்காக எல்லாவற்றையும் விட்டுக்கொடுப்பம் என்று தப்பாகப் புரியக் கூடாது. பேசக்கூடாது. இருந்து பாருங்கோ." என்றான். வலக் கரத்திலிருந்த துப்பாக்கியை இடக்கரத்துக்கு மாற்றிக் கொண்டான். அவன் திடமான தேகம் ஆத்திரத்தால் நெடு மூச்சு விட்டது. தான் திடமாக நம்புகின்ற கொள்கைகளைக் கேலிசெய்வதை அவன் விரும்பவில்லை. அவர் மட்டுமல்ல அக்கேள்வியைப் பலர் அவனிடம் கேட்டு விட்டனர்.

"ஒவ்வொருவிடமாக இழந்து வாறியள். இது எங்கை போய் முடியப்போகுதோ? தாயக்கனவோடு ஆயிரக் கணக்கான போராளிகள் தம் உயிரைப் பலி கொடுத்தார்கள். எத்தனைபேர் தற்கொலையாளியானார்கள் தெரியுமா? அவர்களுக்கு நீங்கள் தருகிற பதில் இதுவா?"

கிழக்கில் மாவிலாற்றின் இழப்புடன் பிரச்சினை ஆரம்பமாகியது. படிப்படியாக வாகரை. சம்பூர் என இராணுவம் வசமாகி தொப்பிகல வீழ்ச்சியுடன் சனி புறங்காலில் பிடித்த மாதிரி வடக்கிலும் சூழ்ந்தது. இதுவரை அடங்கியிருந்தவர்கள் இப்போது துணிந்து எதிர்க்கேள்வியும் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

'எத்தனை பொடியளை பதினெட்டு வயதாகிறதுக்கு முந்தி இயக்கத்தில் பலாத்காரமாகச் சேர்த்தியள் என்ரை பேரப்பபொடி தானாக தமிழீழக் கனவுகளோடு வந்து சேர்ந்தான். இப்ப பலபேர் வீரவேங்கைகளாகிவிட்டனர். இன்று தரைமட்டமாகிப் போன வீரவேங்கைகள் மயானத்தில் நினைவுச்சின்னம் அமைத்தீர்கள். அவ்வளவு தான். அப்படிச் செத்துப் போனவை இந்த முடிவுக்கா சேர்ந்தார்கள்? இஞ்ச பார் தம்பி. இனி தமிழரின்ர உரிமைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாகப் போராடுகிற இயக்கம் ஒன்று தோன்ற முடியாது. இப்படி நீண்ட காலத்துக்குப் பதிலடி கொடுத்து தாக்குப் பிடிக்கமுடியாது. எல்லாம் கனவாகப் போச்சுது... எல்லாம் கனவாகப் போச்சுது.. நீங்கள் ஆடிய ஆட்டம் என்ன? துப்பாக்கியை ஏந்தித் திரிந்தியள். நாங்களும் ஏதோ கிடைக்கப் போவதாகக் கனவு கண்டோம். இப்படி ஏமாந்தம். உங்கட பலம் எங்கை போனது? புரியவில்லை. ஒண்டுமில்லாமலா நீதிமன்றம், செயலகம், பொலிஸ் நிலையம் எனக் கட்டினியள்? சுங்கவரி வசூலித்தீர்கள்... ஏன்? ஏன் இதெல்லாம்" எனப் பொரிந்து தள்ளினார் இராசையா. அவரால் இந்த இழப்புக்களைப் பொறுக்க முடியவில்லை. மன்னாரில் தொடங்கி பூநகரி, ஆனையிறவு என இழந்து இன்று கிளிநொச்சியையும் தூக்கிக் கொடுத்து விட்டார்கள். முல்லைத்தீவில் நந்திக்கடல் கரையில் புதுமாத்தளனில் வந்து முடிந்திருக்கிறது.

"விசர் கதை கதையாதையுங்கோ. முல்லைத்தீவில் எல்லாப் படையும் திரட்டிவைச்சிருக்கிறம். தாக்கப்போறம். துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்று இராணுவம் ஓடப்போகுது..." நந்திக்கடலுக்குக் கிழக்குப் பக்கத்திலிருந்து நித்தம் வந்து விழுந்த ஷெல்களும் விமானங்கள் போட்ட அளவு கணக்கற்ற குண்டுகளும் அப்பாவி மக்களை வகை தொகையின்றிப் பலியெடுத்தன. நிலமை மோசமாகி வந்தது. இங்கிருந்தால் குடும்பத்துடன் மடியவேண்டியது தான்.

சத்தியன் நீண்ட காலத்திற்குப் பிறகு சுகந்தியைக் காண்கிறான். சற்றுப் பருத்திருந்தாள். அதுவும் அவளுக்கு அழகாகத் தான் இருந்தது. வீட்டாருக்கு முன் மனம் திறந்து பேச முடியவில்லை. கண்களால் பேசிக் கொண்டான். அவன் விழிகளில் தெரிந்த பாசத்தை சுகந்தி புரிந்து கொண்டாள். சத்தியன் கம்பீரமாக வளர்ந்திருந்தான். உடல் முறுக்கேறியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியன் வந்திருப்பதைக் கேள்விப் பட்டு மைக்கல் ஓடிவந்தான்.

"உன்னிடம் வரத்தான் இருந்தன். கலியாணமும் கட்டி விட்டாயாமே?"

மைக்கல் வெட்கமாகச் சிரித்தான். தனது மனைவியையும் பிள்ளையும் அறிமுகப்படுத்தி வைத்தான். மலரையும் மகேந்திரனையும் மாணிக்கராசாவையும் அழைத்து சத்தியனுக்கு அறிமுகமாக்கினான். அங்கு சத்தியனுக்கு ஏற்கனவே அறிமுகமில்லாத ஒருவனைக் காட்டினான்.

"இவர் மணிசேகரர்... ஓ. ஏ மாந்தையில் வேலை பார்த்தவர். யுத்தத்திற்குள் இங்கால அகப்பட்டிட்டார். அகதியாக வந்திட்டார். பக்கத்து ரென்ரில் இருக்கிறார். மாணிக்கராசா அண்ணரின்ர பொஸ். இவயளுக்கு நல்லாத் தெரிந்தவர். இயக்கத்திலிருந்து விலகி வந்தால் மூத்த மச்சாள் மைதிலியை அதாவது துர்க்காவைக் கலியாணம் செய்யவுள்ளார்."

"அப்படியா? அவ இப்ப ஊனமுற்றோர் பேஸிற்குப் பொறுப்பு.. கப்ரின் துர்க்காவல்லோ? யுத்தத்தில ஒரு காலை இழந்தவ.. அவ விரும்பினால் விலகலாம்.. கெதியில இந்த யுத்தத்திற்கு முடிவு வரும். மக்கள் நித்தம் சாவதை உலக நாடுகள் பாத்துக்கொண்டிரா.." என்றபடி மணிசேகரனை மதிப்போடு பார்த்தான்.

"அப்படி நடந்தால் சரி. நல்லது சத்தியன் அண்ணை. ஆனா உலக நாடுகள் பயங்கரவாதம் அழிவதையே விரும்புவதாகத் தெரிகிறது. வெளி வேஷம் போடுகின்றன. அவற்றை நம்பி ஏமாறாதையுங்க.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் விடைபெற்று வரும் போது இருட்டிவிட்டது. அவனுக்கு மேலிடத்திலிருந்து கடிதம் ஒன்று வந்திருந்தது.

"சிறையிலிருக்கும் அனைவரையும் விடுதலை செய்யவும். அவர்கள் விரும்பிய இடங்களுக்குப் போகவிடவும்."

"அது சாதாரண கைதிகளுக்குப் பொருந்தும். அரசியல் கைதிகளுக்கு அல்ல." என்றான் மாணிக்கன். அவனுக்குப் புரிந்திருந்தது. அதனைக் காரணம் காட்டி அந்தச் சிங்கள சிப்பாய்களை சத்தியன் விடுவித்து விடுவான் என. அவர்கள் மீது அவனுக்கு ஆரம்பத்திலிருந்தே ஏனோ வெறுப்பிருந்தது. அதே போல சத்தியனுக்குப் பரிவிருந்தது.

"சத்தியன், நீ என்னுடன் வந்து விடு.. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்." அமரதாஸ வற்புறுத்திக் கேட்டான். சத்தியன் சிரித்தான்.

"அந்த விசர் கதையளை விடு.. இப்ப விரைந்து செல். மக்களோட கலந்து விடு.. அவர்கள் எடுத்த தீர்மானம் மாறுவதற்கிடையில்" அவர்களை அழைத்துவந்து மக்களோடு விட்டுவிட்டுத் திரும்பினான். மாணிக்கன் வழியில் தென்பட்டான்.

"அந்தச் சிங்களத் துரோகிகளைக் கொல்லாமல் விட்டுவிட்டியள். அதுக்கு விரைவில் கவலைப்படுவியள்:." மாணிக்கன் சொன்னது சரியானது. அடுத்த கடிதம் மேலிடத்தில் இருந்து கட்டளையாக வந்தது. புலனாய்வுத் துறைத்தலைவர் எழுதியிருந்தார்: "அரசியல் கைதிகளை மாணிக்கம், பிரதித்தலைவரிடம் ஒப்படைக்கவும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியனுக்கு விளங்கியது. மாணிக்கம் அறிவித்துவிட்டான். கடிதத்தின்படி இப்போது கைதிகளில்லை. மாணிக்கன் சத்தியனை ஆக்கிரோஷத்தோடு ஏறிட்டான்.: "நான் தடுத்தன். கேட்கவில்லை. விட்டிட்டியள்." அவன் விரைந்து செயற்பட்டான்.

நள்ளிரவு சத்தியனுக்குச் செய்தி வந்தது.

விடுவிக்கப்பட் கைதிகள் மூவரில் இருவர் மீண்டும் கைதாகினர். ஒருவர் தப்பிவிட்டார். அவர் அமரதாஸ..ஆமிப்பக்கம் சேர்ந்திட்டார். கைதான இருவரையும் மாணிக்கன் சுட்டுக்கொன்றுவிட்டான்..

சத்தியனின் உள்ளம் அழுதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 4

முல்லைத்தீவு கடற்கரைக்குச் சமாந்தரமாக வடக்குத் தெற்காக நந்திக்கடல் அமைந்துள்ளது. இந்துசமுத்திரத்தின் நீர் ஒரு ஒடுங்கிய வாயின் ஊடாக நந்திக்கடலை நிரப்பியது. அது ஒரு கடனிரேரி. அக்கடனீரேரிக்குக் கிழக்குப்பகுதி இலங்கை இராணுவத்திடமும் மேற்குப்பகுதி விடுதலைப் புலிகளிடமும் இருந்தன. இடைப்பட்ட பகுதியில் அகதிகளாக இடம் பெயர்ந்து வந்த மக்கள், மூன்று இலட்சம் மக்கள் அகப்பட்டுக் கொண்டனர். வானத்தில் குண்டு வீச்சு விமானங்கள் படையெடுக்கும்போதும் எறிகணைகள் வந்து மக்களிடையே விழும்போதும் இந்த அகதி மக்கள் அங்குமிங்கும் ஓடுவார்கள். ஒவ்வொரு தடவையும் உயிரிழந்தவர்களும் காயமடைந்தவர்களும் மண்ணில் நூற்றுக் கணக்கில் சரிந்தனர். காயமடைந்தவர்களை செஞ்சிலுவைச் சங்கம் தன் கப்பல்களில் திருகோணமலைக்கும் பதவியாவுக்கும் சிகிச்சைக்காக ஏற்றியது.

அன்று அதிகாலையே வானத்தில் குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டன. இயக்கப் போராளிகள் தங்களது எறி கணைகளை மக்களிடையே வைத்துப் பொருத்தினார்கள். கடும் யுத்தம் நடக்கப் போகிறது. இன்று எப்படியாவது நந்திக்கடலைக் கடந்து இராணுவம் இருக்கும் பக்கம் போய் குடும்பத்துடன் சரணடைந்து விட வேண்டும் என அந்தோணிமுத்தர் முடிவு செய்தார். போராளிகள் விடுவார்களா? அகதிகள் நந்திக்கடலைக்கடந்து வருவதற்காக இரண்டு நாட்கள் யுத்தம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதென இராணுவம் அறிவித்துள்ளது,.

நந்திக்கடலைக் கடப்பதற்கு இரண்டு பாதைகள் இருந்தன. வெள்ளமுள்ளி வாய்க்கால் என்ற பாதையூடாகக் கடப்பது ஒன்று..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திக்கடலுக்கு வட கரையோரமாக இப்பாதை அமைந்துள்ளது.. மண் பாதை. அது கரையமுள்ளிவாய்க்காலை அடைந்து தெற்காகத் திரும்பி வெள்ளமுள்ளிவாய்க்காலை அடைகிறது நேரே சென்றால் கடற்கரையை வலைஞன் மடத்தை சென்றடையும். இது தரைப்பாதை. மற்றையது நந்திக்கடலூடாகக் கடப்பது. அது தண்ணீர்ப்பாதை. நந்திக்கடல் கடனீரேரியின் மேற்குக்கரையில் கெப்பபுலவு என்றவிடம் அமைந்துள்ளது. கெப்பபுலவு என்றவிடத்தில் நந்திக்கடலுக்குள் இறங்கினால் இடுப்பளவுக்கு மேற்பட்ட நீரில் நடந்து கிழக்கே வட்டக்கல்லு என்றவிடத்தை அடையமுடியும். நந்திக்கடலுக்குள் இறங்கிக் கடப்பதே சாத்தியமென அந்தோணிமுத்தர் முடிவு செய்தார். அதற்குச் சில காரணங்கள் இருந்தன. ஒன்று அவரது குடிசை கெப்பபுலவில் நந்திக்கடலுக்கு அருகில் இருந்தது. இரண்டு இயக்கப் பையன்களுக்குத் தெரியாமல் நீரில் இறங்கிவிடலாம். அவருடைய முடிவைக் அவர் குடும்பத்தினர் ஆதரித்தனர். மாணிக்கராசா குடும்பத்தினரும் சிலரும் கூடவர ஒப்புக் கொண்டனர். "சுங்கன் குழி அம்பலவாணர் இடம்பெயர்ந்து ஐம்பத்தாறு பேர் வந்தினம்... இப்ப அவரோட நான்கு பேர் மிச்சம். அவயும் எங்களோட வருகினம்..." மணிசேகரனும் உடன் பட்டான். அவர்களிடம் அதிகம் சுமைகளில்லை. இருப்பவற்றைத் தலையில் சுமந்து கொண்டு நீரில் இறங்கினர். அந்தோணிமுத்தர் குடும்பம் வழிகாட்டியது. அம்பலவாணர் தொடர்ந்தார் மைக்கல் முன்னே நடந்தான்.

'**அ**ப்பு நாங்கள் மூன்று பேர் மட்டும் உயிரோடு இனி இருப்பதில் புண்ணியமில்லை. எல்லாரையும் இந்தப் பயணத்தில் இழந்திட்டம். இனி இருந்தென்ன? இந்த நந்திக்கடலைக் கடந்து அவர்களிடம் போய் அடைக்கலம் புகுந்தென்ன? இரண்டும் ஒன்று தான்.' என்றான் அவரின் ஒரு மருமகன் முறையான மதி. நான்கு நாட்களுக்கு முதல் மத்தியாயனம் கஞ்சி குடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் போது இராணுவப் பக்கமிருந்து வானத்தைக் கிழித்துக் கொண்டு வந்து ஷெல் இவர்கள் மத்தியில் விழுந்தது. நால்வர்கள் காணமல் போயினர். தனது மனைவியையும் ஒரே மகனையும் ஷெல் வீச்சுக்கு ஒருங்கே இரை கொடுத்தவன். அவனை அம்பலவாணர் ஏறிட்டுப்பார்த்தார்.

"நீ மகன் சொல்லுறது சரி தான். சுங்கன்குழியிலிருந்து எட்டுக் குடும்பங்களில் ஐம்பத்தாறு பேர் புறப்பட்டு அகதிகளாக ஓடி வந்தோம். இண்டைக்கு நாங்க நால்வர் தான் எஞ்சி யிருக்கிறோம். இந்தப் பாழ்பட்ட யுத்தம் தந்த பரிசு. எதுக்கும் சோர்ந்து போகக் கூடாதடா. எல்லாம் மனிசருக்குத் தான் தலையில சுமக்க வேணும். மலை சரிஞ்சாலும் நிலை சரியக் கூடாது. பார்ப்பம் இன்னும் எவ்வளவு துன்பம் வருகுது எண்டு..."

நந்திக்கடல் அமைதியாக இருந்தது. கரையை அமைதியாக நீர் தழுவியது. அம்பலவாணர் சிந்தனையில் ஆழ்ந்தார். ஒரு மாதத்துக்கு முன் ஐம்பத்தாறு பேர் அவர் தலைமையில் சுங்கன் குழிக்கிராமத்திலிருந்து குண்டு வீச்சுக்குப் பயந்து பூநகரிப் பக்கமாகப் புறப்பட்டார்கள். அவ்வளவு பேரும் அவரது எட்டு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நான்கு குடும்பங்கள் அவர் பிள்ளைகள். பேரமக்கள். மற்றவர்கள் உறவினர்கள்.

மாந்தையில் முண்டைப்பிட்டிக்கும் வெள்ளாங்குளத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பாலியாற்றங்கரையில் அமைந்திருந்த அமைதியும் அழகும் நிறைந்த சிறியதொரு கிராமம் சுங்கன் குழியாகும். அக்கிராமத்தில் அவரும் அவர் உறவினர்களும் தான். ஒரு மாதத்திற்கு முன் அக்கிராமத்தின் அமைதி அழிந்தது. மன்னாரிலிருந்து எறிகணைகள் அக்கிராமத்தில் வந்து விழத்தொடங்கின. முதல் குண்டு வயல்வெளியில் வந்து விழுந்து வெடித்தபோது மேய்ந்து கொண்டிருந்த மாடு ஒன்று அதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலியானது. அதற்குப் பரவாய் பண்ணாத அம்பலவாணர் மன்னார்ப் பக்கமிருந்து தொடர்ந்து வந்த ஷெல்வீச்சுகளுக்கும் மன்னாரிலிருந்த இராணுவம் தரைமார்க்கமாக முழங்காவில் நோக்கிப் புறப்பட்டுவிட்டதாகவும் இடைப்பட்ட கிராம மக்கள் பூ நகரிப்பக்கமாக ஓடித்தப்புமாறும் செய்தி தெரிந்ததும் கலங்கிப் போனார். அவர் குடும்பத்தினர் அவரைச் சூழ்ந்து கொண்டனர். 'என்ன செய்வது அப்பு' என்று கேட்டனர்.

"குஞ்சு குருமானைக் காப்பாற்ற வேணும். சாப்பாட்டுக்குத் தேவையான சாமானைக் காவிக் கொண்டு புறப்படுங்கோ... வேறை வழியில்லை. பூநகரிப் பக்கம் போய் சில நாட்கள் தங்குவம். வேறை வழியில்லை... அங்க தெரிஞ்சவை இருக்கினம். நம்மடை கந்தப்பு இருக்கிறான்...."

ஒருநாள் மழைபொழிந்து ஓய்ந்த மாலைப் பொழுதில் சுங்கன் குழிக்கிராமத்தை விட்டுப்புறப்பட்டனர். ஆடு மாடுகளை பட்டியிலிருந்து அவிழ்த்துத் துரத்திவிட்டு குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டனர். வளர்ப்பு நாய்கள் மூன்று அவர்களைப் பின் தொடர்ந்தன. அம்பலவாணர் எவ்வளவோ துரத்திப் பார்த்தார். கிராமப் பக்கமாகப் போவதும் வருவதுமாக இருந்தன. விட்டுவிட்டார். மன்னார்ப் பக்கமிருந்து ஏவுகணைகள் தொடர்ந்து கிராமப்புறமாக வரத் தொடங்கின. நல்ல வேளை. புறப்பட்டு விட்டார்கள். இல்லாவிடில் கிராமத்தின் மத்தியில் யார் தலைமீதோ விழுந்திருக்கும்.

அவரின் கடைசி மகள் மகேஸ்வரி நிறைமாதக் கர்ப்பினி. சாமான்களைத் தூக்கிக் கொண்டு அவர்களுடன் நடப்பது கஷ்டமாக இருந்தது. அவள் கணவன் ராகவன் சுமையை வாங்கிக் கொண்டான். அவர்கள் பூ நகரிப் பிரதான வீதியில் ஏறியபோது அவர்களைப் போலப் பலர் வெளியேறி வருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தது. வெள்ளாங்குளத்திலிருந்து பிரதான வீதி காடடர்ந்து காணப்பட்டது. இரு பக்கங்களும் ஒரே காடுகள். கட்டை மரங்கள் பற்றைகள் சூழ வளர்ந்திருந்தன.

சுண்ணாவில் கிராமமுன்னேற்றச் சங்கத்தின் வெளியில் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. அம்பலவாணரும் அவர் கூட்டத்தினரும் அன்றிரவு அங்கு தங்குவதென முடிவு செய்தார்கள். கால்கள் சோர்ந்தன. கெஞ்சின. சில இளைஞர்கள் மண்டபத்தின் முன் அடுப்பு வைத்துக் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தார்கள். அன்றிரவு குடித்த கஞ்சி அமிர்தமாக்கப்பட்டது. விடியல் வேளையில் இலங்கை இராணுவம் வெள்ளாங்குளத்துக்கு வந்துவிட்ட செய்தி பரவியது.

“பொடியல் வரவிட்டிட்டான்களோ? வலு இலேசில் வந்திட்டாங்கள்” என்று அம்பலவாணர் கூறிக்கொண்டார். ஏனோ ஏமாற்றமாக இருந்தது. இராணுவம் முன்னேறும் என அவர் நினைக்கவில்லை.

நினைக்கும்போதே மல்ரிபரல் முழங்கத்தொடங்கியது. மல்ரி பரல்களை முன்னால் செலுத்திவிட்டு இடங்களைச் சுத்திகரித்த பின்னர் இராணுவம் முன்னேறியது என அம்பலவாணர் எண்ணமிட்டார். மல்ரி பரல்களின் குண்டுகள் சுண்ணாவில் சந்தியில் விழத் தொடங்கின. மக்கள் தெறிகெட்டு நாலாபக்கங்களிலும் ஓடத் தொடங்கினர். அவர்கள் பலர் குண்டடிபட்டு நிலத்தில் சாய்ந்தனர். பற்றாக் குறைக்கு வானத்தில் பொம்பர்கள் இரண்டு இரைச்சலுடன் தோன்றின. சகல கலவரங்களும் ஓயச்சில நிமிசங்கள் சென்றன. மல்ரிபரல் ஓய்ந்து குண்டு வீச்சு விமானங்கள் அகன்ற பின்னர் தான் அம்பலவாணருடன் வந்திருந்த பக்கத்து வீட்டு சின்னப்பரும் மகளும் வேறு நால்வரும் ஏற்கனவே அங்கு தங்கியிருந்த இருபதுக்கு மேற்பட்டோர் பலியானமை தெரிந்தது. அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிவந்த பயணிகள் ஐம்பத்தாறு பேரில் அறுவர் இரையாகினர். அவர்களது எஞ்சிய சடலப் பாகங்களைக் கூட்டி அள்ளி நிலத்தில் புதைத்தனர்.

சுண்ணாவில் கிராம மக்கள் தம் ஊரைவிட்டுப் புறப்பட்டுவிட்டனர். இனி அங்கிருப்பதில் பாதுகாப்பில்லை. அவர்களோடு சனம் அள்ளுப்பட்டது. அவர்களை முந்திக் கொண்டு இராணுவம் எறிகணைகளை வீசியது. பாதையெங்கும் சாரைசாரையாக அகதிகள் செல்கிறார்கள். பசிக்காக அகப்பட்ட காட்டுப் பழங்களைத் தின்று மயங்கிச்சோரும் பிள்ளைகள். மரத்தடியில் நோய் வாய்ப்பட்டு மருந்தின்றி முடங்கிக் கிடக்கும் வயோதிபர்கள். நடக்க முடியாத தந்தையைக் கரங்களில் ஏந்தி நடக்கும் மகன். குண்டுகள் சிதறிய பிரதேசத்தில் உதிர்ந்து கிடக்கும் மனித சடலங்கள். குவியல் குவியலாகக் கிடக்கும் மனித உடல்கள். மனித இறைச்சியை ருசி பார்க்கும் பட்சிகள்... செத்து விழுந்து கிடக்கும் மாடுகள். மரக்கிளைகளில் தொங்கும் செத்த குரங்குகளின் சடலங்கள். சேலைகளை மறைப்பாக்கி வாழும் குடும்பம் ஒன்று. அவரால் தான் தரிசித்தவற்றைத் தொடர்ந்து பார்க்க முடியவில்லை.

நடந்தார்கள். செம்மன்குண்டைக் கடந்தபோது மகேஸ்வரி குண்டொன்றை அம்பலவாணர் காதுகளில் போட்டாள். பனையால் விழுந்தனை மாடேறி மிதித்தமாதிரி இருந்தது. அவள் கணவன் ராகவன் கலங்கிப்போனான்.

"அப்பு. வயிறு நோவுது போல இருக்குதனை... என்ன செய்யிறது..?"

இந்த நடுக்காட்டில் என்ன செய்யிறது? மகேஸ்வரியால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. அப்படியே பொத் தென நிலத்தில் இருந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆஸ்பத்திரி கிட்டடியில இருக்கா?" என்று கேட்டான் ராகவன். அம்பலவாணர் கலங்கிப் போனார். என்ன செய்வது? அம்பலவாணரின் மூத்த பெண்பிள்ளைகள் உதவிக்கு ஓடி வந்தார்கள். செம்பன்குண்டு காட்டோரம் சேலைகளால் மறைப்பு ஒன்று அமைக்கப்பட்டது. அவர்களோடு வந்த ஒரு மூதாட்டி உதவிக்கு வந்தாள்.

"பயப்பட வேண்டாம். நானிருக்கிறன்." நடுக்காட்டில் ஆண் மகவொன்றை மகேஸ்வரி பெற்றெடுத்தாள். அன்று மத்தியானம் அவ்விடத்தில் வைத்தே அடுப்பு மூட்டினார்கள். தூரத்தில் குண்டுச்சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"நான் நடப்பன் அப்பு... பயப்பட வேண்டாம்" என்றாள் மகேஸ்வரி துணிச்சலுடன்.

"பூநரியில ஆஸ்பத்திரி இருக்கும். பார்ப்பம்..."

பூநகரிச் சந்தை அகதிகளால் நிரம்பி வழிந்தது. அங்கும் ஆஸ்பத்திரி ஒன்றும் இருக்கவில்லை. பிள்ளை பெற்ற தாயைப் பராமரிக்க முடியவில்லை என அம்பலவாணர் கவலைப்பட்டார்.

அன்றிரவு அவர்கள் இருந்தவிடத்துக்கு போராளிகள் சில வந்தார்கள். அவர்களில் அம்பலவாணரின மூத்த பேரன் சசிகரன் இருந்தான். அவரின் மூத்த மகளின் மூத்தமகன். படிக்கின்ற காலத்திலேயே இயக்கத்தில் சேர்ந்து சண்டைக்குச் சென்று விட்டான். மகனைக் கண்டதும் தாய்க்கு மகிழ்ச்சி. அம்பலவாணர் பேரனை அன்போடு பார்த்தார்.

"இப்படி இராணுவத்தை வர விடுவியள் என்டு நினைக்கவில்லை. வீரமரணமடைந்தவர்களின் ஆத்மா சாந்தியடையாது... தமிழீழக் கனவுகளோட செத்துப்போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி பின் வாங்கிவிட்டீர்களே," என்று தன் கவலையை வெளியிட்டார்.

"உங்களுக்கு எங்களின்ர இராஜதந்திரம் விளங்காது. நீங்கள் எல்லாரும் முல்லைத்தீவுக்குப் போங்கோ... அங்க பாருங்கோ... எங்கட சண்டையை... துண்டைக்காணோம் துணியைக்காணோம் எண்டு இலங்கை இராணுவம் ஓடப்போகுது" என்றான் பேரன்.

இராணுவம் ஆனையிறவையும் கைப்பற்றிவிட்ட செய்தி வந்தது.

"இப்படியே நேர பரந்தன் போய் ஒட்டிசுட்டான் போங்கோ..." என்றான் அவன்.

அவர்கள் அதிகாலையே புறப்பட்டு பரந்தன் சந்தியை அடைந்தார்கள். அந்தப் பெருந்துயரம் அச்சந்தியில் நடந்தது. அப்போது தான் பரந்தன் சந்தியில் கால்களைப் பதித்தார்கள் திடீரெனத் தென் வானத்தில் இரண்டு கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் தோன்றின. குண்டுகளை அவர்களிடையே கொத்துக் கொத்தாக வீசின. கண்மூடிக் கண் திறப்பதற்குள் சந்தியில் சடலங்கள் குவியலாக நிறைந்தன. அம்பலவாணர் பார்த்தபோது அவர்களிடையே மகேஸ்வரியும் கைக்குழந்தையும் சரிந்து கிடந்தனர். அவர்களுடன் சந்தியைக் கடந்த சுங்கன்குழிக் கிராமத்தவர்கள் பலர் மாண்டு கிடந்தனர். அம்பலவாணர் முகத்தில் அறைந்துகொண்டு அலறினார்.

ஏ9 வீதியில் வடக்கே ஆனையிறவுப் பக்கமாகத் துப்பாக்கிக் குண்டுச் சத்தங்கள் எழுந்தன. அவ்விடத்தில் சடலக் குவியலை அப்படியே விட்டுவிட்டு இறந்தவர் இறவாதவர் யாரென்று தெரிவதற்கு முன்னரே சனக்கூட்டம் முல்லைத்தீவுப் பக்கமாக நகர ஆரம்பித்தது. அதே வேளை அவ்வீதியின் தெற்கிலிருந்தும் இராணுவம் சந்தியை நெருங்கிவருவது தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசுமோட்டைச் சந்திவரை அவர்கள் ஓட்டமும் நடையுமாக நகர்ந்தார்கள். அச்சந்தியில் ஓய்வெடுக்கவும் அச்சனத்தால் முடியவில்லை. கிளிநொச்சியைக் கைப்பற்றிய இராணுவம் வட்டக்கச்சி வழியாக முன்னேறி வருவதாகத் தகவல் தெரிந்தது. அதனால் அவ்விடத்திலும் நிற்காது நடந்தனர். புதுக்குடியிருப்பை அடையும் வரை அவர்கள் நடை ஓயவில்லை. அவ்விடத்தில் பொத்பொத்தென அமர்ந்து கொண்டனர். சிலர் அப்படியே நிலத்தில் சரிந்து படுத்துவிட்டனர். அம்பலவாணரும் அமர்ந்து கொண்டார். அவர் குடும்பத்தில் அவருடன் வந்தவர்களில் இருபத்திரண்டு பேர் அநியாயமாகப் பலியாகிவிட்டனர். எஞ்சியோர் சிலரே.

புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவு நோக்கி நகருமாறு அறிவுறுத்தப்பட்டது. அவர்கள் தொடர்ந்து நடந்தனர். இரவிரவாக நடந்து நந்திக்கடலின் கரையைக் கெப்பப்புலவு என்றவிடத்தில் வந்தடைந்தனர். இராணுவத்தின் ஓயாத குண்டு வீச்சுக்கள் தொடர்ந்தன. நந்திக்கடலின் கிழக்கே இருந்து பாய்ந்தன. வானத்தில் வட்டமிட்ட குண்டுவீச்சு விமானங்கள் தொடர்ந்து குண்டுகளைப் பொழிந்தன. இலட்சக்கணக்கான மக்களிடையே குண்டுகள் விழுந்தன. சிதறி ஓடிய மக்கள் கொத்துக்கொத்தாகப் பலியாகிச் சரிந்தனர். அகதி மக்களிடையே போராளிகள் தமது குண்டுகளைப் பொருத்தி ஏவினர். குண்டுகள் ஏவப்பட்ட திசையில் பதிலடி நிகழ்ந்தது. தப்பி ஓட முடியாத மக்கள் பலியாக நேர்ந்தது. அம்பலவாணர் குடும்பத்தில் அப்போது அவருடன் நால்வரே எஞ்சியுள்ளனர்.

"இந்த நந்திக்கடலைக் கடப்பம். அங்கால போய் அடைக்கலம் புகுவோம். அங்கிருந்து வவுனியா அகதி முகாமிற்குப் போவம்."

"நான்கு பேர் தான் எஞ்சியிருக்கிறம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான்கு பேர்... நால்வராவது சுங்கன்குழி கிராமத்திற்குப் போவம். வாழ்க்கையை ஆரம்பிப்போம்.'

கால்கள் நந்திக்கடலில் அம்பலவாணரின் குடும்பத்தினர் பதித்தனர்.

இறங்கியபோது பிரச்சினைகள் ஏற்படவில்லை. எவரும் தடுக்கவில்லை. ஆனால் நடுவழி கடந்தபோது ஆரம்பமானது. யாரோ காட்டிக் கொடுத்து விட்டார்கள். கரைக்கு விரைந்து வந்த மாணிக்கனும் ஏனையோரும், “திரும்பி வாருங்கோ. யாரும் போக முடியாது. மீறிப்போனால் சுடுவோம்” என எச்சரித்தனர். எச்சரித்ததோடு நில்லாது முதலில் வானத்தை நோக்கி வெடி வைத்தனர். வெடிச் சத்தம் கேட்டதும் அப்போது தான் நீரில் இறங்கிய பலர் திரும்பிக் கரையேறினர்.

“யாரும் கவனியாமல் நடவுங்கோ. எதிர்க்கரை தெரியுது. நாங்க சூடு பாய முடியாத தூரத்தில் இருக்கிறம். கெதியா நடவுங்கோ..” என்றான் மைக்கல்.

அவர்கள் நீரில் நடந்தனர். போராளிகள் அவர்களை நோக்கிச் சுட்டனர். இறுதி வரிசையில் வந்த இரண்டு மூன்று பேர் காயமடைந்து அலறியபடி நீரில் சரிந்தனர்.

“நீங்க நடவுங்கோ..” என்று மைக்கல் ஏனையோரைத் துரிதப்படுத்தினான்.

நந்திக்கடலைக் கடப்பது இலகுவல்ல இடுப்பளவு நீரில் நடப்பது. விழுவது, எழும்புவது, மூழ்குவது ஒருவரை ஒருவர் தாங்கிப்பிடிப்பது நடப்பது இலகுவல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் சொற்ப தூரமே அக்கரைக்கு இருந்தது. குழந்தையைக் காவிக்கொண்டு முன்னே மகேந்திரன் நடந்தான். திடீரெனப் பறந்து வந்த ஷெல் ஒன்று அவர்கள் முன் விழுந்து பயங்கரமாக வெடித்தது. கணப்பொழுதில் மகேந்திரனும் குழந்தையும் காணாமல் போயினர்.

"ஐயோ.." என மலர் அலறினாள். அவள். அடி வயிறு பற்றியெரிந்தது.

அவர்களை அக்கரையில் இராணுவ வீரர்கள் வரவேற்றனர். அவர்களில் பலர் நீரினுள் இறங்கி வந்தனர். சுமதியிடமிருந்த குழந்தையை வாங்கிக் கொண்டனர். வயோதிபர்களைக் கைத்தாங்கலாக நடத்திச் சென்றனர்.

அவர்களது பயம் இருந்தவிடம் விட்டு அகன்றது. இப்படியான வரவேற்பை இக்கரையில் இவர்கள் எதிர்பார்க்கவில்லை.

"தப்பி விட்டோம்" என அந்தோணிமுத்தார் ஆறுதலாகப் பெரு மூச்சுவிட்டார்.

"அப்பாடா.."

தப்பி வந்திட்டம்"

மைக்கலைப் பார்த்து ஆறுதல் பெரு மூச்சுவிட்டாள் சுமதி. மணிசேகரனை ஏக்கம் பற்றிக் கொண்டது. மைதிலி பின் தங்கிவிட்டாள். கூட வந்திருந்தால் எவ்வளவு நல்லதாக இருந்திருக்கும்?

அவர்களுக்குப் பருக இராணுவத்தால் பானம் வழங்கப்பட்டது. மதிய உணவும் தரப்பட்டது. மாலை வரும் நேரத்தில் பஸ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் ஏற்றி அகதி முகாமிருந்த வவுனியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

யுத்தம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. எல்ரிரிஈயினர் சரணடையவுள்ளனர் எனவும் செய்தி பரவியது. அதற்குச் சாதகமாக இராணுவம் பக்கமாகச் செல்ல விரும்புவோரைத் தடுக்காது விடுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மாணிக்கனுக்கு அதில் கொஞ்சமும் விருப்பமில்லை.

"போறவை போங்கோ அங்கால ஆமியிட்ட போய் கஷ்டப்படுங்கோ..அப்பதான் தெளிவியள்.." எனச்சத்தமிட்டான்.

இடப்பெயர்வு இலட்சக் கணக்கில் ஆரம்பமானது. வெள்ள வாய்க்காலூடாக வெள்ளமாக மக்கள் நகர்ந்தனர். தங்களை விட்டுப் போவதில் மக்கள் காட்டிய ஆர்வம் மாணிக்கனைத் திகைக்க வைத்தது. ஊனமுற்றவர்கள் பேஸ் மூடப்பட்டு கப்ரின் துர்க்காவுடன் ஊனமுற்றவர்கள் நந்திக் கடலைக் கடக்க முன் வந்த போது மாணிக்கன் உண்மையில் திகைத்துப்போனான். பல போராளிகள் தம் ஆயுதங்களைக் களைந்துவிட்டு மக்களுடன் நகர்ந்தார்கள் அவர்களுக்கு எத்தகைய வரவேற்பு கிடைக்குமோ?

இரண்டு நாட்களாக இடப் பெயர்வு நிகழ்ந்தது. மக்களை அகற்றிய பின்னர் இறுதி யுத்தம் நடைபெறவிருந்தது. இரண்டு தரப்பும் தயாராகின. ஆட்களோடு ஆக்களாக இயக்கத்தைச் சேர்ந்த பலர் தப்பி ஓடினர். வன்னியின் நிழல் அரசாங்க அதிபராக ஆட்சி செலுத்திய சின்னப்பா மாஸ்ரர் ஆட்களோடு ஆட்களாக எதுவும் செய்யாதவர் மாதிரி தப்பிச் சென்றார். எல்ரிரிஈ யின் காலத்தில் இவராடிய ஆட்டம்? பல முக்கிய பிரமுகர்கள் தப்பி அக்கரையேறினர். மாணிக்கன் அவற்றைப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வெளியேறிய பின்னர் இரு பகுதியினருக்கும் பயங்கர யுத்தம் நடந்தது. எல்ரிரிஈ யினரின் பங்கர்கள் பல கைப்பற்றப்பட்டன. நவீன ஆயுதங்கள் அகப்பட்டன.

எல்ரிரியினரின் அவசரக் கூட்டங்கள் நடந்தன. எடுக்க வேண்டிய பிரச்சினைகள் ஆராயப்பட்டன. தாங்களும் முகாம்களும் இலங்கைப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டமை கவனத்திற் கெடுக்கப்பட்டது. அந்நிய உதவிகள் எந்நேரமும் வரலாமென எதிர்பார்ப்பது தெரிந்தது.

ஒரு கட்டத்தில் எல்ரிரியினர் சரணடைவது பற்றி ஆராயப்பட்டது. சரணரடைய முயன்றவர்களில் பலர் சுடப்பட்டுக் கொல்லப்பட்டமை எடுத்துக் காட்டப்பட்டது. சரணடைந்த சிலர் எதிரிகளின் கையாட்களாக மாறினர். தப்பிச்செல்ல முயன்ற பிரமுகர்களின் குடும்பத்தினர் கைதாகினர். ஒரு கட்டத்தில் வெள்ளைக் கொடி ஏந்தியவாறு ஆயிரக் கணக்கில் இக்கரைக்கு சரணடையச் சென்றவர்களுக்கு யாது நடந்தது எனத் தெரியவில்லை.

எல்ரிரிஈத் தலைவரைத் தப்ப வைத்து வெளிநாடு ஒன்றுக்கு அனுப்ப முடிவாகியது. அந்த முயற்சியில் பல தலைவர்கள் பலியாகினர். தலைவர் தப்பிச் சென்றதும் ஏனையோர் சரணடைவது என முடிவாகியது.

**மா**ணிக்கனால் நம்பமுடியவில்லை. இயக்கத்தின் மேலிடத்தில் என்ன நடக்கிறது? இயக்கத்தின் முக்கியமானவர்கள் வெண் கொடி ஏந்தி அப்பக்கம் போகிறார்கள். திரும்பி வரவில்லை. என்னவானார்களோ? ஒரு தடவ பொட்டம்மானும் சூசையும் வேறு முக்கியமானவர்களும் வெள்ளைக் கொடியோடு சரணடைவது போலச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வரவில்லை. பின்னர் நடேசன், புலித்தேவன் ஆகியோருடன் சிலர் அக்கரை சென்றார்கள் அவர்களும் திரும்பி வரவில்லை. அவ்வாறாயின் இங்கு ஆயுதம் ஏந்தியவர்களின் நிலைப்பாடு? இரகசியமாகச் சரணடைகின்ற முயற்சிகள் நடைபெறுகின்றனவா?. என்று மாணிக்கன் எண்ணமிட்டான். ஏதோ நடக்கின்றது. வெளியேறும் மக்களுடன் மக்களாக இயக்கத்தின் பல முக்கியஸ்தர்கள் வெளியேறுவதைக் கண்டான்.

**ச**த்தியனும் மாணிக்கனும் தெரிவாகியிருந்தனர். தலைவருடைய தற்காப்புப்படையில் இருந்த 174 பேரில் இருவராகத் தெரிவாகியிருந்தனர்.

"தலைவர் சரணடைவதிலும் தப்பிப் பேடி போல ஓடுவதிலும் முக்கியமான சிலருக்கு கிஞ்சித்தும் விருப்பமில்லை. போராடி இருக்கலாம் என எண்ணுகின்றனர். விட்டுக் கொடுத்தது போலப் படுகின்றது. நமது பலத்தைக் கடைசி நேரத்தில் தலைவர் குறைவாக எண்ணிவிட்டார்." என்று மாணிக்கன் பொருமினான்.

"நாங்க என்ன செய்யிறது.. கடைசிவரை தலைவரின் எண்ணம் புரியவில்லை. என்ன இராஜதந்திரத்தை மனதில் வைத்திருக்கிறாரோ? அவருடைய தற்காப்புப் படையில் இணைந்தமைக்காக மகிழ்வோம்."

"முரண்பட்டவர்கள் அவர் தற்காப்புப்படையில் இல்லை. தெரியுமா? சத்தியன் அண்ணை.. அவர்கள் சரணடையப் போகிறார்கள். பேச்சு வார்த்தை நடக்கிறதாம்.."

நந்திக்கடலைக் கடந்து தலைவரைப் பாதுகாப்பாக வெளியேற்றுவது அவர்கள் கடமையாயிற்று. நந்திக்கடலைக் கடப்பதற்கு இப்போது மூன்று பாதைகள் இருந்தன. ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திக் கடலுக்கு வடக்கேயுள்ள தரைப்பாதை. இரண்டு நந்திக்கடலுக்கு தெற்கேயுள்ள தரைப்பாதை. முதல் பாதை A35 வீதியைக்கடந்து கடலை வலையன்மடத்தில் அடைந்தது. இரண்டாவது பாதை அடர்காடான வெலிஓயாயாவைக் கடந்து கடலையடைந்தது. இப்பாதைகளூடாகக் கடலையடைந்தால் அப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் நீர்மூழ்கிக் கப்பலில் தப்பிவிடலாம். மூன்றாவது பாதை நந்திக்கடலின் மத்தியினூடாக அங்கால் செல்கின்ற நீர்பாதை. அதனைக் கடப்பதாயின் எதிரிகளை முறியடித்துத் தான் கடக்க முடியும்.

தலைவர் தப்புவதற்கு மூன்று பாதைகள் இருந்தன. முதல் பாதையினூடாக தலைவரை வெளியேற்ற எடுத்த முயற்சி தோல்வி கண்டது. ஏ35 வீதியில் காவலிருந்த இராணுவம் அம்முயற்சியை முறியடித்தது. தலைவரின் மகன் சார்ள்ஸ் அச்சமரில் கொல்லப்பட்டார். அவர்கள் பயன் படுத்திய வாகனம் சிதறியழிந்தது. முதல் பாதை மூலம் தப்பிவிடலாமென்ற யோசனைக்கு வழி காட்டிய புலனாய்வுத் துறையின் பரிந்துரை முதலில் தோல்வி கண்டது. நந்திக்கடலுக்கு தெற்கே தரை வழியாக வெலி ஓயாக் காட்டுக்குள் புகுந்துவிடலாமென நம்பிக்கை ஏற்பட்டது. இப்பாதை முடிவடைகின்ற பிரதேசத்தில் இலங்கை இராணுவம் ஆரம்பத்தில் இருக்கவில்லை. இப்பாதையூடாக தலைவர் தப்பிவிடலாமென்ற நம்பிக்கை இராணுவத்திற்கு இருக்கவில்லை என புலனாய்வுத் துறையினர் கூறினர்.

அன்றிரவு நள்ளிரவு கடந்த வேளையில் தப்பும் முயற்சி ஆரம்பமாகியது. நந்திக்கடலின் தென் பாதையை இராணுவத்தினர் பலப்படுத்தியமையை அவர்கள் அறியவில்லை. கொழும்பிலிருந்து வந்த உயர் இராணுவ அதிகாரி தென் பாதை பலவீனமாக இருப்பதை உணர்ந்தார். புதுக்குடியிருப்பிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த இராணுவவீரர்கள் மூலம் அந்தப் பாதை பலப்படுத்தப்பட்டது. எல்ரிரிஈ யினர் புதிய பாதை அமைக்க விரும்பிய நாளே பலப்படுத்தப்பட்டது. அதனை அறியாத இயக்கப் போராளிகள் இழப்புடன் பின் வாங்க நேர்ந்தது. இப்போது மூன்றாவது பாதையான நடு நந்திக்கடலை ஊடுருவி தப்பிச் செல்வதே எஞ்சியது.

தலைவர் ஆயதபாணியாக நடுவில் நிற்கவைக்கப்பட்டார். அவரைச் சுற்றி இரண்டு வட்டங்களாக அவரது விசுவாச தற்காப்புப் போராளிகள் நிறுத்தப்பட்டனர். சத்தியனுக்கும் மாணிக்கனுக்கும் உள்வட்டக் காப்புப் பணி கிடைத்தது. அதிகாலை வேளை அந்த அணி நகர்ந்தது. ஒரு மையத்து வட்டங்களாகப் படையொன்று நகர்வதை இராணுவத்தினர் அவதானித்தபோதிலும் அது முக்கியமான தலைவரின் நகர்வு என்பதை அவர்கள் அறியவில்லை. அவ்வாறு எண்ணவுமில்லை. பாதுகாப்பான பங்கரைவிட்டுத் தலைவர் வெளியே வருவாரென எதிர்பார்க்கவில்லை. ஆனால் அது நடந்தது.

சத்தியன் கால்களை வெகு அவதானமாக எடுத்து வைத்தான். கரங்கள் சுடு கலனைத் தாங்கித் தயார் நிலையிலிருந்தன. தமிழ் மக்களின் ஒரேயொரு நம்பிக்கையாக இருந்த தலைவரைப் பாதுகாக்கும் பணி இறுதியில் அவனுக்கும் கிடைத்திருக்கிறது. அவர் இறுதி வரை போராடியிருக்கலாம். சமராடி அதில் வீர சொர்க்கம் அடைந்திருக்கலாம். மன்னாரிலிருந்து முல்லைத்தீவு வரை பின்வாங்கி சிங்கள இராணுவம் உள் நுழைய வழிவிட்டிருக்கத் தேவையில்லை. இது இராஜ தந்திரமாக இருக்கலாம். அந்த தந்திரம் இது வரை எதுவெனப்புரியவில்லை. யாவற்றையும் இழந்து ஒரு குறுகிய இடத்தில் அடங்கிய பின்னர் பலமான இராணுவத்தை இனி வெல்ல முடியுமா? எதிர்ப்பது கூலிப்பட்டாளமல்ல. சிங்கள உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றப்பட்ட சிப்பாய்கள். கிழக்கில் இலகுவாக வெற்றிக் கனியைப் பறித்தவர்கள். அதே நம்பிக்கையோடு வந்திருக்கிறார்கள்.

சிறிது தூரம் தான் நடந்திருப்பார்கள். எதிர்க்கரையிலிருந்து துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. இடைவிடாது முழங்கின. தலைவரைப் பாதுகாத்த வெளி வட்டத்துப் போராளிகள் சரியத் தொடங்கினர். அவர்கள் 174 பேர் இருந்தனர் என்பது சத்தியனுக்குத் தெரியும். அவர்களால் முன்னேற முடியவில்லை. சன்னங்கள் சரமாரியாகப் பாய்ந்தன. வெளி வட்டத்தைச் சேர்ந்த பலர் 'பொட் பொட் பொட்'டெனச் சரிந்தனர்.

"ஐயோ..அம்மா." என்றான் சத்தியன். குண்டொன்று அவன் வயிற்றைத் துளைத்தது. அந்த கணப்பொழுதில் பலர் அவன் மங்கும் கண்களின் முன் தோன்றினர். சுகந்தியின் மலர் வதனம் சிரித்தது. சத்தியனின் உடல் நந்திக்கடல் வற்று நீரில் சரிந்தது. வயிற்றில் காயம் பட்டு நீரில் சரிந்த சத்தியனை மாணிக்கன் தூக்கித் தோளில் காவிக் கரை சேர்த்தான். என்ன இருந்தாலும் சத்தியன் அவன் பேசுக்குத் தலைவனாக இருந்தவன். சத்தியனுக்கு வயிற்றிலிருந்து அதிக இரத்தம் வெளியேறியிருந்தது. அதற்கு முதலுதவி பார்த்து உடை மாற்றி உடனே ஆஸ்பத்திரிக்கு மாணிக்கன் அனுப்பி வைத்தான். அன்று மாலை புறப்பட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பலில் திருகோணமலை ஆஸ்பத்திரிக்குச் சத்தியன் ஏற்றப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 5

**ச**த்தியனுக்கு அறிவு தெளிந்த போது தான் புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில் வளர்த்தப்பட்டிருப்பதை உணர்ந்தான். முல்லைத்தீவில் இயங்கிய இந்த ஆஸ்பத்திரி கட்டிட, மருத்துவ வசதிகளைக் கொண்டதன்று. இரண்டு டாக்டர்கள் இரவு பகலாக இயங்கிக் கொண்டிருந்தார்கள். எதுவோ அரசசார்பற்ற நிறுவனம் நன்கொடையாக வழங்கிய வெற்றுப்பாயொன்றில் நூற்றுக்கணக்கான காயம் பட்டவர்களுடன் ஒருவனாக நிலத்தில் வளர்த்தப்பட்டிருந்தான். அவன் சீருடை களையப்பட்டு சாரம் ஒன்றினை அரையில் உடுத்திருந்தான். வேறு சேர்ட் கிடையாது. வயிற்றினைச் சுற்றிக் கட்டுப்போட்டிருந்தார்கள். அதுவும் ஆஸ்பத்திரித் துண்டினால் அல்ல. ஊர் மக்கள் கொடுத்த பழைய துண்டினால் ஆகும். கிழங்கு அடுக்கியவாறு காயம் பட்டவர்கள் அந்த ஹோலில் வரிசையாக வளர்த்தப் பட்டிருந்தார்கள்.

இரத்த வாடையும் ஆஸ்பத்திரி மருந்து வாடையும் சேர்ந்து சத்தியனின் தலையைச் சுற்ற வைத்தன. வெற்றுப் பாயில் தலையணையின்றி அவன் கிடந்தான். அவனது வலக்கரத்தில் ஒரு துண்டு கட்டப்பட்டிருந்தது. அதில் திருகோணமலைக்கு இன்று அவசர சிகிச்சைக்காக கப்பலில் ஏற்றப்படும் அனுமதித் துண்டு. உடனடியாகக் கப்பல் வசதி கிடைக்காத காயம் பட்டவர்கள் நூற்றுக் கணக்கில் நாட்கணக்கில் உயிரைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தனர்.

“டொக்டர் இவர் பேஸ் பொறுப்பாளி. போராளி.. இன்றைக்கே தெண்டித்து கப்பலில் அனுப்பி விடுங்க..” என்று மாணிக்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவிட்டிருந்தான். பல முறை விசாரித்து நிலமையை அறிந்திருக்கிறான்.

நாளாந்தம் அந்த ஆஸ்பத்திரிக்கு ஆயிரக் கணக்கான காயம் பட்டோர் வந்தனர். இலங்கை இராணுவத்தின் மனிதாபமற்ற குண்டு விச்சுகளால் காயம் பட்டோர் அவர்கள். இதுவரை அவ்விதத்தில் 20 ஆயிரம் பேர் வந்திருப்பார்கள். குவிந்திருக்கும் மக்கள் மத்தியில் கண் மூடித்தனமாக எறியப்படுகின்ற ஷெல்களும் எறி குண்டுகளும் கலிபர் வீச்சுக்களும் மக்களை வகை தொகையின்றி மண்ணில் சரிய வைத்தன. காணாமல் கணப்பொழுதில் போனவர்கள் ஏராளம். விமானங்கள் மக்கள் மீது சொரிந்த குண்டுகள் அப்பாவிகளைப் பலியெடுத்தன.

ஆஸ்பத்திரிக்கு வெளியே மரங்களின் கீழ் காயம் பட்டவர்களுக்கு கட்டுகள், அவசரசிகிச்சைகள் நடந்து கொண்டிருந்தன. உறவுகளை இழந்தவர்களின் ஓலம் எங்கும் நிறைந்திருந்தது. எஞ்சியவர்களையாவது காப்பாற்றி விடும் ஆவேசம் அந்த ஓலத்தில் கலந்திருந்தது. வன்னி மக்கள் அனைவரையும் ஒரு பிரதேசத்தில் குவித்த அறிவீனத்தைத் திட்டித் தீர்த்தார்கள். மக்களைக் குவித்துவிட்டு அவர்களுக்கு நடுவில் எறிகணைகளைப் பொருத்தி இராணுவத்தை நோக்கி ஏவி இராணுவ ஷெல்களை அங்கு வரவழைத்தார்கள்.

மனித துயரத்தை அங்கு சத்தியன் கண்டான். இவ்வாறான அவலத்தை அவன் எதிர்பார்க்கவில்லை. ஒரு சிறிய ஆஸ்பத்திரி ஆயிரக் கணக்கில் காயம் பட்டவர்களைப் பராமரிக்க முடியுமா?

அன்று மாலை செஞ்சிலுவைச் சங்கத்தினர் வந்தார்கள். 400 காயம் பட்டவர்களைத் தங்கள் கப்பலில் எற்றினர். நடக்க முடியாதவர்களை ஸ்ரெச்சரில் காவிச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்காலூடாக செஞ்சிலுவைக் கொடியுடன் இலங்கை இராணுவம் ஆசூசையுடன் பார்த்திருக்கக் கப்பலில் ஏற்றினர். கப்பல் தளத்தில் விரிக்கப்பட்டிருந்த தரப்பாரில் நோயாளிகளை வரிசையாகக் கிடத்தினர். இரத்தம் காய்ந்திருந்த தரப்பார். மூட்டைகள் தரப்பார் முழுவதும் ஆக்கிரமித்திருந்தன. வலியைப் பொறுத்துக் கொண்டு சத்தியன் படுத்திருந்தான். சத்தியனுக்கு பக்கத்தில் படுத்திருந்தவன் அழுது கொண்டிருந்தான் அவன் குடும்பத்தில் அவன் மட்டுமே எஞ்சியிருந்தான். குடும்பமே இராணுவத்தால் ஏவப்பட்டு விழுந்த ஷெல்லிற்குப் பலியாகிய கொடுமை நிகழ்ந்திருந்தது.

**அ**லைகடலின் தாலாட்டில் ஆடி அசைந்தபடி கப்பல் விரைந்தது. முல்லைத்தீவுக் கடற்கரை தெரியத்தக்கதாக அது தென் திசைநோக்கி நகர்ந்தது. முன்னைய காலமாயின் ஆழ்கடல் ஊடாகத்தன் பயணத்தைப் புலிகளின் பயத்தோடு தொடரும். இன்று அப்பயமில்லை. கப்பலின் ஆட்டம் பலருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. வியிற்றைப் பிரட்டியதால் சத்தி சத்தியாக வாந்தியெடுத்தார்கள்.

சத்தியனுக்கு இரு பக்கங்களிலும் வாந்தியெடுத்தார்கள். அவர்களைக் கிடத்தியிருந்த தார்பார் முழுவதும் வாந்தி பரவியது. சத்தியன் கஷ்டப்பட்டு எழுந்து அமர முயன்றான். முடியவில்லை. சூடுபட்ட வயிறு வலித்தது. நோயாளிகள் வாந்திக்குள்ளேயே படுத்திருந்தார்கள்.

அவற்றினைக் கவனியாதது போல வெறும் தேநீரும் அரை றாத்தல் அளவினதான பாணும் வழங்குவதில் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் ஈடுபட்டனர். சத்தியன் வாங்கிக் கொள்ளவில்லை. தலையை வேண்டாமென அசைத்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை வேளையில் கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தை அடைந்து நங்கூரமிட்டது. அவர்களை ஆஸ்பத்திரி ஊழியர்களும் இராணுவத்தினரும் பரிவோடு உள்வாங்கிக் கொண்டனர். காவி வந்த ஸ்டெச்சரில் அவனைத் தூக்கி இரண்டு இராணுவத்தினர் வளர்த்தியபோதும் தூக்கிச் சென்றபோதும் சத்தியன் தன்னையறியாமல் அந்தரப்பட்டான். அவனால் இது வரை காலமும் பகைவராகக் கருதப்பட்டவர்கள் அவனைக் காவிச் செல்கிறார்கள்.

திருகோணமலை ஆஸ்பத்திரி வசதியானது. அவனுக்கு மாற்றுடுப்பும் ஒப்பரேசனும் படுக்கையும் கிடைத்தன. வலி குறைந்திருந்தது.

“இனிப் பயமில்லை. உம்மைவிட மோசமான கேஸ்கள் உள்ளன. பயப்படத் தேவையில்லை. இரண்டு நாட்களில் துண்டு வெட்டலாம். வவுனியாவுக்கு அனுப்பி விடுவம்’ என்றார் டாக்டர். இராணுவ வீரர்கள் ஆஸ்பத்திரி எங்கும் காணப்பட்டனர். சத்தியன் சிந்திக்கத் தொடங்கினான். இவர்களோடு எவ்வளவு மூர்க்கமாக அவர்கள் போரிட்டார்கள். ஒருவரை ஒருவர் அழிப்பதில் எவ்வளவு மூர்க்கமாக இருந்தனர். அவற்றிடையே சுகந்தியின் முகம் தோன்றியது. என்ன செய்வாள்? சிங்களவர்களை அழிப்பதில் தீவிரமாக இருந்த மாணிக்கன் நெஞ்சில் தன்னைக் காப்பாற்றும் இரக்கம் இருந்திருக்கிறதே?

இரவு 6 மணி இருக்கும். அவன் கட்டில் அருகே இரு இராணுவ வீரர்கள் வந்தனர்.

“உம்மை விசாரிக்கலாமா சில சந்தேகங்கள் உள்ளன. இல்லாவிடில் நாளை..” நல்ல தமிழில் கேட்டனர். அவர்களில் ஒருவன் “சிங்களம் தெரியுமா?” என்றும் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கேளுங்க..இண்டைக்கே. எனக்குச் சிங்களம் தெரியும். நான் நிக்கவரெட்டியாவைச் சேர்தனான். அமரதாஸவின் யாலுவா..” என்றான். அவர்களின் முகம் மலர்ந்தது.

“ஹொந்தாய்..மிச்சம் நல்லம். ஆர் அமரதாஸ?”

“இப்ப இராணுவத்தில் இருக்கிறார். முல்லைத்தீவு முகாமிலுள்ளார்.”

“உன்னுடைய வயது இப்ப என்ன,? நிக்கவராட்டியாவிலிருந்து எப்ப இங்க வந்தாய்? உன்னையும் வலிந்து பிடித்து இயக்கத்தில் சேர்த்தார்களா?”

“எனக்கு இப்ப 29 வயது. ஆச்சி, அப்புவைப் பார்க்க யாழ்ப்பாணம் வந்தேன். வெள்ளை வானில் வந்து வலுக்கட்டாயமாகப் பிடித்துச் சென்றார்கள். நான் நிக்கவரெட்டியா என்றும் விடவில்லை. கட்டாயமாக இயக்கத்தில் பணியாற்றினேன்.”

சத்தியன் காலத்தை மறைத்தான். வந்தவர்கள் தமக்குள் பேசிக்கொண்டார்கள். சத்தியனை படிப்பிப்பதற்குவிட முடியாது. வயதாகிவிட்டது. விருப்பமின்றிப் பிடித்தமையால் புனர்வாழ்வு முகாமில் சேர்க்க வேண்டும். ஒரு வருடம் செல்லும் திரும்பி வர.

பத்து வருடங்களுக்கு மேல் இயக்கத்தில் இருந்ததாக சத்தியன் கூறவில்லை. தான் ஒரு முகாமின் பொறுப்பாளனாக இருந்ததாகக் கூறவில்லை. சிங்களப் பிரதேசத்தில் நிக்கவரெட்டியாவில் வாழ்ந்ததாகக் கூறியதால் சத்தியனைச் சந்தேகிக்கவில்லை. நட்பாகப் பேசினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னை விடுவித்தால் நிக்கவரெட்டியாவுக்கு திரும்பிச் சென்றுவிடுவாயா? தாய் தேப்பனோடு சேர்ந்துவிடுவாயா? ஆர் உன்ரை யாலுவா, ஏதோ சொன்னாய்.. என்ன பெயர்?"

"அமரதாஸ.. முல்லைத்தீவுக் காம்பில் இருக்கிறான்.. புலிகளால் ஒரு தடவை பிடிக்கப்பட்டு விடுதலையானான்."

"உன்னைப்பற்றி அவனிடம் விசாரிக்கிறம்." அவர்கள் அவனிடம் விடைபெற்றனர். தான் விடத்தல்தீவில் இருந்தபோது சண்டையில் பங்குபற்றியதையோ ஒரு பேஸின் பொறுப்பாளனாக இருந்ததையோ சத்தியன் சொல்லவில்லை.

அவனை விஷேசமாகக் கவனித்தது போலப் பட்டது. இராணுவத்தால் ஏவப்பட்ட ஷெல் பட்டுக் காயம் அடைந்தான் என நம்பினர்.

**ஓ**ர் அதிசயம் நிகழ்ந்தது. ஒரு நாள் அதிகாலை அவனைக் காண நிக்கவரெட்டியாவிலிருந்து அவன் தாயும் தகப்பனும் வந்திருந்தனர். கொழும்பு வந்து திருகோணமலை வந்திருந்தனர். அவனை விசாரித்தவர்கள் நிக்கவரெட்டியாவுக்கு சத்தியன் நிலை குறித்து அறிவித்திருந்தனர். அவனைக் கட்டி அணைத்தபடி அம்மா அழுதாள்.

"எங்களால் நீ இங்கிருப்பதாக வந்த செய்தியை நம்ப முடியவில்லை. நீ உயிருடன் இருப்பதை எண்ணிப் பார்க்க முடிவில்லை. நீ செத்துப் போனாய் என்று எண்ணியிருந்தோம் சத்தி.. விடத்தல்தீவில் இருந்தபோது கடிதம் போட்டிருந்தாய்..அவ்வளவு தான். பிறகு தொடர்பில்லை.." அம்மா கண்ணீர் விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை விசாரித்தவர்கள் வந்தார்கள். நன்றியோடு அவர்களைப் பார்த்தான். இப்படி ஒரு இரக்கம் அவர்களிடம் இருக்கும் என அவன் எண்ணவில்லை.

"சத்தியனை உங்களுடன் அனுப்பத்தான் விருப்பம். ஆனால் முடியாது.. சுகம் வந்ததும் வவுனியாவுக்கு அனுப்பிவிடுவம்..அங்க முடிவு செய்வார்கள். வலுக்கட்டாயமாக இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறான். புனர்வாழ்வு காம்பிற்கு குறைந்தது ஒரு வருடம் அனுப்புவினம். இயக்கத்தில் இருந்ததை ஒப்புக் கொண்டிருக்கிறான். தண்டனை குறைவாகும்படி எழுதியிருக்கிறம்." என்றனர்: "நீங்கள் காண வந்ததால் சத்தி நிக்கவரெட்டியாவைச் சேர்ந்த உண்மை தெரியுது. அமரதாஸவும் நல்லா இவனைப் பற்றி முல்லைத்தீவிலிருந்து எழுதியிருக்கிறான். புலிகளின் பங்கரிலிருந்தபோது சத்தியன் தனக்குப் பெரிதுமுதவியாக இருந்திருக்கிறான். அவற்றை சத்தியன் கூறவில்லை. அமரதாஸ எழுதியிருக்கிறான் சத்தியனுக்கு பெரிய தண்டனை கிடைக்காது..கெதியில் வந்திடுவான் அம்மே.. நீங்க பார்த்திட்டுப் போங்கோ.. வந்திடுவான்."

அங்கு ஒரு பாசச் சங்கமம் நிகழ்ந்தது.

"ஊர் எப்படியிருக்கிறது சொல்லம்மா?"

"எதைச் சொல்வது? அமரதாஸ தடுக்கத் தடுக்க இரணுவத்துக்குப் போனான்..அவனுடைய தங்கச்சிமாருக்குக் கலியாணம் சிறப்பாக நடந்தது. ஆனால் உன் தங்கச்சி மாலினிக்கு இன்னமும் நடக்கவில்லை. மாலினியை அமரதாஸ விரும்புகிறான். அமரதாஸவின் தகப்பன் ஒப்புக் கொள்ளவில்லை. ஒரு சிங்களப் பொடியனுக்குக் கட்டிக் கொடுப்பதா என உன் ஐயாவும் விரும்பவில்லை. மாலினி விடயத்தில் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களுக்கும் சிறிது மனஸ்தாபம் தான் முன் போல முகம் கொடுத்துப் பறைவதில்லை. நீ எல்ரிரிஈ யில் இருப்பதால் மாலினியைப் பெண்ணெடுக்க அமரதாஸ குடும்பம் கூடுதலாகத் தயக்கம் காட்டுகிறது. உன் தங்கையும் காதலிச்சுத் தொலைத்துவிட்டாள். கலியாணம் செய்தால் அமரதாஸவைத்தான் செய்வன் என நிக்கிறான்.''

சத்தியன் சிரித்தான்

''இதிலென்ன யோசிக்க இருக்கிறது அம்மா. அமரதாஸ நல்ல பையன். தமிழாவது சிங்களமாவது.. இனிப்பார்க்க முடியாது.. இரண்டு சமூகங்களிடையே இனியாவது இப்படியாவது நெருக்கம் வரட்டும்.. இப்படி எத்தனை திருமணங்கள் நடந்திருக்குது.. யோசியாமல் இரண்டு பேருக்கும் கலியாணம் செய்து வையுங்கள்.. நானும் வாறன்..'' என்றான் சத்தியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம்: 6

**அ**மரதாஸவால் நம்பவே முடியவில்லை. மனம் ஒப்புக்கொள்ள மறுத்தது. உண்மை உண்மை தான். தமிழ் மக்களின் மாபெரும் புரட்சித்தலைவன் பிரபாகரனின் சடலம் நந்திக்கடல் நீரில் விழுந்து கிடந்தது. அவரது சடலத்தோடு தேடப்பட்ட எல்ரிரிஈ முக்கியஸ்தர்களின் சடலங்கள் குவிந்து கிடந்தன.. சன்னம் ஒன்று தலைவரின் கபாலத்தைத் துளைத்திருந்தது. அதிலிருந்து செங்குருதி வடிந்து கொண்டிருந்தது. மூன்று தசாப்தங்களாக இலங்கையைக் கிடுகிடுக்க வைத்த தமிழ்த் தலைவன் மண்ணில் பிணமாகச் சரிந்து கிடந்தான். உலகத்தையே அசுர வைத்த போராளித் தலைவன் பிணமாகிவிட்டான். அமரதாஸ யோசித்துப் பார்த்தான்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு மூலையில் பிறந்த பிரபாகரன் தமிழ் மக்களின் தலைவனான். மதுரையில் 25 பேரைக் கொண்ட பயிற்சி முகாமோடு தன் போராட்டத்தை ஆரம்பித்தான் அதற்கு தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்கள் சிலர் உதவினர். அதேவேளை புலிகளின் சார்பில் சார்ள்ஸ் அன்ரனி என்ற சீலன் காங்கேசன்துறை வீதியில் கண்ணி வைத்து இரண்டு ஆமிகளைக் கொன்றான்.

"புதியபாதை" என்ற பத்திரிகையை நடாத்திய சிவஞானமூர்த்தி என்ற சுந்தரம் ரெலோவைச் சேர்ந்தவர். அவர் புலிகளால் சுடப்பட்டார். இப்பத்திரிகை எல்.ரி.ரி.யை விமர்சித்ததாக. ஒருநாள் தமிழ்நாட்டில் பாண்டிபசாரில் உமாமகேசுவரனும் பிரபாகரனும் சுட்டுக்கொண்டார்கள். அதிலிருந்து தப்பிவிட்டார்கள். தமிழகப் பொலிசார் வலை விரித்தனர். இருவரும் கைதாகினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தலையீடு அவர்களைத் தப்பவைத்தது. இந்தியப் பொலீசாரின் படி உமாமகேஸ்வரன் 9 கொலைகளிலும் ஒரு வங்கிக் கொள்ளையிலும் பிரபாகரன் 18 கொலைகளிலும் 2 வங்கிக் கொள்ளைகளிலும் ஈடுபட்டுள்ளனர். தமிழகப் பொலிசார் மீண்டும் இருவரையும் கைது செய்தனர். எச்சரிக்கையோடு விடுவித்தனர்

அதன் பின்னர் மதுரையில் பிரபாகரன் சுதந்திரப் பறவையாக நெடுமாறனின் ஆதரவில் திரிந்தான். ஒரு நாள் பிரபாகரன் யாருமறியாமல் யாழ்ப்பாணம் திரும்பி வந்தான். இவன் வந்த வேளை இரண்டு தமிழ் இளைஞர்கள் சுடப்பட்டு அவர்களின் சடலங்கள் ஒரு வயல் வெளியில் எறியப்பட்டிருந்தன. சுடப்பட்டவர்கள் புலிகள் இயக்கத்தினராகவும் சுட்டவர்கள் புளொட் இயக்கத்தினராகவும் பரவலாக மக்களால் பேசப்பட்டனர். இந்தக் கொலைகள் பிரபாகரனை ஆத்திரமடையவைத்தன.

ஒக்டோபர் 27 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸ் நிலையம் சீலனின் தலைமையில் தாக்கப்பட்டமையை அமரதாஸ எண்ணமிட்டான்.. இந்தத் தாக்குதலில் ஆயுதங்கள் சாவகச்சேரி பொலிசு நிலையத்தில் அகப்பட்டன.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் கூட்டணி புலிகளின் விருப்பிற்கு மாறாக ஈடுபட்டது '30 ஆண்டுகளாகத் தமிழருக்கு என்ன செய்தீர்கள்?' என்று ஒரு கூட்டத்தில் அமிர்தலிங்கம் கேட்கப்பட்டார். அதே கேள்வியைத் தமிழ் மக்கள் இன்று புலிகளைக் கேட்கலாம் .. யூலை மாதம் ரெலோ இயக்கம் யாழ் தேவியைத் தீயிட்டுக் கொளுத்தியது.

யூலை 15 புலிகளுக்கு ஒரு துக்க நாள். எஸ்.எம்.ஜீ துவக்கோடு தப்பி ஓட முடியாத நிலை சீலனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியில் ஏற்பட்டது. சாவகச்சேரி பொலிசு நிலையத் தாக்குதலில் போது முழங்காலில் அவனுக்கு ஏற்பட்ட காயம் துரத்திவரும் இராணுவத்திடமிருந்து தப்பி ஓட விடவில்லை. வயல் வெளியில் விழுந்த சீலன், தன்னைச் சுட்டுவிட்டுத் தப்பிச் செல்லுமாறு தன்னுடன் கூட ஓடிவந்த அருணாவுக்குக் கட்டளையிட்டான். அருணா முதலில் தயக்கம் காட்டினான். கடைசியில் கட்டளை நிறைவேறியது. சீலனின் அன்றைய தியாகம் இன்றைய நிலையை எண்ணிக் கண்ணீர் விடும் என அனாதரவாக எண்ணிக்கொண்டான்.

யூலை 23 அதற்குப் பழி வாங்கும் நோக்கில் திருநெல்வேலி தபாற்பெட்டியடியில் ஒரு தாக்குதல் நடந்தது பிரபாகரன், கிட்டு. செல்லக்கிளி. ஐயர், விக்டர், புலேந்திரன், சந்தோஷம், அப்பையா ஆகியோர் சேர்ந்து இந்த வீதிக்கண்ணியை வைத்து பலாலியிலிருந்து குருநகர் முகாமிற்கு இடம் மாறிய 13 வரையிலான இராணுவ வீரர்களை அழித்தனர். பலாலியிலிருந்து வந்த இராணுவம் அவ்விடத்தில் வெறியாட்டம் ஆடியது. பலரைச் சுட்டுக் கொன்றது. தாங்கள் அரசாங்க உத்தியோகத்தர்களெனக் கூறிய கலா பரமேஸ்வரனையும் மாமனாரையும் ஈவிரக்கமின்றி சுட்டது. செல்லக்கிளி அந்த நிலக்கண்ணித் தாக்குலில் காயமடைந்து செத்தார். சீலன் இறந்தபோதும் செல்லக்கிளி இறந்தபோதும் பிரபாகரன் கண்ணீர் விட்டுக் கலங்கினாராம்.

திருநெல்வேலி இராணுவ வீரர்கள் படுகொலையை அடுத்து இலங்கையில் இனக்கலவரம் வெடித்தது. 1983 கொழும்பு தீப்பற்றியெரிந்தது. தமிழர்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப் பட்டனர். சிங்களக் காடையர் வெறியாட்டம் ஆடினர். கண்ணிவெடியில் சிக்கி இறந்த இராணுவ வீரர்களின் சடலங்கள் கனத்தை மயானத்துக்குக் கொண்டு வரப்பட்டன. அங்கு இனக்கலவரம் அன்றைய ஜனாதிபதி விரும்பியவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. பாதுகாப்புப் படையின் ஆதரவோடு நாடெங்கும் பரவியது. தமிழர்கள் ஈவிரக்கமின்றிக் கொலை செய்யப்பட்டனர். தமிழரின் நிறுவனங்கள் சொத்துக்கள் என்பன எரிக்கப்பட்டன. 80000 தமிழர்கள் கொழும்பு நகரில் அகதிகளாக்கப்பட்டனர். கப்பல்களில் யாழ்ப்பாணத்திற்கு அகதிகள் ஏற்றப்பட்டனர்.

யூலை 25 இல் இன்னோர் கொடுமையாக வெலிக்கடை படுகொலைகளில் குட்டிமணி, ஜெகன் போன்ற பல தமிழ்க்கைதிகள் கொல்லப்பட்டனர். இரண்டுநாட்களின் பின்னர் மீண்டும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இன்னும் 19 தமிழ்க்கைதிகள் அதே போலக் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் மின்கம்பக் கொலைகள், தலைவெட்டுதல்கள் வங்கிக்கொள்ளைகள், திருட்டுக்கள் என்பன தொடர்ந்து நடந்தன... 1985 பெப்ரவரி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஞானச்சந்திரன் எல்ரிரிஈ யினரால் சுடப்பட்டார்

அமரதாஸ நினைத்துப் பார்த்தான்.

யூன் 26 இல் சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா எல்ரிரிஈ யினரால் சுடப்பட்டார். எம்ஜிஆரினால் ஏற்படுத்தப்பட்ட ஈஎன்எல்எ.்.ப் நிலைக்கவில்லை. இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்ட எல்ரிஈ மேயர் அருணாவுக்கும் ஏனையோருக்கும் அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளை கல்வியங்காட்டில் ரெலோ இயக்கத்தினர் கிழித்தெறிந்தனர். அதனைச் சாட்டாகக் கொண்டு, முதலில் அதனை விசாரிக்க பசில் காக்காவையும் முரளியையும் புலிகளால் அனுப்பி வைத்தனர். ஆனால் அவர்கள் இருவரும் ரெலோவினரால் நையப் புடைக்கப்பட்டனர். அதன் எதிரொலியாக 24 ரெலோ முகாம்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. சங்காரம் ஆரம்பமாகியது. எந்த இலட்சியத்துக்காகப் போராடினார்களோ அதே இலட்சியம் கொண்ட இயக்கத்தால் கொலை செய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலோ இயக்க உறுப்பினர்கள் கண்ட இடத்தில் கொல்லப்பட்டனர். 25 ரெலோ உறுப்பினர்கள் மதிய உணவு சாப்பிடும் போது எரிக்கப்பட்டனர். வட்டுக்கோட்டை முகாமில் சுகவீனமுற்று படுக்கையிலிருந்த 12 ரெலொ உறுப்பினர் கொல்லப்பட்டனர். கல்வியங்காட்டில் வீதித்தடைபோட்ட கிட்டு ரெலோ உறுப்பினரை றயர் போட்டு எரித்தார். ரெலோ இயக்கத்தில் இருந்த வெளிமாவட்ட உறுப்பினர் ஒளிந்து தங்க இடமின்றி பரதவித்தனர். புலிகளின் பயத்தால் அடைக்கலம் அளிக்க யாழ்ப்பாண மக்கள் பயந்தனர். புலிகளின் சக இயக்க அழிப்பு அக்கிரமம் ரெலோவோடு ஆரம்பமானது. கோண்டாவில், தெல்லிப்பளை இடங்களில் றயரிட்டு எரிக்கப்பட்டனர். கைகளைக்கட்டி சுட்டபின் எரித்தனர் புலிகள், கல்வியங்காட்டில் ஒளிந்திருந்த சிறி சபாரத்தினமும் கோண்டாவிலில் சுடப்பட்டார். அதே காலத்தில் மாற்றியக்கங்கள் யாவும் எல்ரிரிஈ யினரால் தடைசெய்யப்பட்டன.

வடக்கிலும் கிழக்கிலும் முழுமூச்சோடு புலிகளை அடக்க இலங்கை இராணுவமும் நடவடிக்கைகளை எடுத்தது. வடமராட்சியை விடுவிப்பதாகப் பெரும் நடவடிக்கையை எடுத்தது. அப்போது தமிழ் மக்களை வகை தொகையின்றி அழிப்பதாகவும் பட்டினிபோடுவதாகவும் குற்றம் சாட்டி இந்தியா தலையிட்டது. இந்தியா அமைதிப்படையுடன் வந்திறங்கியது. கூடவே ரெலொவும் ஈபிஆர்எல்எ.்.ப்பும் வந்தன. ஈரோஸ் எல்ரிரிஈ யுடன் ஏற்கனவே இணைந்துவிட்டது. அதன் தலைவர் பாலகுமார் ஏற்கனவே பயத்தில் சேர்ந்து கொண்டார். அதற்கிடையில் கோட்டைத் தாக்குதல்கள், வீரசிங்கம் மண்டபம் புலிகளால் தீயிடல், ரெலிகொம்மியுனிகேசன் இராணுவ முகாம் தாக்கப்பட்டு அழித்தல். கிட்டு வலது காலை இழத்தல், அந்தக்கோபத்தில் கந்தன்கருணை வீட்டு முகாமில் சிறைப்பட்டிருந்த 60 க்கு மேற்பட்ட மாற்றியக்கத்தினரைச் சுட்டுக்கொன்றமை அனைத்தும் நிகழ்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சியில் இராணுவம் முன்னேறியது. மில்லரின் முதலாவது தற்கொலைத் தாக்குதல் நெல்லியடியில் நிகழ்ந்தது. 60 இராணுவத்தினர் பலியாகினர். வடமராட்சி ஒப்பரேசனை நடக்க இந்தியா விட்டிருந்தால் இலங்கை இராணுவம் தன் முயற்சியில் என்றோ வெற்றிபெற்றிருக்கும். இந்தியா தலையிட்டது. இந்திய அமைதி காக்கும் படையை இறக்கியது. ஒரு ஒப்பந்தம் ஜயவர்த்தனாவுக்கும் ராஜீவ்வுக்கும் கைச்சாத்தானது. மாகாணசபை தேர்தல் நடந்தது. வரதராஜபெருமாள் முதலமைச்சர் ஆனார்.

சாத்விகப் போராட்டத்தில் எல்ரிரிஈ யினர் நாட்டம் கொண்டமை அமரதாஸவுக்கு நினைவு வந்தது.

'இருந்தாற்போல சாத்வீகத்தில் நம்பிக்கை கொண்ட பிரபாகரன் உண்ணாவிரதத்தில் திலீபன் என்ற அப்பாவிப் போராளியை இறக்கிப் பலிகொடுத்தனர். ஐபிகேஎ.ஃப் காலத்தில் யுத்தநிறுத்தம் நிலவியது. யோகி யோகச்சந்திரன் மூலம் ஆயுதங்கள் கையளிக்கப்பட்டன. எனினும் இந்தியப்படையை இங்கிருந்து கலைப்பதிலும் ஐபிகேஎ.ப்போடு யுத்தம் தொடங்குவதற்கும் எல்ரிரிஈ சமயம் பார்த்திருந்தது. அந்தச்சந்தர்ப்பம் ஏற்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து திரும்பி கடலில் வரும்போது கப்பலில் கைதான குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 கெரில்லாக்களை கொழும்புக்கு அனுப்பி வைக்கும்படி இலங்கை அரசு வற்புறுத்தியது. எல்ரிரிஈ அதற்கு இணங்கவில்லை. ஒக்டோபர் 4 கைதானவர்களைச் சந்தித்த மாத்தையா சயனட் வில்லைகளை அவர்களிடம் கொடுத்தார். கொழும்புக்கு ஏற்றும் வேளையில் அதனை அவர்கள் உட்கொண்டனர். அந்தப் பரிதாபத்தில் 12 பேர் மாண்டனர்.

அதனைச் சாட்டாகக் கொண்டு இந்தியாவுடனான யுத்தம் வெடித்தது. சிவிலியன்கள் பலர் கொல்லப்பட்டனர். பிரபாகரனும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தையாவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் முகாமிட்டிருப்பதை அறிந்து பல்கலைக்கழக மைதானத்தில் ஹெலிகெப்டர் மூலம் 30 கமாண்டோக்களை இறக்கி ஏற்கனவே நிலை கொண்டிருந்த புலிகளிடம் பலி கொடுத்தது. புலிகளின் பலத்தை இந்திய இராணுவம் குறைவாக மதிப்பிட்டது புலனாகியது.. அதன் எதிரொலியாக பிரம்படி என்றவிடத்தில் வீடுகளுக்குள் புகுந்து அப்பாவித் தமிழர்களை இந்திய இராணுவம் சுட்டுக்கொன்றது. சுட்டுக் கொன்ற சடலங்கள் மீது செயின் புளொக் ஏற்றி நசித்தனர். அவ்வேளை பிரம்படியிலிருந்த தலைவர்கள் தப்பிவிட்டனர். பல்கலைக் கழகத்தில் சுட்டுக் கொன்ற இந்தியக் கமாண்டோக்களை யாழ்ப்பாணம் நாகவிகாரைக் காணியில் மக்களின் பார்வைக்கு புலிகள் வைத்தனர். கொட்டும் மழையில் தலைமயிர் விரித்த சீக்கியக் காமாண்டோக்களின் சடலங்கள் நிலத்தில் அலங்கோலமாகக் கிடந்தன. கடும் யுத்தம் நடந்தது. யாழ்ப்பாண மக்கள் ஆயிரக்கணக்கில் அகதிகளாயினர். யுத்தங்கள் ஐபிகேஎ.ப் பிக்குத் தோல்வியிலேயே முடிந்தது.

யூலை 13 இல் ரியுஎல்எப்.்.ப் தலைவர் அமர்தலிங்கம் எல்ரிரியினரால் சுடப்பட்டார். யாழ்ப்பாண எம்.பி. யோகேஸ்வரனும் சுடப்பட்டார். மூன்று நாட்களின் பின் உமா மகேஸ்வரன் கொழும்பில் சுடப்பட்டார். எல்ரிரிஈ யினருக்கு எதிராக தமிழ்த் தேசிய இராணுவம் அமைக்கப்பட்டது. றோவின் அனுசரனையுடன் மாற்றியக்கங்கள் இப்புதிய இராணுவ அணியை அமைத்தன. பல தமிழ் இளைஞர்கள் இளைஞர்களை பலோத்காரமாகப் பிடித்தன..

பிரேமதாஸ ஜனாதிபதியாக வந்ததும் இந்தியப்படை வெளியேற நேர்ந்தது. அதனோடு ஈபிஆர்எல்ப்எப்..்.பும் வெளியேறியது. அதன் பின்னர் எவ்வளவோ நடந்துவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் தொடர்ந்தது. ஒரு நாள் மாத்தையா கூட்டத்தினர் புலிகளால் கொல்லப்பட்டனர். மஹிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியானார். நிலைமை மாறியது. உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை வெற்றி கொண்ட பெருமை புலிகளுக்கிருந்தது. மஹிந்தவின் இராஜதந்திரத்தை புலிகள் புரிந்து கொள்ளவில்லை. மாவிலாற்றில் தொடங்கிய இலங்கை இராணுவத்தின் வெற்றி இன்று முல்லைத்தீவில் வந்து நிற்கிறது. அமரதாஸ தன் நினைவுகளை கட்டுப்படுத்தினான்.

**க**ழுத்தளவு நீரில் பல மணிநேரம் கிடந்தமையால் சடலங்கள் சற்றுப் பழுப்பேறியிருந்தன. 15000 சதுர கி.மீ. தன் ஆதிக்கத்தில் வைத்திருந்த தலைவன் இறுதியில் தனது ஆட்சியதிகாரத்தை ஒடுக்கி அங்குலக் கணக்காக்கிக் கொண்டான். அவரது சடலத்துடன் கழுத்தில் சயனற் குப்பி காணப்படுமென அமரதாஸ நினைத்திருந்தான். ஆயிரக்கணக்கான இளைஞர்களை தமிழ் ஈழத்திற்காகத் தியாகம் செய்ய வைத்த சயனற் குப்பிகள் அவரின் கழுத்திலில்லை. தனக்கு அப்படி ஒரு நிலை ஏற்படாதென அவர் நம்பியிருக்கலாம். இவ்வளவு கட்டுக்காவலை மீறிக் காலன் வருவானென தலைவர் எண்ணியிருக்கவில்லை. அவர் இராணுவப் பையினுள் நீரழிவு மருந்துகள், கட்டுத்துணி. களிம்பு வகைகள், கிறீம் என்பன இருந்தன.

2009, மே காலை 10 மணிக்கு தலைவரின் சடலம் சார்ஜண்ட் விஜயசிங்க என்பவனால் நந்திக்கடலில் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் சடலத்துக்கு அருகில் சுற்றி வர முக்கிய போராளிகளின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றிடையே ஒருவித நப்பாசையுடன் சத்தியனின் சடலத்தை அமரதாஸ தேடினான்.

அன்று 72 சடலங்கள் தேடிப் பெறப்பட்டன. முக்கியமான போராளிகளின் சடலத்தோடு சத்தியனின் சடலமும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்படவில்லை.. அதனைக் காண அமரதாஸவுக்கு அற்ப சந்தோஷமேற்பட்டது. சத்தியன் அடைக்கலம் புக வரலாம். தலைவரின் சடலம் அகப்பட்ட நிகழ்ச்சி பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அனைத்துச் சடலங்களையும் ஒன்றாகக் குவித்து தீ மூட்டியபோது அமரதாஸ நெகிழ்ந்து போனான். தலைவருக்கு நினைவுத் தூபி அமைத்து விடுவார்கள் என்பதற்காக இடம் தெரியாமல் எரித்தார்கள். இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் மனங்களிலிருந்து முப்பது ஆண்டுகளாகத் தமிழரின் உரிமைக்காகப் போராடிய அத்தலைவனை எடுத்தெறிந்துவிட முடியுமா?

யாவும் முடிந்துவிட்டன. சரணடைந்த அனைவரும் வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் அகதி முகாமிற்கு அனுப்பட்டனர். அது ஒரு சிறைச்சாலை. முட்கம்பி வேலியால் எல்லையிடப்பட்டிருந்தது. ஊனமுற்றவர்களுடன் சரணடைந்தவர்களில் பலர் தலைமயிரைக் கட்டையாக வெட்டியிருந்ததால் அனைவரும் சந்தேகப்பட்டு புர்னர்வாழ்வு முகாம் ஒன்றுக்கு ஏற்றப்பட்டனர். தற்போதைய யுத்தத்தில் கால் இழந்ததாகக் கூறியதால் மைதிலி தப்பிவிட்டாள்.

மலர் குடும்பமும் மைதிலியும் ஒரு அகதிக் குடிசையில் வாழ்ந்தனர். மைக்கலும் சுமதியும் மணிசேகரனோடு ஒரு கூடாரத்தில் வசிக்க நேர்ந்தது. நாளாந்தம் முல்லைத்தீவிலிருந்து அகதிகள் வந்து கொண்டிருந்தார்கள். இடையிடையே சுகப்பட்டவர்களைத் திருகோணமலையிலிருந்தும் பஸ்களில் கொண்டு வந்தனர்.

"இந்த முகாமில் இருப்பவர்களின் கதைகள் கேட்க முடியாதவை. பெற்றோர்களை இழந்தவர்கள். மக்களைப் பறிகொடுத்தவர்கள், கணவனை இழந்தவர்கள். கால் கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தவர்கள். கண்களின் முன்னால் சுடப்பட்டவர்கள், உடல் சிதறியவர்கள் என ஏராளம் பேர். அதிர்ஸ்ட வசமாக மச்சானின் இறப்போடு எதுவுமில்லாமல் நாம் தப்பி விட்டம். குடிப்பதற்கு ஆமான தண்ணீர் இல்லை. கக்கூசுக்குக் காலையில் கியூ வரிசையில நிக்க வேணும். கன்னிப் பெண்கள் வரிசையில் காத்திருப்பது பெரும் கொடுமை.. அவமானம்'' என்றாள் மாலதி..

"இந்த முகாமில இரண்டு இலட்சம் பேரிருக்கினமாம். பராமரிப்பது கஷ்டம்.. ஆமான சாப்பாடு இல்லை.. தண்ணியில்லை.. மலசலகூட வசதியில்லை. மருத்துவவசதியில்லை.. மூன்று நேரமும் பச்சை அரிசிச் சோறு தான். தட்டேந்தி வாங்கவேண்டும். பருப்பும் சோறும் எத்தனை நாள் சாப்பிடுவது. அரிசியைக் கழுவாமல் மூடையோடு சமைக்கக்கொட்டுகிறார்கள். சுத்தமில்லை." என்றார் அந்தோணிமுத்தர்: "இதெல்லாம் ஆரால வந்தது? 99 வீதத் தமிழ் மக்களின் தலைவன் என மார்தட்டித் தன் வார்த்தைகளுக்கு மாறானவர்களைக் கொன்று குவித்து.. ஒன்றா ரண்டா.. 41 அரசியல் தலைவர்கள்..அது மட்டுமா? சக இயக்கத்தைச் சார்ந்தோரை.. 27 இயக்கங்கள்.. நடு றோட்டில றயர் போட்டுச் சுடுவித்து.. அது சரி, உயிர்த்தியாகம் செய்த. தமிழ் ஈழக் கனவோடு செத்துப் போன 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளுக்கு என்ன பதில்? சரணடைந்தோம் என்பதா? தமிழ் மக்கள் நல்லா நம்பி ஏமாந்து போனார்கள்?"

"கத்தாதையுங்கோ..காலத்துக்கு ஏத்த மாதிரிக் கதைக்காதையுங்கோ. ஆராவது கேட்டுவிடப்போறாங்கள். அவங்கள் நல்லா இருக்கேக்க கொண்டாடினீங்கள். இப்ப தொய்ந்ததும் மாறுகிறீர்கள். போகட்டும். இங்க இயக்கத்து முக்கியஸ்தர்கள் மறைஞ்சு இருக்கிறாங்க. தன்ரை பிள்ளையை வானில் வந்து பிடித்தவள் இவள் என ஒரு பெண்ணைக் காட்டிக்கொடுத்திட்டாங்களாம். வன்னி சரோ ஜி.ஏ.ஆக இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப்பு மாஸ்ரர் அடங்கி ஒழிச்சுத்திரியிறார். தமிழினியைப் பார்த்தியா? வீரர் மயானங்களுக்குப் பொறுப்பான தியாகு பொன்னர் ஒழிஞ்சு திரியிறார். பொட்டம்மான். சூசை. நடேசன் எல்லாரும் சுடப்பட்டுவிட்டினமாம். ஜோர்ஜ் மாஸ்ரர், தயா மாஸ்ரர் சரண்டராகிவிட்டினம்..10 ஆயிரம் பேர் வரை அகதி முகாமில் இராணுவம் கைதாகிவிட்டினமாம். இங்க கலந்திருக்கிற இயக்கப் போராளிகளைப் பிடிக்காமல் விடமாட்டினம். காட்டியும் கொடுக்கினம்.. பிடிக்கிறவங்களை புனர்வாழ்வு அளிக்கப் போகினமாம்." என்றான் மாணிக்கராசா.:

"நீ என்ன சொன்னாலும் தமிழரைத் தலை நிமிர்ந்து பார்க்க வைத்தவன் மறக்க முடியாது."

"அதெல்லாம் முடிஞ்சுது. இனி எதுவுமில்லை. முப்பது வரியமாகக் கிடைத்த எத்தனை சந்தர்ப்பங்களை நழுவ விட்டு நடுத்தெருவில் விட்டதாகச் சொல்லக் கூடாதோ? தமிழருக்கு இனி தக்க தலைவனில்லைத் தான். அதுக்காக முப்பதாண்டாகப் பட்ட கஷ்டங்களை மறந்துவிட முடியுமோ? வயதுப் பிள்ளையளை வைச்சிருக்க முடியாது. இராணுவம் பிடிக்கும் அல்லது இவன்கள் பிடிப்பான்கள். இருபக்கத்தாலும் பயம். வன்னியில பட்ட கஷ்டங்கள் கொஞ்சமே? இப்பத்தான் நிம்மதி.."என்றான் மாணிக்கராசா.

"பிரபாகரன் போல இனி ஒருவர் வர முடியாது. தகுந்த வழி காட்டுதலின்றி மனம் போன போக்கில் நடந்து முடிவைத் தேடிக்கொண்டார். போராடி இறந்திருக்கலாம் வீரனாக. கோழை போல தப்பு நீரில் சாகவேண்டுமா?"

"இந்த அகதி முகாமில் நடப்பவை கொஞ்சமா? சிறு வயதிலேயே புலிகள் பிடிப்பார்கள் என்று கலியாணம் கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து கணவர்களை இழந்த பெண்கள் துயரம் கொஞ்சமா? பிள்ளை மனம் மாறாதுகள் பிள்ளைகளைத் தூக்கி வைத்திருக்கின்றன. வெளியில் போய் என்ன செய்யப் போகினமோ,? அதனால் அகதி முகாமைவிட்டு வெளியே போக மறுக்கினம். தமைக்கை காயப்பட்டு செத்துப்போனதாகக் கருதியவன் மனைவியின் தங்கச்சியைக் கலியாணம் கட்டிக்கொண்டான். இப்ப சொந்த மனிசி சுகப்பட்டு திருகோணமலையிலிருந்து வந்திட்டாவாம். ரெண்டுக்குள்ள ஒரே சண்டையாம். குத்து வெட்டு நடக்குதாம் ஆமிக்காரர் வேடிக்கை பார்க்கினம். சண்டை பிடித்தால் வேடிக்கை பார்க்கிறது தான் ஆமிக்காரர் வேலை. 'என்ரை பிள்ளையை வெள்ளை வானில் வந்து பிடிச்சது நீ தானே' என்று சண்டை பிடித்துக் காட்டிக்கொடுத்தல் ஒரு பக்கம். கனபேர் காசு கொடுத்து வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடிவிட்டினமாம். அதில் சின்னப்பா மாஸ்ரரும் ஒருவராம். 10 ஆயிரம் இயக்கப் பேர் மட்டில் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பப்பட்டுவிட்டினம். கடைசி பாச்சில் மாணிக்கன் என்றொரு பொடியன் வந்தவனாம். அவனும் முல்லைத்தீவில் பிடிபட்டிட்டான். கப்டன் ஒருவனைச் சிறையில் சுட்டவன் எனக் குற்றம் சாட்டப்பட்டதாம். அதனால உடனை மறைச்சிருந்த சயனட்டை சாப்பிட்டு விட்டானாம்."

"முதன்முதல் துணுக்காய் பகுதியில் குடியேற்றுவினமாம். எல்லாரும் வெள்ளாங்குளம் என்று சொல்லுங்கோ.. முதலில் எங்கட வீட்டிற்குப் போவம். எல்லாரும் முதல் காரியமாக அக்காவின் கலியாணம். மணிசேகரன் சேர் நீங்களும் எங்க வீட்டுக்கு வாங்க.." என்றாள் மாலதி.. மைதிலி அமைதியாக மணிசேகரனைப் பார்த்தாள்.

"நாங்களுமோ?" என்று சுகந்தி வினவினாள்.

"நீங்கள் இல்லாமலா?" என்றாள் மாலதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயமாக இருந்தது. ஒரு நாள் அதிகாலை பஸ்ஸில் கொண்டு வந்து சத்தியனை இறக்கினார்கள். மெலிந்து கறுத்திருந்தான். அடையாளமே தெரியவில்லை. அவனை முதலில் கண்டவன் மைக்கல். எதிர்பாராத சந்திப்பு.

"சத்தியன் அண்ணை..நீங்களா? எங்களோட தங்குங்கோ.. 236 வது கூடாரம்.. நானும் மைதிலியும் குழந்தையும் மணிசேகரனும் இருக்கிறம். நீங்கள் தங்கலாம். நல்லா உரு மாறிட்டியள்.."

"இவங்கள் கன காலம் என்னை இருக்க விட மாட்டாங்கள்.. இயக்கத்தில் இருந்ததை அறிந்திட்டினம். பார்ப்பம்.." என்றான் சத்தியன்.:"மாணிக்கன் என்னைக் காப்பாற்றி ஆசுப்பத்திரியில் சேர்த்தான். மாணிக்கன் இங்க இருக்கானா?"

"மாணிக்கன் சயனட் அருந்திட்டான் சத்தியன் அண்ணை. கன பேர் இயக்க ஆக்கள் இருக்கினம்.. சரண் அடையப்போன பலரில்லை. சுட்டுப்போட்டாங்கள் போலக் கிடக்குது.. நீங்களும் யுத்தத்தில செத்துப் போனதாக வீட்டார் நம்புகினம். சுகந்தி மட்டும் நம்பவில்லை. வருவியள் எண்டாள். உங்களைக் கண்டால் சந்தோஷப் படுவாள்..வாருங்கோ.."

அதற்குள் செய்தி பரவி விட்டது. சுகந்தி ஓடோடி வந்தாள். விம்மி விம்மி அழுதாள். அந்தப் பேதைப் பெண்ணிற்கு நம்ப முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

"அழாதை சுகந்தி.. வந்திட்டன்.. புனர்வாழ்வு காம்பிற்கு அழைத்துப் போவாங்கள். இயக்கத்தில் இருந்தவையளைப் புனருத்தாரண முகாமிற்கு அனுப்பப் போறான்கள்.. ஒரு வரியம் செல்லுதோ.. இரண்டு வரியம் செல்லுதோ தெரியாது.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தனை வரியம் சென்றாலும் நான் உங்களுக்காகக் காத்திருப்பன் சத்தியன்."

பலதையும் பேசிக்கொண்டார்கள். அவனை பிரதான முகாமைவிட்டு வெளியேற அனுமதிக்கவில்லை. பிற்பகல் போல ஒரு முகமூடி அணிந்த ஒருவனை அழைத்து வந்தார்கள். அவன் சத்தியனையும் இன்னும் இருவரையும் அடையாளம் காட்டினான்.

"புரிந்து கொள்ள முடியவில்லை சுகந்தி. என்னை மாணிக்கனுக்குப் பிடிக்காது.. ஆனா என்னைத் தன் தோளில் தூக்கி வந்து காப்பாற்றினான். உரிய நேரத்தில் ஆசுப்பத்திரியில் சேர்க்காவிடில் நானும் நந்திக்கடல் நீருக்குள்ளதான்.. அவன் முடிவு இப்படிப் போச்சுதே? அடைக்கலம் அடைவதை அவன் விரும்பவில்லை. போராடிச் சாவதையே விரும்பினான்."

சுகந்தி ஏக்கத்தோடு பார்த்திருக்க சத்தியனையும் அவன் ஒத்த பலரையும் வாகனம் ஒன்றில் இராணுவத்தினர் ஏற்றினார்கள். அந்த வாகனம் மறையும் வரை பார்த்திருந்தாள். விழிகளை நீர் திரையிட்டது.

❀ ❀ ❀

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HARTLEY COLLEGE
6014
LIBRA
POI EDRO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## HE IS THE BEST STORY TELLER WE HAVE.

Reflective prose அந்த Reflective mood அந்த எழுத்திலே இருக்கவேண்டும். இங்கு Reflect என்பது பிரதிபலிப்பு அல்ல. அதனைப் பட்டெறிவு என்று சொல்லலாம். ஈழத்து நாவலாசிரியர்களிலே இந்த விடயம் பற்றிப் பேசுகிறபோது செங்கை ஆழியான் முக்கியமானவராகப்படுகிறார். ஏனென்றால் அவரை முற்றிலும் தெரியாத ஒரு வாசகன்- வாசிப்பதற்கு ஒரு நூல் இருக்கிறது, ஒரு கதையொன்று இருக்கிறது என்பதற்காக வாசிக்கின்ற ஒரு வாசகன், இலக்கியப் பிரக்ஞை இல்லாமலேயே வாசகனைக் கவருகின்ற ஒரு பொதுநிலை வாசகவட்டத்தை செங்கை ஆழியான் ஏற்படுத்தியுள்ளார்.

செங்கை ஆழியானுடைய முக்கியத்துவம் என்ன வென்றால் அவரது அனுபவங்கள் பலதரப்பட்டவை. அரசாங்க அதிபராக, காரியாதிகாரியாக, ஆணையாளராக இருந்தவர். அவர் அவற்றையெல்லாம் பயன் படுத்தியிருக்கிறார். ஆரம்பத்தில் அவர் ஒரு கதையைச் சொல்லுகிறவராக இருந்தாலுங்கூட, தொடர்புபடுத்துகின்ற அவரது அந்தப் பட்டெறிவுத்தன்மை Reflectivity சிலநாவல்களில் வந்திருக்கிறது என்றே நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையிலேதான் செங்கை ஆழியான் பற்றிய விமர்சனங்களைச் சொல்கிறார்களே தவிர அடிப்படையில் செங்கை ஆழியானின் நாவல்கள் பற்றிய வேறு குறைபாடு எனக்குத் தெரியவில்லை.



செங்கை ஆழியான் என்னைப் பொறுத்தவரையில் He is the best Story teller we have. நான் பார்க்கிறேன் எங்களுடைய சமூக அனுபவங்களில் எவ்வெவற்றை செங்கை ஆழியான் பதிவு செய்திருக்கிறார், அதுதான் முக்கியத்துவம். அதனை வாசித்து முடிய அது ஒரு கதையாக இல்லாமல் அது ஒரு சமூக அனுபவமாக அதே நேரத்தில் வாசகனுடைய பட்டெறிவுக்கு Reflection க்கு இடங்கொடுக்கிறதா என்று நோக்கவேண்டும்.

*பேராசிரியர் கா. சிவத்தம்பி*

*ஞானம் செப்டெம்பர் 2007 இதழில்*

**ISBN: 918-955-1624-08-8**

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org